
இவ்வுலகைத்
நாரண - துரைக்கண்ணன்

ஓம் :

# " இவ்வுலகைத் ★
# ★ திரும்பிப்பாரேன் ! "

## (புவன சுந்தரியின் சுய சரிதை)

நான்காம் பதிப்பு

" யான் என் பெண்ணாய்ப் பிறந்தேன்? "
" உயிரோவியம் ", " தாசி ரமணி "
" காதலனா? காதகனா? "
முதலிய நூல்களின்
ஆசிரியரான

**நாரண - துரைக்கண்ணன்**
அவர்கள் எழுதியது.

பிரசுர கர்த்தர்:
**நா. முனிசாமி முதலியார்,**
பத்திராதிபர் " ஆனந்தபோதினி, "
சென்னை.

பதிப்புரிமை] 1952 [விலை ரூ. 2-25

PRINTED AT THE

"ANANDA BODHINI" PRESS

NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET

SOWCARPET, MADRAS.

ஓம்

# முன்னுரை

தமிழ் மொழியில் கதை யென்று சொன்ன வுடனேயே, "இது என்ன மொழி பெயர்ப்பா? எந்த ஆங்கில நாவலைத் தழுவியது? அந்த நவீனத்தின் ஆசிரியர் யார்?" என நம்மவரில் பெரும்பாலரர் கேட்க ஆரம்பித்து விடுகின்றனர். தமிழில் ஒரு கதை வெளி வந்ததென்ருல், அது ஆங்கில மொழியிலோ, பிற மொழிகளிலோ உள்ள ஏதாவது ஒரு நாவலின் மொழிபெயர்ப்பாகத்தான் அல்லது ஒரு நவீனத்தைத் தழுவி எழுதப்பட்டதாகத்தான் இருக்குமென்று தீர் மானித்து விடுகின்றனர். இவர்கள் இவ்விதத் தப்பபிப்பிராயங் கொண்டிருப்பதற்குக் காரணமு மில்லாமலில்லை.

இப்போது நம் நாட்டில் உலவும் தமிழ்க் கதைகளில் நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது நவீனங்கள் ஆங்கில நாவல்களின் மொழி பெயர்ப்பு நூல்களாகவே இருக்கின்றன. தமிழ்க் கதாசிரியர்களில் பெரும்பாலோர், ஜியார்ஜ் ரெயினல்ட்ஸ், மேரி கோர்லி, எட்கார் வாலெஸ் ஸர் வால்டர் ஸ்காட்போன்ற ஆங்கில ஆசிரியர் களால் எழுதப்பட்ட நாவல்களை மொழி பெயர்த்தோ அல்லது தழுவியோ கதை யெழுது வதை ஆரம்பத்திலிருந்தே வழக்கமாகக்

லியோ டால்ஸ்டாய், அலெக்ஸாண்டர் டூமாஸ், சார்லஸ் டிக்கின்ஸ் போன்ற பேராசிரியர்களது சிறந்த கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்துத் தரலாம். ஆனால், அப் பேரறிஞர்கள் என்ன நோக்கோடு, எந்த தத்துவத்தைப் புகுத்திக் கதைகளை எழுதி இருக்கிறார்களென, அவர்களது உட்கிடக்கையை முதலில் நன்கு தெரிந்து கொண்டு, கதைக்கு ஜீவனாக உள்ள சிறந்த கருத்துகள் போகாதபடி தமிழில் மொழி பெயர்க்க வேண்டுவது இன்றியமையாததாகும். இம்முறையைச் சரியாகக் கவனியாது வெறும் வார்த்தையைப் பிடித்துக் கொண்டு வார்த்தைக்கு வார்த்தை கண்டு பிடித்துப் போட்டு எழுதுவது ஜீவனில்லாத சடத்தை யலங்கரிப்பது போலாகும்.

தமிழில் புதுக் கதை எழுத முற்படுவோர், 'கதை என்றால் என்ன? அதன் தத்துவம் என்ன?' என்பதை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். கதை கற்பனை, உண்மை என இருவகைப் பட்டதாயினும், உண்மையை ஜீவனாகக் கொண்டு, எழுதப்படுவதே சிறந்ததாகும். மனித வாழ்க்கையின் படலத்தைப் படம் பிடித்துக் காண்பிப்பதே கதையாகும். மக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு, அவசியமான இடத்தில் கற்பனையைக் கலந்து எழுதுங் கதை, மொழி வளர்ச்சிக்கும், படிக்கும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் துணை செய்வதாகும். கதை எழுதுவோர்க்குக் கூடுமானவரை மானத தத்துவமும் (**Psychology**) தெரிந்திருக்க வேண்

டும். அப்போது தான் அவர்கள் எழுதுங் கதைகளில் சிருஷ்டிக்கும் பாத்திரங்களின் குணஞ் செயல்களை உள்ளபடி வருணிக்கமுடியும். இம் முறையையும், தத்துவத்தையும் ஒட்டியே, யான் சில புதுக் கதைகளைப் புனைந்திருக்கிறேன். "இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்" என்னும் இக் கற்பனைக் கதையும் இம்முறையை யொட்டியதேயாகும். இம் முயற்சியில் நான் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியாது. ஆயினும் உண்மைச் சம்பவங்களை யடிப்படையாகக் கொண்டு யான் வரைந்த "யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?" "காதலனா? காதகனா?" முதலிய புதுக் கதைகள் தமிழ் மக்கள் பேராதரவைப் பெற்றதிலிருந்து, எனக்கு இம் முயற்சியில் உற்சாகமும், ஊக்கமும் மேலும் உண்டாகி யிருக்கிறது. ஆகையினால் தான், நான் இக்கதையை, தமிழ் நாட்டிலேயே, தமிழ் மொழியின் மறு மலர்ச்சிக்காகப் பாடு பட்டு வரும் சிறந்த பத்திரிகைகளில் ஒன்றான பிரசண்ட விகடன் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதி வந்தேன். "விகட"னில் இக்கதையைத் தொடர்ந்து வாசித்து வந்த அன்பர்கள் இது புத்தக உருவில் வெளிவர வேண்டுமென்று விரும்பியமையால் அவ்வாறே இப்போது வெளியிடப்பட்டது.

செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்த புவன சுந்தரி என்னும் பெண்மணி, நம் மகளிர்க்குச் சிறிதும் பொருத்த மில்லாத ஆங்கிலக் கல்வியைக் கற்று, மேனாட்டுப் போலி நாகரி

கத்தை மேற்கொண்டு நடப்பதினால் வாழ்க்கையில் பல கஷ்டங்களை அனுபவிப்பதும், முடிவில் தன்னைக் காதலித்த காதலனால் ஏமாற்றப்பட்டுத் தாங்க முடியாத இன்னல்களையெல்லாம் அனுபவித்து ஜன சமூகத்தை வெறுத்து நீங்குவதுமே இக்கதையின் உட்கிடக்கையாகும்.

ஸ்ரீராமன் இலங்கையைக் கடக்க அணை கட்டுகையில் ஒரு சிறு அணிலும் மணலில் புரண்டு தன் முதுகில் ஒட்டிய மணலை உதறித் தொண்டு செய்ததுபோல், தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்காக அறிஞர்கள் செய்துவரும் சிறந்த தொண்டைப் பின்பற்றி, யானும் என் சிற்றறிவின் துணைக்கொண்டு இயற்றிய இக் கதையைத் தமிழ்த் தாயின் திருவடிகளுக்கு அணியாக்குகிறேன். ஆகவே, எனது இச்சிறு முயற்சிக்குத் தமிழ் மக்கள் ஆதரவளித்து என்னை மேன்மேலும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடும்படி ஊக்க வேண்டுகிறேன்.

ஆசிரியன்.

# "இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்"

## முதலாவது அதிகாரம்

### "பெண்ணோ! பேயா!! தெய்வ மகளா!!!

"அம்மம்மா! இப்பொழும் உலகை நினைத்தாலே என் நெஞ்சம் நடுங்குகிறது; என் வயிறு பகீரெனப் பற்றியெரிகிறது. ஆ! என்ன அநியாயமான உலகம்? இதில் நடக்கும் கொடுமைகளை எம்மொழியால் அளவிட்டு எடுத்துரைப்பது! எங்கு பார்த்தாலும், வஞ்சகம், பேராசை, பொறாமை, காமம், கோபம், உலோபம், மதம், மாற்சரியம் முதலியவைகளே நிறைந்திருக்கின்றன. இக்கொடுங் குணங்களின் பரிணாமங்களாகவே மக்கள் பெரும்பாலும் இருக்கின்றனர். இத்தகைய கொடியோர் பெரும்பான்மையாக வாழும் இவ்வுலகத்தை, துன்பவுலகமாகிய நரகத்தினும் போக பூமியாகிய சுவர்க்கத்தினும் சிறந்ததென்று கவிஞர் வருணிக்கின்றனர். ஐயோ! இவர்களது பேதமையையும், பிச்சுக்கொள்ளித் தன்மையையும் என்னென்பது!—அவ்வளவு தூரம் போவானேன்! நானே ஒரு காலத்தில் அவ்வாறுதானே நம்பினேன்? பேரின்பத்தைத் தருவதாகக் கூறப்படும் மோட்சலோகமுங்கூட இவ்வுலகத்துக்கு இணையாகா தென்றன்றோ எண்ணியிருந்தேன்? அதினும் இவ்வுலகத்தில் என்னைவிட அதிர்ஷ்டசாலி ஒருவரும் இருக்க முடியாதென்றன்றோ இறுமாப்புக் கொண்டிருந்தேன்? அவ்வெண்ண மெல்லாம் வெறும் பகற் கனவென்று இப்போதன்றோ தெரிகிறது!—நான் யாருக்காக உயிர்

வாழ்ந்தேனே, யாருக்காக இம்மனித உடம்பு எடுத்ததாகக் களித்திருந்தேனே, யாருக்காக அல்லும் பகலும் உழைத்துப் பாடுபட்டுப் பணஞ் சேர்த்தேனே, யாரை என் உயிரினுஞ் சிறந்த பொருளாக எண்ணிக் காதலித்தேனே, யாரை எப்போதும் மகிழச் செய்ய—இன்பத்தில் ஆழ்த்த—ஒவ்வொரு கணமும் பெரு முயற்சி செய்தேனே அம்மங்கை அமிர்த வல்லி—பெயரைப் பார்! காராட்டை வெள்ளாடு என் றழைப்பதுபோல், ஆலால விஷத்திலுங் கொடியவளாகிய அவளுக்கு அமிர்தவல்லி என்ற அழகிய பெயரை யாரிட்டார்களோ? அவர்களைக் கண்டால் இப்போது என்ன செய்வேன் தெரியுமா! (பற்களை நறநறவெனக் கடித்துப் பிறகு)—என்னை மோசஞ் செய்து ஏமாற்றி—நம்பிக்கைத் துரோகஞ் செய்து வஞ்சித்து—வேறொருவனை—அவன் வைத்திருக்கும் பணத்தைப் பெரிதாகக் கருதி-விவாகஞ் செய்துகொண்ட பின்னர், எனக்கு இவ்வுலகமே இருண்டு போய் விட்டது. எனக்கு இதற்கு முன்பெல்லாம் இன்பமாயிருந்த இவ்வுலகம் இப்போது துன்பம் நிறைந்ததாய்க் காணப்படுகிறது! இனி இவ்வுலகில் இருக்க எனக்குச் சகிக்கவில்லை. இதில் இருப்பது அனல்மேல் இருப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. இவ்வுலகை ஏறிட்டுப் பார்க்கவும் என் கண் கூசுகின்றது. இனி, இங்குள்ள மனிதர் முகத்தைத் திரும்பிப் பார்ப்பதில்லை என்று என்னுள் சபதஞ் செய்துகொண்டேன். இதை உண்மையாக நிறைவேற்றுவ தென்றால், இதற்குத் தற்கொலையே சிறந்த வழி. ஆயினும் அக்கொடிய முறையைக் கைக்கொள்ள என் மனந் துணியவில்லை. ஆதலால் நான் என் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு இத்தனை நாட்களாகப் பட்டினி கிடந்தே அலைந்து வருவது போலவே, மேலும் மன உறுதியோடு உண்ணா விரதம்பூண்டு, அதன் வாயிலாக எளிதில் உயிர் விடுவதே

மிகவும் சிறந்தது!—ஆ! நான் இதுவரை கட்டிய மனக் கோட்டை யென்ன! இப்போது யான் அடைந்த கேவல நிலையென்ன!....அந்தோ! என் கைகால்களெல்லாம் சோர் வுற்றுத் துவண்டு தள்ளாடுகின்றனவே! கண் பஞ்சடை கின்றதே! என் செய்வேன் ஈசா........" என்று வாயில் வந்த வாறு பிதற்றிய வண்ணஞ் சென்று கொண்டிருந்த யான், திடீரென்று ஏற்பட்ட ஒருவித ஓசையைக் கேட்டுத் திடுக் கிட்டு நின்று விட்டேன்.

"பொய்திகழும் உலகநடை என்சொல்கேன்? என்சொல்கேன்?
பொழுதுபோக்கு ஏதுஎன்னிலோ பொய்யுடல் நிமித்தம்..."

என்னும் அருமைப்பாடல் இன்னிசையோடு கலந்து அமுத தாரை பொழிவதுபோல் என் காதில் விழுந்தது. அதில் உள்ள வெறும் இசை மட்டும் என் கவனத்தைக் கவரவில்லை; அதனோடு கனிந்த உருக்கமுங் கலந்திருந்ததால் என் மனம் பாகாய் உருகிவிட்டது. மேலும், அப்போதைய எனது மன நிலைக்கு அப்பாடல் மிகவும் பொருத்தமா யிருந்ததால், நான் அதில் பெரிதும் ஈடுபாடுடையவனானேன். அப்பாட் டில் என் மனம் கவர்ச்சி யுற்றதும், எனது பெருந் துயர மெல்லாம் மறைந்து போயிற்று. இவ்வளவுதூரம் என் மனத்துக்குப் பெரும் ஆறுதலை யுண்டாக்கிய அப்பாடலைப் பாடியவர் யார்? என்று அறிய என் மனம் பெரிதும் விரும்பியது. எனவே, அவ்வினிய ஓசை வருந் திசையை நோக்கி நான் நடக்கையில், திடீரென்று அப்பாட்டு நின்று விட்டதால், நான் திகைக்கலானேன். இதுவரை பாடப் பட்ட பாட்டு ஆகாயத்திலிருந்து பாடியதுபோ லிருந்ததால், எனக்கு நேரே மேலே நோக்கினேன். என் முன்னர் ஒரு பெரிய மலை நிற்பதை யறிந்து பேராச்சரிய முற்றேன். அதன்மீது செடி கொடி மரங்கள் படர்ந்து அடர்ந்து வளர்ந்திருந்ததால், அது கண்களுக்குக் குளிர்ச்சியையும்

இனிமையையுந் தரும். பசுமைத் தோற்றத்தை வழங்கிய அம்மலைத் தொடர்ச்சி நீண்டதூரம் சென்றிருந்தது. அது போலவே, அதன் உயரமும் கண்ணுக்கெட்டும் தூரத்துக்கு மேல் வளர்ந்திருந்தது. அம்மலையின் ஒரு பக்கத்திலிருந்து நீர் அருவி இனிய ஓசையோடு இடையறாது கீழ்நோக்கி ஓடிக்கொண்டே யிருந்தது. இவ் அருவி எவ்விடத்துச் சென்று முடிகிறதென்று தெரியவில்லை.

நான் நின்றிருந்த பாதை மிகக் குறுகியதும், கரடு முரடானதுமாகும். அதன் வலப்பக்கத்தில் காட்டுப் பூஞ் செடிகளும், பெரிய மரங்களும் அடர்ந்த புதர்களும் வரிசை வரிசையாக வளர்ந்திருந்தன. அவைகளில் பூக்கள் கொத்துக் கொத்தாக மலர்ந்திருந்ததோடு அவைகளைப் பறிப்பாரில்லாமையால், அவைகளாகவே கீழே உதிர்ந்திருந்தன. அம்மலர்களிலிருந்து வழிந்தொழுகும் தேனைக் குடித்துச் சில வண்டுகள் மயங்கி வீழ்ந்திருந்தன. சில வண்டுகள் செடி கொடிகளைச் சுற்றிச் சுற்றி ரீங்காரஞ் செய்துகொண்டிருந்தன. இவ்வாறு வண்டுகளின் ரீங்காரமும் பறவைகளின் கூக்குரலும், நீர் வீழ்ச்சியின் ஓசையும் ஒன்று சேர்ந்து, என் உள்ளத்தை என்றுமில்லாதவாறு குதூகலிக்கச் செய்தது. பொழுது சாயும் அந்நேரத்தில் மக்கள் நடமாட்டஞ் சிறிதுமில்லாததும், கொடிய மிருகங்கள் நிறைந்ததும், காடாந்தகாரமுமான அவ்விடத்தில், உலகத்தை வெறுத்து உயிரைத் துரும்பாக நினைக்கும் என் போன்ற பைத்தியக்காரர்களன்றி, எவ்வளவு மனத்திண்மையும், வீரமும் வாய்ந்தவர்களாயினும் தனித்திருக்கத் துணியமாட்டார்கள் என்பது திண்ணம்.

உலக மக்கள் செய்யுங் கொடுமையைக் கண்டு சகிக்காமலோ என்னவோ, சூரியன் கோபத்தால் முகஞ் சிவக்க

மேற்குக் கடலில் விழுந்து தற்கொலை செய்துகொள்ள விரைந்து சென்முன். தன் பகைவன் மாள்வதைப் பார்த்து மகிழும் நோக்கத்தோடு, சந்திரன் சிரித்துக்கொண்டே கிழக்குப் பக்கம் தோன்றினான். இதற்கிடையே இருள் அரக்கன் தன் ஆட்சியைச் செலுத்த சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். தென்றற் காற்று மிக ரமணீயமாக வீசத் தொடங்கியது. இயற்கை அன்னை வழங்கிய அழகிய காட்சியில் யான் என் துன்பங்களையெல்லாம் மறந்து வசப் பட்டிருந்தேன்; ஆயினும், மேலே யான் கேட்ட இனிய பாடலைப் பாடியவர் யார் என்பதை யறிய என் மனம் பெரிதும் விரும்பியது. ஆகவே, நான் நாலா பக்கமும் என் கண்களைச் செலுத்தி ஆராயலானேன். அச் சமயத்தில் மீண்டும் கீழ்வரும் பாடல் காற்றில் மிதந்து வந்தது.

"வஞ்ச வினைக் கொள்கலனும் உடலைத் தீவாய் மடுக்கிலேன்
வரை யுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லன்
நாதனே யதுவும் நினது உடமை யென்றே
அஞ்சினேன் தானேயும் அழியாது ஆவி
ஐயனே நினைப்பிரிந்தும் ஆற்றகில்லேன்
என்செய்கோ! எந்தாயோ! எந்தாயோ!
............................................"

இவ்வமுதத் துளிகள் செவிவழியாகப் பொழிந்து என் தேகத்தைப் புளகாங்கிதமடையச் செய்தன. எனவே, என் பசிப்பிணியும் களைப்பும் பறந்தோடின. நான் பாட்டு ஓசை வரும் திசையை நோக்கி மலைமீது ஏறினேன். நான் சென்ற வழி தேய்ந்த பாதையல்லவாதலால், என் காலில் ஆங்காங்கு வேலம் முட்கள் தைத்து, உபத்திரவஞ் செய்தன. அது வன்றி, சில இடங்களில் செங்குத்தாகவும் கரடு முரடாக வும் இருந்ததால் நான் மலைமீது ஏறுவது சிறிது சிரம

மாகவே இருந்தது. ஆனாலும், எனது தற்போதைய மனப் போக்குக் கொத்த பாடலைப் பாடியவர் யார் என்று அறிய என் மனம் மிகவும் விழைந்து நின்றதால், இக் கஷ்டத்தை யெல்லாம் பொருட்படுத்தாது மெல்ல மெல்ல ஏறி மலை யுச்சியை யடைந்தேன்.



அங்கு சென்றதும் நான் நாலா பக்கமும் சுற்றிப் பார்க்கலானேன். அங்கு யாரும் இருந்ததாக எனக்கு முதலில் தெரியவில்லை. மலைச் சிகரத்திலும் பெரிய மரங்களும் செடி கொடிகளும் நிறைந்து வளர்ந்திருந்தன. ஆயினும் சிற்



சில இடங்களில் வெறுங் கற்பாங்கான இடை வெளிகளும் காணப்பட்டன. அவ் விதமான ஓரிடத்தில் பல விழுதுகள் தாங்கிநின்ற ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் ஒரு சிறு குடிசை இருந்தது. அதன் கூரைமீது சணல் வேய்ந்திருந்தது. அது பார்வைக்குப் பழைய காலத்து ரிஷிகளது ஆசிரமமான பர்ணகசாலை போன்று காணப்பட்டது. நான் பைத்தியக் காரன் போல் மலைமீது அலைந்துகொண்டே வருகையில், செடிகொடிகள் அடர்ந்து படர்ந்திருந்த ஓரிடத்தில் மங்கை யொருத்தி நின்று கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த மலர் களைப் பறித்துக் கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டுத் திகைத்து நின்றேன். 'என்ன அது! பெண்ணா! பேயா! தெய்வ மகளா! தேவலோக மகளிர் காடுகளிலும், மலைகளி லும் சிற்சில சமயங்களில் திரிந்து கொண்டிருப்பர் என்று சொல்லுகிறார்களே! அவர்களில் ஒருத்தியா இவள்? ஒரு வேளை இது பொய்த் தோற்றமா? அல்லது என் மன மயக் கமோ? (என் கண்களை நன்கு துடைத்துக்கொண்டு மீண்டும் அவ்விடத்தைக் கூர்மையாக நோக்கி) இல்லை? இல்லை. இது பொய்த் தோற்றமில்லை. உண்மையே! அவள் பெண்ணே! மானுட மகளே! இதில் சிறிதுஞ் சந்தேகமில்லை. அவளது உருவம் என் கண்களுக்குத் தெளிவாகத் தெரிகிறதே!—ஆமாம்; இவள் மானுடப் பெண்ணாயிருந்தால், இந்நிர்மா னுஷ்யமான—கொடிய மிருகங்கள் வசிக்கக்கூடிய பயங் கரமான—இடத்தில் எப்படி யிருக்கமுடியும்? அப்படி யானால், நான் கேட்ட—என்னை இன்பக்கடலில் ஆழ்த்திய அவ்வினிய பாடலைப் பாடியவர் யார்? அவ்வுருக்கமான—மெல்லோசை மிகுந்த—நெஞ்சங்கனிந்த—பாடலை இம் மங்கையே பாடியிருக்க வேண்டும்! அருகே சென்று பார்ப் போம்' என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டே, அம்மங்கை நின்றிருந்த இடத்தை நோக்கி நடந்தேன்.

நான் பத்துப் பதினைந்து கஜதூரம் நடந்திருப்பேன் என காலடி யோசை அவள் காதில் விழுந்து விட்டிருக்கும் என்று நினைக்கிறேன். எனவே, தான் கொய்த மலர்களைத் தன் கூந்தலில் சூட்டிக்கொண்டிருந்த அவள் திடீரென மருட்சியோடு திரும்பிப் பார்த்தாள். ஆ! அவள் முகத்தி னழகை எவ்வாறு வருணிப்பேன்! நான் என்ன கம்பனு? காளிதாசனு? அவர்களைப்போன்ற கவிஞனுக இல்லாது போய்விட்டேனே என்று தான் நான் வருந்துகிறேன். பொங்கிய கடலினின்றும் பூரித்தெழும் பூரண சந்திரனைப் போல் உருட்சியுந் திரட்சியும் பிரகாசமும் பொருந்திய முகம், அவள் பேரழகி யென்பதைத் தெளிவாகக் காட்டி யது. அவளது ஆடை யலங்காரத்தையும், ஒப்பனையையும் பார்த்த யான் அவள் ஒரு நவ நாகரிக நாரீ மணியென்று அறிந்து பெரிதும் ஆச்சரிய மடைந்தேன். அப்பேர்ப்பட்ட வள் இம்மலைக்கு எப்படி வந்தாள் என்று என் மனதில் பெரிய ஆராய்ச்சி யுண்டாயிற்று. ஆனல், உடுத்தியிருந்த ஆடை முதலியன மரவுரியா லானவை என்று யான் உற்று நோக்கியதில் தெரிந்தது. அவள் அழகாகப் பின்னிவிடப் பட்ட கூந்தலில் காட்டுப் பூக்களை நிறையச் சூடியிருந்தாள். அவளுக்கு வயது முப்பதுக்கு மேலிருக்கும்.

அவள் என்னைக் கண்டாளோ இல்லையோ, பேயைப் பிசாசைப் பூதத்தைக் கண்டால் மக்கள் எவ்வாறு பயந் தோடுவார்களோ, அவ்வாறு முகத்தில் கலக்கத்தைத் தோற்றுவித்துக் குடிசை யிருக்கும் பக்கமாக நோக்கி ஓட ஆரம்பித்தாள். இவ்வேறுபாட்டைக் கண்டதும் எனக்கு என்னென்னமோவெல்லாம் மனதில் தோன்றியது. 'டார் ஜான் கதையிலுள்ளதுபோல் இவள் என்ன மிருகங்களால் வளர்க்கப்பட்ட பெண்ணு? அல்லது நாட்டு மக்கள் கூட்டுறவு பெருத காட்டுச் சாதி மகளா? அவ்வித மிருகங்

2

தால் இவள் இவ்வளவு நாகரிகமாய்த் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்க முடியாதே! எவ்வாறேனும் இவளை யணுகி இவள் யார் என்பதை யறிந்துகொண்டு விடவேண்டும்!' என்று நினைத்து மிகவும் துணிவாக அவள் ஓட எத்தனிப் பதற்கு முன் நான் மிக வேகமாக ஓடி அவளை வழி மறித்து நின்றேன்.

எனது இம் மீறிய செயலைக் கண்டதும் அம் மங்கை ஒன்றுந்தோன்ருது திகைத்து நின்றுவிட்டாள். நான் முத லில் ஏதோ அசட்டுத் துணிவோடு வழிமறித்தேனே யொழிய, அவள் எதிர் நின்றதும் என் நாவெழவில்லை. நானும் உயிர்ப் பதுமைபோல் அசைவற்று நின்றுவிட் டேன். ஆனல் அவள்மட்டும் தன் அழகிய முகத்தை வேருெரு பக்கந் திருப்பிக்கொண்டிருந்தாள். இதனல், பொதுவாக மகளிர் நாணங்கொள்வதுபோல் அவள் ஆட வனுகிய என்னைப் பார்த்து நாணங்கொண்டாள் என்று சொல்லிவிட முடியாது. அதற்குப் பதிலாக, என்னைக் கண்டதனல் அவளுக்குண்டான வெறுப் புணர்ச்சியை வெளிப்படுத்திக் காட்டினள் என்றே கூறவேண்டும்.

அதோடு, அவள் என் முன்னே அவ்வாறு நீண்ட நேர மிருக்க விரும்பாதவள் போலவும், சமயம் நேர்ந்தால் என் னைத் தாக்கி வீழ்த்திவிட்டாயினும் ஓடிவிட வேண்டு மென்ற எண்ணங்கொண்டவள் போலவும் இருந்தாள் என்பது அவளது மெய்ப்பாட்டிலிருந்து அறிந்தேன். இக் குறிப்பை யுணர்ந்ததும் நான் அவள் அவ்விதம் செய்ய முயலுமுன், 'அவள் யார்? அவள் இவ்வடவியில் எவ்வாறு வந்தாள்? ஏன் வந்தாள்?' என்பனவற்றை அறிந்துகொண்டு விடவேண்டுமென்று பதைபதைத்தேன். என் காதல் ஏமாற் றத்தினல் உலகத்தை—முக்கியமாகப் பெண்ணுலகையே இதுவரை வெறுத்து வந்தேனயினும், இப்பெண்மணியைக்

கண்டதும் அவளது அமைதியான வடிவிலும், அழகிலும் என் மனம் பெரிதுங் கவர்ச்சியுற்றது. இதனால் அவள் பால் காதல் குறிப்புக் கொண்டேன் என்று வாசகர்கள் யாரும் தவறாக நினைத்துவிடக்கூடாது. அவ்விதக் காதல் நாடகம் எங்களுக்குள் ஏற்படவில்லை. அறிவும் அமைதியும் ஒருங்கே வாய்ந்த பெண்மையின் முன், வீரமும் ஆற்றலுங் கொண்ட ஆண்மை செயலற்றுப் போவது உண்மை யென்பதை ஒப்புக்கொள்வோர், அம் மங்கையினெதிரே நான் கோழைபோல் வாய் திறவாது நின்றதை யறிந்து எள்ளலுஞ் செய்யமாட்டார்கள்.

பின்னர் யான் மனந் திடங்கொண்டு அம்மங்கையை அணுகி, "அ-ம்-மா-!........................" என்று சிறிது இழுத்தேன். அவ்வோசையைக்கேட்டு அவள் பின்வாங்கி ஒதுங்கி நின்றாள். மீண்டும் நான்! "அம்மா! நீங்கள் என்னைக் கண்டு பயப்படவேண்டாம்..............." என்று மெதுவாகக் கூறினேன்! அவள் முகத்தை என் பக்கம் திருப்பி என்னைக் கடைக்கண்ணால் நோக்கினாள்;

"சிறிது நேரத்திற்கு முன்........................................"

"................................................"

"மிகவும் இனிமையும் உருக்கமுமான பாட்டோசை."

"................................................"

"என் காதில் விழுந்து என்னை மகிழ்ச்செய்து இங்கே இழுத்து வந்தது. அதைப் பாடியது நீங்கள்தானோ?"

"................................................"

எனது கேள்விகளுக்கு அவள் ஒன்றும் பதிலளிக்காது போகவே, நான் பலபல எண்ணலாயினன். ஒரு வேளை அவள் ஊமையா யிருக்கலாமோ அல்லது ஆடவர்களிடம் பேசுவதில்லையென்ற விரதம் பூண்டிருக்கிறாளோ என்றெல்

லாம் கருதினேன்; ஆயினும், இன்னும் பார்ப்போம் என்று நினைத்து மறுபடியும் அவளை நோக்கி, "அம்மா! இக்கேள்விகளுக்குப் பதில் சொல்ல உங்களுக்கு விருப்பமில்லையென்று கருதுகிறேன். அது போகட்டும்; நீங்கள் யார்? மனித சஞ்சாரமில்லாத இம்மலைப் பிரதேசத்திற்கு எவ்வாறு வந்தீர்கள்; ஏன் வந்தீர்கள்? இங்கு இவ்வாறு தனித்து வாழவேண்டிய அவசியமென்ன நேர்ந்தது? இவற்றையாகிலும் தயவு செய்து எனக்குக் கூறக்கூடாதா?" என்று இரக்கமாகக் கேட்டேன்.

"நான் யாரா யிருந்தால் உமக்கென்ன? நிர்மானுஷியமான இவ்விடத்தில் நான் வசிப்பதைப் பற்றி உமக்கென்ன கவலை; உம் வழியைப் பார்த்து நீர் செல்வதை விட்டு இங்கு வந்து என்னை வழி மறித்துத் தொந்தரவு செய்ய உமக்கென்ன அவ்வளவு துணிவு......................." என்று பெண் சிங்கம் போல் ஒரே கர்ஜனையாகக் கர்ஜிக்கத் தொடங்கிய அம்மங்கை ஆத்திரத்தால் மேலே பேச முடியாது தயங்கினாள். எதிர்பாராதவாறு அவள் முழக்கிய முழக்கத்தைக் கேட்டு நான் உண்மையிலேயே நடுங்கிப் போனேன், ஆ! கோபத்தால் கொதித் தெழுந்த அம்மங்கையின் அப்போதைய தோற்றத்தை நீங்கள் பார்த்திருக்கவேண்டுமே! தன் கணவன் கொலையுண்டான் என்பதைக் கேட்டுக் கொதித் தெழுந்து மதுரைமா நகரை யெரித்த கண்ணகி—பிரான்ஸின் சுதந்திரத்துக்காகப் போராடிய மாக்ஸ்வினி—வீரப் பெண்மணி ஜான்ஸி ராணி—ஆகியவர்களின் வீரத் தோற்றங்கள்கூட இக் கம்பீர பயங்கர தோற்றத்துக்கு ஈடாகாது என்று துணிந்து சொல்லுவேன். இப்பெருமாறுதலைக் கண்டு நான் பேராச்சரிய முற்றேன். 'சிறிது நேரத்திற்கு முன் அமைதியே வடிவாய் நின்ற மங்கையா இப்போது இவ்வளவு கோரமாக விளங்குகிறாள்? அவள் தானா

இவள்?' என்று நேரில் பார்ப்போர் எவரும் சந்தேகிக்காம லிருக்க முடியாது.

எனவே, நான் அவளை ஏறிட்டுப் பார்த்துப் பேசவும் அஞ்சித் தலை குனிந்தவண்ணம், "இல்லையம்மா சிறிது நேரத்திற்கு முன் நீங்கள் பாடிய பாடல்கள்—ஆம், நீங்கள் பாடியதுதான் என்று நான் திடமாக நம்புகிறேன்—தற் போதைய எனது மன நிலைக்கு மிகவும் ஒத்ததாக இருந்தன. அப்பாடல்களே வழியே போகும் என்னை இங்கு இழுத்து வந்தன. ஆகவே நான் இங்கே வந்ததற்கு உங்களது பாடல் கள் காரணமே யொழிய நான் ஒரு சிறிதும் பொறுப்பாளி யல்லன். அவ்வாறு வந்த எனக்கு உங்களை இவ்விடத்தில் தனியே கண்டதும் ஆச்சரியமும், பரிவு முண்டாயின. 'பெண்ணெனின் பேயும் மனமிரங்கு' மென்பது உண்மை மொழியல்லவா! ஆதலால்; உங்களது நிலைமையை அறிந்து ஏதேனும், என்னுல் உதவிபுரியக் கூடுமானுல் செய்யலாம் என்ற எண்ணத்தோடு கேட்டேனேயன்றி வேறல்ல. இவ் வாறு கேட்டது உங்களுக்குத் தவருகத் தோன்றினுல் அதற் காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று தாழ்மையாகச் சொன்னேன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு அவள் என்ன நினைத் தாளோ, வாய்விட்டுச் சிரித்துவிட்டாள். அவளது மந்த காஸ முகத்தில் இப்போது கோபத்தைக் காணவில்லை. "ஐயா! நீர் மிகவும் குறும்பராக இருக்கிறீர்! நீர் இங்கு வந்ததற்கு யான் பாடிய பாடல்களா காரணம்? நீராக இங்கு வரவில்லையா? உம்;—ஆடவர்களே பெரும்பாலும் இப்படித்தான் சாதுரியமாகப் பேசி என் போன்ற பேதைப் பெண்களைத் தங்கள் வசப்படுத்திப் பின்னர் ஏமாற்றிச் செல்வது வழக்கம். இந்த சூழ்ச்சி எனக்குத் தெரியாததன்று. இவ்வித வஞ்சக வார்த்தைகளும் எனக்குப்

புதிதல்ல. இனி ஒருக்கால் ஆண்மக்களை நம்புவேனென்று நினைக்கிறீர்! அது இந்தப் பிறப்பில் இல்லை" என்று முதலில் புன்னகையோடு பேசத் தொடங்கியவள், பின்னர் முகஞ் சிவக்கப் பேசி முடித்தாள்.

இப்பேச்சிலிருந்து அவளது மனப்போக்கை ஒருவாறு ஊகித்தறிந்த நான் ஆச்சரியக் கடலில் ஆழ்ந்தேன். எனவே என்னுடைய மனநிலையை உண்மையாக எடுத்துரைக்கத் துணிந்து சிறிது வேடிக்கையாகவே, "அப்படியா! மிகவுஞ் சந்தோஷம். என்னுடைய அனுபவம் இதற்கு நேர்மாறானது. பெண்கள்—பெரும்பாலும் மட்டுமல்ல—எல்லோருமே ஆடவரைக் கண்டதும் முதலில் இவ்வாறுதான் கடுமையாகப் பேசிப் பயப்படச்செய்து பின்னர் தாங்கள் விரித்திருக்கும் வலையில் சிக்கவைத்துப் படுகுழியில் வீழ்த்தி அல்லலுறச் செய்வார்கள். இது அவர்களுக்கு இயற்கை; ஆதலால்தான் நானும் இப் பெண்களையே அடியோடு வெறுக்கிறேன்" என்று மொழிந்தேன்.

"இது என்ன பரிகாசமா? அல்லது வட்டிக்குப் போட்டியா?"

"இல்லை; இல்லை. உண்மையாகவே உரைக்கிறேன். என்னுடைய இரண்டு வருட காதல் அனுபவத்தின் முடிவு இது."

பெண்களை வெறுக்கும் நீர் ஏன் என்னை நாடி வந்தீர்?"

நான் சொல்வதை நம்பு. நீ பாடிய பாடல்களே என்னை இங்கு இழுத்து வந்தன. என் மனம் இப்போது என்ன நிலையிலிருக்கிறதோ அதுவே பிரதி பலிப்பதுபோல் இப்பாடல்கள் என் காதில் விழவே, அவற்றைப் பாடியவர் யார், என்றறிய விரைந்தோடிவந்தேன். ஓர் இளம் பெண் பயங்கரமான இடத்தில் தனித்திருந்து இவ்விதப் பாடல்களைப் பாடுவாள் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை

யாதலால் உன்னைக் கண்டதும் பேராச்சரிய முற்றேன். பெண்களிடத்து எனக்கு ஏற்பட்டிருந்த வெறுப்புணர்ச்சி இச்சமயம் தலைகாட்டவில்லை. பழைய மனச் சபலம் மேலெழவே, உன்னுடைய தனித்த நிலைமையைக் கண்டு வேறொன்றுமல்ல-உதவி செய்யவேண்டுமென்ற ஒரு பெரும் நோக்கத்தோடேயே உன் விவரத்தை யறிய விரும்பினேன்" என்று நீண்ட பிரசங்கஞ் செய்தேன்.

அம்மங்கை வியப்புக்கொண்டோ என்னவோ என்னை ஏற இறங்கப் பார்த்தாள். பின்னர் ஒருவாறு தலையை யசைத்துவிட்டு, "அப்படியானால், நீர் பொய் திகழும் (நிறைந்த) உலகத்தை வெறுத்துவிட்டா வந்திருக்கிறீர்?" என்று ஆழ்ந்த யோசனையோடு வினவினாள்.

"ஆம்; பொதுவாக உலகை—முக்கியமாகப் பெண்ணுலகை—வெறுத்தே வந்திருக்கிறேன்."

"நானும் உலக நடையை—முக்கியமாக ஆண் மக்கள் நடவடிக்கையைக்— கண்டு வெறுப்படைந்தே இங்கு வந்துவிட்டேன்."

"என்ன! நீயாகவா இங்கு வந்துவிட்டாய்? வேறு யாராலேயோ அல்லது எப்படியோ தப்பித் தவறியோ இப்பயங்கரமான இடத்தில் வந்து சேர்ந்திருக்கிறாய் என்றன்றோ நினைத்தேன்?"

"இல்லை; இல்லை. நானாகவேதான் இவ்விடத்துக்கு வந்து சேர்ந்தேன்."

"இது உனது மன உறுதியையும் அளவு கடந்த துணிவையுங் காட்டுகிறது. அது கிடக்கட்டும். கருத்து வேற்றுமை இருந்தாலும், நமது நோக்கம் ஒன்றாகவே இருப்பதைக் கண்டு நான் ஒரு வகையில் மன மகிழ்கிறேன்:—ஆமாம், கொடிய மிருகங்களும் விஷ ஜந்துக்களும் நிறைந்த

இம்மலைப் பிரதேசத்தில் நீ எவ்வாறு தனித்து வசிக்கிறாய்? உனக்குப் பயமாக இல்லையா?"

"ஒருவித பயமுமில்லை: கொடுங் குணங்கள் நிறைந்த மக்கள் இடையே வாழ்வதைவிட, இங்கு வசிப்பது எவ்வளவோ இன்பமாய் இருக்கிறது. மக்களைவிட மிருகங்கள் எவ்வளவோ நல்லவைகளாக இருக்கின்றன; அவை என்னிடம் எவ்வளவு விசுவாசமாகவும், (நன்றியறிவுடைமையாகவும்) இருக்கின்றன; தெரியுமா?—ஆ! நம் மக்களிடம்—நூற்றுக்குத் தொண்ணூறு பேரிடம்—சிறிதாகிலும் நன்றியோ நேசமோ இருக்கிறதா! ஏதோ ஒரு விதமான உதவியை-பயனை-எதிர் பார்த்தே ஒருவரை யொருவர் நேசிப்பதுபோல நடிக்கின்றனர். காரியம் முடிந்ததும் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை.—ஐயகோ! இந்த மனித சமூகத்தைப் போல் கொடியதொன்றை இவ்வுலகத்திலேயே காண முடியாது. ஒருவரை யொருவர் ஏமாந்தால் பள்ளத்தில் வீழ்த்தி உயிரோடு புதைக்கவன்றோ சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்! வலியார்—பொருளாலோ தேக பலத்தாலோ வன்மை யுடையவர்களாக இருப்போர்—எளியரைப் படுத்துங்கொடுமை—உயிரோடு சித்திரவதை செய்துவருங் கொடுமை—அளவிட்டுச் சொல்லக்கூடியதல்ல. இவற்றையெல்லாம் நோக்கும்போது மிருகங்களும், விஷ ஜந்துக்களும் எவ்வளவோ மேலல்லவா!" இப்போது அவள் முகத்தில் கோபங் கொழுந்துவிட்டு எரிந்தது. தேகத்தில் படபடப்புக் காணப்பட்டது. அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உள்ளத்திலுள் இருந்து எழுந்தது என்பதை நான் நன்றாக அறிந்தேன்.

"நீ இம்மலைப் பிரதேசத்துக்கு வந்து எவ்வளவு காலமாயிற்று?"

"சுமார் நான்கைந்து மாதமிருக்கும்."

'இதுவரை நீ இங்கு மனிதர் யாரையுஞ் சந்திக்க வில்லையா?"

"இல்லை. இங்கு வந்த பின்னர் முதன் முதலாக உம்மையே இன்று கண்டேன்."

"ஆச்சரியம்! இவ்வளவு தூரம் மனித சமூகத்தையே வெறுத்து, பெற்ற தாய் தந்தையரைப் பிரிந்து, உயிரையும் பொருட்படுத்தாது இங்கு வந்து தனித்து வசிப்பதற்கு ஏதேனும் காரணமிருக்க வேண்டுமல்லவா! அது என்ன வென்று நான் அறிய விரும்பலாமா! உனது வரலாற்றை நான் தெரிந்துகொள்ள விரும்புவதில் தவறொன்று மில்லையே?" என்று நயமாகக் கேட்டேன்.

அதற்கு அவள் கோப நகை நகைத்து, "தாராளமாகத் தெரிந்து கொள்ளலாம். நீர் மட்டுமல்ல; இவ்வுலகமே தெரிந்துகொள்ள வேண்டுமென்பது எனது பேரவா. எனது வாழ்க்கை வரலாறு மனித சமூகத்துக்குப் பெரும் படிப்பினையாக இருக்குமென்று நான் நம்புகிறேன். அதை எவ்வாறு வெளிப்படுத்துவது என்றுதான் இதுவரை தயங்கியிருந்தேன். மனித சமூகத்தையுந் திரும்பிப் பார்ப்பதில்லை; எனது வரலாற்றையும் வெளிப்படுத்த வேண்டுமென்றால் அது சாத்தியமான காரியமா? ஏதோ நீர் எவ்விதமோ இங்கு வந்து தோன்றி, மடங்கியிருந்த எனது உணர்ச்சியைத் தூண்டிவிட்டுவிட்டீர். அதுவன்றி நீரும் ஒரு வகையில் என்னைப் போலவே மனித சமூகத்தை வெறுத்து வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் ஒத்த கொள்கையும் நோக்கமும் உடையவர்களிடம் எதையும் சொல்வது நல்லதென்றே கருதுகிறேன். நீர் எனது வரலாற்றைக் கேட்டு உலகத்துக்குப் பரப்பினாலுஞ் சரி எவ்வாறு செய்தாலும்

இனி உம் இஷ்டம். ஆனால் ஒன்று. எனது வாழ்க்கை வரலாற்றைக் கேட்பதற்கு உமது இருதயம் பலமுடைய தாக இருக்கவேண்டும். அதற்குத் தகுந்தவாறு உமது மனதையும் திடப்படுத்திக் கொள்வீராக" என்றாள்.

நான் சிரித்துக்கொண்டே, "அவ்வளவு கொடுமை நிறைந்ததா? உம்.—அத்தனை கொடுமைகளையு மனுபவித்து விட்டு நீ இருக்கும்போது, நான் கேட்டுத் தாங்கத்தானா முடியாது? நீ சொல்லப் போவதைப்போன்ற கொடுமை களைக் கண்டுங் கேட்டும் அனுபவித்தும் நான் நன்கு பயிற்சி பெற்றுத் தேர்ந்திருக்கிறேன். ஆதலால், எங்கு உன் வர லாற்றைக் கேட்டுத் தாங்கமாட்டாது இருதயம் வெடித்து இறந்து விடுவேனோ என்று நீ பயப்பட வேண்டிய அவசிய மில்லை. இனி நீ தயங்காமல் உனது வாழ்க்கை வரலாற் றைக் கூறலாம்," என்று சொன்னேன்.

"மிகவுஞ் சந்தோஷம்.—சரி; நான் இப்போது என் அறிவு தெரிந்த நாள் முதல் என் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்களை ஒன்றும் ஒளியாது கூறப்போகிறேன்; இதில் மிகைப்படுத்திக் கூறல் குறைத்துக் கூறல் ஒன்றுமில்லை. சிலர் தங்கள் வாழ்க்கை வரலாற்றைக் (Autobiography) கூறுகையில், தங்கள் கௌரவத்துக்குப் பாதகமான பாகங் களை—தீய ஒழுக்கங்களை—கெட்ட குணங்களை-மறைத்து, தங்கள் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர்களின் தீக்குணச் செயல்களையே அதிகப்படுத்திக் கூறி, அதன் வாயிலாகத் தாங்கள் பரிசுத்த மூர்த்திகள் என்று காட்டிக்கொள்ள— பிறர் நினைக்கும்படிச் செய்ய-முயல்வார்கள். அது பெருந் தவறு. அவ்வாறு நான் கூறமாட்டேன் என்பதை நீங்கள் நினைவில் வைக்கவேண்டும். அவ்விதம் பொய் வரலாறு கூறுவது உலக மக்களுக்கு ஒரு நல்ல படிப்பினையைப் போதிப்பதாகாது என்பதை நான் நன்கு அறிவேன்" என்று

பெரிய பீடிகை போட்டுவிட்டுத் தன் வாழ்க்கை வரலாற்றைக் கூறத் தொடங்கினுள்.

அவள் இதுவரை என்னிடம் பேசிவந்த வார்த்தைகளிலிருந்து நான் அவளது தெளிந்த அறிவையும் ஆழ்ந்த உலக ஞானத்தையும் அறிந்து என்னுள் பெரிதும் வியப்புற்றேன். ஆனுல் அவ்வாச்சரியத்தை மொழி மூலமாகக் காட்ட ஆரம்பித்தேனுனல், எங்கு பேச்சு வளர்ந்து அவள் வரலாற்றைக் கேட்கத் (அவ்வளவு ஆவலும் துடிதுடிப்பும் இருந்தது. வாசகர்களுக்கு எப்படி இருக்கிறதோ எனக்குத்தெரியாது) தடைபடுமோ என்று அஞ்சி வாய்திறவாது அவள் முகத்தையே நோக்கி நின்றேன்.

வரலாற்றைக்கூற ஆயத்தமான அப்பெண்மணி, திடீரென எதையோ நினைத்துக்கொண்டவள்போல், "நான் என்ன முட்டாள்தனமான காரியம் செய்தேன்! என்னை நாடிவந்த அதிதியாகிய உம்மை இதுவரை நிற்கவைத்தே ஏதேதோ பேசிவிட்டேன். அப்பிழைபோதாதென்று இனியும், உம்மை இங்கேயே நிற்கவைத்து என் கதையைஅளக்க ஆரம்பித்துவிட்டது எனது பெரும் பேதைமையை யன்ருே காட்டுகிறது? மேலும், பொழுது சாய்ந்துவிட்டது. துஷ்ட மிருகங்களும், விஷஜந்துக்களும் தாராளமாக வெளிவந்துலவப் போகும் நேரம். ஆதலால் நாம் நம்முடைய குடிசைக்குப் போவோம். வாரும்" என்று கூறிக்கொண்டே நாங்கள் நின்றிருந்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் மேற்கே இருந்த குடிசையை நோக்கிக் கைகாட்டிய வண்ணம் நடந்தாள். அவள் கூறியதை ஆமோதிப்பதுபோல் என் கால்கள் அவள் பின்னே என்னை யிழுத்துச் சென்றன. அவள் முதலில் என்னைக் கண்டதும் நடந்துகொண்ட மாதிரியும் பேசிய முடுக்கான வார்த்தைகளும் தளர்ந்துபோய், படிப் படியாகக் கீழ்ப்படிந்து வருவதற்குக் காரணமென்ன

வென்று யோசித்துக்கொண்டே நான் செல்லலானேன். சமூகக் கொடுமையை நினைந்து நினைந்து மனம் புண்ணாகி வெறுப்புணர்ச்சி மிகுந்து காட்டில் சிலகாலம் அவள் மிருகங்களிடையே வசித்து வந்தமையால், முதலில் என்னைக் கண்டவுடனே அவ்விரக்தி மனோ பாவத்தோடே கடுமையாக என்னிடம் நடந்துகொண்டாள் என்றும், சில மணி நேரங்கள் என்னோடு பேசி என் மனப்போக்கை யறிந்து பழகியதனால், பழைய மனித சுபாவம் வந்து மரியாதை, தயாள குணம் மேலெழுந்து வேலை செய்கிறது என்றும் அறிந்து மகிழ்ந்தேன்.

அம்மங்கை குடிசையருகு சென்றதும், நான் பின்னே வருகிறேனா என்று திரும்பிப் பார்த்துவிட்டு, அக்குடிசையின் கதவைத் திறந்து உள் நுழைந்தாள். அங்கு ஒரு பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த தாழை மடலால் அழகாகப் பின்னப்பட்ட சிறிய பாயைக் கீழேபோட்டு, அதில் அமரும்படி என்னைக் கூப்பிட்டாள். நான் வாய் பேசாது இயந்திரம்போல் அவள் சொல்லிய வண்ணமெல்லாம் இயங்கலானேன். நான் உள்ளே சென்று அத்தாழம் பாயின்மீது உட்கார்ந்ததும் அதன் உள்ளமைப்பைக் கவனமாகப் பார்த்தேன். அவ்விடம் மிகவும் பரிசுத்தமாக இருந்தது. மரத்தாலாகிய பாத்திரங்கள் நாலைந்தும், பிரம்பினால் பின்னப்பட்ட தட்டு முதலிய சாமான்கள் சிலவும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. சாதாரண மரக்கட்டி லொன்று ஒரு மூலையில் கிடந்தது. பூக்குடலைகள் இரண்டு மூன்று மேலே தொங்கவிடப்பட்டிருந்தன. இரு மரக் கூஜாக்கள் ஒருபுறம் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இம்மரச் சாமான்கள் எல்லாம் தச்சர்கள் செய்வதுபோல் திருத்தமாக இல்லை. எனினும், அவை பொதுவாக, உபயோகத்துக்கு ஏற்றவையாகவும், பார்ப்பதற்கு அழகாகவும் இருந்தன. இவ்வாறு

இவையெல்லாம் அவையவை இருக்கவேண்டிய இடத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது, அவளது மனத்தின் செம்மையைக் காட்டியது. தன் உபயோகத்துக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் இப்பெண்ணே செய்து கொண்டிருக்கிறாள் என்பதை அவைகளின் அமைப்பிலிருந்து ஒருவாறு ஊகித்துக்கொண்டேன். முற்றும் துறந்த முழு முனிவரது ஆசிரமங்கூட இவ்வளவு தூய்மையாகவும் திருத்தமாகவும் இருக்காது என்று துணிந்து கூறுவேன். இவளது விசித்திர வாழ்க்கையையும், சந்நியாச (அத்தத்துவத்தில் இல்லாவிடினும்) நிலைமையும் கூர்ந்து காணக் காண எனக்கு ஆச்சரியமே மிகுந்தது.

இதற்குள் அப்பெண்மணி, பூக்குடலைகள் ஒன்றிலிருந்து பழ வகைகள் சிலவற்றை எடுத்து ஒரு பிரப்பந்தட்டில் வைத்து என் முன் கொண்டுவந்தவள், யான் ஆழ்ந்த சிந்தனையி லிருப்பதைக் கண்டு அப்படியே நின்று, "என்ன! ஏதோ பலமான யோசனையில் ஆழ்ந்திருக்கிறுப்போ லிருக்கிறது! ஏதேனும் உலகத்தின் முக்கிய பிரச்சினை யொன்றைத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு உமக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். அப்படித்தானே!" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

அவளது குறுபுத்தனமான கேள்வியைக் கேட்டு எனக்கும் நகைப்பு வந்துவிட்டது. "நான் என்ன உலகத்தை உய்விக்க வந்த தலைவனா? அல்லது சக்கரவர்த்தியா? உலகப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு; அப்படி யொன்றுமில்லை. இம்மலைப் பிரதேசத்தில் இயற்கை யன்னை யளிக்கும் அற்புதக் காட்சியில் என் மனம் இலயித்துப் போய்விட்டது. ஆண்டவனது படைப்புத் திறத்தையும் அருள் விளக்கத்தையும் இங்குதான் நன்ருகக் காண்கிறேன்" என்று உணர்ச்சியோடு கூறினேன்.

இதைக் கேட்ட அம்மங்கை முகமலர்ச்சியுற்று, "உம்முடைய வார்த்தையிலிருந்து நீர் ஓர் இயற்கை வாதி; தத்துவ ஞானி என்று தெரிகிறது.—நகரத்தில் அறுசுவை பதார்த்த வகைகளோடு உண்டியருந்திப் பழகிய உமக்கு, குரங்கு தின்னும் இப்பழ உணவு பிடிக்குமோ என்று அஞ்சினேன். இனி அவ்விதம் மயக்கங்கொள்ளவேண்டிய அவசியமில்லை யென்று நினைக்கிறேன். தயவு செய்து இப் பழங்களை உண்டு நீரருந்திக் களைப்பாறும்" என்று கூறிப் பழத்தட்டை என் முன் வைத்து கூஜாவில் தண்ணீரைக் கொண்டுவந்து வைத்தாள்.

நான் உண்ணாவிரதம்பூண்டே உயிரைவிட வேண்டுமென்ற கொள்கையோடு நான்கைந்து நாட்களாகப் பட்டினியாகக் கிடந்தே வழி நடந்து வந்தேனாகையால், முன்னரே குறித்தபடி பெரும் பசியும், சோர்வும் என்னை வாட்டின. ஆயினும் இம்மங்கையின் இனிய பாடலைக் கேட்டதனாலும், அவளோடு பேசியதனாலும் அவற்றின் துன்பம் சிறிது மறைந்திருந்தது. அதோடு அவளது வரலாற்றைக் கேட்க வேண்டுமென்ற ஆவலில், எனது மனத்துன்பம் முதலிய யாவற்றையுமே மறந்திருந்தேன். அவ்வாறிருக்க அவளது வரலாற்றைக் கேட்பதற்கு இடையூறாக, அவளுடைய உபசரிப்பு முதலியவைகள் இருக்கவே, எனக்கு அருவருப்பும், ஆயாசமும் உண்டாயின. எனினும், அம்மங்கையின் வார்த்தைக்கு மாறாக நடக்கவும் எனக்குச் சிறிது பயம். ஆகவே, அப் பழங்களைச் சிறிது சிறிதாகத் தின்றேன். அவளும் சில பழங்களை யெடுத்து வைத்துக்கொண்டு என்னெதிரே உட்கார்ந்து உண்டாள். நான் தின்ற பழங்கள் மிகவும் இனிமையாக இருந்தன. என் வாணாளிலேயே அவ்வித பழங்களைத் தின்றது கிடையாது. ஆகவே நான் அவளைப் பார்த்து, "இப் பழங்கள் மிக இனிமையாக இருக்கின்றன" என்றேன்.

அவள் புன்சிரிப்போடு, "இப்பழங்கள் எவ்வளவு இனிமையாக இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு, என் வாழ்க்கை வரலாறு மிகக் கசப்பாக இருக்கும். அதை உம் காதுகள் எவ்வாறு கேட்டுச் சகிக்கும் என்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினாள்.

நான், "அக்கரையில்லை; நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீ இப்போது பேசிவரும் பீடிகையும், உபசார வார்த்தையுமே எனக்குக் கசப்பா யிருக்கிறது. அது தவிர, நீ எவ்வளவு சீக்கிரம் உன் வரலாற்றைக் கூறத் தொடங்குகிறாயோ அவ்வளவுக் கவ்வளவு எனக்கு மிகத் திருப்தியாக இருக்கும்.

'செவிக்கு உணவிலாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்."

என்று நமது தமிழ் நாவலர் சொல்லியிருப்பது உனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். என் செவிக்கு விருந்து கொடுக்க வேண்டிய சமயத்தில், அதைத் தடைப்படுத்தி போடப்போட தூர்ந்து போகாத பேராசை மிகுந்த இவ்வற்ப வயிற்றுக்கு விருந்துவைக்க நீ ஆரம்பித்துவிட்டது தான் எனக்குச் சிறிதும் சகிக்கவில்லை. ஆதலால் இனியும் பேச்சை வளர்த்தாது உன் வரலாற்றைக் கூற ஆரம்பியும்!' என்று என் தமிழ்ப்புலமையைக் காட்டிப் பட படப்பாகப் பேசினேன்.

அம்மங்கை ஆச்சரியமாகவும், குறும்பாகவும் என்னைப் பார்த்து, "அப்படியா! அத்துணை ஆவலா! அவ்வளவு அவசரமா என் வரலாற்றை யறிய" என்று கேட்டுக்கொண்டே கூஜாத் தண்ணீரைக் குடித்துவிட்டு எழுந்து நான் தின்று விட்டு வைத்திருந்த பழத்தட்டையும், கூஜாவையும் எடுத்து ஓரமாக வைத்தாள்.

# இரண்டாவது அதிகாரம்

## புவனசுந்தரியின் இளம் பருவம்

இங்ஙனம் எல்லா சாமான்களையும் முன்போல் ஒழுங்காக வைத்துவிட்டு அம்மங்கை எனக்குச் சிறிது தூரத்தில் எதிரே உட்கார்ந்த வண்ணம், "ஐயா! என் கதையை ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டாள்.

"ஆஹா! தாராளமாய்" என்று உற்சாகத்தோடு சொன்னேன். இங்கு வாசகர்களுக்கு ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். நான் அம்மங்கையைப் பார்த்தது முதல் இவ்வளவு நேரமாகப் பேசி வந்ததுவரை அவள் ஆடவனாகிய என்னோடு தனியாகப் பேசுவதைப்பற்றி நாணமோ அல்லது அச்சமோ ஆகிய எவ்வித உணர்ச்சியையுங் கொள்ளவேயில்லை. சாதாரணமாக ஓர் ஆடவனோடு மற்றொரு ஆடவனோ, ஒரு மங்கையோடு மற்றொரு பெண்ணோ பேசுவதுபோலவே, யாதொரு வேற்றுமையுமின்றிப் பேசினாள்; பழகினாள் என்றே சொல்லவேண்டும். இது எனக்கு ஒரு பெரிய வியப்பை யுண்டு பண்ணியது. பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்குணமும், இவளுக்கு—சமூகத்தைவிட்டு வெளியேறியிருப்பதால்—அற்றுவிட்டதோ என்றும் எண்ணினேன்.

அம்மங்கையினது கடைசிக் கேள்விக்கு நான் பதிலளித்ததும் அவள் சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். இப்போது அவள் முகத்தில் துயரங் குடிகொண்டது. இம் மாறுதலை, வானத்தில் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்த

சந்திரனை மேகங்கள் மறைத்தால் எவ்வாறு இருண்டு விடுமோ அதுபோல, அவள் வதனத்தைத் துன்பஞ் சூழ்ந்து கொண்டதென்றே உவமிக்கவேண்டும். இதிலிருந்து அவளது மனம் அச்சமயம் மிகுதியும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது என்று நன்கு தெரிந்தது. பின்னர் அவள் தலை குனிந்த வண்ணம் மெதுவான குரலில் தன் வரலாற்றைக் கூற ஆரம்பித்தாள்.

"தோழரே! ஆம், எனக்கு உற்ற தோழர்தான். உமது கொள்கையும், உணர்ச்சியும் பெரும்பாலும் எனக்கு ஒத்திருக்கின்றமையால், நான் நட்புகொண்டு பழகுதற்குரியவரென்றே நான் நம்புகிறேன்-வன விலங்குகளிடையே இம் மலையில் வாழும் நான், செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்தவள். ஆனால், அச்செல்வத்திலேயே புரண்டு இறக்கும்படியான நிலையை அடையாததற்காக நான் மிகவும் மகிழ்கிறேன். "கருவிலேயே திருவுடையார்" என்று சொல்கிறார்களே! அம்மொழி எனக்காகவே பிறந்தது என்று எண்ணி இறுமாந்த காலமு முண்டு. எனது தந்தையார் சென்னைமா நகரிலுள்ள லட்சாதிபதிகளில் ஒருவர். அவருக்கு நான் ஒருத்தியே பிள்ளையும், பெண்ணுமாயிருந்தேன். எனவே, எனது பெற்றோர்கள் என்னை எவ்வளவு அருமையாகவும், செல்வமாகவும் வளர்த்திருப்பார்கள் என்பதை நீங்களே ஊகித்தறிந்து கொள்ளலாம். என் தந்தைக்குத் தம்பி யொருவர் உண்டு. அவரது குடும்பத்தாரும் எங்களுடனேயே வசித்து வந்தனர். எனது தந்தையும், சிறிய தந்தையும் இளமையிலிருந்தே ஒற்றுமையாயிருந்து வந்தனராம். அதோடு, அவர்களிருவரும், ஒரே வயிற்றிற் பிறந்த சகோதரிகளை முறையே விவாகஞ் செய்து கொண்டதால், ஏற்கனவே உள்ள ஒற்றுமையுணர்ச்சி

பலப்பட்டு வந்தது. அதோடு அவர்கள் பிதிரார்ஜிதச் சொத்தைப் பாகஞ் செய்துகொள்ளாமல் ஏக குடும்பமாக இருந்தே அனுபவித்து வந்தனராம். நாலைந்து ஆயிரத்துக்குப் பெறுமானமாயிருந்த பிதிரார்ஜித சொத்தை முதலாகக் கொண்டு என் தந்தை பலவிதமான வியாபாரங்கள் செய்தும், கவர்ன்மெண்டு கண்டிராக்டுகள் எடுத்தும் விடா முயற்சியோடு பணவருவாயை அதிகப்படுத்திக் கடைசியாக இருபது இருபத்தைந்து லட்சத்துக்குச் சொந்தக்காரரானார். சாதாரண நிலையிலிருந்தவரை ஏதோ தொழில் முயற்சியில் ஈடுபட்டிருந்த எனது சிறிய தந்தையார், சிறிது மேல் நிலைக்குக் குடும்பம் உயர ஆரம்பித்ததுமே, எல்லாவற்றையும் விட்டுச் செல்வப் பிள்ளையாகவே உலவி வர ஆரம்பித்தாராம். அவருக்கு என் தந்தையின் வியாபார முயற்சியில் சிறிதுங் கவலையே கிடையாதாம். ஆனால் அவர் எப்போதும் என் தந்தைக்கடங்கி மரியாதையாகவே இருந்து வந்தாராம். எனக்கு அறிவு தெரிந்து நான் பார்த்தபோது கூட அவர் உல்லாச புருஷராகவும், ஆடம்பரப் பிரியராகவுமே இருந்தார். அவர் இரண்டு பிள்ளைகளுக்கும் மூன்று பெண்களுக்கும் தந்தையான பிறகும் தமது பொறுப்பையுணராது விளையாட்டுப் பிள்ளைபோலவே இருந்து வந்தாரென்றால் அதிகங் கூறுவானேன்!

என் தாய் என் தந்தைக்கு வாழ்க்கைப்பட்ட பின்னரே, அவர் பலராலும் போற்றப்படும் "தனபதி" செட்டியார் என்று பெயருக்குரிய தகுதியை உண்மையாகப் பெற்றார் என்று பலரும் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். எனவே, என் தகப்பனார் அவளைத் தம் 'கிருக லக்ஷ்மி'யாகப் போற்றிவந்திருப்பார் என்று கூறுவது மிகையாகாது. ஆயினும் என்னுடைய தாய் சிற்சில சமயங்களில் சிறிதும் உற்

சாகமின்றி வருத்தமா யிருந்ததைப் பார்த்திருக்கிறேன். ஒரு நாள் நான் கல்லூரிக்குச் சென்றுவிட்டு என் மாளிகையை அடைந்தேன். உடனே நேரே என் தாயிருக்கும் அறையில் நுழைந்ததும், அவள் கண்களில் நீர்த்துளிகள் ததும்பியிருப் பதைக் கண்டு நான் மனம் பதறினேன். நான் அச்சமயம் ஆறு வயது சிறுமியா யிருந்தும், என் தாய் ஏதோ துன்பத் தால் மனம் புழுங்கிவருகிறாள் என்று ஒருவாறு உணர்ந் தேன். ஆகவே, நான் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து என் தாயைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "அம்மா! ஏன் அழு கிறாய்? பலதடவை நீ இம்மாதிரி வருந்துவதை நான் பார்த் திருக்கிறேன். இதற்குக் காரணமென்ன என்பதை எனக்குச் சொல்லமாட்டாயா அம்மா!" என்று கெஞ்சிக் கேட்டேன்.

எனது எதிர்பாரா வருகையையும், சொல்லையுங்கேட்ட என் தாய் கண்களைத் துடைத்துக்கொண்டே, "கண்ணு! உனக்கேன் இந்தக் கவலை? என் தலைவிதி நான் ஏதோ அநு பவிக்கிறேன்.—அது கிடக்கட்டும். நீ சாப்பிட்டு வெகு நாழிகையாச்சே! வா கொஞ்சம் பக்ஷணம் தருகிறேன். அதை யருந்திவிட்டுக் காப்பி குடி!" என்று கூறி என் கவனத்தை வேறு விதத்தில் மாற்ற முயன்றாள்.

அவள் கையைப் பிடித்து அழைத்தும் ஒரே பிடிவாத மாய் அங்கேயே நின்று, "அம்மா! என்னிடம் எதையோ மறைக்கிறாய்! உன் மனவாட்டத்தை நான் தெரிந்து கொள் ளாவாறு எத்தனையோ தடவை இவ்விதமே மறைத்து வந் திருக்கிறாய்? உன் மனதைச் சதாகாலமும் வருத்தி வரும் அவ்விஷயத்தை என்னிடம் இப்போது சொல்லித்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் நான் ஒன்றும் இன்றைக்குச் சாப்பிடவே மாட்டேன். எத்தனை நாளானாலும் பட்டினி தான் கிடப்பேன்.—அவ் விஷயம் என்ன; நான் தெரிந்து

கொள்ளக்கூடாதா? உன் மனதிலேயே வைத்துக்கொண்டு சங்கடப்படுவதைக் காட்டிலும், என்னிடத்தில் சொன்னால் ஆறுதல் ஏற்படாதா? அவ்வளவு இரகசியமா அது?" என்று சிறிது கோபத்தோடும் ஆனால் அழுகைக் குரலிலுங் கேட்டேன்.

எனது உணர்ச்சி தீவிரத்தைக் கண்டோ என்னவோ என் தாய் என்னை அப்படியே வாரியணைத்து முகத்தோடு முகத்தைப் பொருத்தி, "என் கலிதீர்க்க வந்த கண்ணே! புலனே! உன்னிடமும் ஒளிக்கக்கூடிய தொன்று இருக்கிறதா! விஷயத்தைச் சொன்னால் உன் மனம் வருந்துமே என்ற எண்ணமே யொழிய வேறல்ல....நீ இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கேட்பதனால் சொல்லுகிறேன். ஆனால், இவ் விஷயத்தை உன் தந்தையிடம் எப்போதும் வாய் தவறியும் சொல்லிவிடாதே! தெரியுமா!

நான் உன் தந்தைக்கு வாழ்க்கைப்பட்டு நீண்டநாளாகியும் பிள்ளைப் பேறு வாய்க்காமல் மனம் வருந்திவந்தேன். இந்நிலையில், உனது சிறிய தந்தைக்கு விவாக ஏற்பாடு நடைபெற்றது. வெளியே எங்கெங்கோ பெண் பார்த்தார்கள். நான் பலவித சௌகரியங்களை உத்தேசித்து என் தங்கையையே மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று பிடிவாதஞ் செய்தேன். ஆகவே, முடிவில், என் விருப்பப்படி திருமணம் நடைபெற்றது. என் தங்கை என்னோடு முதலில் அன்பும் பணிவுங் காட்டியே நடந்து வந்தாள். அவளுக்கு விவாகமான ஒரு வருஷத்திற்கெல்லாம் அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். பிள்ளையில்லாத வீட்டில் குழந்தை பிறந்ததைப்பற்றிப் பொதுவாக நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சி கொண்டாடினோம். நான் அக் குழந்தையை என் பிள்ளையைப்போலவே சீராட்டிப் பாராட்டி

வளர்த்தேன். மற்றும் ஒன்றரை வருஷத்திற்குப் பின்னர், என் தங்கை பெண் மகவொன்றைப் பெற்ருள். அக் குழந்தையும் அருமையாக வளர்க்கப்பட்டது. என் பிள்ளைக்கலி இக்குழந்தைகளால் ஒருவாறு தீர்ந்ததென்றே மகிழ்ந்து நான் அவைகளைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தேன். என் தங்கையோ உன் சிறிய தந்தையைப்போலவே சிறிது உல்லாசப் போக்குடையவளாதலால், இவைகளை அவ்வளவாகக் கவனிப்பதில்லை. குழந்தைகளைக் கண்காணிப்பதற்கு வேலைக்காரியும், அருமையாக வளர்ப்பதற்கு யானும் இருக்கிறேனென்ற எண்ணம் அவளுக்கு இருந்தது போலும்! ஆனல் இரு குழந்தைகளுக்குத் தாயான பிறகு என் தங்கையிடம் ஒரு பெரு மாறுதல் ஏற்பட்டது. அவள் முன்போல் என்னிடம் அடக்க வொடுக்கமாக நடந்து கொள்வதில்லை. அதற்கு முன் எதையாகிலும் செய்வதென்ருல் என்னைக் கேட்டே செய்வாள். இப்போதோ எதற்கும் என்னை எதிர்பார்ப்பதில்லை. எதையேனும் கேட்பதென்ருலும் என்னை அவள் அதிகாரத் தோரணையிலேயே கேட்க ஆரம்பித்தாள். தனக்குக் குழந்தைகளிருப்பதால் இக் குடும்பத்தில் இப்போது செல்வாக்கிருக்கிறது என்று அவள் எண்ணிக்கொண்டாள் என்று நினைக்கிறேன். ஆனல் நான் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. தன் சொந்த தமக்கை என்ற உரிமையில் நடந்துகொள்ளுகிருள் என்றே அச்சமயம் எண்ணினேன்.

இச்சமயத்தில் தெய்வச் செயலாக நான் எதிர்பாராத அளவில் கர்ப்பமுற்றேன். இச் செய்தி உன் தந்தைக்குப் பெரு மகிழ்ச்சி தந்ததென்றே சொல்லவேண்டும். இது வரை தன் வியாபார விஷயத்திலேயே அல்லும் பகலும் சிந்தையைச் செலுத்திக் குடும்பத்தைப்பற்றி யொன்றுங்

கவலை யெடுத்துக்கொள்ளாதிருந்த அவர், இப்போது தன் கவனத்தைத் திருப்பலானார். என் உடல் நலத்தில் மிகவுங் கண்ணுங் கருத்துமாயிருந்தார். ஆனால், நானோ இப்போதும் என் தங்கை குழந்தைகள் விஷயத்தில் முன்போலவே அன்பாக இருந்து வந்தேன். அப்படி யிருந்தும் நான் கர்ப்பமுற்ற செய்தி யறிந்த பின்னர், என் தங்கை எக்காரணத்தாலோ முகவாட்ட முற்றிருந்தாள். என்னிடம் முன்போல அளவளாவிப் பேசுவதில்லை. அவள் இவ்வாறு இருப்பதற்குக் காரண மென்னவென்று தெரியவில்லை; நான் அதை அறிந்துகொள்ளவும் முயலவில்லை. 'அவள் வருத்தங் கொள்வதற்குரிய விஷயம் ஏதாகிலும் இருக்கலாம்; அவளது தனிப்பட்ட விஷயத்தில் நாம் தலையிடுவானேன்' என்று வாளாவிருந்தேன்.

பத்து மாதமும் பூரணமாயிற்று. பிரசவத்தை ஒவ்வொருவரும் யாவரும் எதிர்பார்த்திருந்தனர். உன் தந்தை ஒரு லேடி டாக்டரையும் இரு நர்ஸுகளையும் தருவித்து பிரசவம் முடியும்வரை இருக்கும்படி ஏற்பாடு செய்து விட்டார். நீண்ட நாளிருந்து கருப்ப முற்றிருப்பதால் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டி யிருந்தது. பிரசவக் குறிகளும் பயங்கரமாய் இருந்தன. ஒரு நாள் எனக்குப் பிரசவ வேதனை யேற்பட்டது. யாவரும் ஆவலோடு என்னைச் சூழ்ந்து நின்று, அச்சமயம் எனக்குத் தேவையான உதவிகளைச் செய்ய ஆயத்தமாயினர். ஆனால் இவ்வளவுக்கும் என் தங்கை மட்டும் சர்வ சாதாரணமாகவே இருந்து வந்தாள். வெளியார் காட்டும் சிரத்தைகூட இவளுக்கு இல்லாததை யறிந்து எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

பிரசவ வேதனை நெருங்கியது. என் அறையில் என் தங்கையும், லேடி டாக்டரும், இரு நர்ஸுகளும் மட்டுமே

இருந்தனர். வெளியே உன் தந்தை சிறிய தந்தை முதலி யோர் மிக ஆவலோடும் படபடப்போடும் நின்றுகொண் டிருந்தனர். வேதனை அதிகமாகவே என் ஸ்மரணை தவறி விட்டது. அப்புறம் என்னுயிற்று என்று தெரியாது. பின் னர், உணர்ச்சி பெற்றுக் கண் விழித்தபோது, என் கட்டி லுக்குச் சிறிது தூரத்தில் சிறு தொட்டிலில் நீ கண் வளர்வ தைக் கண்டு ஆனந்தமுற்றேன். குழந்தை ஆணு பெண்ணு என்று என்னெதிரே இருந்த நர்ஸைக் கேட்டதும், அவள் பெண் குழந்தை என்று கூறிவிட்டு, தன் முகத்தைத் திருப் பிக்கொண்டு பெருமூச்செறிந்தாள். அவள் முகம் கவலை யைக் காட்டியது.

பிரசவமுற்றுப் பத்து பதினைந்து நாளாயிற்று. ஒரு நாள் மேற்படி நர்ஸ் என்னை யணுகி இரகசியமாக, "அம்மா! உன்னிடம் ஒரு விஷயத்தை அவசரமாகச் சொல்ல வேண்டி யிருக்கிறது. உங்கள் மனம் இதைக் கேட்டுச் சகிக்குமா என்றும் எனக்குப் பயமாக இருக்கிறது. ஆனுல் அதைச் சொல்லாமலுமிருக்க முடியவில்லை. பின்னுல் ஏதேனும் விபரீதம் ஏற்பட்டால்........" என்று இழுத்தாள்.

நான் படுக்கையைவிட்டுத் திடுக்கிட்டு எழுந்து, "என்ன! என்ன!" என்று துடிப்பாகக் கேட்டேன்.

அதற்கு அந்த நர்ஸ், "ஒன்றுமில்லை; அம்மா! பதை பதைக்காதீர்கள்! இந்நிலைமையில் உடம்பை அலட்டிக் கொண்டால் பலவீன மேற்படும். அமைதியாயிருப்பதே நல்லது....விஷயத்தைச் சொல்கிறேன். நீங்கள் பிரசவித்த போது என்ன நடந்ததென்பது உங்களுக்குத் தெரியாதல் லவா! நீங்கள் மிகவுங் கஷ்டப்பட்டுப் பிரசவித்து மூர்ச் சையா யிருந்தீர்கள். உங்களுக்கும், குழந்தைகளுக்குஞ் செய்யவேண்டிய முதல் உதவியைச் செய்து, குழந்தையை

ஒரு சிறு கட்டிலில் கிடத்திவிட்டு, உங்கள் மூர்ச்சையைத் தெளிவிக்க லேடி டாக்டரும், நாங்களும் முயன்று கொண்டிருந்தோம். அச்சமயம் பக்கத்தில் ஏதோ சிற்றரவம் உண்டானதைக் கேட்டுத் தற்செயலாகத் திரும்பிப் பார்க்கையில், உங்கள் தங்கை குழந்தையின் கழுத்தை நெரிக்கக் கைகளைக் கொண்டு செல்வதைக் கண்டு நாங்கள் பதறிப் போய் ஓடினேம். எங்கள் வருகையை யறிந்து அந்தம்மாள் அப்படியே திகைத்து நின்றுவிட்டார்கள். அவர்கள் தோற்றம் பைத்தியம் பிடித்தவர்கள் அல்லது பைசாசம் பிடித்தவர்கள் தோற்றத்தைப்போல மிகவும் பயங்



காமா யிருந்தது. நான் குழந்தையை வாரி யெடுத்து மார்பி லணைத்துக்கொண்டேன். டாக்டர் அம்மாள் இவ் விபரீதச் செயலைக் கண்டு ஒன்றுந் தோன்றாது அப்படியே



நின்றுவிட்டார்கள். உங்கள் தங்கை டாக்டர் அம்மாள் முகத்தைக் கெஞ்சிய பாவனையாக்ச் சிறிது நேரம் பார்த்து நின்றார்கள். பின்னர் அந்தம்மாள் ஒருவாறு துணிந்து தன் இடுப்பில் செருகியிருந்த பணப்பையை எடுத்து நாலைந்து சவரன்களை டாக்டர் அம்மாள் கையில் வைத்துக் காதோடு காதாக, "இந்தக் குழந்தையை எப்படியாகிலுந் தீர்த்துவிட வேண்டும். அதற்கு நீங்கள் தான் உதவி செய்யவேண்டும். சீக்கிரம் அவள் மூர்ச்சை தெளிவதற்குள் காரியம் நடந்து விடவேண்டும். உங்க ளிருவருக்கும் ஏராளமான பொருளை வாரி இறைப்பேன். என்ன சொல்கிறீர்கள்?" என்று பரபரப்போடு கேட்டார்கள்.

டாக்டர் அம்மாள் அநுபவமும், சாமர்த்தியமும் ஒருங்கே வாய்ந்தவர்களாதலால், பளபளவென மின்னும் அப்புது சவரன்களைக் கண்டு மயங்காது அவற்றை வாங்காமலே, "இருங்கள்; இதோ வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஓரே தாவு தாவிக் கதவைத் திறந்து, "ஐயா! இதோ பெண் குழந்தை பிறந்திருக்கிறது; பாருங்கள்; சுகப்பிரசவமே! ஒன்றும் பயமில்லை" என்று கூறிய வண்ணம் என்னைப் பார்த்துக் கண் சைகை காட்டினார்கள். நான் அக்குறிப்பறிந்து குழந்தையைக் கொண்டுபோய் உம்முடைய கணவருக்கும் மைத்துனருக்குங் காட்டினேன். இதைக்கண்டு உங்கள் தங்கை சிறிதுநேரம் அசைவற்று நின்றுவிட்டார்கள். அதற்குமேல் தன் எண்ணம் ஒன்றும் நடவாது என்று அறிந்துகொண்டார்கள். மேலும், டாக்டர் அம்மாள், பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்று கூறியதும், அந்தம்மாள் முகம் ஒருவாறு மாறுதலடைந்தது. அப்போதே குழந்தையைக் கடைக்கண்ணால் கூர்ந்து கவனிக்கலானார்கள். இதையெல்லாம் நான் குறிப்பாகப்

பார்த்துக்கொண்டிருந்தேன். அப்புறம் அவர்கள் அங்கு நிற்கவில்லை—உங்கள் குடும்பக் கோளாறு என்னவோ எனக்குத் தெரியாது. இவ்விதம் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. ஆதலால் நீங்கள் குழந்தை விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். டாக்டர் அம்மாள் இவ்விஷயத்தைச் சமயம் பார்த்து உங்களிடம் சொல்லி எச்சரிக்கை செய்யச் சொன்னார்கள்" என்று சொன்னாள். இதைக் கேட்டு என் மனம் எப்படியிருக்கும் என்று நினைக்கிறாய் கண்ணு! அதை இப்போது நினைத்தாலும் என் உடல் முழுதும் நடுங்குகிறது. என் தங்கை என்ன நோக்கத்தோடு இவ்வாறு செய்ய எத்தனித்தாள் என்று அன்றிருந்து ஆராயலானேன். நீ பிறந்த பின்னர், அவள் நடந்துகொண்ட விதத்திலிருந்து, அவளது உள் நோக்கத்தை ஒருவாறு கிரகித்துக் கொண்டேன். அதாவது, நான் நீண்டநாள் பிள்ளையில்லா திருந்தமையாலும், அவள் வெகு விரைவிலேயே குழந்தைகளைப் பெற்றமையாலும், உன் தந்தை மிகவும் முயன்று சம்பாதிக்கும் சொத்தெல்லாம் தன் பிள்ளைகளையே சேரும் என்றும் தாங்கள் ஏகபோகமாக எல்லாவற்றையும் அனுபவிக்கலாமென்றும் அவள் எண்ணி யிருந்தாள். அவளது எண்ணத்தில் இடி விழுந்ததுபோல் நான் கர்ப்பமாகவே, அவள் மனம் வேதனையை யடைந்தது. அவள் என்மீது மிகவும் பொறாமைகொண்டாள். அவள் மனத்தில் பொறாமை கொழுந்துவிட்டு எரிந்தமையாலேயே, அன்று அவளையும் மறந்து இவ்வளவு துணிவாக உன்னைக் கொல்ல முயன்றிருக்கிறாள். ஏனென்றால், எனக்குப் பிறக்கும் குழந்தைக்குத்தானே நம் சொத்தை யனுபவித்ததற்குரிய சகல உரிமையும் அதிகாரமும் ஏற்படும். ஆதலால், சந்ததி செய்யாது அதைத் தொலைத்துவிட்டால், தன்னுடைய மக்கள் இடையூறின்றி யாவற்றையும் அனுபவிக்கலா மென்பது

அவளது எண்ணம். இவ்வளவு காரியமும், அவள் பிறந்த குழந்தை ஆண் என்ற எண்ணத்தோடேயே செய்திருக்கிறாள். தனது முயற்சி பலிக்காது போன பின்னர், பெண் குழந்தை என்று அறிவிக்கப்பட்டதும், ஒருவாறு அவள் மன நிம்மதியுற்றிருக்கிறாள். இந்துச் சட்டப்படி பெண்களுக்குத் தந்தையின் சொத்தில் பாக மில்லையன்றோ! உன்னை ஒருவனுக்கு விவாகஞ் செய்துகொடுத்துச் சீர்சிறப்புச் செய்து அனுப்பிவிட்டால், சொத்தெல்லாம் அவளுடைய பிள்ளைகளுக்கன்றோ போய்ச் சேரும். ஆதலால், அவள் முதலில் எதிர்பார்த்தபடி அவ்வளவு மோசமில்லை என்று ஒருவாறு தனக்குள்ளே முடிவுசெய்துகொண்டிருக்கிறாள். இவ்வளவு விஷயமும், எனக்கோ உன் தந்தைக்கோ தெரியாதென்றே இன்னமும், நினைத்துக்கொண்டிருக்கிறாள். ஒன்றும் மனதில் களங்க மில்லாதது போலவே என்னிடம் நடித்து வருகிறாள். லேடி டாக்டரும், நர்ஸுகளும் சீமாட்டியாகிய தனக்கு எதிராக விஷயத்தை எங்களிடம் துணிந்து சொல்லியிருக்கமாட்டார்க ளென்பது அவளது நினைவு. இவளது இத்தீய கருத்துக்களும், செயலும் உன் சிறிய தந்தைக்கு இன்னமும் தெரிந்திராதென்றே நினைக்கிறேன். அவர் இவ்வித தீக் குணங்கள் உடையவ ரல்லவாகையால், இவளது இச் செயல்களுக்கெல்லாம் சிறிதும் இடங்கொடுக்க மாட்டார். இருந்தாலும் எப்படியோ! இத்துணை கொலை பாதகச் செயலைச் செய்யத் துணிந்தவள், அவரையும் இவ்வித காரியங்களுக்கு உடன்படச் செய்யத் தானே இயலாது!—உம். எனது இந்திரபோக இன்ப வாழ்வை நம் தங்கையும் பங்கிட்டு அனுபவிக்கட்டுமே என்ற நல்லெண்ணத்தோடு, மிகவும் சிரமப்பட்டு அவளை எனக்கு ஓரகத்தியாகும்படிச் செய்ததற்கு இது கைமேல் பலன் போலும்! இருக்கட்டும்.—ஆனால் இவ்

வாறு என்னைத் துரோகஞ் செய்துவரும் அவளை நான் இன்னமும் வெறுக்கவில்லை; அவளிடம் எவ்வித வேறுபாடுமின்றி முன்போலவே நடந்து வருகிறேன். இவ் விஷயத்தை இதுவரை யாருக்குந் தெரிவிக்கவில்லை. பேச்சோடு பேச்சாகக் குறிப்பாகக்கூட உன் தந்தைக்குச் சொல்லவில்லை. அவர் உன்மீது தம் உயிரையே வைத்திருக்கிறார். உன் பேரழகையும் நுண்ணறிவையும் கண்டு அவர் ஆனந்த வெள்ளத்தில் அழுந்திப் போயிருக்கிறார். இந்நிலையில் அவர் தம் தம்பிக்கு நியாயமாகச் சேரவேண்டிய சொத்துப் போக, மற்றனைத்தையும் உனக்கும், உன்னை மணஞ் செய்துகொள்ளும் மாப்பிள்ளைக்கும் வைப்பதென்று அடிக்கடி கூறிவருகிறார். இத்தகவல் என் தங்கை காதில் விழுந்திருக்கிறது என்று கருதுகிறேன். அவள் தன் எண்ணத்துக்கு மறுபடியும் பழுது ஏற்பட்டு விடும்போலிருக்கிறது என்று எண்ணி மீண்டும் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. ஐயோ! கொடுங் குணங்களுக்கு இருப்பிடமான அவள் இன்னமும் என்ன சூழ்ச்சி செய்வாளோ? அதிலிருந்து உன்னை எப்படித் தப்புவிப்பது! என்று எனக்கு மிகவும் மலைப்பா யிருக்கிறது. உள்ள விஷயத்தை உன் தந்தையிடம் தெரிவித்து இதற்குப் பரிகாரந் தேடலாமென்றாலோ, இதன் மூலமாக விபரீத மேதேனும் ஏற்பட்டால் என்ன செய்வது என்று பயப்படுகிறேன். இந் நிலையில் இதை மெல்லவுமாட்டாமல், விழுங்கவுமாட்டாமல் நான் தத்தளித்துக்கொண்டிருக்கிறேன். இதுவே என் துயரத்துக்குக் காரணம். வேறொரு குறையும் எனக்கு இல்லை யம்மா!" என்று சொன்னாள்.

என் பொருட்டாக, என் தாய் படும் துயரத்தைக் கேட்டு என் இளநெஞ்சம் பாகா யுருகிவிட்டது. நான்

அணிந்திருந்த சட்டையால் என் அருமைத் தாயின் கண்ணீரைத் துடைத்து, "அம்மா! இனி இதைப்பற்றிக் கவலைப் படாதே! நான் பார்த்துக்கொள்கிறேன் என்ன வருகிற தென்பதை! இவள் சூழ்ச்சியா லெல்லாமா நான் இறந்து விடுவேன்? பூ—......." என்று துணிவாகக் கூறினேன். "இளங்கன்று பய மறியாது" என்ற அநுபவ மொழியை நிலைநிறுத்தக் கூடியதாக என் தேறுதல் மொழி யிருக்கிற தென்று எண்ணி, நீர் என் வெள்ளை யறிவுக்காக என்னை எள்ளி நகை யாடலாம். ஆனால் உண்மை யதுவன்று. அச் சமயம் உண்மையிலேயே துணிவுகொண்டிருந்தேன். தீமையை எதிர்க்குங் குணம் எனக்கு இளமையி லிருந்தே உண்டு. எனது தைரியமான வார்த்தைகளைக் கேட்டு என் தாய் துக்கத்தை யெல்லாம் மறந்து வாய்விட்டுச் சிரித்து விட்டாள். அவள் ஆர்வத்தோடு என்னை வாரித் தழுவி முத்தமிட்டு உச்சி மோந்தாள். பின்னர் அவள் ஆனந்தக் கண்ணீரைச் சொரியவிட்டு, "கண்ணு! சுந்தரி! நீ ஒன்றும் மனத்தைச் சங்கடப்படுத்திக்கொள்ளாதே அம்மா! நான் பார்த்துக் கொள்ளுகிறேன் எதை யெதை எப்படி செய்ய வேண்டுமென்று. ஆனால் உன் சிற்றன்னை யிடத்தில் மாத் திரம் அதிகமாக நெருங்காது தந்திரமாக நடந்துகொள். ஏதாகிலும் பக்ஷணம் கொடுத்தால்கூடத் தின்னாது மறை வாக எறிந்து விடு. நான் சொல்வது தெரிகிறதா!" என்று புத்திமதி கூறினாள். நான் பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்த தால் இன்னது கூறுவதென்று தெரியாமலே சும்மா தலையை யசைத்தேன். அப்புறம் என் தாய் மாலைச் சிற்றுண்டி யருந்த என்னை அழைத்துச் சென்றாள். இவ் விஷயத்தை என் முதலிலேயே இவ்வளவு பிரமாதமாகக் கூறினேனென்றால், இச் சம்பவமே எனது வாழ்க்கையில் நடந்த மற்ற பெரும் போராட்டங்களுக் கெல்லாம் அடிப்படையாக—

ஏன்—முன் அறிகுறியாக—இருந்தது என்பதைக் குறிப் பிக்கவே யாகும்.

இவ்விஷய மெல்லாம் ஒன்று மறியாத என் தந் தையோ, நெடுநாளாகப் பிள்ளை யில்லாது வருந்திய தம் பிள்ளைக் கலி தீர்ந்தது என்ற மகிழ்ச்சிப் பெருக்கில், என் பொருட்டாகத் தாம் பல வருடங்களாக மிகவுஞ் சிரமப் பட்டுச் சம்பாதித்து வைத்த பணத்தைத் தண்ணீர்போல் வாரி யிறைத்தாராம். யான் பிறந்த தினத்தைக் கொண் டாடியதற்கும் பத்தாம் நாள் புண்ணியாவசனச் சடங்கு செய்து நாமகரணஞ் சூட்டியதற்கும் மட்டும் ஆயிரம் ரூபாய்க்குமேல் செலவு செய்தாரென்றால், அவர் எனது ஜனனத்தை எவ்வாறு எண்ணினர் என்று விவரித்துக் கூறுவானேன்! அவ் வைபவத்தில் கலந்து இன்ப மனு பவித்த எங்களது சுற்றமும் ஏழை மக்களும் இன்னமும் அதைப்பற்றிப் பாராட்டிப் பேசுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அச் சமயத்தில், வேதாகம பண்டிதர் களான பிரும்மணர்கள் ஜாதக கணிதத்தை ஆராய்ந்தும், உருவும் திருவுருவம் நோக்கியும் எனக்குப் "புவன சுந்தரி" என்று பெயரிட்டனராம். என்னை ஊக்கமாகக் கவனித்து வருவதற்கென்றே என் தந்தை வெள்ளைக்காரத் தாதி யொருத்தியை ஏற்படுத்தி யிருந்தார். எனவே, நான் "அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும் வளர்வ" தற்குப் பதிலாக, பெற்றோர் என்னைச் சீராட்டிப் பாராட்டிக் கொஞ்சிக் குலாவும் நேரம் தவிர, மற்ற வேளை முழுதும் அத்தாதி தோளின்மீதும் மார்பின் மீதுமே வளர்ந்து வந்தேன். இதனிடையே என்னிடம் என் சிற் றன்னையின் பிள்ளைகள் கொஞ்சி விளையாட வருவதும் யானும் மற்றவர்களைப் பார்த்துத் தாவிச் செல்ல விரும்பு

வதும் உண்டெனினும், அத்தாதி அதிகமாக அவற்றிற்கு இடந் தருவதில்லை; அதாவது மற்றவர்கள் சிறு பிள்ளைகளோ பெரியவர்களோ யாராயினும் என்னிடம் தாராளமாக நெருங்கிப் பழகவும், கொஞ்சிக் குலாவவும் அவள் அநுமதிப்பதே யில்லை என்று என் தாய் கூட அதை யொரு குறையாக எடுத்துக் கூற நான் கேட்டிருக்கிறேன். அவ்வாறு 'மேட்டிமை' யாக என் இளமைப் பருவங் கழிந்தது. அவ்வித நிலையை நான் அப்போது ஒரு பெருமையாக நினைத்திருக்கக் கூடுமாயினும், இச்சமயம் அதை அறவே வெறுக்கிறேன்.

---

# மூன்றாவது அதிகாரம்

## கலாசாலை வாழ்க்கை

என் அறிவு தெரிந்தது முதல், அவ்வெள்ளைக்காரத் தாதி என்னிடம் ஆங்கிலத்திலேயே பேசி என்னைப் பழக்கி வந்தாள். ஆகையால் நான் கல்வி கற்றற்குரிய பருவம் வந்ததும், என் தந்தை அத்தாதியினது யோசனைப்படி, ஆங்கிலேயப் பிள்ளைகள் வாசிக்கும் பாடசாலையிலேயே என்னைப் படிக்க வைத்தார். இவ்விஷயத்தி லெல்லாம் என் தாய்—கர்நாடகம் என்று சொல்வதற்கில்லை—ஒரு மிதவாதியாகவே யிருந்து வந்தாள். வெள்ளைக்காரத் தாதி முதலிருந்தே எனக்கு ஆங்கிலத்தில் பேசப் பழக்கி வந்ததையே அவ்வளவாக அவள் விரும்பாதிருந்தாள். பின்னர், ஆங்கிலக் கல்லூரியில் என்னைப் படிக்கவைக்கவேண்டுமென்றதும் அவள் அது கூடாதென்று அடியோடு தடுத்து என் தந்தையுடன் வாதாடினாள். இருந்தாலும் என் தந்தை ஒரே பிடியாக அத்தாதியின் யோசனையை நிறைவேற்றி வைத்

தார். இதெல்லாம் நான் செருக்கு மிக்க பணக்காரக் குடும்பத்தில் பிறந்ததன் பயனாக எனக்கு விதிக்கப்பட்ட தெய்வ தண்டனை யென்று இப்போது உணர்கிறேன். இளமையிலேயே தாய்மொழியைப் புறக்கணிக்க நேர்ந்த என் விதியை நோக்கும்போது இதைக் கொடிய தண்டனை யென்று கூறாது வேறென்ன வென்று விவரிப்பது!

ஆரம்பத்தில் நான் அத்தாதி காவலோடு மோட்டாரில் கலாசாலைக்குச் சென்று வந்தேன். ஏழெட்டு வயதானதும் யானே தனியாக மோட்டாரில் போய் வருவது இயற்கையாகி விட்டது. இங்கு உமக்கு ஒன்று குறிப்பிடவேண்டியது அவசியமென்று கருதுகிறேன். இவ்வளவு தூரம் ஆங்கிலேயத் தாதியால் வளர்க்கப்பட்டு, ஆங்கிலப் பாடசாலையிலேயே படிக்க வைக்கப்பட்டாலும், நான் இந்தியர்க்குரிய உடையிலேயே இருந்து வந்தேன். எனது தேசீய உடைகளுக்கும், நகைகளுக்கும், என் தலைமயிருக்கும் எவ்வித ஆபத்தும் நேரவில்லை யென்று மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். என் தலைமயிரைச் சுருட்டிக் கத்தரித்து (Bobbed Hair) விடும்படியும், இந்திய உடைகளை நீக்கிக் கால் சட்டையும், பூட்ஸும், கவுனும் போட்டுக் கொள்ளும்படியும், சாதாரண நகைகளை யெல்லாம் கழற்றி யெறிந்துவிட்டு 'நாசூக்'காக காதில் அழகிய லோலக்கும், கையில் பொன் வளையல்களும் மட்டும் அணிந்து கொள்ளும்படியும் அத்தாதி என்னைத் தூண்டி வந்தாள். ஆனால் அவ்விபரீத மாறுதலுக்கு என் தந்தை இடங்கொடுக்கவில்லை. எனவே, இந்தியப் பெண்ணாகப் பிறந்தும், நடையுடை பாவனைகளால் ஆங்கில மகளாகப் 'புனர் ஜன்மம்' எடுக்கும் பெரும் விபத்திலிருந்து தப்பினேன். ஆங்கிலப் பாடசாலையில் சேர்ப்பதற்கு அனுமதி கொடுத்தவாறே, என் தந்தையார் இதற்கும் தலை யசைத்

திருப்பாராஞல், நான் பெரிய 'துரைசானி' யாய்ப் போய்த் தலைதருக்கித் திரிந்து, இப்போது அடைந்த கேவல நிலையைக் காட்டிலும் வெகு விரைவில் கெட்டலைந்துபோயிருப்பேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அவ்வாறு ஆயிருக்க மாட்டேன் என்று உங்களால் கூற முடியுமா?—சாதாரண மாக இங்கிலீஷ் இரண்டு எழுத்து கற்றுக்கொண்டாலே நம் பெண்கள் தங்களை எவ்விதம் பெருமிதமாக நினைத்துக்கொள் கிருர்கள்? ஆங்கிலங் கற்காத மற்றப் பெண்களை—தங்கள் தாய் தமக்கையர்களேயாயினும்—எவ்வளவு கேவலமாகக் கருதுகிருர்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ என்னவோ! மிக மோசம்! மிக மோசம்!! அவ்வித ஆணவ மிக்க மனப்பான்மையை மாற்றுதற்கே நமது தேசத் தலை வர்கள் பன்னூறு வருடங்கள் விடாமுயற்சியாக வேலை செய்ய வேண்டும்; அப்பா! அன்னியநாட்டு மொழிகள் மீதும், நவநாகரிக நடையுடை பாவனைகள் மீதும் நம் இந்தி யப் பெண்களுக்கு எவ்வளவு பெரு மோகம் தெரியுமா! இவ் வளவு பேசுகிறேன்: நானும் அம் மோகத்துக்குச் சில காலம் அடிமைப்பட்டுத்தான் இருந்தேன். அதை விவரித் துக் கூற ஆரம்பித்தேனுனல், அதுவே ஒரு பெரிய பிரசங்க மாகும். எனவே, அவ் வதிகப் பிரசங்கத்துக்கு இத்தோடு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, மேலே செல்கிறேன்.

நான் வாசித்து வந்த ஆங்கிலப் பாடசாலை மிகப் பெரி யது. இவ்வளவு பெரிய நகரில் ஆங்கில மக்கள் வாசிப்பதற் கென அமைந்திருப்பது இவ்வொரு பள்ளிக்கூடமே யன்றே! அதில் ஒரு பக்கத்தில் சிறுவர்களுக்கும், மற்ருெரு பக்கத்தில் சிறுமிகளாகிய எங்களுக்கும் வகுப்புகள் இருந் தன. ஆனல் விளையாடும் மைதானம் பொதுவாக இருந்த தால், சிறுவர் சிறுமிகளுமாக நாங்கள் கலந்தே விளையாடு

வோம். 'டிரில்' வாத்தியார் எங்களுக்கு உடல் பயிற்சி பழக்கும்போது மட்டும் வெவ்வேருகப் பிரிக்கப்படுவோம். மற்றப் பள்ளிக்கூடங்களைப் போலல்லாமல் இங்கு 'டிரில் கிளாஸ்' பெரும்பாலும் காலையில் தான் நடக்கும். மாலை நேரங்களில் 'டென்னிஸ்,' 'பாட்மிண்டன்' முதலிய விளையாட்டுகளை ஆடுவது வழக்கமாயிருந்தது. இங்கு எங்களுக்குப் பழக்கிய சில 'டிரில்களை' நினைத்தால் எனக்கு இப்போதுகூடச் சிரிப்பு வருகிறது. சேவல்கள் கொக்கரித்துச் சண்டைபோடுவது போன்ற விளையாட்டு ஒன்று. அதாவது வாத்தியாரம்மாள் எங்களில் இருவரைக் கூப்பிட்டு ஆட விடுவார்கள். நாங்கள் எங்கள் வலது கால்களை வலது கைகளால் தூக்கிக்கொண்டு ஒரு காலாலே ஒருவரையொருவர் நெருங்குவதும், மறுபடியும் தூரப் போவதுமாகத் தத்தித் தத்தி விளையாட வேண்டும். தத்தி விளையாட முடியாது முதலில் யார் கால் தவறி நின்று விடுகிருர்களோ அவர்கள் தோற்றவர்களாவார்கள். இவ்விதமாக அர்த்தமற்ற பல விளையாடல்கள். இவ்வித விளையாடல்களை இந்திய உடையணிந்திருக்கும் யான் ஆடுவதற்குச் சிறிது சிரமமாகவே இருக்கும். சில சமயங்களில் நான் இடர்ப்படுவதைக் கண்டு சிறுவர்களும், சிறுமிகளும் நகைத்துப் பரிகசிப்பதுண்டு. இவ்வளவு தூரம் ஆங்கிலப் பாடசாலையில் படிக்க வந்த நான் நடையுடை பாவனைகளில் இன்னமும் கர்நாடகமாக இருப்பதால், அவ் வாங்கில மாணவர்கள் என்னை ஒரு பட்டிக்காட்டுப் பெண் என்று கருதிக் கேலி செய்து வந்தனர். என்னைப்போன்று இப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்கும் இந்திய மாணவர்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டு என்னை எள்ளனஞ் செய்வார்கள். இப்பள்ளிக்கூடத்தில் ஆங்கில மக்களே யன்றி, ஆங்கிலோ இந்தியர்கள், கிறிஸ்தவர்கள், இந்திய மக்கள் முதலிய பல வகுப்

மீனரும் படித்து வந்தார்கள், (பெரும் பொருள் கொடுத்துப் படிக்கக்கூடிய யாரும் இப்பள்ளிக்கூடத்தில் வாசிக்கலாம்.) ஆனல் முஸ்லீம் பெண்கள்—ஆண் பிள்ளைகள் இருந்தார்கள்—மட்டும் இங்கு சேர்ந்து வாசித்ததை நான் பார்க்கவில்லை. இவ்விஷயத்தில் முஸ்லிம் பெற்றோர்கள் முன்னெச்சரிக்கை யுடையவர்கள் என்று நினைக்கிறேன். தாங்கள் அருமையாகப்பெற்ற பெண்களைத் தாங்களாகவே மனமொப்பி நவ நாகரிகப் படுகுழியில் தள்ளி மீளாத் துய்ரத்தை யடையச் செய்யும் இந்தப் பெற்றோர்களை நோக்கும்போது இவர்கள் பேரறிவாளர்கள் என்பதில் தடையென்ன?

. பல நாட்டு மக்கள்—பல மொழிகளை யுடையவர்கள்-பலவிதமான பழக்க வழக்கங்களை யுடையவர்கள் - ஒன்று சேர்ந்து பழகும்போது ஒரு பெரிய மாறுதல் ஏற்படுவது இயற்கையே என்பதை யாரும் மறுக்க முடியாது. அறிவு வளர்ச்சியும் உலகானுபவ முதிர்ச்சியும் ஏற்பட்டிருக்கும் போது இவ்வித கூட்டுறவு ஏற்படுவதால் பெரும் பாதகம் ஒன்றும் நேர்ந்து விடுவதில்லை என்றாலும், ஒன்றுமறியா இளமைப் பருவத்திலேயே இவ்விதச் சேர்க்கையும், பழக்கமும் ஏற்பட்டுவிட்டால் அது பெரிய விபரீதமான நிலைமையை யுண்டுபண்ணி விடுகிறது; அதனல் எவ்வளவோ தீங்குகள் ஏற்பட்டுவிடுகின்றன. இந்த உண்மையை நான் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் வாசித்ததினல் உண்டான அனுபவத்தால் அறிந்தேன். ஆங்கில மக்களே ஒரு மாதிரி. உலகிலேயே செல்வாக்குப்பெற்ற வகுப்பார் என்ற முறையில் அவர்கள் போக்கும் செயலும் பெருமிதமாகவே இருந்து வருகின்றன. அதிலும் இந்தியாவில் ஆளும் சாதியார் என்ற தோரணையில் அவர்கள் இருந்து வருகின்றனர். என்னேடு வாசித்த ஒவ்வொரு ஆங்கிலச் சிறுமியின் உள்

ளத்திலும், அந்தப் பெருமித உணர்ச்சி எவ்விதம் வேரூன்றி யிருக்கிறது தெரியுமா? இந்தியர்க ளென்றாலே—அவர்கள் எவ்வளவு பெரிய செல்வச் சீமான்களாயினும்—எவ்வளவு துச்சமாக-அலட்சியமாக-நினைக்கிறார்கள் தெரியுமா! தங்கள் அரசினரால் ஆளப்படும் அடிமை வகுப்பாருடனா நாம் சமமாக இருப்பது என்று இறுமாப்போடு கருதுகிறார்கள். இவ்வித நிலையில் அவ்வாங்கில மக்கள் இந்திய மக்களோடு எவ்வாறு பழகிவருகிறார்கள் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆங்கிலோ இந்தியர்களோ இரண்டுங் கெட்ட வகுப்பினர். ஆகவே, அவர்களது சொல்லும் செயலும் ஒருவரையறையின்றி யிருக்கின்றன. அவற்றின் பிரதிபிம்பங்களாக இப்பாடசாலையில் வாசித்த ஆங்கிலோ இந்தியச் சிறுவர் சிறுமிகளைக் கண்டேன். அடாடா! அவர்களுக்கு வால் ஒன்றுமட்டு மிருந்தால், டார்வின் துரைமகனார் கண்டறிந்த, "குரங்கிலிருந்தே மனிதன் தோன்றினன். மனித சமூகத்தின் மூதாதையர்கள் வானரங்களே" என்ற அரிய முடிவைக் கட்டாயம் கன்னங்களில் போட்டுக்கொண்டு ஒப்புக்கொள்ளாம லிருக்கமுடியாது. அவ்வளவு குரங்கு சேஷ்டைகளும், தீயகுணங்களும் அவர்களிடம் நிறைந்திருந்தன. இப்பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல, நான் இங்கு ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறிப் பின்னர், கிறிஸ்தவப் பெண்கள் கலாசாலையில் வாசித்தேனே! அங்கேயும், அங்கு வாசித்த வயதுவந்த ஆங்கிலோ இந்தியப் பெண்களிடம் பழகியதன் பயனாக இதே முடிவுக்குத்தான் வரவேண்டியிருந்தது. இதனால் அச்சமூக மகளிரைப் பழிப்பதாக நீங்கள் நினைக்கக்கூடாது. நான் கண்ட பெண்களுள் பெரும்பாலோர் அவ்வித மீறிய செயலை யுடையவர்களாயிருந்தார்கள் என்று குறிப்பிட்டேனேயன்றி வேறன்று. என்ன இது! என் பள்ளிக்கூட வாழ்க்கையைச் சொல்ல

வந்து நான் ஏதோ தாறுமாறாக உளறிவிட்டேன்! நண்பரே தயவு செய்து மன்னியும்'' என்று கூறினாள்.

அவள் இதுவரை கூறி வந்தவைகளை மிக ஊக்கமாகக் கேட்டு வந்த நான், "அதெல்லாம் ஒன்றுமில்லை; அம்மா! உன் தந்தை போன்ற செல்வச் சீமான்களுக்கும், அவர்களுடைய மக்களுக்கும் இது ஒரு பெரிய படிப்பினையாக இருக்கும் என்பது திண்ணம். ஆதலால் நீ தாராளமாக உனது வாழ்க்கையில் நடந்த ஒரு சிறு சம்பவத்தையும் விடாது சொல்லுவாயாக'' என்று வினயமாகச் சொன்னேன்.

புவனசுந்தரி மீண்டும் ஆரம்பித்தாள்; "இப்பேர்ப்பட்ட சிறுவர் சிறுமிகளிடையே நான் விளையாட்டுப் பொருளாக அமைந்தது ஆச்சரியமில்லை யல்லவா! இருந்தாலும் என்னிடம் நெருங்கி நட்புகொண்ட பெண்களு மில்லாமலில்லை. அவர்களில் மிஸ். கிரேஸ் என்னும் ஆங்கிலப் பெண்ணை என் உயிர்த் தோழியாகக்கொண்டு மிக நேசித்தேன் அவளைப் போன்ற நற்குண நற்செய்கைகளும், அடக்கமும், அமைதியும் இரக்கமும் உண்மையும் உடைய பெண்ணை நம் இந்து சமூகத்திலும் நான் கண்டதில்லை. அவ்வளவு சிறிய வயதிலேயே தெய்வ பக்தி அவளிடம் மிகுந்திருந்தது. வீட்டுக்குச் செல்லும் நேரம் தவிர, பாடசாலையில் வகுப்பிலும், விளையாட்டு மைதானத்திலும் நாங்கள் இணை பிரியாமலே இருப்போம்.

மிஸ். கிரேஸுக்கு ஜான் கில்பர்ட் என்ற ஒரு சகோதரன் இருந்தான். அவனுக்கு இவளைவிட இரண்டு வயது அதிக மிருக்கும். அவனும் இப்பாடசாலையிலேயே வாசித்து வந்தான். அவன் கிரேஸைப்போலவே மிகவும் அழகுவாய்ந்தவனாயினும், இவளது குணஞ் செயல்களுக்கு முற்றும் மாறுபட்டவன். இளவயதில் ஆரம்பத்தில் இதை நான்

கவனிக்கவில்லை. நாளடைவில் அவனோடு நெருங்கிப் பழக நேர்ந்தபோதுதான் இம்மாறுதலை யுணர்ந்தேன். ஒரு தாய் வயிற்றிலேயே நற்குண நற்செய்கைகளுக்கு இருப்பிட மான ஒரு பெண்ணும், தீவினையே ஒருரு வெடுத்தது போன்ற பிள்ளை யொன்றும் (குணஞ் செயல்களில் சிறிது மாறுபாடிருத்தல் இயற்கை) பிறந்திருப்பதைக் கண்டு உல கானுபவ மில்லாதிருந்த நான் பெரிதும் ஆச்சரியமுற்றேன். ஆனால், கில்பர்ட்டின் அழகிய உருவமும், கம்பீரத் தோற்ற மும், துணிகரச் செயலும் யாவர் மனதையும் வசீகரிக்கச் செய்யும்.

மாலைக் காலங்களில் சிறுமிகளாகிய நாங்கள் விளை யாட்டு மைதானத்தில் ஒன்றுகூடி விளையாடிக் கொண் டிருப்போம். வீட்டுக்குச் செல்லுஞ் சமயத்தில், கில்பர்ட் கிரேஸை அழைத்துக்கொண்டு போக வருவான். அப்போது சில சமயங்களில் தன் தங்கையோடு இணை பிரியாது இருக் கும் என்னைப் பார்த்துப் புன் முறுவல் செய்து! "You look very nice, Puna" (நீ மிகச் சொகுசாகக் காணப்படுகிறாய், பூனா!) என்று விநயமாகக் கூறிச் செல்வான். அழகான என் பெயரை இப்பாடசாலையிலுள்ள மாணவர்களும், ஆசிரியர்களும் பலவிதமாக உச்சரித்துக் கொலை செய்வார் கள். கிரேஸின் மூலமாகச் சிநேகமான ஜான் என்னோடு நெருங்கிப் பழக நேர்ந்த பின்னர், சகஜமாக விளையாடு வான். பேசிக்கொண்டிருக்கையில் அவன் என் கன்னத் தைக் கிள்ளுவான். சில சமயங்களில், Lilly, you look like an Angel ! Please give me a kiss, will you?" (லில்லி! [இது அவன் எனக்கிட்ட செல்வப் பெயர்.] நீ ஒரு தேவ கன் னிகை போலக் காணப்படுகிறாய். தயவு செய்து எனக்கு ஒரு முத்தங் கொடுப்பாயா!) என்று கேட்டுக்கொண்டே

நெருங்கி வந்து என் கன்னங்களில் முத்தம் கொடுத்துவிட்டு ஓடிவிடுவான். இதெல்லாம் ஏழெட்டு வயதில் நிகழ்ந்த விஷயம். இது நல்லது, இது தீயது; இது விரும்பத் தக்கது; இது வெறுக்கத் தக்கது என்று பகுத்தறியக்கூடாத கால மல்லவா அது!

இதனிடையே, இப்பருவத்தில் நிகழ்ந்த ஒரு முக்கிய சம்பவத்தைக் கூற மறந்துவிட்டேன். கோடைக்காலம். எனவே, எங்கள் பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை விடப் பட்டது. நகரில் வெய்யில் அதிகமாயிருந்ததால் அடை யாற்றிலுள்ள எங்களது பங்களாவுக்குப் போய்க் குடும்பத் தினரனைவரும் தங்கியிருந்தோம். அப்பங்களா அறுபது ஏக்கர் விஸ்தீரணமுடைய பெரிய சோலையின் நடுவே இருந் தது. நீண்டு தழைத்து வளர்ந்த மரங்களும் செடி கொடி களும் சுற்றிலுஞ் சூழ்ந்திருந்ததாலும், நீர் நிலைகளும் பெரிய தடாகங்களும் இருந்ததாலும் வஸந்த காலத்துக் கேற்ற மிக வும் குளிர்ச்சி பொருந்திய இடமாயிருந்தது. இவ்விடம் நான் துள்ளித் திரிந்து விளையாடுதற்கு ஏற்றதாக இருந்தது. அப்போது எனக்கிருந்த யதேச்சையான போக்கும் கவலை யற்ற மனமும், உற்சாக உணர்ச்சியும் இப்போது விலை கொடுத்து வாங்குவதானாலுங்கூடக் கிடைக்கா தென்பது திண்ணம். இளமைப் பருவத்தில் அனுபவிக்கும் இன்பத் துக்கும், ஆனந்தத்துக்கும் ஈடாக வேறெந்த இன்பத்தை யும்—ஏதோ மோக்ஷலோக இன்பமென்று சொல்கிறார் களே—அதையுங்கூட ஒப்பிட முடியாது என்னைப் போலவே என் சிற்றப்பா இங்கு உற்சாகமாகவே பொழு தைப் போக்கலானார். அவர் உல்லாசப் போக்குடையவர் என்று முன்னமேயே உமக்குச் சொல்லி யிருக்கிறேனல் லவா? அவருக்கு என் தந்தையைப்போல் குடும்பம், வியா

யாரக் காரியங்களில் கவலையும் பொறுப்பு மில்லாமையால், அவர் தம் நண்பர்களோடு சதா களியாட்டங்களில் மூழ்கி வந்தார்.

இப்பங்களாவுக்கு வந்த சில நாட்களுக்குப் பின் ஒரு நாள், மாளிகைக்குப் பின் பக்கத்திலுள்ள தோட்டத்தில், என் சிற்றப்பாவும், அவரது நாலைந்து நண்பர்களும் பொழுது போக்காகப் பறவை முதலியவைகளை வேட்டையாடிக்கொண்டிருந்தனர். என் தந்தைமட்டும் வழக்கம் போல் தம் வியாபாரத்தைக் கவனிக்க வெளியே சென்றிருந்தார். நான் மாளிகையின் மேல்மாடியில் சிற்றப்பாவின் பிள்ளைகளோடு பதுமைகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்தேன். அச்சமயம் எனது சிற்றன்னை வந்து, தனது மக்களை யெல்லாம் விட்டு என்னைப் பார்த்துத் தோட்டத்தில் இருக்கும் சிற்றப்பாவைத் தான் கூப்பிடுவதாகக் கூறி யழைத்து வரச்சொன்னாள். அவளது குணஞ் செயல்கள் எனக்குப் பிடிக்காமலிருந்தாலும் நான் அவளுக்குக் கீழ்ப்படிந்தே நடந்து வந்தேன். ஆகையால் நான் உடனே வேகமாகத் தோட்டத்தை நோக்கி ஓடினேன். என் சிற்றப்பாவும் அவர் தோழர்களும் தோட்டத்தின் மேற் கோடியில் பல இடங்களில் பிரிந்து பறவைகளைச் சுட்டுக்கொண்டிருந்தனர். நான் விளையாட்டுக் குதூகலத்தில் என் சிற்றப்பா இருக்கும் பக்கம் துள்ளிக் குதித்துக்கொண்டு சென்றேன். இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில் திடீரென்று என்னை நோக்கி ஒரு குண்டு பாய்ந்து வந்தது. என் தாய்—அச்சமயம் எங்கிருந்தாளோ அறியேன்.—இதைக் கண்டு "ஆ! என் கண்ணே!" என்று அலறிக்கொண்டே ஓடி வந்தாள். எனக்கு ஒன்றுந் தோன்றாததால் அப்படியே அசைவற்று நின்றுவிட்டேன்.

அடுத்த கணம், குண்டு பெருத்த சத்தத்தோடு வெடித்தது. அவ்வளவுதான்! உடனே நான் மூர்ச்சைபோட்டுக் கீழே விழுந்தேன். ஸ்மரணை யிழந்த பின்னர், என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது; நான் மீண்டும் கண்விழித்துப் பார்த்தபோது, என்னைச் சூழ்ந்து யாவரும் நின்று



என்னையே ஆவலோடு பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

அங்கிருந்த எல்லோரையும் விட துடிதுடிப்பும், துயரமுங் கொண்டு கண்களில் நீர் ஒழுகவிட்டுக்கொண்டிருந்த என் தாய் நான் கண்ணைத் திறந்து மருட்சியோடு நாலாப் பக்கமும் பார்ப்பதை யறிந்ததும், மிகுந்த ஆர்வத்தோடு



என்னிடந் தாவி வந்து "கண்ணு! எப்படி யிருக்கிறதம்மா உடம்பு? கொஞ்சம் ஸ்பென்சர் சோடா சாப்பிடறையா? அல்லது காப்பி குடிக்கிறையா?" என்று கேட்டாள்.

என் தாயின் பரிவைக் கண்டு மனமுருகி என் படுக்கையை விட்டுத் துள்ளிக் குதித்து, "அம்மா! எதிர்பாராத வாறு குண்டு என்னை நோக்கிப் பாய்ந்து வந்து வெடிக்கவே, எங்கு என்மீது பட்டுவிடுகிறதோ என்ற பயத்தால், மூர்ச்சித்து விழுந்தேனே யொழிய, அக் குண்டினால் எனக் கொன்றும் பாதகம் நேரவில்லை. ஆதலால் நீ ஒன்றும் பயப் படவேண்டியதில்லை யம்மா!" என்று கூறிய வண்ணம் அவ ளைச் சேர்த்தணைத்துக் கொண்டேன்.

"அப்பா! சிறிது நேரத்திற்குள் என்ன அல்லோல கல் லோலப்பட்டுவிட்டது; பார்த்தீர்களா சார்?" என்றார் வேட்டையாடிய கோஷ்டியாரில் ஒருவர்.

அதற்கு என் சிற்றப்பா, "குழந்தை குண்டுபட்டுக் கீழே விழுந்துவிட்டது என்று யாரோ சொன்னார்கள். அதைக் கேட்டதும் எனக்கு உயிரே போய்விட்டது சார்! என்ன! என் கையிலிருந்த துப்பாக்கியும், ரவைகளும் எங்கு போயின என்று அப்புறம் தெரியாது. தலை கால் தெரியாது சம்பவம் நடந்த இடத்துக்கு ஓடி வந்தேன்! குழந்தைக்குக் குண்டுக் காயம் படவில்லை என்றறிந்ததும் சிறிது மன ஆறுத லுண்டானாலும், மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கும் வரை எனக்கு ஒன்றுந் தோன்றவே யில்லை, சார்? நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள். புவனு கண் ணைத் திறந்து பார்த்துப் பேசிய பின்னர்த்தான், போன உயிர் என்னிடம் மீண்டும் வந்தது" என்று கவலையும் மகிழ்ச்சியும் கலந்துறவாடத் தம் ஆற்றாமையைத் தெரிவித் தார்.

"இல்லைங்க. ஐயா சுட்ட குண்டு முதல்லே குழந்தை பக்கமாத்தான் வந்துச்சு. ஆனால் நல்ல காலமா குண்டு குழந்தையின் காதை உராய்ந்தாப்போல் போய் கொஞ்ச தூரத்திலே வெடிச்சுதுங்க. நம்ம எஜமாட்டியம்மா இதெ பாத்துட்டு கத்திகினு வராட்டா குழந்தை பூட்டதுதாங்க. யார்செய்த புண்ணியமோ தப்பிச்சிக்கிச்சிங்க" என்று தனது உணர்ச்சியை வெளியிட்டான் வேலைக்கார வேதாந்தம்.

வேட்டைக்கார கோஷ்டியில் மற்றொருவர், "என்னமோ? தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது; ஆண்டவன் அருள்தான். அவன் இல்லாமலா உலகம் நடக்கிறது?" என்று வேதாந்திபோல் பேசலானார்.

யார் சுட்ட குண்டு என்னை நோக்கி வந்து இவ்வளவு தூரம் அல்லலுக்கு ஆளாக்கியதோ, அதற்குக் காரணகர்த்தாவாகிய மகானுபாவர் இன்ஸ்பெக்டர் வீரவாகு பிள்ளை தமது இயற்கையான மிடுக்குத் தோரணையிலேயே, "என்ன இருந்தாலும் போங்கள் சார்! இந்தப் பெண் இவ்வளவு தூரம் களேபாரம் பண்ணியிருக்கப்படாது; எதற்கும் பயப்படாத நானே என்ன பயந்துவிட்டேன் தெரியுமா? எங்கு பழிகாரனாய்ப் போய்விடுவேனோ என்று என் இருதயம் படக்கு படக்கென்று அடித்துக்கொண்டிருந்தது—வீண் பழி எதற்கு என்ற எண்ணமேயொழிய வேறென்ன பயம்?—சுந்தரி செய்த ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தால் மேலே பட்டுவிட்டது என்றுதான் நினைத்தேன். அம்மாதிரி பட்டுவிட்டிருந்தால், நீங்கள் தான் என்ன சொல்வீர்கள் சார்! இக் களியாட்டத்திலே கண்கூடவா தெரியாமல் போய்விடும் என்று கூறமாட்டீர்களா!-உம். அப்படித்தான் புவனா குண்டடி பட்டு விழவேண்டுமென்று இருந்தால், யார்தான் என்ன செய்கிறது!" என்று என்

தாய்க்குப் பின்னே நின்றிருந்த சிற்றன்னையைக் கடைக் கணித்த வண்ணம் கூறினார்.

இதுவரை வாய் திறவாது ஒரு பக்கம் ஒதுங்கி நின்றிருந்த என் சிற்றன்னை, "முளையிலேயே பாசாங்கு பண்ணக் கற்றுக்கொண்டால் தானே, முழுதும் நன்றாய் வாழலாம்; எல்லாரையும் வசப்படுத்தலாம். என்ன பிரமாதம் விளைந்துவிட்டதென்று இவள் இவ்வளவு தூரம் கோரணி வைத்தாள்! எங்கேயோ போகிற குண்டைப் பார்த்துவிட்டு, இவள் இங்கே 'கோ' வென்று அலறி விழுவானேன்! காக்காய் கரைகிறதைக் கேட்டதும் பயந்துபோய் அகமுடையானை அப்படியே சேர்த்துக் கட்டிக்கொண்டாளாம்! ஒரு மாயமாலக்காரி. அவளது சாகஸச் செயலைப் போல் அன்றோ இருக்கிறது இப்பெண் செய்த ஆர்ப்பாட்டம்? அப்படிப் பயப்படுகிறவள் வேட்டை யாடுகிற இடத்துக்குப் போவானேன்?—உம். குழந்தை சிற்றப்பா செல்லம் இல்லையா!" என்று இன்ஸ்பெக்டர் வார்த்தைக்குப்பக்க வாத்தியம் பேசினாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு என் இளமனம் எவ்வாறு பதறியது என்பதை என்னால் விவரிக்க முடியாது; ஊகித்துப் பார்த்தால்தான் உங்களுக்கு விளங்கும். ஏற்கனவே அவளது கபடம் நிறைந்த முகத்தை எனக்குப் பார்க்கச் சகிப்பதில்லை. இதிலும் இச்சமயம் யாரோ வேற்று மனிதரைப்போல் அமைதியா யிருந்ததோ டல்லாது, எனக்கு நிகழ விருந்த விபத்தைச் சர்வ சாதாரணமாக நினைத்துப் பேசியது எனக்குப் புண்ணில் கோலைவிட்டு ஆட்டுவதுபோ லிருந்தது. யானே இவ்வித நிலையை யடைந்தே னென்றால், என்மீது தன் உயிரையே வைத்திருக்கும் என் அருமைத் தாய்க்கு எப்படியிருக்கும்? அவள் உடல் படபடத்

தது. தன் தங்கையைத் திரும்பிப் பார்த்தாள். கண்களில் முன்னையினும் நீர் தாரை தாரையாக வழிந்தோடியது. பிறகு அங்கு நிற்க மனமில்லாதவளாய் என் தாய் என்னை யழைத்துக்கொண்டு வேகமாகத் தன் அறைக்குச் சென்றாள்.

இதிலிருந்து இச்சம்பவத்தைபற்றி நீர் என்ன நினைக்கிறீர் தோழரே! இது தற்செயலாக நேர்ந்திருக்கலா மென்றா? அல்லது, முன்கூட்டியே ஏற்பாடாகி நடந்திருக்கலா மென்றா? எவ்வாறு கருதுகிறீர்! ஏதோ சொல்லும் பார்க்கலாம்" [என்று புவனசுந்தரி தன் இளம்பருவ நிகழ்ச்சியைக் கூறிக்கொண்டே வந்தவள், நடுவே ஒரு கேள்வி போட்டு நிறுத்தினாள்.

மிக ரசமாக புவனசுந்தரி சொல்லி வந்தவற்றைக் கேட்ட எனக்கு இக் கேள்வி புதிர் போட்டது போலிருந்தது. ஆகவே, "அம்மா! எனக்கு ஒன்றுமே தோன்ற வில்லை! மேலே என்ன நிகழ்ந்தது; அப்புறம் என்ன ஆயிற்று என்று உன் வாழ்க்கையில் நடந்த விநோதத்தை யறிவதிலேயே இப்போது என் அறிவு சென்றுகொண்டிருப்பதால், இந்தச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்திருக்கலாம் இது எப்படி நேர்ந்தது; இதற்குக் காரணம் யாதாயிருக்கும் என்றெல்லாம் பகுத்தறிந்து பார்க்க எனக்குச் சிறிதும் அவகாசமில்லை. அவ்வாறு சிந்தித்துப் பார்க்கவும் அவசியமில்லை யென்று நினைக்கிறேன். ஆதலால் நீயே நடந்ததைச் சொல்லம்மா!" என்று நயமாகப் பதிலளித்தேன். ஆற்றொழுக்குபோல் புவனசுந்தரி வாயிலிருந்து வரும் அமுத தாரைகள் என் இரு செவிகளிலும் துளித்து இன்பந் தருவதை இடைமறிப்பது எனக்குச் சிறிதும் விருப்பமில்லை. இரவு பகலென்று பாராது ஒரே தொடர்ச்சியாக

அவளது வரலாற்றை அப்படியே கேட்டுக்கொண்டிருக்க லாம்போலிருந்தது. எனவே, எனது ஆவலை வெளிப்படுத் தும் வகையில் அவள் முகத்தை ஆர்வத்தோடு பார்த் தேன்.

புவனசுந்தரி சிறிது நேரம் அமைதியாயிருந்து பின் னர் தன் தலையை அசைத்தவண்ணம் மெதுவாகப் பேசத் தொடங்கினாள்:—"என் கேள்வியே என்னைச் சங்கடத்துக் குள்ளாக்கிவிட்டது. இருந்தாலும் அக்கறையில்லை. நான் இச்சம்பவத்தின் இரகசியார்த்தத்தை முறையே பிறகு கூறலாமென்றிருந்தேன். உம்மைச் சந்தேகத்தி லாழ்த்தி விட்டுவிட்டு வேறு விஷயத்தைச் சொல்லிக் கொண்டு போக என் மனம் இடந்தரவில்லை. எனவே, இதை இங் கேயே விளக்கிக் கூறிவிடுகிறேன். இவ்வெடி விபத்து சம்பவம் நடந்ததற்குக் காரணமாக இருந்த இன்ஸ்பெக்டர் தம் செயலுக்காகச் சமாதானமும் ஆறுதலும் கூறவேண்டி யிருக்க, இறுமாப்பாகப்பேசி என் மீதே குறை கூறியதும், தான் கணவனைக் கூப்பிடச் சொல்லி யனுப்பியதாலேயே யன்றோ குழந்தை விபத்துக் காளாக விருந்தாள் என்று எண்ணி வருந்தி அநுதாபப்பட வேண்டிய என் சிற்றன்னை கடுமையான மொழியால் குத்தலாகப் பேசியதும், எனக் கும் என் தாய்க்கும் அப்போது வருத்தத்தை யுண்டுபண்ணி னாலும், பின்னர் அதை அவ்வளவாகப் பாராட்டவில்லை. மேலும், என் சிறிய தாய் ஏற்கனவே எங்கள்மீது பொறு மையும், பொச்சரிப்புங் கொண்டிருக்கிறாளாதலால், அது காரணமாகப் பிதற்றியிருக்கிறாள் என்று எண்ணி நாளடை வில் அதை மறந்துவிட்டோம். அதுமட்டுமன்று. எனக்கு இவ்வாறு வெடி விபத்து நேரவிருந்தது என்ற விஷயத் தையே என் தகப்பனிடம் யாருஞ் சொல்லவில்லை. இச் சம்பவத்தை அவர் காதில் போடக்கூடாதென்று என் தாய்

வேலைக்காரர் முதலியோருக்கு கண்டிப்பாக உத்தரவு போட்டுவிட்டான். ஏனென்றால், தம் உயிரினும் மிக அருமையாகக் கருதிவரும் எனக்கு ஒன்று நேர்ந்துவிட்டது என்று கேட்டால் அவர் துடிதுடித்துப் போய் விடுவார் என்பதேயாகும். அது கிடக்க.

---

## நான்காவது அதிகாரம்

---

### சிற்றன்னையின் சதிச்செயல்

எனக்குப் பதினேழு பதினெட்டு வயதிருக்கும், என் தகப்பனார் வியாபாரம் உச்ச நிலையிலிருந்தது. அவருக்கு அச்சமயம் சுக்கிரதசை போலும். ஒரு பெரிய மோட்டார் கம்பெனி வைத்து நடத்தலானார். அமெரிக்காவில் பிரபலமாக நடக்கும் போர்டு கம்பெனிக்கு இவரே இச் சென்னைமா நகருக்கு சோல் ஏஜண்டு என்றால் சொல்லவும் வேண்டுமோ! இம்மோட்டார் கம்பெனிக்கு என் தந்தையார் தம் மனைவியின் (இவளாலேயே தமக்குச் சகல சம்பத்தும் வைபவமும் ஏற்பட்டிருக்கிறதென்பது அவரது அபார நம்பிக்கை. இவ்வாறே எங்கள் சுற்றத்தார் முதலியோர் கூட எண்ணிக் கூறி வருகிறார்கள் என்று முதலிலேயே நான் குறிப்பிட்டது உமக்கு நினைவிருக்குமென்று கருதுகிறேன்.) பெயரை - அதாவது தனலக்ஷ்மி மோட்டார் கம்பெனி என்று பெயர் வைத்து நடத்திவந்தார். இதன் மோட்டார் காரேஜ் (Motor Garage) சீமையிலிருந்து வந்த ஒரு ஐரோப்பியர் நிர்வாகத்தில் நடந்துவந்தது. என் சிற்றப்பா முன்போல் வெறும் தமாஷாக்களிலேயே காலத்தைக் கழித்துவராமல், இம்மோட்டார் சம்பந்தமான 'மெக்கானிஸத்'தைக் கற்றுக்கொண்டு கம்பெனி நிர்வாகத்தில் கலந்து

கொள்ளலானார். அவருடைய மூத்த புதல்வனும், எனக்கு அண்ணன் முறையி லுள்ளவனுமான கதிரேசன் கல்வியில் கவனத்தைச் செலுத்தாது மனம்போனவாறு மற்ற பிள்ளைகளோடு திரிந்து வந்ததால் ஸ்கூல் பைனல்கூட பூர்த்தி செய்யாத நிலையில் இம்மோட்டார்த் தொழிலில் ஈடு படுத்தப்பட்டான். அவரது மற்றொரு பிள்ளையும், மூன்று பெண்களும் என்னைப்போலவே படித்துவந்தனர்.

என் தகப்பனாரின் பெரு முயற்சியால் செல்வ நிலை மேலும் உயரவே, அதற்கேற்ப எங்கள் குடும்பத்திலுள் ளார் செயலும் போக்கும் பெரு மாறுதலடையலாயின. எங்கள் போக்குவரவு சாதனத்துக்கு மட்டும் நாலைந்து மோட்டார்கார்கள் வேண்டியிருந்தன. அதுவன்றி இரு குதிரை வண்டிகள் (Governess cart) இருந்தன. என் தாயும் சின்றன்னையும் 'நகர மாதர் பொழுது போக்கு சங்க (Ladies Recreation Club) த்தில் அங்கத்தினர்களாயினர். எனவே, மாலை நேரங்களில் அவர்கள் தவறாது அச்சங்கத் துக்குப் போகவேண்டியவர்களாயினர். சில சமயங்களில் என்னையும், என் சகோதரிகளையும் (அதாவது சிற்றன்னை பெண்கள்) அவர்கள் அழைத்துச் செல்வர். ஆரம்பத்தில் என் தாய் அச்சங்கத்துக்குத் தொடர்ந்து சென்றாளாயினும் நாளடைவில், ஊக்கங்குன்றவே, சரியாகப்போவதில்லை. என் சிற்றன்னைமட்டும் ஒரு நாளுந் தவறமாட்டாள். அதோடு அவள் அச்சங்கத்தில் எதிலும் பிரதம பாகம் எடுத் துக்கொண்டு வந்தமையால் அதற்குக் காரியதரிசியாகவுந் தேர்ந்தெடுக்கப்பட்டாள். ஒருவரிடம் பண நடமாட்டம் இருந்தாலே இதுவரை யில்லாத உறவினரும், சிநேகிதர் களும் வந்து சேருவது இயற்கை. அதுபோல், ஏற்கனவே நாங்கள் பணக்காரரா யிருக்கின்றமைபற்றி உறவுகொண்

டாடி—நட்பு கொண்டாடி வந்தவர்கள் கூட்டம் இச்சங்க வாயிலாகவும் அதிகப்படலாயிற்று. சாதாரண காலங்களில் கூட எங்கள் மாளிகை கலியாண வீடுபோல ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக நிறைந்திருக்கும். அவர்களில் பலர் நெருங்கிப் பழகியமையால் குடும்பத் தோழர்களாகவும் இருந்தனர். எனவே, எங்கள் குடும்பத்தில் அநேகமாக அயலார் உறவினர் என்ற பேதமோ, ஆண் பெண் பேதமோ இல்லாமலிருந்தது. இன்னும் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்றால், அன்னிய ஆடவர் எதிரில் குடும்பப் பெண்கள் வரக்கூடாதென்ற கோஷா முறை அறவே கைவிடப்பட்டது. என் தாய் சங்க விஷயத்தில் அசிரத்தை காட்டியதுபோலவே, சிநேகிதரிடம் பழகும் முறையிலும் சிறிது அமர்த்தலாகவே இருந்து வந்தாள். சாதாரணமாகத் தன்னொத்த மகளிரோடு அவசியம் நேர்ந்தால் அளவளாவிப் பேசி மகிழ்வாள். மற்றப்படி ஆண் மக்களிடம் அவர்கள் எவ்வளவு அத்தியந்த நண்பர்களாயினும் வயதில் பெரியவர்களிடத்தில்கூட தவிர்க்க முடியாத நிலையில் ஒன்றிரண்டு வார்த்தைகள்தான் பேசிவிட்டுப் போய்விடுவாள். அதனால் மற்றவர்கள் என் தாயைப் பணச் செருக்கு படைத்தவள் என்று பழித்துப் பேசுவதுண்டு.

என் சிறிய தாயோ எல்லோருடனும் கூச்சமின்றித் தாராளமாகப் பேசிப் பழகுவாள். அதோடு தன்னை எல்லோருக்கும் தெரியப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும், எல்லாருக்கும் தகுந்தவிதமாக நடந்து நல்ல பெயர் வாங்க வேண்டுமென்ற கருத்தும், தன் ஆடம்பரச் செயலைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்ற விருப்பமும் அவள் மனதில் வேரூன்றியிருந்தன. அவள் எதிர்பார்த்த படியே மற்றவர்கள் அவளைக் கருதித் தெய்வமாகப் போற்

றிப் புகழ்ந்தார்கள் என்ருல் நீர் ஆச்சரியப்பட மாட்டீர் என்று கருதுகிறேன். எங்கள் குடும்பப் பிரதாபத்தை இங்கு இத்தோடு நிறுத்துகிறேன்.

செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து முதலிலேயே நாகரிக மாக வளர்க்கப்பட்டு வந்த நான் ருதுவான பின்னரும் வாசிக்க வைக்கப்பட்டேன் என்று கூறுவது உமக்கு வியப் பைத் தராது என்றெண்ணுகிறேன். நான் இண்டர் மீடி யட் ஸீனியர் வகுப்பில் கிறிஸ்துவப் பெண்கள் கலாசாலை யில் வாசித்து வந்தேன். எனக்குஞ் சிநேகிதர்கள் பலர் சேர்ந்து விட்டார்கள். நவநாகரிகப் போக்கில் அதிகமாக ஆழ்ந்து போகாவிட்டாலும், நான் மற்ற தோழிகள் போக் கில் ஈடுபாடுடையவளாய் இருந்தேன். அதனுல் கலாசாலை முடிந்ததும், மாலைக் காலங்களில் நான் சிநேகிதைகளோடு பந்தாட்டம், கலாசாலைக் கூட்டம், ஓட்டல், சினிமா முதலி யவைகளுக்குச் சென்று திரிந்துவிட்டுத்தான் என் வீட்டுக் குப் போவது வழக்கமாயிருந்தது.

அவ்வாறு ஒருநாள் கலாசாலை மைதானத்தில் பாட் மிண்டன் ஆடிவிட்டு எழுமணிக்கு வீடுசென்றேன். மோட் டாரை விட்டு இறங்கிப் பங்களாவிற்குள் நுழைந்தேன். இரண்டடி எடுத்து உள்ளே வைத்திருப்பேன். இடது பக்க மாக அமைக்கப்பட்டிருந்த மல்லிகைக் கொடி பந்தருக் கிடையே இருந்து யாரோ பேசுவது என்காதில் விழுந்தது. அச்சமயத்தில் யான் செவியுற்ற சம்பாஷணை என்னை அவ் விடத்திலேயே திடுக்கிட்டு நிற்க வைத்துவிட்டது.

பொறி கலங்கி நின்ற யான் இரண்டொரு விநாடிக் கெல்லாம் என் தடுமாற்ற நிலையைச் சமாளித்துக்கொண்டு, அச் சம்பாஷணையைத் தொடர்ந்து கேட்க ஆசை கொண் டேன். மேலும் அந்நேரத்தில் இரகசியமாகப் பேசும் அவர்

கள் யார் என்று அறியவும் எனக்கு அதிக ஆவலுண்டா யிற்று எனினும், பூம்பந்தரிடையே நின்று பேசுபவர்களை அறிய முதலிலேயே முயன்றால், ஒரு வேளை அவர்கள் என் வரவை அறிந்துகொண்டு தங்கள் சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைக்காமலே திடீரென்று பிரிந்து போய்விடக் கூடு மாதலால், இச்சமயத்தில் அவசரத்தைக் காட்டலாகாது என்று தீர்மானித்தேன். ஆகவே, வாயிற் கத வோரத்தில் பூம்பந்தரைச் சார்ந்துள்ள ஒரு பெரிய மாமரத்தின் மறை வில் நின்று ஒற்றுக் கேட்கலானேன்.

"ஆமாம்; கையாலாகாவிட்டாலும் கொஞ்ச வருவதில் மட்டும் குறைச்சலில்லை..........." இது பெண் குரல்.

"நான் என்ன செய்வேன் ஜகதா! நீ என்னென்ன சொன்னாயோ, அதை யெல்லாம் தங்கு தடையில்லாது தான் செய்து வந்தேன்! நாம் எதிர் பார்த்து வருவதற்கு மாறாக ஒவ்வொன்றும் நிகழ்ந்தால் யார் தான் என்ன செய்ய முடியும்? நீ இன்னும் என்ன செய்யச் சொல்லுகி றாயோ சொல்லு! நான் செய்து முடிக்காவிட்டால் அப் புறம் கேளேன்!"

ஆடவன் குரலாக இது கேட்டது. இவ்விரு பேச்சுத் தொனிகளும் மிக நெருங்கிப் பழகுபவர்களுடைய குரல் போல எனக்குத் தென்பட்டது.

"உம்—இன்னும் ஒன்றுதான் மிச்சம்! சொன்னதைத் தவறாது செய்வதில் நீர் மிகவும் அசகாய சூரர்!........தெரி யுமே எனக்கு உமது இலட்சணம்."

"நான் அசகாய சூரனாக இல்லாமலா அதிகாரிகள் என்னைப் போலீஸ் இலாகாவில் இன்ஸ்பெக்டராக நியமித் திருக்கிறார்கள்?..............."

"அதற்கென்ன! ஆள் முனீஸ்வரன் போலக் குறுக்கி லும் நெடுக்கிலும் பருத்தும் நீண்டும் இருக்கவே, இன்ஸ் பெக்டராகப் போட்டுவிட்டார்கள். இது ஒரு பெருமையா? காரியத்தில் திறமையில்லையென்றால் என்ன பிரயோஜனம்!"

"ஐயோ!—இப்போது என்ன செய்யச் சொல்லு கிறாய்; அதைக் கூறித் தொலையேன் ஜகதா! நீ சொல்லுகிற படி இம்முறை நிறைவேற்றி வைக்கிறேனா இல்லையா, பார்! இக்காரியத்துக்கு முட்டுக்கட்டையாக உலகமே திரண்டு வந்து குறுக்கிட்டாலுஞ் சரிதான். ஒரு கை பார்த்து விடு கிறேன்........அம்மம்மா; பெரிய பெரிய கமிஷனர் துரை, அஸிஸ்டெண்டு கமிஷனர்களிடத்தெல்லாம் மிகவுஞ் சுலப மாகச் சர்ட்டிபிகேட் வாங்கிக்கொண்டு 20 வருடங்களா கக் கியாதிபெற்று வந்திருக்கிறேன். முடிசூடாத இந்த ராஜாத்தியிடத்தில் மாத்திரம் சர்ட்டிபிகேட் வாங்க முடிய வில்லையே! நானும் ஐந்தாறு வருட காலமாகத் தலைகீழாக நின்று கெஞ்சிப் பார்க்கிறேன். என் பாச்சா உன்னிடம் கொஞ்சங்கூடப் பலிக்கவில்லையே! இனிய வார்த்தைக்குக் கூடப் பஞ்சமாக வன்றோ இருக்கிறது!"


"ஆமாம்; கொஞ்சிக் குலாவுவதற்குத் தான் உம்மைத் தேடிச் சினேகஞ் செய்தது!—உம்—என் வீணாக வார்த் தையை வளர்த்திக்கொண்டு போக வேண்டும்!—ஐயா! இன்ஸ்பெக்டர்வாள்! இப்போது உம்மிடம் வெளிப்படை யாகப் பேசுகிறேன். உம் அழகைக் கண்டு மயங்கியோ அல்லது உம்மிடத்துள்ள பொருளுக்கு ஆசைப்பட்டோ நான் உம்மை நாடி நிற்பதாக நீர் எண்ணியிருக்க மாட்டீர் என்று நம்புகிறேன். அவ்வாறு தவறாக ஒரு வேளை நீர் கருதியிருந்தாலும், பெரிதும் ஏமாற்ற மடைவீர்—பின் எதற்காக என்னிடந் தோழமைகொண்டாய் என்று நீர்

கேட்கலாம். அதன் காரணத்தையுங் கூறி விடுகிறேன். எங்கள் குடும்ப விவகாரமனைத்தும் உமக்கு நன்கு தெரியும். இப்போதுள்ள சொத்தனைத்தும் எனது அத்தான் (என் கணவனது தமையன்) ஒருவரே சம்பாதித்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. என் தமக்கைக்கு நீண்ட நாள் பிள்ளைப்பேறு வாய்க்காதிருந்தமையாலும் எனக்குப் பல பிள்ளைகள் ஆண்களும் பெண்களுமாக ஏற்பட்டு விட்டமையாலும், அத்தானுக்குப் பின்னர், என் பிள்ளைகளே இச் சொத்தை யனுபவித்தற் குரியவர்களாவார்கள் என்று மனப்பால் குடித்து மகிழ்ந்து வந்தேன். ஆனால், என் எண்ணத்தில் இடி விழுந்துவிட்டதென்பதை நான் சொல்லாமலே நீர் இந்நேரம் அறிந்திருப்பீர்! புவனசுந்தரி பிறந்த பின் அத்தான் தமக்கை ஆகியவர்களுடைய மனப்போக்கையும், பெருமிதச் செயலையும் பார்த்தால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. அச்சிறு முளையைப் பார்த்தால் அவர்கள் மெய்மறந்துபோய் விடுகிறார்கள். அது ஒரு சாண் கூடச் சரியாக இல்லை; அதற்கு எத்துணை தலை கிறுக்கு இருக்கிறது தெரியுமா! இவற்றையெல்லாங் கண்டால் எனக்கு வயிறு எரியாமலிருக்குமா! இப்போதிருக்கும் நிலைமையைப் பார்த்தால், எனது மக்களுக்கு எங்கள் பூர்வார்ஜித சொத்தில் எனது கணவனுக்குரிய ஒரு சிறு பாகந் தவிர வேறு ஒரு செல்லாக் காசுகூடக் கிடைக்காது என்று நினைக்கிறேன். அப்படியானால் என் குழந்தைகள் கதி என்னவது! எனவே, நான் எண்ணாததெல்லாம் எண்ணி நெஞ்சம் புண்ணாகிக் கடைசியாக அம்முளையைக் கிள்ளியெறிந்து விடத் துணிந்துவிட்டேன். அச்சதிச் செயலுக்கு உற்ற துணையாக இருப்பதற்கே போலீஸ் இலாகாவிலுள்ள நீர் தான் தகுதிவாய்ந்தவர் என்று கருதி உம் தோழமையை நாடினேன். அத்துடன் நீரும் எங்கள் மாளிகைக்கு வரப்

போக ஆரம்பித்ததிலிருந்து என்னைக் கடைக் கணித்து வந்த



தையும் நான் குறிப்பாலுணர்ந்தேன். உமது அக்கிரமக்



குறிப்பு நமக்கிடையே ஒருவித தொடர்பை உண்டு பண்ணிக் கொள்வதற்கு எனக்கு எளியதாயிற்று. ஆனால் நான் எதிர் பார்த்தவளவு நீர் இவ்விஷயத்தில் சமர்த்தராக இல்லை. அவ் வாறு சொல்வதால் உமக்கு மனச் சங்கடம் உண்டாகலாம். பாருமே! ஒரு முறை இரு முறை தவறினால் ஏதோ தற்செய லாக குறிதவறி விட்டதென்று நினைக்கலாம். நான்கைந்து தடவையும் அவ்வாறே. ஆனால் என்னென்பது! நீர் என் எண்ணத்தை நிறைவேற்றி வைத்தால், ஏதோ உம் ஆசையையும் பூர்த்தி செய்து வைக்கலாம் என்று பார்த் தால், ஒன்றும் நடப்பதாகவே காணோமே! இனி உம்மை இவ்விஷயத்தில் நம்பி யிருப்பதில் பயனில்லை யென்றுதான் தோன்றுகிறது. சரி; உம் வேலையைப் பார்த்துக்கொண்டு செல்லும்!....இல்லை. நீர் என்னிடம் எதிர் பார்த்தது கிடைக்கவில்லை யென்ற கோபத்தில், வேண்டுமானால், நான் உம்மிடம் இதுவரை சொல்லியிருக்கும் இரகசியங்களை யெல் லாம் வெளியிட்டுக் கொலைபுரிய சதியாலோசனை செய்து வருவதாக என்மீது குற்றஞ் சாட்டித் தண்டனை விதிக்கச் செய்யும். ஏனென்றால், நீர் குற்ற இலாகா இன்ஸ்பெக்டர் அன்றோ! சுலபமாகக் கேஸை ஜோடிக்கத்தானா உமக்குத் தெரியாது?"

"சே! சே! அப்படியெல்லாம் சொல்லாதே! கண்ணே ஜகதா! நான் என்ன அவ்வளவு கொடியவனா! உன்மீது நான் என் உயிரையே வைத்திருக்கிறேனென்பது உனக் கென்ன தெரியும்? நீ என்னை வெறுத்துப் புறக்கணிப்பதா னாலும், நான் உன் காலடியில் வீழ்ந்து உயிர் விடுவேனே யன்றி, பழி தீர்த்துக்கொள்ள ஒருபோதும் உன்னைக் காட் டிக்கொடுக்கமாட்டேன். இது சத்தியமென்று நீ உறுதியாக நம்பு.—இனி, உனக்கு இந்த கவலையே வேண்டாம். அந்தப்

பெண்ணை எவ்விதத்திலாயினும் தொலைத்துவிடுவது என்னுடைய முதல் வேலை...........”

* * * *

“தோழரே! இதற்குமேல் அச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு நிற்க என்றால் முடியவில்லை. நான் பங்களா வாயிலினுள் நுழையும்போது, என் காதில் விழுந்த, “சுட்டேன்! கொஞ்சங் குறி தவறிப் போச்சு! குண்டு மாத்திரம் பட்டிருந்தால் அப் பெண் புதைக்கப்பட்ட இடம் புல்முளைத்துப் போயிருக்கும்...........” என்ற பரபரப்பான வார்த்தைகளே என்னைத் திடுக்கிட்டு நிற்கச் செய்தது. யாரைப் பற்றி யார் பேசுகிறார்கள் என்பதை யறியவே முதலில் நின்றேனாயினும், என்னைப் பற்றியே சதிப் பேச்சு நடக்கும் என்று அச்சமயம் சிறிதும் கருதவேயில்லை. அதுவும், அந் நேரத்தில், அங்கு நான் மறைந்து நிற்பதை நான் அம்மாளி கையில் செல்வக் குமரியே யாயினும்-யாரேனும் பார்த்தால் ஏதேனுந் தவறாக நினைத்துக்கொள்வார்களே என்ற பயம் ஒரு பக்கம் எழ அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அவர்கள் சம்பாஷணையை ஒற்றுக் கேட்கலானேன். அவ்வாறு கேட்கையில் என்னைக் கொல்வதற்கே யாரோ இருவர் சூழ்ச்சி செய்கிறார்கள் என்று அறிந்தால் அச்சமயம் என் மனம் எவ்வாறு இருக்கும். என் தலை சுழன்றது! சிறிது சமாளித்துக்கொண்டு, சம்பாஷணையைக் கேட்ட சிறிது நேரத்துக்குள்ளேயே, அவர்களது குரல் தொனிகளால் இன்னார்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்துக்கொண்ட நான் அதைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்காக நான் நின்ற விடத்தைவிட்டுப் பின்னாலேயே மெல்ல நடந்து வாயிற் கதவருகில் நின்று தலையைச்சாய்த்து எட்டிப்பார்த்தேன். ஆம், அவர்கள்தான். யார்? என்

பதை நீரும் இந்நேரம் ஊகித்துக்கொண்டிருப்பீரென்று நினைக்கிறேன். ஆனாலும் நானே சொல்லிவிடுகிறேன். அவர்கள் எனது உயிருக்கு உலை வைத்திருக்கும் சிற்றன்னை (அவள் பெயர் ஜகதாம்பிகை)யும் இன்ஸ்பெக்டர் வீரவாகுப் பிள்ளையுமே யாகும். நான் பார்க்கும்போது அவள் முகத்தை ஒருவிதமாக வைத்துக்கொண்டு மிடுக்காக நின்றிருந்தாள். இன்ஸ்பெக்டர் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவண்ணம் அவள் கைகளைப் பற்றிக் கொஞ்சிக் கொண்டிருந்தார்! அக் காட்சியைக் காண எனக்குச் சகிக்க வில்லை. மெல்ல அடிமேலடிவைத்து ஓசை படாமல் மாளி கையினுள் சென்றுவிட்டேன்.

நேரே என் அறையை அடைந்ததும், கதவைத் தாளிட் டேன். வேறெதையுங் கவனிக்க என்னால் முடியவில்லை. பூம்பந்தரில் கண்ட காட்சியே என் அறிவு முழுதையுங் கவர்ந்திருந்தது. பைத்தியம் பிடித்தவள்போல் அறையைச் சுற்றிச் சுற்றி வந்தேன். "ஆ! என்ன அக்கிரமம்! இவ்வநி யாயம் எங்கு நடக்கும்? என் தாயால் அன்பாக வளர்க்கப் பட்டவள்—அவளாலேயே சற்குணம் பொருந்திய என் சிறப்பாவை நாயகனை அடைந்தவள்—நல்வாழ்வைப் பெற்றுக் குபேர சம்பத்தை யனுபவிப்பவளாகிய என் சிற் றன்னை, என்னைத் தன் சொந்த சகோதரியின் ஒரே மகள் என்பதையும் பாராது, தன்னல மொன்றையே பெரிதாகக் கருதுவதா! அக் கொலைபாதகச் செயலுக்கு உதவியாக இருப்பதற்காக, தன் தகுதி, மானம் இவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுத் தன் அருங்கற்புக்கு மாறாகக் களங்க மேற்படுமே என்பதையுஞ் சிந்தித்துப் பாராது, அயலா னொருவனோடு தொடர்பு வைத்திருப்பதா! இவ்வடாச் செயல் உலகி லெங்கேனும் நடக்குமா? அறக்கடவுளுக்கு

இது பொறுக்குமா! ஆ! ஆ" என்று எனக்குள்ளாகவே கூறிக் கொண்டே வருகையில் தலை சுழற்ற மயக்கமுற்று விழுந்தேன். இந்நிலைமையில் நான் எவ்வளவு நேரம் இருந்தேனென்பது எனக்கே தெரியாது.

* * * *

கதவு தட தட வென்று தட்டுஞ் சப்தங்கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து என் உடை முதலியவற்றைச் சீர்படுத்திக் கொண்டு மெல்லச் சென்று தாழ்ப்பாளைத் திறந்தேன். வெளியே என் தாய் தந்தை முதலியோர் கவலையோடு சூழ்ந்திருந்தனர். என்னைக் கண்டதும் என் அருமைத் தாய் மிகவும் பரிவோடு என்னை யணுகி, "புவனா! என்ன உடம்புக்கு? முகம் வேறுபட்டிருக்கிறதே! எப்போது வீட்டுக்கு வந்தாய்? ஏன் காப்பிகூடச் சாப்பிடவில்லை? நீ வரவில்லையென்று 8-மணிக்குமேல் வேலையாட்களைக் கலாசாலைக்கும், மற்றும் உன் சிநேகிதைகள் வீடுகளுக்கும் நாலாபக்கமும் அனுப்பினேன். எல்லோரும் நீ எங்கும் இல்லை யென்று சொல்லவே, எனக்குப் பயமாகிவிட்டது. உடனே அப்பாவுக்கு டெலிபோன் செய்தேன். அவர், "டிரைவர், குழந்தையைப் பங்களாவில் விட்டு விட்டு வந்ததாகச் சொல்கிறான்! அப்படியிருக்க, மறுபடியும் யாரிடமும் சொல்லாமல் எங்கு போய்விடுவாள்" என்று பதில் தெரிவித்து, உடனே ஆபீஸைவிட்டு ஓடி வந்தார். அவர் பதில் எனக்கு மேலுங் கவலையை உண்டுபண்ணி விட்டதம்மா! உன் அறையை யாகிலும் வந்து பார்க்கலாம் என்று இங்கே வந்தால் கதவு உள் தாளிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு ஒருவாறு தைரியம் வந்தது. ஆனால், அரைமணி நேரத்திற்கு மேல் கதவைத் தட்டியும் ஒரு பதிலுங் கிடைக்கவில்லை. எனவே, எனக்கும் மற்றவர்களுக்கும் பெருத்த சந்தேகம் ஏற்பட்டு விட்டது. இதற்குள் உன் தந்தையும் வந்துவிட்

டார். கதவையாகிலும் உடைத்துப் பார்க்கலாம் என்று தீர்மானித்துக் கடைசியாகத் தட்டினேம். நீ திறந்தாய். இரண்டு மணி நேரத்தில் வீடே அமளிபட்டு விட்டதம்மா!'' என்ருள்.

எல்லாரும் இவ்வளவு பரபரப்போடு என்னைப்பற்றி விசாரிக்க, நான் சிறிது மெதுவாக, "இல்லை! எனக் கென்னமோ மயக்கமா யிருந்தது! கதவைச் சாத்திவிட்டுப் படுத்து விட்டேன். கதவு தட்டுஞ் சப்தம் இப்போது தான் என் காதில் விழுந்தது. எழுந்து கதவைத் திறந்தேன். வேறென்றும் இல்லை'' என்று சொல்லிய வண்ணம் என் பெற்ருேரோடு உள்ளே சென்றேன். அதன் பின்னரும் என் தாயிடங்கூட நான் பூப்பந்தரிடையே கண்ட காட்சியைப் பற்றியும், கேட்ட சம்பாஷணையைப் பற்றியும் தெரிவிக்கவில்லை. இவற்றை என் தாயிடம் தெரிவிக்கக் கூடாதென்ற நோக்கத்தோடு சொல்லவில்லை; ஏனென்ருல், "என் தாய்க்குத் தன் தங்கையின் பொருமைக்குணம் ஏற்கனவே தெரிந்திருக்கிறது; ஆனல், அப்பொருமை காரணமாக அவள் தன் கற்பை இழக்கக்கூடிய நிலைக்குக்கூட வந்து விட்டாள் என்று தெரிந்தால் என் தாய் மனம் பதைக்கு மல்லவா! என் அருமைத் தாயை மீளாத் துயரில் ஆழ்த்த என் மனம் விரும்பவில்லை. ஆகவே........''

இச்சமயத்தில் நாங்கள் இருந்த குடிசைக் கதவின்மீது ஏதோ பொத்தென்று விழுந்த சப்தம் கேட்டது. தன் வரலாற்றைக் கூறிக்கொண்டு புவனசுந்தரி அதை நிறுத்திவிட்டு உடனே எழுந்து போய் மெல்லக் கதவைத் திறந்தாள். என்னமோ ஏதோ வென்று கலவரப்பட்டுக் கொண்டே நானும் என் இருக்கையை விட்டு எழுந்து அவள் பின்னே தொடர்ந்து சென்றேன். அவ்வாறு சென்ற

நான் வெளியே நோக்கியதும் பின்னடைந்தேன். பயத்தால் உடம்பு முழுதும் வியர்வை குபீரென்று அரும்பி வழிந்தன. என்னை யறியாது நான் நடுங்கினேன்! ஆ! அந் நடு இரவில் நான் கண்ட காட்சியை என்னென்பேன்! என்ன பயங்கரம்!

குடிசைக்கு எதிரே சிறிது தூரத்தில், ஒரு சிறுத்தைப் புலியும், கழுதைக் குறத்தியும் மிக உக்கிரமாகச் சண்டை செய்துகொண்டிருந்தன. மிருகங்களிடையே சண்டை யேற்பட்டால் காடு தூள் பறப்பதைச் சொல்லவும் வேண்டுமோ! எக்காரணத்தால் அவைகளிடையே சண்டை யுண்டாயிற்று என்பது நமக்கென்ன தெரியும்? வான வீதியில் வெள்ளிய சந்திரிகைகளைக் கக்கிக்கொண்டு பிரகாசிக்கும் சந்திரன் அந்நேரத்தில் உலகையே வெண்மை மயமாக ஆக்கிக்கொண்டிருந்தா னாதலால், காடாந்தகாரமான அம் மலைப் பிரதேசத்தில் நள்ளிரவு என்பதற்குரிய இருட்டு அடையாளம் சிறிதுமே இல்லாமல், பகல்போலக் காணப் பட்டது. ஆகையால், அம்மிருகங்கள் போடுஞ் சண்டை நன்றாகத் தெரிந்தது. கழுதைக் குறத்தி 'உர்' என்று பயங்கரமாக உறுமிக்கொண்டு முன் கைகளால் ஓங்கி அடிக்கும் அவ்வடி தன்மீது விழாதவாறு தடுத்துக்கொண்டு பின் பக்கமாகப் போய்ப் பதுங்கிச் சமயம் பார்த்து அக்கழுதைக் குறத்திமீது சிறுத்தைப்புலி பாய்ந்து தாக்கும். இவ்வாறு இவை ஒன்றையொன்று மோதித் தாக்கிப் பெரும்போர் செய்துகொண்டிருந்தன. இம்மலையில் எங்கோ ஓரிடத்தில் இம்மிருகங்களிடையே கலகம் நேரிட்டு ஒன்றை யொன்று அடித்துத் துரத்திக்கொண்டு வந்து நாங்கள் இருக்கும் இக் குடிசைக் கெதிரில் சில நிமிஷங்களாகச் சண்டை செய்து கொண்டிருந்ததாகத் தெரிந்தது. நான் இதற்கு முன் வன

வாசமோ மலைவாசமோ செய்ததில்லை யாகையால்—ஏன்? அப் பிரதேசங்களின் வழியாகக்கூடச் சென்றதில்லை யென்றே சொல்லவேண்டும்.—அவ்விடங்களில் சஞ்சாரஞ் செய்யும் மிருகங்களின் சுபாவங்களையும், அவ்வித மூர்க்கமான சண்டைகளையும் பார்த்ததில்லை. எனவே இச்சண்டை எனக்கு மிகவும் பயங்கரமாகக் காணப்பட்டது. அத்தோடு, அவைகளில் எதுவேனும் ஒரு மிருகம் எங்கள் மீது பாய்ந்து விடுமோ என்ற பயமும் எனக்கிருந்தது. எனவே, பெரும் பீதியால் சிறிது நேரம் என் கண்களைப் பொத்திக்கொண்டேன். இவ்வளவு நேரமும் குடிசைக் கதவோரத்தில் மறைந்திருந்தே நான் இக்கோரக் காட்சியைக் கண்டு கொண்டிருந்தேன். ஆனால், புவன சுந்தரியோ கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றவள் அம்மிருகங்கள் சண்டை செய்யுமிடத்துக்குச் சிறிது தூரத்தில் நின்று கொஞ்சமும் அச்சமின்றி அச் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். என்னே அப்பெண்ணின் வீரம்! 'அபலைகள்' 'மெல்லியலார்' என்று கூறப்படும் பெண்ணினத்தைச் சேர்ந்த புவனசுந்தரிக்குள்ள மனத்திண்மையும், தைரியமும், ஆண்மகனென்று சொல்லிக்கொள்ளும் எனக்கில்லையென்றால் அதைவிட வெட்கம் வேறு என்ன வேண்டியிருக்கிறது? அதிலும், யான் எனக் கேற்பட்ட காதல் ஏமாற்றத்தால், என் பெற்றோரைத் துறந்து, சுற்றத்தாரை நீங்கி, சமூகத்தை விடுத்து, நாட்டைவிட்டு ஓடி வந்து, உலகத்திலிருக்கவேண்டு மென்ற ஆசையையே அறவே ஒழித்து, பட்டினி கிடந்து எங்கேனும் உயிர்விடலாமென்று முயன்று கொண்டிருக்கும் நான் இம் மிருகங்களைக் கண்டு பயப்படுவதென்றால், அவை என்மீது பாய்ந்து பற்றி விழுங்கி விடுமென்று (இப்பாழுலகை விட்டுப் போவதற்கு எதிர்பாராதவாறு எளிதாகச் சமயம் வாய்த்ததென்று சந்தோஷப்

படுவதைவிட்டு) அஞ்சி நடுங்குவதென்றால்—அது பரிகசிக்கத் தக்கதல்லவா! அதற்கு எனது பலவீனத்தை (உடல் பலவீன மட்டு மன்று; உள்ளம் பலவீனமுங்கூட) நினைத்து வருந்தித் தலை குனிவதன்றி வேறு நான் என்ன செய்யமுடியும்! எனவே, இரண்டாம் முறையாக புவன சுந்தரியின் பெண்மை வீரத்தின்முன் என் ஆண்மையை இழந்து ஒடுங்கி நின்றேன். மேலே என்ன நிகழப்போகிறதோ? என்ற வியப்பும் அச்சமும் ஒருங்கே தோன்ற, புவன சுந்தரியையும், சண்டையிடும் மிருகங்களையும் மாறி மாறிப்பார்த்துக்கொண்டு (அப்போதும் அச்சத்தோடேயே) நின்றுகொண்டிருந்தேன்.

அம்மிருகங்களில் ஏதேனு மொன்று அவள் பக்கமாக பின்னுக்கு வாங்கிப் பதுங்கி வரும்போது கொஞ்சம் ஒதுங்கிச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அடிக்கடி இடம் பெயர்ந்து நின்று சண்டையைக் கவனித்துக்கொண்டிருந்தவள், திடீரென ஏதோ நினைத்துக்கொண்டவள் போலத் திரும்பி என்னைப் பார்த்தாள். அவ்வாறு பார்த்த வளவிலேயே எனது அச்சத்தையும், மனநிலையையும் ஒருவாறு உணர்ந்து கொண்டாள் என்றே நினைக்கிறேன். அடுத்த கணத்தில் அவள், தான் உடுத்தியிருந்த சேலையை வரிந்து இழுத்துக் கட்டிக்கொண்டு யாருடனோ யுத்தஞ் செய்வதற்குத் தயாராயிருப்பவள்போல் நின்றாள். இப்போது அவளது கம்பீரத் தோற்றத்தை நான் எவ்வாறு விவரித்துரைப்பேன்! குஸ்தி, குத்துச்சண்டை போடும் உஸ்தாத் ஒருவன் மைதானத்தில் எதிரி முன் வந்து நிற்கும்போது, அவனது தோள்களும், மார்பும் எவ்வாறு உருண்டு திரண்டு கரளை கரளையாக இருக்குமோ அதேபோன்று அவளது தோள்களும் பூரித்துத் தோன்றின. இச் சமயத்தில் கழுதைக்குறத்தி

யிடம் பலத்த அடிவாங்கிய சிறுத்தைப் புலி அதன் மீது பாய்ந்து ஓங்கியடிக்கும் நோக்கத்தோடு இவள் பக்க மாகப் பின்னுக்கு வாங்கிப் பம்மிப் பதுங்கியது. (மிருகங் கள் மிக மும்முரமாகச் சண்டையிடும்போது, மனிதர்



களோ மற்ற மிருகங்களோ இருப்பது அவைகளின் கண்களுக்குத் தோன்ருதது இயற்கைதானே!) இதுதான் தகுந்த சமயம் என்றெண்ணியவள்போல் புவனசுந்தரி தானிருந்த இடத்தினின்றும் ஒரு குதி குதித்துத் தாவிப் பாய்ந்து அச்



சிறுத்தைப் புலியின் நீண்ட வாலைக் கையால் பற்றிக் கரகர வென மேலே சுழற்றி அக் கழுதைக் குறத்தி மீது ஓங்கி அடித்தெறிந்தாள்.

அதைச் சிறிதும் எதிர்பாராத அச்சிறுத்தைப்புலி செய லற்று ராட்டினம்போல் சுழன்று இரத்தத்தைக் கக்கிக் கொண்டு கழுதைக்குறத்திமேல் விழுந்தது. இதனால் கழு தைக் குறத்தியும் வெகுண்டெழுந்து அயலார் யாரோவந்து விட்டார்களென்று உணர்ந்து புவனசுந்தரியைத் திரும்பிப் பார்த்து உறுமியவண்ணமே ஓட ஆரம்பித்தது. கீழே விழுந்த சிறுத்தைப்புலியும் சிறிது நேரத்திற்கெல்லாம் தன் னைச் சமாளித்துக்கொண்டு மேலும் அங்கு நின்றால் தனக்கு என்ன நேருமோ என்று பயந்துகொண்டு கழுதைக்குறத்தி யைப் பின் தொடர்ந்து ஓட்டம் பிடித்தது. சிறுத்தைப்புலி யைப் பற்றத் தாவிய வேகத்தில், சாதாரணமாகக் கோதி முடிந்திருந்த அவளது கூந்தல் கற்றை அவிழ்ந்து அலங் கோலமாகக் காற்றில் பறந்தன. எனவே, அவள் அச் சிறுத்தைப்புலியின் வாலைப்பற்றி மேலே சுழற்றியபோது 'இவள் என்ன காளிதேவியோ!' என்றே கருதவேண்டி யிருந்தது. பண்டைக்காலத்து வீரப் பெண்மணிகள் பலர் பல அருஞ்செயல்களைச் செய்ததாக வரலாறுகளின் வாயி லாகப் படித்திருக்கிறேன். ஆனால் புவன சுந்தரியைப் போன்ற வீரமகளை—அஞ்சாநெஞ்சம் படைத்த அணங்கை ஆபத்தை ஆனந்தத்தோடு வரவேற்று எதிர்த்து நிற்கும் ஆற்றல் வாய்ந்த நாரீமணியை-நான் இதுவரை பார்த்தது கிடையாது. அவளை வீரத்தின் உருவென்றே சொல்லுதல் வேண்டும். அம் மிருகங்கள் அவ் விடத்தைவிட்டு ஓடிய பிறகே நான் நன்றாக மூச்சுவிடலானேன். எனது அச்ச மும் நடுக்கமும் அப்போதுதான் என்னைவிட்டு அகன்றன. அம்மிருகங்கள் வெகுதூரம் ஓடிக் கண்ணுக்கு மறையும்

வரை அத்திக்கையே பார்த்துக்கொண்டிருந்த புவனசுந்தரி பின்னர் என் பக்கமாகத் திரும்பியவள், நான் மெய்க்கூச் செறிந்து நிற்பதையும், பெருமூச்சு விடுவதையுங் கண்டு கலகலவென நகைத்துக்கொண்டே என்னை நோக்கி வந்தாள். அப்பா! அச்சிரிப்பில் எவ்வளவு பொருள் அடங்கியிருந்தது? நானும் மிகவுஞ் சிரமப்பட்டுச் சிரிப்பை வருவித்துக்கொண்டேன்.

என் அசட்டுச் சிரிப்பை யுணர்ந்த புவனசுந்தரி, "தோழரே! மிருகங்களின் சண்டை எப்படியிருந்தது? இதைக் கண்டு நீர் பயப்பட்டீ ரல்லவா?" என்று கேட்டாள்.

எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. எனவே, வாய்திறவாது வாளாயிருந்தேன்.

---

## ஐந்தாவது அதிகாரம்

---

### படித்த மகளிரின் விபரீதப் போக்கு

ஆகவே, அவள், என்னைக் குடிசைக்குள் அழைத்துச் சென்ற வண்ணம், "இதெல்லாம் ஒன்றுமில்லை; நாய் பூனை சண்டைபோடுவது மாதிரிதான் இக்காட்டு மிருகங்களின் சண்டையும். இவைகளின் சண்டையைப் பார்ப்பதில் எனக்கு மிகவும் பிரியம். இதுபோன்ற சம்பவம் உமக்குப் புதிதல்லவா! அதனால் உமக்கு மன அதிர்ச்சி யேற்பட்டிருக்கலாம். அதிருக்கட்டும்; இப்போது பன்னிரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. நீர் சிறிது கண்ணுறங்கலாமல்லவா!" என்று வினவினள்.

எனக்குத் திடீரென்று ஏற்பட்ட இக் கலவரம் ஒன்று; ஏற்கனவே, புவனசுந்தரியின் வரலாற்றில் என் மனம் மிக

வும் ஈடுபட்டுவிட்டது மற்றொன்று; இக்காரணங்களால் எனக்குத் தூக்கத்தில் மனஞ் செல்லவில்லை. ஆகவே நான் மெதுவாக, "இன்னுங் கொஞ்ச நேரம் பேசிவிட்டு அப்புறம் படுத்துக்கொள்ளலாமே! எனக்கு இப்போது தூக்கமே வரவில்லை. உனக்குச் சிரமமாயிருந்தால் வேண்டுமானால்........" என்று இழுத்தேன்.

"என்ன எனக்கா சிரமம்?—சிரமம், சோம்பல், ஓய்வு, தூக்கம் என்னுஞ் சுகதுக்கங்களை யெல்லாம் தூர எறிந்து வெகு நாளாயின. கண்விழித்து வந்ததாலும், மிருகங்களின் சண்டையைக் கண்ட அச்சத்தாலும் உமக்குக் கஷ்டமாயிருக்கு மென்றெண்ணியே சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளுதல் நலமென்று சொன்னேனே யன்றி எனக்காக வன்று. நீர் பேசலாமென்று சொல்வதனால் நான் என் வரலாற்றை மேலுந் தொடர்ந்து கூற முற்படுகிறேன். எங்கு நிறுத்தினேன்?—ஆமாம்...........கலாசாலை வாழ்க்கை ஆரம்பத்தில் எனக்கு மிகவும் குதூகலத்தைத் தந்தது. எனக்கு சுதந்தர உலகில் உலவுவது போன்ற உணர்ச்சியே கலாசாலை வாழ்க்கையில் ஏற்பட்டது. மற்றப் பெண்களும், பெரும்பாலார் என்னை விடச் சுயேச்சையுலகில் உலவும் சுந்தரிகள் எனவே தங்களை நினைத்துக்கொண்டு திரிந்துவந்தனர். ஆனால் இக்கலாசாலை வாழ்க்கைதான் எனது பிற்காலச் சீர்கேட்டிற்கு முக்கிய காரணமாயிருந்தது என்றால் மிகைப்படுத்திக் கூறுவதாகாது. மாணவிகளில் பலர் தங்கள் இயற்கை சுபாவத்தைவிட்டு எவ்வாறு விபரீத உணர்ச்சியையும் செயலையும் மேற்கொள்ளுகிறார்கள் என்பதற்கு ஒரு சிறு உதாரணங் கூறுவேன்.

ஒருநாள் கலாசாலை முடிந்ததும் வழக்கம்போல் பந்தாடிவிட்டு, மெரினா கடற்கரைக்கு நானும், மற்றும் ஏழெட்டு மகளிரும் சேர்ந்து சென்றோம். மாலைக் காலம்

களில் மகிழ்ச்சியாகக் காலத்தைக் கழிக்கு மிடங்களுள் கடற்கரை யொன்றல்லவா! நாங்கள் இளம் பருவத்திற் கேற்ற குறும்புப் பேச்சுகளை ஒருவரோடொருவர் பேசிக் கொண்டும், கல கல வெனச் சிரித்துக்கொண்டும், கெக்கலி கொட்டிக்கொண்டும் போய் மணலில் வட்டமாக உட்கார்ந் தோம். பிளாட்பாரத்தின் வழியாக வரும்போதே எங்களை விடப் புருடர் பலர் பின் தொடர்ந்து வந்தனர். நாங்கள் மணலில் உட்கார்ந்ததும், அவர்களில் சிலர் எதிரே அமர்ந்து எங்களைப் பார்த்து விஷமமாகச் சைகை செய்தும், குறும் புத்தனமாகப் பேசிப் பகடியடித்துக் கொண்டுமிருந்தனர். மற்றுஞ் சில வாலிபர்கள் ஆங்காங்கே நின்று எங்கள் ஒவ் வொருவரையும் உற்று நோக்கித் தங்கள் கண்களாகிய அம்புகளைத் தொடுத்துக்கொண்டிருந்தனர். வேறு சிலர் எங் களைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

இங்ஙனம் தங்களைப் பார்த்து செல்வச் சீமான்களும் மற்றும் வாலிபர்களும் மயங்கித் தேனில் ஈக்கள் மொய்த் துக்கொள்வது போல் சூழ்ந்துகொண்டிருப்பதைக் கண்ட எங்களில் சில பெண்களுக்குப் பெருமித உணர்ச்சியும், அகம்பாவ வார்த்தைகளும் ஏற்படலாயின.

"What fools they are! Why they follow us? I think they are all semi-cracks'' ("என்ன முட்டாள்கள் இவர் கள்? நம்மையேன் இவர்கள் பின்தொடர்ந்து வருகிறார் கள்? இவர்கள் பிச்சுக்குட்டிகளா யிருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன்") என்று மிஸ் மார்கரெட் என்னும் ஆங்கிலோ இந்தியப் பெண் எங்களை வட்டமிடும் வாலிபர் களைச் சுட்டிக்காட்டிக் கூறி நகைத்தாள்.

ஸ்வர்ண குமாரி என்னும் மலையாளப் பெண்—தூ! 'ஷெமி கிராக்' காவது! களிமண்ணாவது! அதெல்லாம் ஒன்று

மில்லை. நம்மில் எந்தக் குட்டியாவது அவர்கள் 'ஹாட்டு பூட்டை'க் கண்டு மயங்கி வலையில் சிக்கமாட்டார்களா? என்று கருதியே வாயைப் பிளந்துகொண்டு பார்த்து வருகிறார்கள்.

இக்நாஷியஸ் ராஜம்மாள்.—ஐயோ பாவம்! நாமா அவர்கள் விரிக்கும் வலையில் சிக்குவது? அவ்வாடவர்களல்லவோ நம் வலையில் வந்து விழவேண்டும்.

மிருநாளினி:—சே! என்னடி என்னமோ fool மாதிரி உளறி வழிகிறாய்! அந்த brute களைப் பார்த்து நாம் தான் ஏன் love பண்ணனும்? நம் beautyயைக் கண்டு அந்த devils தான் ஏன் follow செய்யணும். அந்த dirty businessஸே நாம் think பண்ணக்கூடாது. Selfish gooseகளான அந்த ஆண்கள் வாடையே நம் side வீசக்கூடாது.

பாகீரதி (நகைத்துக்கொண்டே):—அதென்னடி நளினி! உனக்கு அந்த ஆடவர்கள்மீது அவ்வளவு கோபம்! நீ இவ்வளவு தூரம் வெறுப்புக்கொள்ளும்படி அவர்கள் என்ன செய்து விட்டார்கள்? ஒருவேளை நீ வைத்த குறியிலிருந்து எவ்வாலிபனாயினும் தப்பித்துக்கொண்டு உன்னை ஏமாற்றிச் சென்றுவிட்டானோ? என்ன!

ஸ்வர்ணகுமாரி:—சில நாட்களுக்கு முன்வரை தேவசுந்தரத்தோடு திரிந்தலைந்துகொண்டிருந்ததை மிருநாளினி இதற்குள் மறந்துவிட்டாள் போலும்!

தேவகி:—அது கிடக்கட்டும். மிருநாளினி கூறுவதை ஒருவிதத்தில் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆடவர் காற்று பட்டாலே நாம் அநியாயமாகக் கெட்டு விடுகிறோம். அவர்கள் சகவாசத்தால் நாம் எவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகிறோம் தெரியுமா? அவர்கள் முதலில் காட்டும் அன்பிலும் பேசும் ஆசை வார்த்தையிலும் எளிதில்

மயங்கிப் போய்விடுவது பெண்களாகிய நமக்கு இயற்கையாக இருக்கிறது. ஆடவர்கள் தங்கள் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள முயலும்போது நம்மைக் 'கண்ணே! பெண்ணே! மணியே!' என்றெல்லாம் கெஞ்சிக் கொஞ்சிக் கூத்தாடுகிறார்கள். அதற்கப்புறம் 'நாயே! பேயே! வேசையே!' என்று வாயில் வந்தவாறு வைது கேவலமாக நடத்துகிறார்கள். இது அவர்களிடஞ் சகஜமாய்க் காணப் படுகிறது. அவர்கள் நம்மினத்தை சேர்ந்த பெண்களைப் படுத்துங் கொடுமை சொல்லுந் தரத்ததன்று.

இக்நாஸியஸ் ராஜம்மாள்:—அதுமட்டுமா! அவ்வாடவர்கள் நம்மினத்தவராகிய பெண்களைத் தங்களுக்கு அடிமைகளென்றன்றோ நினைத்து அடக்கி யாளுகிறார்கள்?—

நல்லமுத்து:—அதுவாயினும் ஒருவாறு பொறுக்கக் கூடியதாயிருக்கிறது. இக்கொடிய ஆடவர் சேர்க்கையால் நம் மகளிர் வயிற்றில் மூட்டையன்றோ கட்டிக்கொள்ளுகிறார்கள்? (ஒரே சிரிப்பு) அம்மம்மா! ஒரு நாளா! ஒரு மாதமா! இரண்டு மாதமா! பத்து மாதங்கள்வரையல்லவோ அப்பளுவைத் தாங்கித் தொலைக்கவேண்டியிருக்கிறது. இப் பிள்ளைப்பேற்றைவிட கஷ்டமான காரியம் வேறொன்று இருக்க முடியாது என்றே துணிந்து சொல்வேன். இவ்வொரு காரணத்தைக்கொண்டே ஆடவர் கூட்டுறவை நாம் அறவே யொழிக்க வேண்டுமென்பது புலப்படுகிறதல்லவா!

இந்திராணி:—மீசைமுளைத்த இவ்வாடவர்களை விரும்பி விவாகத்தால் ஒன்று படாதிருந்தால் நாம் எப்போதும் பூவோடும் மஞ்சளோடும் சர்வாலங்கார பூஷிதைகளாய் வாழ்நாள் முழுதும் இருந்து இன்பமாய்ச் சுயேச்சையாகக் காலங் கழிக்கலாம்.

சுலோசனா:—ஆமாம்; ஆமாம், உண்மை. ஒருவனைக் காதலித்துக் கலியாணம் பண்ணிக்கொண்டதும், நம் சுயேச்சையே போய்விடுகிறது. கணவன் இறந்தால் மனைவி தாலியறுத்துவிட்டு மூலையில் போய்த்தான் முடங்கிக்கொள்ள வேண்டும். நல்லாடை யுடுத்தவும், திலகமிட்டுக் கொள்ளவும் கூட அப்புறம் பெண்களுக்கு உரிமை கிடையாது. ஆ! இதையெல்லாம் நினைக்கும்போது அந்தப் பாழும் ஆடவர்களையே ஏறெடுத்தும் பார்க்கக்கூடாது என்றுதான் தோன்றுகிறது.

மிஸ். மார்கரெட்:—"ஆண்மை ஒழிக! ஆடவர் கூட்டம் பூண்டோடு அழிக!" என்று ஆங்கிலத்தில் கத்தினாள்.

ஸ்வர்ணகுமாரி:—ஆமாம். ஆடவர் கூட்டம் அறவே ஒழிந்துவிட்டால் நம் பெண்ணுலகமும் அழிந்து ஒழிந்து தானே போகும்? நம் பெண்கள் வளர்ச்சிக்கு அவர்கள் தானே காரணம்?

பத்மாஸனி:—நம்மவர் காதலைப் பூர்த்தி செய்வதற்காக வாயினும், ஆடவர்கள் உதவி நமக்கு வேண்டியதாகத் தானே இருக்கிறது.

மிருநாளினி:— காத லுணர்ச்சியைத் தணிப்பதற்கு இவ்வாடவர்கள் உதவியைத்தானா நாடவேண்டும்? வேறு வழி இல்லையா? இன்ஜக்ஷன் செய்துகொள்ளுதலோ மருந்தை யுட்கொள்ளுதலோ முதலிய செயற்கை முறைகளைக் கையாண்டால் போகிறது? எந்த வழியிலும் ஆடவர்களைக் கட்டுப்பாடாக நாம் பகிஷ்கரிக்கவேண்டும். இங்குள்ள நாம் இன்றிருந்தே வைராக்கியஞ் செய்துகொள்ள வேண்டும்.

மிஸ். மார்கரெட்:—நம் சிநேகிதைகள் முதலியோரிடமும் இக்கொள்கையைப் பரவச் செய்யவேண்டும்.



ஸ்வர்ணகுமாரி:—அடி! அடி! இதோ பாருங்களடி! உங்கள் பேச்சை நிறுத்தங்களடி! நீங்கள் இவ்வளவு தூரம் தீவிரமாகப் பேசி ஆண்கள் உலகத்தையே எரித்துச் சாம்பலாக்கிவிடத் தீர்மானித்ததும், அதோ இருக்கும் அப்பயல்கள் உங்கள் பாதங்களின் அடியில் விழுந்து கெஞ்சப் போவதாகத் தெரியவில்லையே! உங்களை யெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு அவர்கள் அத்தனைபேரும், பாவம்! தெய்வமே யென்று பேசாமலிருக்கும் புவனவையன்றோ கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்? இதைக் கண்டு உங்களுக்குச் சிறிதும் வெட்க மில்லையா?

பத்மாஸனி:—புவனாவின் அதிர்ஷ்டம் யாருக்கு வரும்? எங்கு போனாலும் நமக்கெல்லாம் அவள்தான் ராணியாக விளங்குகிறாள். அவளால்தான் நமக்குக் கௌரவங் கிடைக்கிறது.

இராஜாம்பாள்:—புவனா ராஜ குடும்பத்தில் பிறக்க வேண்டியவள்.

பத்மாஸனி:—இப்போதுதான் என்ன? எவனேனும் அரசகுமாரன் இவளைத் தேடிக் கலியாணஞ் செய்துகொள்கிறான். இவள் ராணியாகப் போய்விட்டால் நம்மையெல்லாம் ஏறிட்டுக்கூடப் பார்க்கமாட்டாள்.

ஸ்வர்ண குமாரி:—"அதெல்லாம் இருக்கட்டுமடி, நாம் இவ்வளவு பேரிருக்க நம்மையெல்லாம் விட்டு புவனாவைத் தங்கள் கருத்துக்கிசைந்த காதலியாகத் தேர்ந்தெடுத்தார்களே! அவ்வாலிபர்களின் நுண்ணறிவை என்னென்பது!

சுலோசனா:—இதிலென்ன ஆச்சரியம்! தேனுள்ள இடத்தில் வண்டுகள் பறந்துவந்து மொய்ப்பது இயற்கைதானே!

எனது தோழிகளது பேச்சு, முடிவில் என் பக்கத்தில் திரும்பிப் பலமடைந்து வருவதைக் கண்டு என்னால் சகிக்க முடியவில்லை. எனவே நான் சிறிது பிணக்கத்தோடு, "சீ! தான் போங்களடி! உங்களுக்கு வேலை இல்லை; என்னைப் புரளி பண்ண ஆரம்பித்துவிட்டீர்கள். உங்கள் குறும்பு எப்போதும் போவதே இல்லை—நான் போகிறேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து வேகமாகப் பிளாட்பாரத்தை நோக்கி நடந்தேன். இதற்குள் பொழுது சாய்ந்துவிட்டதால், என் தோழிகளும் என்னைத் தொடர்ந்து வந்து விட்டார்கள். ஆனால் எனக்கு அச்சமயம் என் தோழிகளின் சம்பாஷணைகளை அர்த்தஞ் செய்துகொள்ள முடியவில்லை.

இப்போது அதை நன்முக உணர்கிறேன். இச்சம்பாஷணையைக் கேட்டதிலிருந்து தோழரே! நீங்களும் மாணவிகளின் விபரீத மனப்போக்கை நன்முக அறிந்து கொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன். இவ்விபரீத மனப்போக்கை ஒட்டியே இம்மகளிரது செயல்களும் வெகு விபரீதமாகக் காணப்பட்டது. மற்ற மாணவிகளைவிடக் கலாசாலை ஹாஸ்டல்களிலேயே தங்கி வாசிக்கும் பெண்களிடம் நவநாகரிகப் போக்கின் பயனுகவோ, சகவாச தோஷத்தாலோ விபரீத உணர்ச்சியும், செயல்களும் சகஜமாக இருந்தன. ஆடவர் சேர்க்கையை அருவருக்கும் இவ் 'அல்லிராணி'கள் எத்தனை விதமான இயற்கைக்கு மாமுன தீய செயல்களை மேற்கொண்டிருந்தவர்கள் தெரியுமா! சில சமயங்களில் தற்செயலாக நான் சில மகளிர் இப்பொருந்தாச் செயல்களில் ஈடுபட்டிருந்ததைப் பார்க்க நேர்ந்தது. அவ்வாபாசக் காட்சிகளைக் கண்டு என் கண்கள் கூசியதைக் காட்டிலும், மனம் அதிகமாகக் கூசியது. அப்பா! எவ்வளவு அருவருப்பான காரியம்! அதை என்னென்று விவரிப்பது; அவற்றை நினைத்தாலே உள்ளம் நடுங்குகிறது. இயற்கைக்கு மாமுன இக்கெட்ட பழக்கம் படித்த பெண்களிடையே பரவி வருமானல் வெகு விரைவில் ஜனசமூகம் பெரிதும் பாதகமடையும் என்பது திண்ணம். பின்னே என்னைப் பெரிய படுகுழியில் தள்ளுவதற்காக வேண்டியே போலும்! இறைவன் என்னை இளமையில் இவ்விதக் கெட்ட பழக்கங்களிலெல்லாம் ஈடுபடுத்தவில்லை என்று நினைக்கிறேன். இயற்கை நெறியில் ஏறுமாருகப்போய்க் கெட்டலைய வைத்தாலும், செயற்கைச் சேற்றில் வீழ்த்தாததற்காக அவ்வாண்டவனுக்குத் துதி கூறுகிறேன்.

# ஆருவது அதிகாரம்

## ஆடவர் சிநேகமும், ஆபத்தும்

அது கிடக்க; கிறிஸ்துவ மகளிர் கலாசாலையில் வாசித்து வந்த நான் இண்டர்மீடியட் பரீக்ஷையில் தேர்ச்சி யடைந்ததும், பி. ஏ. வகுப்பு மாறலானேன். பி. ஏ. கோர்ஸுக்கு உபபாடமாக (Optional) ஸயன்ஸ் எடுத்துக் கொண்டதால் அதற்கு வசதியாக இராஜதானி கலாசாலை யில் சேர்ந்து வாசித்து வந்தேன். அக் கலாசாலையில் என் போன்று நாலைந்து பெண்கள் தவிர, மற்றவர்களெல்லாம் ஆடவர்களே நிறைந்திருந்தனர். அதிலும் அங்கு ஜமீன் தார் குமாரர்களும், சமஸ்தானாதிபதிகள் புதல்வர்களும், அரச குடும்பத்தைச்சேர்ந்த பிள்ளைகளுமே அதிகமாக இருந் தனர். பெண்களாகிய நாங்கள் உட்காருவதற்கென்று தனி இடம் ஏற்படுத்தியிருந்தாலும், முதலில் எனக்குச் சிறிது நாணமாகவே இருந்தது. வகுப்பில் உட்கார்ந்து பாடத்தைக் கவனிக்கும்போது தலைகுனிந்த வண்ணமே இருந்தேன். இதனால் நான் ஆரம்ப ஆங்கிலப் பாடசாலையில் பரிகசிக்கப் பட்டதுபோலவே, இங்குள்ள மாணவர் சில ரால் மறைமுகமாகப் பரிகசிக்கப்பட்டேன். ஏனென்றால் பகிரங்கமாகப் பரிகசிக்க முடியாதல்லவா!

ஒருநாள் காலை 11-30 மணிக்கு நான் ஒரு வகுப்பை விட்டு மற்றொரு வகுப்புக்குப் போய்க்கொண்டிருந்தேன். நான் எதிர்பாராத வகையில் என்னை யாரோ மோதுவது போல் உராய்ந்து செல்வது அறிந்து திடுக்கிட்டு நின்று திரும்பிப் பார்த்தேன்.

"Sorry, please excuse me" (தெரியாது மேலே உராய்ந்துவிட்டேன்; மன்னிக்கவும்) என்றார் என்னைக் கடந்து சென்றவர்.

"Never mind" (அதுபற்றிப் பாதகமில்லை) என்று சொல்லிய வண்ணம் அவ் வாசாமியை ஏறிட்டுப் பார்த்த நான் ஆச்சரியத்தால் "Oh! John, you are here?" ஓ! ஜான், நீ இங்கேயே வாசிக்கிறாய்) என்று வாய்விட்டுக் கூறினேன்.

"Yes Buvana," (ஆமாம்; புவனா) என்று புன்னகை செய்துகொண்டே கூறினான். அவன் முகத்தில் இளமையிலிருந்த குறும்புப் பார்வை இன்னும் இருந்துகொண்டிருந்தது. அவன் ஆரம்ப ஆங்கிலப் பாடசாலையைவிட்டு நின்றதற்கப்புறம், நான் அவனை நாலைந்து முறைதான் பார்த்திருக்கிறேன். மிஸ் கிரேஸ் மட்டும் என்னை அடிக்கடி பார்த்துச் செல்வாள். அன்று நாங்கள் ஒருவரை யொருவர் யோகக்ஷேமம் விசாரித்துக்கொண்டு சில நிமிஷங்களுக்கெல்லாம் பிரிந்தோம்.

ஜானோடு பேசியதிலிருந்து, அவன் அக் கலாசாலையில் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் வாசிப்பதாக அறிந்தேன். அன்றிலிருந்து எங்களது இளம்பருவச் சிநேகம் மீண்டும் நெருக்கமாகி வளர்ந்து வந்தது. என் வகுப்பில் வாசிக்கும் மற்றுஞ் சில மாணவர்களும் நாளடைவில் எனக்குச் சிநேகமாயினர். நான் விரும்பாதிருக்கையிலேயே அவர்கள் என்னிடம் வலிய வந்து நட்புகொள்ளலாயினர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஸ்ரீ ரஞ்சனி, கமலாதேவி ஆகிய பெண்களும், தாமோதரன், ஸ்ரீனிவாசன், கிருஷ்ணமூர்த்தி சத்தியநாதன் முதலியவர்களுமாவர்.

என்னிடஞ் சிநேகங் கொண்டவர்களெல்லாம் ஒவ்வொருவிதமான குணமுடையவர்களாயிருந்தனர். சிலரது

ஆடம்பரச் செயலும், அகம்பாவப் பேச்சும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் தாக்ஷண்யங் கருதி அவரவர்களுக் கேற்றவாறு நடந்து வந்தேன். அவர்களில் சிலர் எனக்குப் பாட்மிண்டன், டென்னிஸ் முதலிய பந்தாட்டச் சகாக்களாகவும் அமைந்திருந்தனர். ஆகவே, மாலை வேளைகளில் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு ஒவ்வொருவரோடு பொழுது போக்காக வெளியே உறவி வருவது வழக்கமாகப் போய்விட்டது. ஜான் கில்பர்ட்தான் அடிக்கடி வந்து என்னை எங்காயினும் அழைத்துக்கொண்டு போய்விடுவான். அடுத்தபடியாக, ஸ்ரீநிவாஸன் என்னிடம் அதிக உரிமை பாராட்டி வந்தான். கலாசாலை ஆசிரியர்களில் சிலரும் என்னிடஞ் சிரத்தை கொண்டவர்போலக் காட்டிக்கொண்டு அடிக்கடி பேசி வந்தனர். பொதுவாக அனைவரும் என் மனதை வசீகரிக்கச் செய்யவே முயன்று வந்தனர் என்று வெகு நாளைக்குப் பின்னர் எனக்குத் தெரிந்தது. இதிலிருந்து, அவர்கள் நோக்கம் என்னவாயிருக்குமென்று உலக அனுபவம் வாய்ந்தவராகிய நீர் அறிந்து கொண்டிருப்பீர்.

* * * * *

செனெட் மண்டபத்தில் சர்வ கலா சங்கச் சார்பில் ஸையன்ஸ் சம்பந்தமாக நான்கு உபன்யாசங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அலிகார் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த புரொபஸர் டாக்டர் டேவிட்ஸன் என்பார் உபந்நியாசகராயிருந்தார். நான் வாசிக்கும் கலாசாலையிலிருந்து மாணவர்கள் பலரும், ஆசிரியர்களும் அவ்வுபந்நியாசங்களுக்குச் சென்று கேட்டு வந்தோம். மூன்றும் நாள் உபந்நியாசத்தைக் கேட்டு முடிந்ததும் எல்லோரும் மண்டபத்தை விட்டு வெளியே வந்தோம். நான் என் மோட்டார் வந்திருக்கிறதா என்று சுற்று முற்றும் பார்த்தேன். இன்னும் வர

வில்லை. ஆகவே, நான் சில நிமிஷங்கள் தங்கி நின்றுகொண்டிருந்தேன். இதைக் கண்ட எங்கள் கலாசாலை கணித ஆசிரியர் சம்பத் ஐயங்கார் என்னிடம் அணுகி, "என்ன புவனு? சுற்று முற்றும் பார்த்து நின்றுகொண்டிருக்கிருய். உன் மோட்டார் வரவில்லையா? இந்நேரம் வந்து காத்திருக்குமே! வேறு எங்கேனும் போயிருக்கிறதோ என்னவோ!- (தன் கை கடியாரத்தைப் பார்த்துவிட்டு) மணி எட்டடிக்கப் போகிறது! இந்நேரத்தில் இங்கு வீணுகக் காத்திருப்பது சரியல்ல. என் காரில் ஏறிக்கொள். உன்னைப் பங்களாவில் விட்டுச் செல்கிறேன். இங்கு பியூனிடம் சொல்லிவிட்டுச் சென்ருல், டிரைவர் ஒருவேளை காரைக் கொண்டு வந்தாலும் தகவல் சொல்லி யனுப்பிவிடுவான். வா; நாம் போகலாம்" என்று சொல்லி யழைத்தார்.

நான், "வந்தனம், தங்களுக்குச் சிரமம் வேண்டியதில்லை, மோட்டார் இன்னுஞ் சில விநாடிகளில் வந்துவிடலாம். நான் போகிறேன்—" என்று பணிவோடு பதிலளித்தேன்.

புரொபஸர் சம்பத், "இதில் எனக்கென்ன சிரமம்? அதெல்லாம் ஒன்றுமில்லை உன் மோட்டார் வருவதாயிருந்தால் இந்நேரம் வந்திருக்கும். ஏதேனும் அசந்தர்ப்பம் நேர்ந்திருக்குமென்று நினைக்கிறேன். அதனுல் யோசிக்காதே. காரில் ஏறி உட்கார்" என்று மிகவும் வற்புறுத்திக் கூறினுர்!

அதற்குமேல் அவர் சொல்வதை மறுக்க எனக்குத் துணிவேற்படவில்லை. ஒன்றும் பேசாமல் அவர் காரில் ஏறி உட்கார்ந்தேன். அவரும் என் பக்கத்தில் வந்து அமர்ந்து மோட்டாரை ஓட்டலானுர். கார் கடற்கரைப் பக்கமாகவே மிக வேகத்தோடு சென்றது. மோட்டார் சென்தோம் சர்ச்சை யணுகியதும் டிராம் ரோட் வழியாக மேற்கே

திரும்பாமல் தெற்குப் பக்கமாகவே ஓடியது. சிறிது நேரம் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பின்னர் துணிந்து, "ஏன் இப்பக்கமாகக் காரை ஓட்டுகிறீர்கள்? தேனும்பேட்டைக்கு அப்படியே யல்லவா போயிருக்க வேண்டும்" என்று கேட்டேன்.

"இ....ல்....லை........" என்று அவர் இழுத்த வண்ணம் என்னிடம் நெருங்கி நெருங்கி வந்தார். இதற்குள் கார் தெற்குக் கோடியை யடைந்துவிட்டது. இன்னும் சிறிது தூரம் சென்று திரும்பினால் அடையாறு வாராவதியைச் சேர்ந்து விடலாம். ஆனால் கார் மேலே செல்லாமல் கோடியிலேயே நின்றுவிட்டது. அங்கு ஜன நடமாட்டமே இல்லை. ஏதோ ஒன்றிரண்டு, மோட்டார்கள் ஓடிக்கொண்டிருந்தன. காரை நிறுத்தியதும் புரொபஸர் சம்பத் என்னை மிகவும் நெருங்கி வந்தார். நான் அந்தப் பக்கமே எப்போதுஞ் சென்றதில்லை யாகையால், காரிருள் சூழ்ந்து ஒரே இருட்டாக இருந்த நிசப்தமான அவ்விடத்தைக் கண்டதும் என் மனம் மிகவும் அச்சங்கொண்டது. அதோடு புரொபஸர் சம்பத்தின் விபரீதச் செயல் என்னை மேலும் பீதியை அடையச் செய்தது. எனவே, நான் தடுமாற்றத்தோடு, "இங்கு ஏன் காரை நிறுத்தினீர்கள் சார்! மணியாய் விட்டதே! வீட்டில் தேடுவார்களே" என்று கூறினேன்.

புரொபஸர் சம்பத் ஏதோ சொல்லப் பலமுறை முயன்றார். ஆனால் அவரால் பேச முடியவில்லை என்று குறிப்பால் அறிந்தேன், ஏதோ தீவிரமான உணர்ச்சியால் உந்தப்பட்டு அவர் உன்மத்தங்கொண்டவர்போலக் காணப்பட்டார். அவர் முகம் பெரிதும் மாறுதலடைந்து பார்க்கப் பயங்கரமாக இருந்தது. என்னை மிகவும் நெருங்கி நெருங்கி வந்த அவர் மிகவும் பிரயாசையோடு, "நாம் இங்கு சிறிது

நேரம்..............." என்று கூறியவர் மேலே பேச்மாட்டாது தன் இரு கைகளையும் ஒருவிதயாக நீட்டி வளைத்துக் கொண்டு என்னைத் தாவிப் பிடிக்க வந்தார். இவரது இவ் விபரீத நடத்தையைக் கண்டதும் நான் உட்கார்ந்த இடத்தினின்றும் ஒரு துள்ளுத் துள்ளி "ஆ!" என்று அலறினேன்.

நான் பயத்தால் வாய்விட்டு அலறிப் பின்னடைந்தும், அவ்வெறியன் (இத்தகையோரை எவ்வாறு ஆசிரியரென மரியாதையாக அழைப்பது?) அதைப் பொருட் படுத்தவில்லை. அக்காதகன் என்னைச் சேர்த்துக் கட்டிப்பிடிக்கும் எண்ணத்தோடு கைகளை விகாரமாக நீட்டிக் கொண்டே மிகவும் நெருங்கிவிட்டான். இன்னும் ஒரு விநாடிக்குள் என்னைப் பற்றிவிடுவான்.

அவன் என்னிடம் நெருங்கி வர வர, நான் பின்னுக்கு நகர்ந்து நகர்ந்து போய்க்கொண்டே தலையை நிமிர்த்தி, வளைத்து வெளியே நீட்டினேன். எனக்கும் அவனுக்குமிடையே ஒரு அங்குல இடங்கூட இல்லை. இன்னும் அவன் சிறிது நகர்ந்து வந்திருப்பானுனல், நான் தலை கீழாகக் குப்புற வெளியே நழுவி விழுந்திருக்க வேண்டியது தான். 'ஐயோ நான் என்ன செய்வேன்! இப்பாதகன் என்னைப் பற்ற வருகிருனே! எதற்காக என்மீது ஆவேசமாகத் தாவுகிருன்? நான் அணிந்திருக்கும் வைர நகைகளையும், பொன் ஆபரணங்களையும் கவர்ந்துகொள்வதற்கா? அவைகளில் எவற்றை வேண்டுமாயினும் என்னைக் கேட்டால் கொடுத்திருப்பேனே! கல்வி யறிவுடைய இம்மனிதன் என்னைத் துன்புறுத்திப் பெறவா முயலவேண்டும்? நான் அணிந்திருக்கும் நகைகளை யெல்லாம் கழற்றிக் கொடுத்து விடுவதாகச் சொன்னுல் என்னைத் துன்புறுத்தாமல் விட்டு விடுகிருனு என்று அவனைக் கேட்டுத் தான்

பார்ப்போமே' என்று பலவாறு எண்ணி என் கருத்தை அவனுக்குத் தெரிவிக்க வாயெடுத்தேன். என்ன சிரிக்கிறீர் தோழரே! என் அறியாமையைக் கண்டு உமக்கு நகைப் புண்டாகிறது போலும்! புரொபஸர் சம்பத்தின் நோக்கத்தைத் தெரிந்துகொள்ள அப்போது எனக்கு உண்மையிலேயே அறிவாற்றலில்லை. எனக்குப் பதினெட்டு வயதுக்கு மேலாகியும் உலகானுபவம் சற்றும் ஏற்படாமலே இருந்தது. என் பெற்றோர்கள் என்னை உலகம் இன்னதென்று அறிந்துகொள்ள முடியாதவாறு அவ்வளவு அருமையாக வளர்த்தார்கள்.—இதற்குள் அம் மூர்க்கன் என்னைப் பற்றிவிட்டான். எனினும், அப்பிடிப்பு மிகவும் தளர்ந்திருந்தது. என்னைப் பிடித்த கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

அத்தடியன் கைகள் என்மீது பட்டதோ இல்லையோ எனக்கு எங்கிருந்தோ ஒருவித ஆவேச உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இதனிடையே என்னைப் பிடித்திருந்த அச்சம் இருந்த இடம் தெரியாமல் ஓடியொளிந்தது. உடனே ஒரே மூர்த்தன்யமாய் என்னைப்பற்றிய கைகளை உதறித் தள்ளிவிட்டு அவனைப் பிடித்து ஒரு உந்து உந்தித் தள்ளினேன். நசைப்பொறி தாங்கிய அத்தடியன் அப்படியே ஹாரினை இடித்துக்கொண்டு அம் மூலையில் விழுந்தான். நான் ஒரு கணமும் தாமதியாது அக்காரின் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கி ஓட்டமெடுத்தேன்.

சிறிது தொலைவுதான் ஓடியிருப்பேன். பின்னால் தடதடவென்று யாரோ ஓடிவரும் சப்தங்கேட்டது. திகிலோடு திரும்பிப் பார்த்தேன். வெறிபிடித்த அம்மடையனே என்னைப் பிடிக்கப் பின்தொடர்ந்து ஓடி வந்துகொண்டிருந்தான். எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை.

'இச்சனியன் என்னை எளிதில் விடமாட்டான் போலிருக்கிறதே! இப்பேயனிடமிருந்து நான் எவ்வாறு தப்புவது?' என்ற சிந்தனையோடு திகைத்து நின்றுவிட்டேன். அவனும் என்னை அணுகி விட்டான். எனவே, நான் கோபமாக "உனக்கு நான் அணிந்திருக்கும் நகைகள் தானே வேண்டும்?..........."என்றேன்.

"ஆ..........ஹ........ஹா! நகைகளா? நீ அணிந்திருக்கும் ஆபரணங்களுக்காகவா உன்னை அழைத்து வந்தேன்? பேஷ்' என்று அக்காதகன் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டே வந்தான்.

"பின் என்ன வேண்டும்? எதற்காக என்னை இங்கு இவ்விருட்டில் அழைத்து வந்தாய்?" என்று மிகவும் ஆத்திரத்தோடு கேட்டேன்.

புரொபஸர் சம்பத் குரங்குபோல் பல்லை யிளித்துக் காட்டி, "நீ கோபமாக இருப்பதும் அழகாகத்தான் இருக்கிறது. நான் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா? கண்ணே! அவ்வளவு சிறிய குழந்தையா நீ! இதோ பார்! என் விருப்பத்தைப் பூர்த்தி செய்தால் உன்னைப் பி. ஏ. பரீக்ஷையில் மாகாணத்துக்கே முதல் வகுப்பில் தேறும்படிச் செய்து வைப்பேன். அது மட்டுமா! உனக்கு என்னென்ன நன்மைசெய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் அவ்வப்போது செய்வேன்! ஒரு பெரிய கலாசாலைக்கு ஆசிரியையாக்கி வைப்பேன்!.... ..........." என்று அடுக்கிக்கொண்டே போய் என்னை நெருங்கி வந்தான்.

எனக்கோ கோபம் உச்ச நிலையை யடைந்தது. "என்ன! ஏதேதோ உளறிக்கொட்டிக்கொண்டே என்னை நெருங்குகிறாய்? மரியாதையாக என்னை விட்டுப் போய்

விடு. இல்லையாயின் உனக்குத் தகுந்த புத்தி கற்பிப்பேன்," என்று கூறிய வண்ணம் பின் வாங்கி நின்றேன்.

"உன் மதிவதனந்தான் என்னை உளறி வழிய வைக்கிறது புவனு! ஏதோ ஒரு முத்தம் கொடுத்துவிடு. நான் போய்விடுகிறேன். இல்லாவிட்டால் உன் பாதத்தடியிலேயே விழுந்து உயிரை விட்டுவிடுவேன். அப்புறம் நீ தான் பழிகாரியாகிவிடுவாய்" என்று சம்பத் வாயில் வந்தவாறு பிதற்றி மீண்டும் என்மீது பாய்ந்தான்.

அச்சமயம் எனக்குண்டான தீவிர உணர்ச்சியை என்னென்பேன்! நான் என் கைகளை நன்ருக மடக்கிக்கொண்டு என்னைப் பற்ற வந்த புரொபஸரை ஓங்கி ஒரு குத்து விட்டேன். குத்து பலமாக விழுந்தும் சம்பத் ஐயங்கார் அதைப் பொருட்படுத்தாமல் "நீ யடிக்காது என்னை வேறு யார் அடிக்கப்போகிருர்கள்? மல்லிகைச் செண்டால் அடிப்பது போலவன்ருே இருக்கிறது; நீ குத்திய குத்து?" என்று என் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கொஞ்சத் தொடங்கினன்.

நான் அவன் கைப்பிடியினின்றும் விடுபட முயன்றேன். என்உடம்பைப் பலவிதமாக வளைத்துத்திமிறினேன். என் பலத்தையெல்லாம் உபயோகித்துப் பார்த்தேன். ஆத்திரத்தால் அவன் முகத்தில் காறி யுமிழ்ந்தேன். கரங்களால் மாறி மாறி யுதைத்தேன். இம்முறை அவன் சிறிது திடசித்தத்தோடேயே இருந்தாஞதலால், இதற்கெல்லாம் அவன் தளர்ச்சி யடையவில்லை. அவன் பிடித்தபிடி குரங்குப்பிடியாகவே இருந்தது. பார்த்தேன்; அவனிடம் இதமாகப் பேசியே தப்பித்துச் செல்ல வேண்டுமென்று தீர்மானித்தேன். எனவே, நான் புரொபஸரை நோக்கி "சார்! நீங்கள் என்னிடம் வைத்திருக்கும் அன்பை இப்போதுதான்

அறிந்தேன். உங்கள் விருப்பப்படி இனி நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். என்னை விடுங்கள்" என்று சாகஸமாகப் பேசினேன்.

அம் முட்டாள் நான் கூறியதை உண்மையென்றே எண்ணிவிட்டான். நான் மனம் மாறி அவன் கருத்துக் கிசைந்து விட்டதாகக்களித்து, "ஆ! இப்போதுதான் நீ என் ராஜாத்தி! என்ன இருந்தாலும் நீ புத்திசாலியல்லவா!—வா! சற்று நேரம் இங்கு உல்லாசமாகக் காலங் கழித்துவிட்டுச் செல்லலாம்" என்று கூறிக்கொண்டே என் கைகளைப் பிடித்த பிடியைத் தளர்த்தினன்.

சமயம் பார்த்துக்கொண்டிருந்த நான் உடனே என் கரங்களை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு சிறிது நகர்ந்து நின்று என் பலத்தையெல்லாம் உபயோகித்து அம்மனிதன் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வேகமாகக் கீழே தள்ளினேன். இதைச் சிறிதும் எதிர்பாராத அத்துரோகி பத்தடி தூரத்துக்கப்பால் போய் கைகால்களையெல்லாம் பரப்பிக் கொண்டு மல்லாந்த வண்ணம் விழுந்தான். விழுந்த வேகத்தில் கைகால்களெல்லாம் தேய்ந்து காயம் கூட ஏற்பட்டிருக்கலாம். அதற்கப்புறம் நான் சிறிதும் தாமதியாது, மீண்டும் தலைதெறிக்க வெகு வேகமாக ஓடினேன். ஏனென்றால் அவன் முன்போல் எங்கு மறுபடியும் என்னைத் துரத்திக் கொண்டு ஓடிவருவானோ என்ற பயமேயாகும். அவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்திருப்பதற்குச் சிறிது நேரம் பிடிக்கும் என்ற துணிவும் ஒரு பக்கம் இருந்தது. ஆயினும், ஓட்டத்தைத் தளர்த்தவில்லை. எப்பக்கம் போகிறேனென்பது எனக்கே தெரியவில்லை. மூளை குழம்பியுள்ள அந்நிலையில் எனக்குத் திக்குத்திசை தோன்றவில்லை. மேலும் அப்பக்கமாக நான் எப்போதும் வந்ததில்லை. எங்கு போனு

ஊஞ் சரிதான். இப் பாதகன் இருக்குமிடத்தை நீங்கிக் கண்ணைவிட்டு மறைந்தால் போதுமென்று இருந்தது.

நான் ஓடும்போது திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே தான் சென்றேன். இவ்வாறு ஐந்தாறு நிமிடங்கள் ஓடி யிருப்பேன். என் எதிரே குதிரையின் காலடி யோசை வருவது கேட்டுத் திடுக்கிட்டு ஒதுங்கி நின்றேன்.



அதற்குள் குதிரை என்னருகே வந்துவிட்டது. அதில் ஒரு வாலிபன் ஏறியிருந்தான். அவன் உடை முதலியவற்றையும், குதிரையையும் பார்க்கும்போது போலீஸ் இலாகாவில் சம்பந்தப்பட்ட ஒரு ஆங்கிலேயன் போல் காணப்பட்டது.

நான் நடுக்கத்தோடு ஒதுங்கி நிற்பதைக் கண்டு சம்சயித்தோ என்னவோ, அவ்வாலிபன் குதிரையை நிறுத்தி



விட்டு தன் தலையிலணிந்திருந்த தொப்பி (Hat) யைக் கையி லெடுத்துக் கொண்டு குனிந்து என்னைக் கூர்ந்து நோக்கிய வண்ணம், "யாரது! இந்நேரத்தில் இங்கு தனியே எதற்காக நின்று கொண்டிருக்கிறாய்?" என்று ஆங்கிலத்தில் அமர்த் தலோடு கேட்டான். இவனது குரல் எனக்கு அறிமுக மான யாரோ ஒருவருடைய குரல்போல் தோன்றியது. ஆனால் இச்சமயத்தில் அது யாருடையதென்று திட்டமாக நிர்ணயிக்க முடியவில்லை. மேல் அவ்விருட்டில் அவனது முகம் எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எனவே, நான் அவன் கேள்விக்குப் பதில் சொல்லாது மெல்ல நகர லானேன்.

எனது மௌனத்தையும் செயலையும் கண்ட அவ்வாங்கி லேயன் உடனே குதிரையை விட்டுக் குதித்து என் அருகே விரைந்து வந்தான். எனக்கு இதற்கு முன் ஏற்பட்ட பயத் தைக் காட்டிலும் இப்போது மிகுந்த அச்சம் உண்டா யிற்று. சூடுண்ட பூனையல்லவா! இவ்வெள்ளை வாலிபன் தனியாயிருக்கும் என்னை என்ன செய்வானோ என்று மனங் கலங்குவது இயற்கைதானே! எனவே, நான் சிறிது அடி யெடுத்து நடந்தேன். அவன் என்னை யணுகி ஏதேனும் துன்புறுத்த முயன்றால், உரக்கக் கூக்குரலிட்டுப் பிறர் உத வியை நாடவுந் தீர்மானித்தேன். இவ்வளவு தூரம் ஆயத்த மாக இருந்து நான் நடந்துகொண்டிருக்கையில், குதிரை யில் ஏறிவந்த வாலிபன் எனக்கு முன்னே நடந்து வந்து வழிமறித்து நின்று என்னைக் கூர்ந்து நோக்கினான். நான் நடப்பதை விட்டுத் தலை குனிந்து நின்றேன். அடுத்த கணம் அவ்வாலிபன் ஆச்சரியத்தால் துள்ளிக் குதித்து, "புவனா நீயா? இதென்ன கோலம்! இந்நேரத்தில் எங்கே தனியாகச் சென்று விட்டு ஓட்டமும் நடையுமாக ஓடி வருகிறாய்!

மணி ஒன்பதுக்கு மேலாகி விட்டதே'..........." என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

என் மனந் துணுக்குற்றது. நான் யாரென அறிந்து பெயரிட்டு அழைத்த அவ்வாலிபன் யாரென ஏறிட்டுப் பார்த்தேன். நான் நினைத்தது சரியே! அவ்வாலிபன் வேறு யாரு மல்லன்; ஜான் கில்பர்ட் என்னும் பெயருடைய எனது நண்பனே யாவன். "ஆ! கில்பர்ட்! நல்ல சமயத் தில் நீ எதிர்ப்பட்டாய்; வேறு யாரோ என்றெண்ணி யல் லவோ பயந்து போனேன்!..........." என்று நாத் தழுதழுப் பக் கூறினேன். என்னை யறியாது என் கண்களிலிருந்து நீர் ஆருகப் பெருகி வழிந்தது.

இக்காட்சியைக் கண்ட ஜான் உண்மையிலேயே மனம் பதறிப் போய்விட்டான். "என்ன சமாசாரம்! ஏன் கண் கலங்குகிருய்? விஷயத்தைச் சொல்; சீக்கிரம்" என்று மிகவும் படபடப்போடு கேட்டான்.

நான் நடந்த சம்பவம் முழுவதையும் அவனிடம் விவ ரித்துக் கூறினேன். ஜான் கோபத்தால் கொதித் தெழுந் தான். அப்போதே புரொபஸர் சம்பத்தைக் கண்டுபிடித்து அவனைத் தக்கபடி தண்டித்துப் புத்தி கற்பிக்க வேண்டு மென்று கூறி, அவன் விழுந்திருக்கும் இடத்தைக் காட்டும் படி என்னை யழைத்தான்.

நான் புரொபஸர் சம்பத்தைத் தண்டிப்பது பற்றிப் பின்னர் கவனிக்கலாமென்றும், மிகவும் நேரமாய்விட்ட படியால் முன்னர் பங்களாவுக்குச் செல்லுவதற்கு வழி செய்யவேண்டும் என்றும் கூறினேன். ஜான் என்னைக் குதிரைமீது ஏறி யுட்காரும்படிக் கூறினுன். எனக்குக் குதிரைமீது சவாரி செய்து பழக்கமில்லை யாதலாலும், சிநே கனே யாயினும் ஜான் வாலிபனுதலால், அவனேடு சவாரி

செய்வது தகுதி யல்லவே என்ற எண்ணத்தாலும் சிறிது தயங்கி நின்றேன். இதை விட்டாலும் வேறு வழியில்லையே என்று யோசித்தேன். இதற்குள் கில்பர்ட் என்னைக் கை கொடுத்துத் தூக்கிக் குதிரைமீது போடப்பட்டுத் தொங்க விடப்பட்டிருந்த அங்கவடியின்மேல் காலைவைத்து ஏறி யுட்காரும்படி செய்தான். அவன் என்னைக் குழந்தைபோல் பற்றித் தூக்கும்போது, திடீரென்று மின்சார சக்தி தாக்குண்டு தேக முழுவதும் பரவுவது போன்ற ஒருவித உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. பின்னர் அவனும் ஏறி என் பின்னர் அமர்ந்து குதிரையின் கடிவாளத்தைப் பற்றிக்கொண்டு அதன் வயிற்றைக் கால்களால் இடுக்கி ஊக்கி ஓட்டினான். குதிரை மிக வேகமாக ஓடியது. அது ஓடிய வேகத்தில் முன்னே உட்கார்ந்திருந்த நான் எழும்பிக் குதித்து கில்பர்ட்டின்மீது சாய்ந்தேன். அவன் நான் அசைந் தாடாதவாறு என்னைத் தன் மார்பின்மீது சார்த்திய வண்ணம் இரு கைகளாலும் அணைத்துக்கொண்டு குதிரையை ஊக்கிச் செலுத்திக் கொண்டிருந்தான். இந்நிலையில் செல்வது முதலில் எனக்குச் சங்கோஜத்தை யுண்டு பண்ணினாலும், சிறிது நேரத்திற் கெல்லாம் நான் அதை அவ்வளவாகப் பாராட்டவில்லை. அதைப் பற்றி விகற்பமாகவும் நினைக்கவில்லை. சுமார் பத்துப் பதினைந்து நிமிடங்களுக் கெல்லாம் நாங்கள் தேனைப்பேட்டையை அடைந்து விட்டோம்.

எனது பங்களா சமீபித்ததும், நான் சிறிது தூரத்துக் கப்பாலேயே குதிரையை நிறுத்தி என்னை இறக்கி விடும்படி கில்பர்ட்டைக் கேட்டுக்கொண்டேன். உடனே லகானைப் பிடித்திழுத்துக் குதிரையைத் தட்டி நிறுத்திவிட்டு அவன் கீழே குதித்தான். பின்னர் அவன் தன் இரு கைகளையும் நீட்டி என்னை இலாவகமாகக் குதிரையினின்றும் கீழே

இறக்கினான். அவ்வாறு இறக்குகையில், அவன் சிறு பருவத்திலுள்ள விஷமச் செயலை விடாதவன்போல என்னைச் சேர்த்தணைத்தவாறே நான் எதிர்பாராத நிலையில் திடீரென்று கன்னத்தில் முத்தமிட்டுக் கீழேவிட்டான்.

"இதென்ன குறும்புத்தனம் ஜான்! வயதாகியும் உன்னிடமிருந்து இவ் விஷமத்தனம் போகமாட்டேனென்கிறதே!" என்று சிறிது கடிந்தே பேசினேன். என் முகம் சிவப்பேறிவிட்டது.

கில்பர்ட் சிரித்துக்கொண்டே, "லில்லி! (இளமையில் அவன் எனக்கு வைத்த செல்வப்பெயர் என்பதை நீர் மறந்திருக்க மாட்டீர்) நாம் எப்போதிருந்தாலும் ஆப்த நண்பர்கள் தானே! வயதாய் விட்டதனாலேயே நம்மிடையே ஏற்பட்டுள்ள அந்நியோந்நிய பாவம் போய்விடுமா என்ன?—நான் உன்னை என் சகோதரியினும் மேலாகக் கருதி நேசிப்பது உனக்குத் தெரியாது. உன்பால் நான் கொண்டுள்ள பேரன்பை இவ்வுலகிலுள்ள எவராலும் பிரிக்க முடியாது. உனக்கு இன்று துன்பத்தை உண்டுபண்ணிய அத் தடியன் சம்பத்தை நான் லேசில் விடப்போவதில்லை. நேரமாய் விட்டது. போய் வா. கலாசாலையில் சந்திக்கலாம். வந்தனம்" என்று கூறியவண்ணம் என் கையைப் பற்றிக் குலுக்கிவிட்டுக் குதிரை மீதேறிச் சென்றுவிட்டான்.

நான் அவன் பிரிவதற்கு முன் பதில் வந்தன மளித்தேன். ஆனால் என் வாயிலிருந்து வார்த்தை யெழுவில்லை. பதுமைபோல் நின்று அவன் போவதைப் பார்த்திருந்து விட்டு, ஏதோ ஒருவித மனக்கிளர்ச்சியோடு என் பங்களாவினுள் நுழைந்தேன்.

என் பெற்றோரும், மற்றோரும் என் வரவை எதிர்பார்த்து கவலையோடு வெளிவாயிலில் நின்றிருந்தனர். என்

னைக் கண்டதும் என் தந்தை ஓடோடியும் வந்து, என் கைகளைப் பிடித்துக்கொண்டு, "என்னம்மா புவனு! எங்கே போயிருந்தாய்? மோட்டார் செனட் ஹவுஸுக்கு வந்து காத்திருந்து திரும்பிவிட்டது. நீ இப்போது நடந்தா வந்தாய்!........" என்று பரிவோடு கேட்டார். இதற்குள் என் தாயும் என்னை எதிர்கொண் டழைத்துச் செல்ல வந்துவிட்டாள்.

எனவே, நான் அவர்களுக்கு என்ன விதமான சமாதானம் சொல்வதென்று தெரியாமல் சிறிது தயங்கினேன். அன்று நடந்த சம்பவத்தைச் சொல்லி விடலாமென்று முதலில் எண்ணினே னாயினும், பின்னர் எங்கு அது விபரீதமாகப் போய்விடுமோ என்ற அச்சத்தால் அதை மறைத்து, 'இல்லை யப்பா! மீட்டிங் முடிந்ததும் வெளியே வந்து காரைப் பார்த்தேன். காணவில்லை. இதற்குள் என்னுடன் வாசிக்கும் ராஜாமணி என்னைத் தன் காரில் ஏறிக்கொள்ளும்படி வற்புறுத்தினாள். அவளோடு அவள் வீட்டுக்குச் சென்றதில் சிறிது நேரமாய்விட்டது. பின்னர் அவள் என்னை இங்கு கொண்டுவந்துவிட்டு இப்போதுதான் சென்றாள். எதற்காக மோட்டார் பங்களாவினுள் வந்து போக வேண்டுமென்று வெளியே நிறுத்தி இறங்கிவிட்டேன்" என்று மெல்லக் கூறினேன்.

பின்னர், நாங்கள் சாப்பிட உட்கார்ந்தோம். சாப்பாட்டினிடையே என் தாய் என்னைப் பார்த்து மெதுவாக, "கண்ணு! நீ வழக்கமாக வரும் நேரத்தில் வராதுபோகவே, என் மனம் என்னென்னமோ எல்லாம் எண்ணிச் சங்கடமடைந்தது. நான் நெருப்பில் நிற்பவள்போல் தத்தளித்துக் கொண்டிருந்தேன். இன்று சாயங்காலம் உனது தந்தை ஆபீஸிலிருந்து சீக்கிரம் வந்துவிட்டார். அவரோடு பிரபல

ஜோஸியர் ஒருவர் வந்தார். அவர் உன் தந்தை ஜாதகம், உன் ஜாதகம் எல்லாவற்றையும் பார்த்து ஏதேதோ சொன்னார். நமது மோட்டார் கம்பெனி கூடிய சீக்கிரம் நீ விபத்துக் காளாகுமென்றும், நாலைந்து வருடத்தில் உன் தந்தை மரணப் படுக்கையில் விழுவா ரென்றும், உனக்கு இப்போது கேது தசை நடப்பதால், உயிருக்குத் தீங்கை விளைவிக்கக்கூடிய பல இடையூறுகள் அடுத்தடுத்து ஏற்படுமென்றும், ஆதலால் வெகு ஜாக்கிரதையாக உன்னைப் பாதுகாக்க வேண்டுமென்றும் கூறினார். இது எனக்கு மேலும் பயத்தை உண்டுபண்ணி விட்டதம்மா!—ஆமாம். நீ இனிமேல் காலேஜை விட்டதும் நேரே பங்களாவுக்குப் பொழுதோடு வந்துவிடு; சுந்தரி!" என்று சொன்னாள். நான் இவற்றைக் கேட்டு என் தாய் முகத்தை நோக்கினேன். அவள் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது.

---

## ஏழாவது அதிகாரம்

---

### இன்ஷியூரன்ஸ் ஏஜண்டின் ஏமாற்றம்

மறுநாள் காலை ஏழு மணி யிருக்கும். நான் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சிற்றுண்டி யருந்திவிட்டு, என் தந்தையின் அறைக்குச் சென்றேன். அங்கு ஒரு சோபாவில் சாய்ந்தவண்ணம் மணிலாசுருட்டை வாயில் வைத்துப் புகைத்துக்கொண்டிருந்தார். அவரது முகம் ஆழ்ந்த, சிந்தனையில் மூழ்கியிருப்பதை வெளிப்படுத்திக் காட்டியது. நான் சென்று சில விநாடிகள் கழிந்த பிறகே அவர் எதிரில் நான் நிற்பதை யறிந்தார். உடனே அவர் வாஞ்சையோடு, "அம்மா! இப்படி உட்கார். உன்னைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். நீயும் வந்து

விட்டாய்.—என்ன! உன் முகம் ஒருவிதமாகக் காணப்படுகிறதே!" என்று கேட்டவாறே எழுந்து அமர்ந்தார்.

நான் சிறிது தூரத்திருந்த வெல்வெட்டு மெத்தை வைத்துத் தைத்த நாற்காலி யொன்றை என் தந்தையருகே இழுத்துப்போட்டு உட்கார்ந்தவண்ணம், "ஒன்றுமில்லை யப்பா! இராத்திரி என்னமோ தூக்கம் வரவில்லை. அதனால் முகம் ஒருவாறு மாறுபட்டிருக்கலாம். அவ்வளவுதான்" என்று புன் சிரிப்பை வலுவந்தமாக வருவித்த வண்ணங் கூறினேன்.

என் தந்தை சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டுப் பின்னர் என்னைப் பார்த்து, "புவனு! இராத்திரி நீ சாப்பிடுகையில் உன் தாய் கூறிய விஷயம் உனக்கு ஞாபக மிருக்கிறதா!—நமக்கு இச்சமயம் காலம் சரியாயில்லை என்று தெரிகிறது. சில நாட்களாகவே வியாபாரம் மந்தமாயிருக்கிறது. முன்போல் மோட்டார்களுக்கு ஆர்டர் வருவதில்லை. இம் மாறுதல்களை யெல்லாம் பார்த்தால் நேற்று ஜோஸியர் சொன்னபடி நமக்குச் சனிதசை ஏற்பட்டிருக்கிறது என்று திட்டமாகத் தெரிகிறது. ஆதலால் நாம் கொஞ்சம் எச்சரிக்கையாகவே நடந்துகொள்ளவேண்டும். அதிலும் உனக்குத் தற்சமயம் கேது தசை நடப்பதால் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சம்பவங்கள் நிகழுமென்று ஜோஸியர் கூறியிருக்கிறபடியால், ஒன்று மறியாக் குழந்தையாகிய நீ மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இனிமேல் நானே உன்னைக் காலையிலும் மாலையிலும் கலாசாலையில் கொண்டுபோய் விட்டு அழைத்து வருகிறேன். தனியாக எங்கும் செல்லாதே! தெரிகிறதா!" என்று மிகப் பரிவாகக் கூறினர்.

நான் அவர் கவனத்தை வேறு வழியில் திருப்ப எண்ணி, "அதெல்லாம் ஒன்றுமில்லை; அப்பா! வீணாக மன

தைக் கவலைப் படுத்திக்கொள்ளவேண்டாம்.—அது கிடக்கட்டும். சில நாட்களுக்கு நான் ராஜதானி கலாசாலைக்குப் போவதை நிறுத்தி வைக்கலாமென்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்களப்பா!'' என்று கேட்டேன்.

"ஏன்? புவனா!'' என்று வியப்போடு கேட்டார் என் தந்தை.

"ஒன்று மில்லை. இந்த ஆடவர்களோடு சேர்ந்து படிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. நான் எடுத்திருக்கும் சப்ஜக்டைப் போதிக்கும் பெண்கள் கலாசாலை நம் நகரில் வேறு எங்கும் இல்லையா? அப்பா!'' என்று சிறிது இழுத்தாற் போல் கேட்டேன்.

"அப்படி யொன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே! (சிறிது நேரம் தம் நெற்றியை விரல்களால் அழுத்திய வண்ணம் ஏதோ யோசித்து) ஆமாம். இப்போதுதான் ஞாபகம் வருகிறது. ஒரு வாரத்துக்கு முன் பேப்பரில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். அதில் வடநாட்டிலிருந்து யாரோ வந்து உயர்தர படிப்புப் படிக்க விரும்பும் (கலாசாலைகளில் சேர்ந்து படிக்க முடியாத) பெண்களுக்காக "Mahila Devi Tutorial College'' என்ற பெயரோடு ஒரு தனிக் கலாசாலை ஏற்படுத்தப் போவதாகவும், அதில் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பிலிருந்து எம். ஏ. வகுப்புவரை எல்லாவிதமான விஷயங்களும் கற்றுக்கொடுத்துப் பரிசைக்ஷக்குத் தயாராக்குவதாகவும் போதிப்பவர்களெல்லாம் மேனாட்டில் உயர்தரப் பட்டம் பெற்ற பெண்மணிகளே யென்றும், பிரின்ஸ்பால் மிஸஸ். மஹிளாதேவி எம். ஏ. (Oxon) எல். எல். பி. என்னும் வங்காளி மாதென்றும், அடுத்த வருஷம் பரீக்ஷைக்கு ஆஜராக விரும்புபவர்கள் உடனே இக்கலாசாலையில் சேர விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் விவரிக்கப்

பட்டிருந்தது; போன வார 'ஹிந்து' பேப்பர்களைப் பார் ....................." என்று சொன்னார்.

"அப்படியா!" என்று கூறி உற்சாகத்தோடு எழுந்திருக்கப் போகுஞ் சமயத்தில், வேலையாள் ராமன் அங்கு தோன்றிப் பணிவாக என் கையில் ஒரு கடிதத்தை நீட்டிய வண்ணம், "அம்மா! இந்த கடுதாசியை நேற்று இராத்திரி நீங்க வரதுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னே தான் ஒரு ஆள் கொடுத்துவிட்டுப் போனான். நீங்கள் ரொம்ப நேரம் பொறுத்து வந்தீங்களே என்ற கவலையிலே இதெ அப்பவே கொடுக்க மறந்துவிட்டேன். இப்பொ நெனைப்பு வந்ததும் எடுத்துக்கிட்டு ஓடி வந்தேன் கோவிச்சிக்காதீங்கம்மா!" என்று பல்லைக் காட்டிக் கெஞ்சிக் கூறினான். ராமன் ஒரு அப்பாவி. அவனைப்போல அசட்டை இவ்வுலகத்திலேயே காண முடியாது என்பது என் கருத்து. ஆகவே, நான் அதுபற்றி அவனையொன்றுங் கடிந்து கொள்ளவில்லை.

பின்னர், ராமன் என் தந்தையைப் பார்த்து, எஜமானைப் பாக்கணம்னு யாரோ ஒரு ஐயா காத்துக்கிட்டு இருக்காங்கோ—வரச் சொல்லட்டுங்களா!" என்று மிகச் சாவதானமாகக் கேட்டான்.

"அட தடிராமா! அப்பவே ஏண்டா சொல்லலே! உடனே போய் வந்தவரை உள்ளே அனுப்படா!" என்று அதட்டினார் என் தந்தை.

யாரோ என் தந்தையைப் பார்க்க வந்திருக்கிறார் என்று அறியவே, நான் அங்கிருப்பது உசித மல்லவென்று எண்ணிக் கடிதத்தைப் பிரித்தவண்ணம் அடுத்த அறைக்கு மெல்ல நழுவினேன். அங்கு நான் கடிதத்தைப் பிரித்து பார்த்ததும், அது புரொபஸர் சம்பத் ஐயங்காரால் எழுதப் பட்டிருப்பதறிந்து ஆவலோடு விஷயத்தைப் படிக்கலா

னேன். உடனே எனக்கு அடக்கமுடியாமல் சிரிப்புண்டாய் விட்டது. நான் சிரிப்பது எங்கு என் தந்தைக்குக் கேட்டு விடுமோ என்ற அச்சத்தால் மிகவும் சிரமத்தோடு அடக்கிக்கொண்டேன். எனக்கு நகைப்பு ஏற்படும்படியாக அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயந்தா னென்ன? நேற்று மாலை தனது மிருக சுபாவ மேலீட்டால் என்னைப் பலாத்காரப் படுத்தியதற்காக அவர் மனம் மிகவுந் துன்புற்று எனக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்! அதோடு ஆசிரியராகிய தான் மாணவியாகிய என்னிடத்தில் கேவலமான முறையில் நடந்துகொண்டதை யாராகிலும் அறிந்தால் தன்னை மிக இழிவாகப் பேசுவார்களென்றும், தான் என்றும் தலை தூக்க முடியாதவாறு அவமான நிலையையே அடைய நேருமென்றும், மேலும் தன்னுடைய ஆசிரிய பதவிக்கு ஆபத்துக்கூட ஏற்படலாமென்றும், ஆகவே, நான் பெரியமனதுவைத்துத் தான்செய்த கொடிய செயலை மறந்து இதை யாரிடமுந் தெரிவிக்காதிருக்க வேண்டுமென்றும் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இலக்கண வரம்பு கடவாது மிக விரிவாக எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தில் அவர் ஒரு விநோதமான வாதத்தைக் கிளப்பிவிட்டிருந்தார். மிகவும் கண்ணியமான முறையில் வாழ்ந்து வந்த தான் தன் வாழ்க்கையில் என்றும் மாறுக் களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டதற்கு நானே காரணமாம்! என்னுடைய பேரழகே நன்னிலையி லிருந்த தன்னைத் தலைகிறுக்க வைத்து இவ்வளவு தூரம் பாழ்படுத்தி விட்டதாம்! ஆதலால் அதைக் கருதியும் நான் அவரை மன்னித்து விடவேண்டுமாம்!—எப்படி யிருக்கிறது அவர் கூற்று! என்ன சிரிக்கிறீர் நண்பரே! அந்த மடையனின் அயோக்கி

யத் தனத்துக்கு நான் காரணமாம். அவனது அசட்டு வாதத்தைப் படித்தால் எனக்குச் சிரிப்பு வருமா, வராதா? பொதுவாக, சம்பத்தினுடைய கடிதத்தைப் படித்ததில் எனக்கு அவன் மீது இரக்கமே யுண்டாயிற்று. எனவே, நான் அக்கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தேன். ஜான் கில்பர்ட்டிடம் சொல்லி இதைப் பிரமாதமாக் காது விட்டுவிடவேண்டுமென்று தெரிவிப்பது அவசியம் எனவுந் தீர்மானித்தேன். ஆகவே, அவ்வளவோடு அவ் விஷயத்தை மறந்து, என் தந்தையைப் பார்க்க வந்திருப்பவர் யாரெனக் கவனிக்கச் சென்றேன். நானிருந்த அறைக்கும், என் தந்தையி னறைக்கும் ஒரு கதவு மட்டும் தான் இடைமறித்திருந்தது. ஆகவே, நான் அக்கதவருகிருந்தே எதிர் அறையில் இருப்பவர்களையும் அவர்கள் பேசுவதையும் அறியலாம். எனவே, நான் அக்கதவில் இடுக்கு வழியாக என் தந்தையோடு பேசுபவர் யாரெனப் பார்த்தேன். வந்தவருக்குச் சுமார் 35 வயதிருக்கும். ஆள் ஆறடிக்கு மேற்பட்ட உயரமும் நல்ல பருமனும் உடையவரா யிருந்தார். அதோடு அவர் அணிந்திருந்த 'ஹாட்டும் பூட்டும்' கம்பீரத் தோற்றத்தை யுண்டு பண்ணியது. அச்சமயம் அவர் என் தந்தையோடு பேசிய தோரணை விநோதமா யிருந்தது. அச் சம்பாஷணை தனிப்பட்ட இரகசிய விஷயமாய் இல்லாதிருந்தமையால், நான் கதவின் மறைவிலிருந்தே நின்று கேட்கலானேன்.

"என்னைத் தாங்கள் இதற்குமுன் பார்த்ததாக ஞாபகங்கூட இல்லை யென்று கூறுகிறீர்கள்!—உம். என்ன இருந்தாலும் மனிதர்களுக்கு இவ்வளவு மறதி கூடாது; சார்" என்று தடுமாற்றத்தோடு கூறினர் வந்தவர். அவர் முகம் ஏமாற்றத்தைக் காட்டியது.

என் தந்தை சிறிது ஆத்திரத்தோடேயே, "நான் தான் சொல்கிறேன்; நீர் குறிப்பிட்ட இடங்களுக்கு நான் போனது கூட இல்லையென்று. நீர் அதைக் கவனியாது சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறீரே!—இவ்வளவு தூரம் பீடிகை எதற்கு? நீர் என்னை நாடிவந்த காரியத்தைச் சொல்லித் தொலையுமே!" என்று கேட்டார்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள்! இவ்வளவு காலையில் தங்களைத் தொந்தரவு செய்கிறேன் என்று எண்ணவேண்டாம்.—நான் இதற்கு முன் தங்களைப் பார்த்துப் பேசிப் பழகியதில்லை யென்றால், தங்கள் பெயர், தகுதி வியாபாரம், குடும்ப விஷயம் இவ்வளவும் எனக்கு எப்படி, சார், தெரிந்திருக்க முடியும்? இதைத் தாங்கள் சிறிது யோசித்துப் பார்க்கவேண்டும்........" என்று அம்மனிதர் வாதித்தார்.

யாரிடமும் சாந்தமாகப் பேசும் இயல்பு வாய்ந்த என் தந்தை தம் பொறுமையை இழந்தவராய், "ஐயா! உமக்கு என்ன! ஏதேனும் மூளையில் கோளாறு உண்டா! நமக்குள் இதற்கு முன் அறிமுகமாகி யிருக்கவேண்டுமென்ற அவசியமேயில்லை; வந்த காரியத்தைத் தெரிவியும் என்று எத்தனை முறை உமக்கு எடுத்துச் சொல்வது? அதைக் கூறாமலே ஏதேதோ கூறி என்னைத் தொந்தரவு செய்கிறீரே?—எனக்கு மிகவும் வேலை யிருக்கிறது. இன்னும் கால்மணி நேரத்தில் கம்பெனிக்குப் போகவேண்டும். நீர் எதற்காக என்னை நாடிவந்தீர் என்ற விஷயத்தைச் சொன்னால் சொல்லும் இல்லாவிடில் நான் எழுந்து போகிறேன்" என்று கூறி எழுந்திருப்பதுபோல் பாவனை செய்தார்.

வந்த மனிதர் தாம் உட்கார்ந்த இடத்தைவிட்டு துள்ளி எழுந்து என் தந்தையைப் பார்த்து இரக்கமாகக் கையமர்த்தி,

“தயவுசெய்து கொஞ்சநேரம் இரும். தங்களுக்கு ஆயாசமேற்படும்படியாக ஏதேதோ வீண் வார்த்தைகள் பேசிவிட்டதற்காக வருந்துகிறேன். ஒன்றுமில்லை: நான் தங்கள் சமூகம் வந்ததன் நோக்கம்...............”என்று வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைக்காமலே, ‘ஹாட்’டை யெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு தலையைச் சொறிய ஆரம்பித்தார்.

என் தந்தை வெறுப்போடு அம்மனிதரது முகத்தையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். என் தந்தை முகத்தைச் சுளித்தும், பதட்டமாகப்பேசியும் இதற்குமுன் நான் பார்த்ததில்லை. அப்பேர்ப்பட்டவர் இவ்வளவு கடுமையாக இப்போது இருப்பதைப் பார்த்தால், வந்த மனிதர் தோற்றத்தில் ஆடம்பரமாகவும், கம்பீரமாகவும் காணப்பட்டாலும் எவ்வளவு அற்பத்தனமாக--ஆபாசமாக—நடந்து கொண்டிருக்கிறார் என்று தெரிந்தது.

அம்மனிதர் மீண்டும் பேச முயன்று, “சார்! தங்களுக்கு இப்போது வயதென்ன ஆகிறது? நான் கடைசி முறையாகப் பார்த்தபோதுகூட மிகவும் இளமையாகக் காணப்பட்டீரே! இரண்டு மூன்று வருடத்துக்குள் இவ்வளவு மாறுதலா? இப்போது தங்கள் முகத்தில் முதுமை தலைகாட்டிவிட்டதே! அதோடு தங்களுக்கு ஏதோ உள்ளே வியாதி யிருப்பதாக முகத்தின் மினுமினுப்பிலிருந்து தெரிகிறது!—ஆமாம்; தாங்கள் ஏன் இன்ஷியூர் செய்துகொள்ளக்கூடாது? தங்களுக்குப் பின்னால் தங்கள் மனைவி மக்களுக்கும் பேருதவியாக இருக்குமே!” என்று நெடுநேரம் வளைந்து வளைந்து பேசிக் கடைசியாகத் தம் தூண்டிலைப் போட்டார்.

இப்பேச்சைக் கேட்டு என் தந்தைக்கு ஒரு பக்கத்தில் கோபமும், மற்றொரு பக்கத்தில் சிரிப்பும் வந்தது. அவர் அம்

மனிதனைப் பார்த்து, "ஓகோ! இதுவா! இதற்கா இவ்வளவு நேரம் சிரமப்பட்டீர். முதலிலேயே கூறியிருந்தால், உமக்கு இத்துணை கஷ்ட மேற்படாதபடி ஒரே வார்த்தையில் பதில் சொல்லி யனுப்பியிருப்பேனே! பாவம்! என்ன செய்வது? நீர் மேற்கொண்டுள்ள வேலை அப்பேர்ப்பட்டது. நான் இதற்கு முன்பே பல கம்பெனிகளில் இன்ஷியூர் செய்திருக்கிறேனே!" என்று இரக்கமாகச் சொன்னார்.

அம்மனிதர் என் தந்தை கூறியதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர் மேலும் பேசத் தொடங்கி, "தாங்கள் இன்ஷியூர் செய்துகொள்வது மாத்திரம் போதாது. தாங்கள் நடத்திவரும் மோட்டார் கம்பெனியையும் இன்ஷியூர் செய்யவேண்டும். ஏனென்றால் அதற்குத் தீவிபத்து முதலிய ஏதேனும் ஏற்பட்டுப் பெரு நஷ்ட முண்டானால், கவலை வேண்டியதேயில்லை. இன்ஷியூர் செய்து வைத்திருந்தால் உடனே அந்த நஷ்டத்தை ஈடு செய்துவிடலாம். எங்களது இன்ஷியூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலேயே பெரிய மூல தனத்தில் நடப்பதாகும். சதுர்புஜ தாஸ், சோடா தாஸ் இன்ஷியூர் கம்பெனி யென்றால் உலகத்தில் எப்பாகத்திலுள்ளவர்களுக்கும் தெரியுமே! எனவே, தாங்கள் அவநம்பிக்கைப் படாது..........." என்று அளந்துகொண்டே போகையில் என் தந்தை இடைமறித்து, "போதும்; போதும். உமது இன்ஷியூரன்ஸ் புராணத்தை நிறுத்தும். நான் கூறியது உன் காதில் விழவில்லையா! ஏற்கனவே, பல கம்பெனிகளில் இன்ஷியூர் செய்துவிட்டேன்! இனிச் செய்ய முடியாது. நீர் இங்கு பிரயாசை எடுத்துக் கொள்வதில் பயனில்லை. வேறு எங்கேனும் போய்ப்பாரும்" என்று சிறிது அழுத்தமாகவே கூறினார்.

இன்ஷியூரன்ஸ் கம்பெனி ஏஜண்டு கெஞ்சும் பாவனையாகப் பல்லைக் காட்டி, "தாங்கள் பெரிய சீமான், அப்படி

சொல்லி விடப்படாது. தாங்கள் இதிலும் பாலிஸிதாரராய்ச் சேர்வதில் பாதகமொன்று மேற்பட்டு விடாது..............." என்று மேலும் ஏதோ கூற முயன்றார்.

என் தந்தை ஆத்திரத்தோடு எழுந்து, "மரியாதையாய்ச் சொன்னால் கேட்கமாட்டீர், நீர் இப்போது வெளியே போகப் போகிறீரா? இல்லையா?" என்று கேட்டார்.

ஏஜண்டு, "அவசரப் படாதீர்கள். சிறிது யோசித்துப் பாரும்..............." என்று கூறிக்கொண்டே எழுந்து என் தந்தையருகே சென்று பணிவாக நின்றார்.

என் தந்தை கோபத்தைத் தாங்கமாட்டாமல், "அடே ராமா! ராமா? இங்கு வாடா!" என்று கூறினார்.

அதேசமயம் கதவைத் திறந்து கொண்டு, என் தந்தையின் சிநேகிதர் ஆலால சுந்தர முதலியார் வந்தார். அவர் பின்னே ராமன் வேகமாக வந்தான்.

ஆலால சுந்தர முதலியார் நுழையும்போதே, "என்ன செட்டியார்! காலையில் ஆர்ப்பாட்டம்! தாங்கள் போட்ட கூச்சலில் பங்களாவே அதிர்ந்துபோச்சே!..........." என்று கூறிக்கொண்டே வந்தவர், என் தந்தையின் எதிரே நிற்கும் ஏஜண்டைப் பார்த்து ஆச்சரியத்தோடு, "இவ்வளவு காலையில் இங்கு நீர்......................." என்று வார்த்தையை முடிக்காமலே வாயைப் பிளந்து நின்றார்.

முதலியாரைக் கண்டதும் ஏஜண்டு முகம் இருண்டது. வாய் திறவாது திகைத்து நின்று விட்டார்.

ஆலால சுந்தர முதலியாரும், இன்ஷியூரன்ஸ் கம்பெனி ஏஜண்டும் ஒருவரை யொருவர் பார்த்ததும் நடந்துகொண்ட மாதிரியையும் மாறுதலையுங் கண்ட என் தந்தை, "என்ன முதலியார்; இவரை உமக்குத் தெரியும் போலிருக்கிறதே

உமது நண்பரா என்ன?......................" என்று வியப்பாகக் கேட்டார்.

எனக்கு ஆவலும் ஆச்சரியமுந் தாங்க முடியவில்லை. இனி, மறைந்திருக்க விரும்பாமையால், கதவைத் திறந்து கொண்டு இவ் வறையுள் நுழைந்து என் தந்தையின் பின்னே நின்று அங்கு நடப்பதை கவனிக்கலானேன்.

ஆலால சுந்தர முதலியார் என் தந்தையின் கேள்விக்குப் பதிலாக, "இவரைத் தெரியாதவர்கள் கூட உலகத்திலிருக்கிறார்களா என்ன? நீங்கள் கேட்குந் தோரணையைப் பார்த்தால், இவரை இதற்குமுன் உங்களுக்குப் பழக்கமில்லையென்று தெரிகிறது. இது ஒரு பெரிய ஆச்சரியந்தான். உலகாதிசயங்களி லொன்றென்றே இதைச் சொல்லவேண்டும். ஏனென்றால், இத்துணை பெரிய சீமானாகிய நீங்கள் இவ்வளவு நாட்களாக இவரது தரிசனத்தைப் பெறாதது உங்களுடைய புண்ணியமோ! அவரது துரதிர்ஷ்டமோ!—இல்லையில்லை; வாய் தவறிக் கூறிவிட்டேன்—உங்களுடைய துரதிர்ஷ்டந்தான்................" என்று அவ் ஏஜண்டைக் கடைக்கணித்துக்கொண்டே கூறினார்.

எனக்கு சிரிப்புத் தாங்கவில்லை. 'களுக்'கென்று நகைத்துவிட்டேன், பாவம்! அந்த மனிதரது நிலை முன்னிலையிலும் மோசமாய்விட்டது. முகம் சுருங்கிவிட்டது. தலையைத் தொங்கப்போட்டுவிட்டார். அதிகாலையில் தன் முயற்சி பலிக்காது போனதால் ஏற்பட்ட ஏமாற்றம்—தான் குறிவைத்த மனிதரின் மனக்குறிப்பறியாது பேசி அவர் கோபத்துக் காளான அவமானம்—தன் குட்டுகளெல்லாந் தெரிந்த ஒருவரின் பரிகாசப்பேச்சு-இவை யெல்லாம் ஒன்று சேர்ந்து அவரது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகி அவரை நிலை குலையச் செய்துவிட்டது. இவ்வளவு

நிகழ்ச்சிகளும் தம் மினத்தவராகிய ஆடவர் முன்னிலையி லேயே நடந்திருந்தாலும், அவர் அவ்வளவாக அவமான உணர்ச்சியால் மனங் குன்றி யிருக்கமாட்டார். பெண் ணெதிரே-அதிலும் என் போன்ற ஓர் இளம் பெண் ணெதிரே—அம்மனிதர் தம் விஷயந் தெரிந்த ஒருவரால் பரி கசிக்கப்படுவது—அவள் ஏளனமாகச் சிரிப்பது—என்றால், ஆண்மகனென்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் எவனுக் குத்தான் அவமான முண்டாகாது? எனவே, அந்த இன்ஷி யூரன்ஸ் ஏஜண்டு வாய் திறந்து ஒன்றுஞ் சொல்லாமல், என் தந்தையின் பக்கந் திரும்பிமட்டும் 'ஹாட்'டைத் தூக்கி வந் தன மளித்துவிட்டு, எங்களையெல்லாம் ஏறிட்டுப் பார்க்கா மல் வெகு வேகமாக வெளியே போய்விட்டார்.

அவர் ஓர் அடி வெளியே எடுத்து வைத்தாரோ இல் லையோ! ஆலாலசுந்தர முதலியார் நாங்களிருந்த அறையே அதிர்ந்து போகும்படியாகக் கைகொட்டிச் சிரித்தார். அவ் வாறு சிரித்தபோது அவரது தொந்தி குலுங்கியதைக் கண்டு எனக்கு நகைப்பேற்பட்டாலும், அந்த ஏஜண்டின் பரிதாப மான நிலைமைக்காக மனம் வருந்தினேன்.

என் தந்தை ராமனை வெளியே போகும்படி சைகை செய்துவிட்டுத் தம் சிநேகிதரைப் பார்த்து, "உட்காருங்கள் முதலியார்!—என்ன! அந்த ஆசாமியை உங்களுக்குத் தெரியுமா?" என்று மீண்டுங் கேட்டவண்ணம் தாமும் ஒரு சோபாவில் உட்கார்ந்தார்.

ஆலாலசுந்தர முதலியார் எதிரிலுள்ள மற்றொரு சோபாவில் அமர்ந்த வண்ணம், "தெரியாம லென்ன? உங் களைப் போன்ற பணக்காரர்கள் அவனைத் தெரிந்துகொள் ளாமலிருக்க முடியாது. நீங்கள்மட்டும் இதுவரை அம் மனிதனது கண்ணில் அகப்படாமல் இருந்தது எவ்வாறு

என்றுநான் இன்னமும் யோசித்துக்கொண்டிருக்கிறேன். அதற்குப் புலனாகப்படவில்லை. அவன் எதிரில் சொல்லியவை பரிகாச வார்த்தைகளல்ல; அவ்வளவும் உண்மை சொல்லிய தோரணையில் வேண்டுமானால் கேலிப் பேச்சாக இருந்திருக்கும். (தந்தையின் பின்னே சோபாவைப் பிடித்துக்கொண்டு நிற்கும் என்னை நோக்கி) குழந்தை என்ன! ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறதே!—சுந்தரி! என்னம்மா! நான் அம்மனிதனிடம் நடந்துகொண்ட மாதிரி உனக்குப் பிடிக்கவில்லையா என்ன? நான் அநாகரிகமாக நடந்துகொண்டதாக நீ எண்ணுகிறாயா? உன் அபிப்பிராயம் என்ன! இப்படி வந்து உட்கார்ந்து சொல்'' என்று கேட்டார்.

தந்தையும் என்னைத் திரும்பிப் பார்த்தார். ஆகவே நான் நின்ற இடத்தை விட்டு நடந்து அவர்களுக்கருகே ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்து, "அப்படியெல்லாம் ஒன்றும் நினைக்கவில்லை அண்ணா! காலையில் வந்து அப்பாவை மிகவும் தொந்தரவு படுத்திவிட்டார் அந்த மனித்ர். ஆனாலும் அவர் முயற்சி பலிக்காததோடு இத்தனை பேரிடையே அவமான மடைந்தாரே என்று கருதும்போது தான் சிறிது கஷ்டமாயிருந்தது. உங்களைக் கண்டதும் அம்மனிதர் முகம் எவ்விதமாக விகாரமடைந்தது தெரியுமா? ஏன்? அண்ணா! நீங்க ளென்ன அவருக்கு விரோதியா?" என்று அறியாமையோடு கேட்டேன்.

முதலியார் புன்சிரிப்போடு, "நான் என்ன! அவ்வளவு கெட்டவனா அம்மா?—தன்னல மொன்றே கருதி மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் தடியர்களுக்கு நான் விரோதிதான்: அத்தகையோர் பகைமையை நான் வரவேற்கிறேன்-இம்மனிதன் தான் பிழைப்பதற்காக எத்தனைபேருக்

குத் தொந்தரவு கொடுத்து வருகிறான் தெரியுமா! என்னிடம் ஒரு முறை இப்படித்தான் வந்து சங்கடப்படுத்தினான். அவனிடமிருந்து தப்புவது பெரிய பிரமாதமாகப் போய்விட்டது. அச்சமயத்தில் இம்மனிதன் விஷயம் தெரியாததனால், கௌரவமாகவே பேசிப் பக்குவமாக அனுப்பிவிட்டேன். அதற்கப்புறம் பல இடங்களில் இம் மாதிரியே நடந்து கொண்டு வருவதைப் பார்த்த பிறகு தான் அவனுடைய அயோக்கியத்தனமெல்லாம் வெளியாயிற்று. அதிலிருந்து எனக்கு அவன்மீது ஆத்திரமுண்டாயிற்று. அவனை இனி எங்குந் தலைகாட்ட விடக்கூடாது என்று அன்றிருந்து தீர்மானித்துக்கொண்டேன். தன் விஷமத்தனம் தெரிந்துவிட்டது என்று அறிந்த அம் மனிதனும் என்னைக் கண்டால் நடுங்குகிறான்—என்னதான் வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேட வேண்டுமென்றாலும், கௌரவமான முறையில் நடந்துகொள்ள வேண்டாமா? தகாத முறைகளைக் கைக்கொள்வானேன்?" என்று ஆயாசமாகக் கூறினார்.

என் தந்தை சாவதானமாக, "நம் போன்றவர்களைப் பாலிஸிதாராகச் சேர்ப்பதற்குத் தகாத முறை என்ன வேண்டியிருக்கு? பீடிகையெதுவும் போடாமல் வெளிப்படையாகப் பேசி இன்ஷியூர் செய்துக்கொள்ள விரும்புபவர்களைச் சேர்த்துக்கொண்டு, விரும்பாதவர்களை விட்டு விட்டுப் போவதுதானே!" என்றார்.

முதலியார், "ஐயையோ! உமக்கு இது சம்பந்தமாக ஒன்றுமே தெரியாது போலிருக்கிறதே! இன்ஷியூரன்ஸ் ஏஜண்டோ; மற்றெந்த ஏஜண்டோ; தாங்களோ சரி தங்கள் காரியங்களைச் சித்தி செய்து கொள்வதற்கு என்னென்ன முறைகளைக் கையாளுகிறார்கள் தெரியுமா? அதி

லும் இந்த ஏஜண்டு பலே பேர்வழி. இவ்வித அயோக்கிய சிகாமணிகளுக்கு அக்ர ஸ்தானம் வகிப்பவன். அவன் உங்களிடம் சாதாரணமாக வந்து பீடிகை போட்டுப் பேசிவிட்டுப் போய்விட்டா னென்று நினைக்கிறீர்களா! உங்களைத் தன் வலையில் வீழ்த்துவதற்கு ஏதேனும் சூழ்ச்சி செய்து விட்டே வந்திருப்பான்-ஆமாம். அவன் தானாகவே உங்களிடம் வந்தானா?" வேறு யாராகிலும் சிபார்சு செய்து அப்புறம் வந்தானா?" என்று வினவினார்.

என் தந்தை சிறிது திகைத்து, "தானாகத் தான் வந்தான்" என்று பதிலளித்தார்.

முதலியார் சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு, "உங்களை யாரேனும் ஜோஸியர் வந்து பார்த்தாரா?" என்று ஆழ்ந்த யோசனையோடு கேட்டார்.

இதைக் கேட்டதும் நானும் என் தந்தையும் வியப்படைந்தோம். என் தந்தை, "ஆமாம். சசிராம ஐயர் அந்த சாஸ்திரியை அறிமுகப்படுத்தினார். அந்த ஜோஸியர் வந்து பார்த்தது உமக்கு எப்படி ஜோஸியம் தெரியும்? அவரைவிட நீர் பெரிய ஜோஸியரா யிருக்கிறீரே!" என்று கூறினார்.

முதலியார் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்துவிட்டது போன்ற ஒன்றைக் கண்டு பிடித்துவிட்டவர்போல் மகிழ்ந்து, "நான் ஒன்றும் ஜோஸியனன்று; தக்ஷிணை வைக்க வேண்டுமே என்று பயப்பட வேண்டாம்.—இதில் தான் விஷய மிருக்கிறது. இந்த சாஸ்திரி உம்மைப் பற்றியும் வியாபார, குடும்ப விஷயங்களைப்பற்றியும் என்ன சொன்னான்?" என்று கேட்டார்.

என் தந்தை முன்னால் ஜோஸியர் வந்து தம்மைப் பார்த்துச் சொல்லிய விஷயங்களை யெல்லாம் ஒன்றுவிடாது

கூறி, அதனால் தாமும் தம் மனைவியும் கவலை யுற்றதாகவும், இரவெல்லாம் அதே சிந்தனையாக இருந்ததாகவும் விவ ரித்தார்.

முதலியார், "பார்த்தீரா! இவ்வித மெல்லாம் ஒரு ஜோஸியன் ஜாதகங்களைப் பார்த்துக் கூறினால், யாருக்குத் தான் கவலை யேற்படாது? இச்சமயத்தில் இக்கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்வதற்கு வழி யேற்படாதா என்று ஏங்கி எதிர் பார்ப்பது மனிதராய்ப் பிறந்தவர்களுக்கு இயல்பு தானே!" என்றார்.

"ஆம்" என்றேன் நான்.

"இவ்வாறு நீர் ஆகுல முற்றிருக்குஞ் சமயத்தில், இன்று காலை இந்த ஏஜண்டு உம்மையும் கம்பெனியையும் இன்ஷியூர் செய்து வைக்கும்படிக் கேட்டது பொருத்த மல்லவா! இன்னும் சபல சித்த முடையவராக நீங்கள் இருந்தால் அவர் வந்து மெல்லக் கேட்ட உடனே சம்மதித்திருக்க மாட்டீரா? இவ்விடத்திலும் பாவம்! அம்மனிதர் வைத்த குறி தவறிவிட்டது" என்று முதலியார் அநுதாபப்படுவது போல் பேசினார்.

என் தந்தை சிறிது பொறுமையை இழந்து, "என்ன அண்ணா! கூடமாகவே ஏதேதோ சொல்லிக்கொண்டு போகிறீரே! விஷயத்தை விவரித்துக் கூறுங்கள். ஜோஸியர் வந்ததற்கும் இவ் ஏஜண்டுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார்.

முதலியார், "அப்படி கேளுங்கள். இந்த ஏஜண்டு உங்கள் போன்ற பணக்காரர்களை இன்ஷியூரன்ஸில் மாட்டி வைப்பதற்குப் பல சூழ்ச்சிகளைக் கையாள்வது வழக்கம் என்று முன்னே கூறினே னல்லவா? அவைகளில், ஜோஸி யரை முன்னே அனுப்பி, பின்னர்த் தான் வருவது ஒரு

முறையாகும். அம் முறைப்படி இம்மனிதர், உங்களைப் பற்றி உங்கள் சிநேகிதர் யாரிடமோ விசாரித்துத் தெரிந்து கொண்டிருக்கிறார். அப்புறம் இவரது கையாளான சாஸ்திரியிடம் விஷயத்தைக் கூறி, நீங்கள் இன்ஷியூர் செய்து கொள்வது அவசியம் என்று உங்கள் மனதுக் கேற்படும்படி ஜோஸியஞ் சொல்ல வேண்டுமென்று அனுப்பியிருக்கிறார். அதன்படி அந்த சாஸ்திரி உங்களிடம் வந்து வாயில் வந்தவாறு உளறிக் கொட்டி வீணை வருந்துமாறு செய்திருக்கிறான். அந்த சாஸ்திரி கூறிய ஜோஸியத்தைக் கேட்டு உங்களுக்கு உண்மையிலேயே கெட்ட காலம் வந்து விட்டதாக அஞ்சி வருந்தினீர்களா இல்லையா? மறைக்காதீர்கள் உண்மையைக் கூறுங்கள்" என்று குதூகலமாக வினவினார்.

என் தந்தை, "இப்போது எல்லாம் விளங்கிவிட்டது. நான் வீணைவன்றே மனம் வருந்தினேன்? நானாகிலும் பரவா யில்லையே! பாவம்; பேதையாகிய தனலக்ஷ்மியுமல்லவா மிகவுந் துயருற்றிருக்கிறாள். இன்னமும் அந்த ஜோஸியன் உளறியவைகளையேதான் எண்ணிக்கொண்டிருப்பாள்—அவளுக்கு,தான் துன்பப்படுவதோ சொத்தெல்லாம் போய்விடுவதோ பெரிதல்ல! அவள் உயிருக்குயிராக நினைத்துக்கொண்டிருக்கும் புவனாவுக்கு ஏதோ 'தத்து' ஏற்படுமென்று பிதற்றினானே! அம் மடையன்: அதைத்தான் பிரமாதமாகக் கருதி நெஞ்சங் கரைந்து கொண்டிருப்பாள்—ஆ! என்ன உலகம்! தங்கள் வயிறு வளர்ப்பதற்கு—தங்கள் மனைவி மக்கள் நன்றாக வாழ்வதற்கு—பிறரைத் துன்புறுத்திப் பணம் பறிக்க வேண்டுமா! தேகத்தை உழைத்து — அறிவை உபயோகப்படுத்தி—நல்ல வழியில் பணம் சம்பாதிக்க இவ் அயோக்கியர்களுக்குத் தெரியாதா! ஆளைப் பார்த்தால் ஆடம்பரமாகக் காணப்

படுகிறான். அவன் செய்வதோ இவ்வித ஈனத்தொழில்! இதனாலேயே, முதலியார்! எனக்கு வர வர இந்தமாதிரி மனிதர்களையே பார்க்க பிடிக்கமாட்டே னென்கிறது" என்று ஆயாசத்தோடு கூறினார்.

நான் முதலியார் கூறிவந்த வரலாற்றைக் கேட்டுத் திகைத்துப் போய்விட்டேன். 'உலகில் மக்கள் தங்கள் பிழைப்புக்காக இவ்வித கேவலமான முறைகளை யெல்லாமா கையாளுகிறார்கள்?' என்று அதிசயித்தேன்.

முதலியார் என் தந்தை கூறிய மொழிகளைக் கேட்டு மன முருகிவிட்டார் என்று நினைக்கிறேன். அவர் மேலே பேசவில்லை. இதனால் எங்களிடையே ஒருசில நிமிஷங்கள் அமைதி நிலவியது. நான் சிறிதுநேரம் இவ் விஷயத்தைப் பற்றிச் சிந்தித்திருந்துவிட்டு, பின்னர், என் தந்தையையும் முதலியாரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

இச் சமயம் அவ்வறையின் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடியாரம் ஒன்பது மணி அடித்தது. இதனால் என் தந்தையின் சிந்தனை கலைந்திருக்கவேண்டும். எனவே, அவர் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர்போலத் தம் இருக்கையை விட்டு எழுந்தவண்ணம், "அது போகட்டும் அண்ணா! நம் குழந்தை புவனா என்னமோ ராஜதானி கலாசாலைக்குப் போக விருப்பமில்லையென்று சொல்கிறது. எழும்பூரில் ஏதோ பெண்களுக்கென்று தனியாகக் கலா சாலை யேற்பட்டிருக்கிறதாமே உங்களுக்குத் தெரியுமா? வங்காளத்திலிருந்து வந்த ஸ்ரீமதி மஹிளாதேவி என்ற பெண்மணி அக் கலாசாலையை நடத்துகிறாராம். அங்கு சென்று பார்த்து எல்லாம் ஒழுங்காக இருந்தால், புவனாவைச் சேர்த்துவிட்டு வரலாமென்று நினைக்கிறேன். உங்கள்

அபிப்பிராயமென்ன? நீங்களும் வருகிறீர்களா? அண்ணு!" என்று கேட்டார்.

முதலியாரும் எழுந்து நின்று என்னைப் பார்த்துக் கொண்டே, "சுந்தரி காரணமில்லாது ராஜதானிக் கலா சாலைக்குப் போகமாட்டேனென்று சொல்லாது. ஆதலால் இதில் நாம் யோசிக்கவேண்டியதென்ன இருக்கிறது? வாருங்கள்; போவோம். எழும்பூரில் அந்த டியூடோரியல் கலாசாலை இருக்கிற இடம் தெரியுமா சுந்தரி? என்று கேட்டார்.

நான், "தெரியாது" என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போய் என் தந்தை குறிப்பிட்ட 'இந்து' பேப்ப ரைத் தேடி யெடுத்துக்கொண்டு முதலியாரிடம் அக் கலா சாலை விளம்பரத்தைக் காட்டினேன். சிறிது நேரத்திற் கெல்லாம் உள்ளே சென்ற என் தந்தை உடுத்துக்கொண்டு வரவும் நாங்கள் மூவரும் மோட்டாரில் அக் கலாசாலை இருக்குமிடத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

## எட்டாவது அதிகாரம்

### மஹிளாதேவி கலாசாலை மர்மம்

ஸ்ரீமதி மஹிளாதேவி நல்ல அழகும், கம்பீர தோற்ற மும் வாய்ந்தவரா யிருந்தரர். அவருக்குச் சுமார் 30-வயது இருக்கும். நவநாகரிகத்துக்கும் ஆடம்பரத்துக்கும் அவர் இருப்பிடமாக விளங்கினுர் என்று ஒரு வார்த்தையில் கூறி விட்டால் அதிகமாக வருணிக்கவேண்டிய அவசிய மிருக் காது என்று கருதுகிறேன். அவர் என் தந்தையோடும் ஆலால சுந்தர முதலியாரோடும் உரையாடும்போது சிறிது

அமர்த்தலாகவே பேசினார். அதற்கேற்பவே முதலியாரும் உரையாடி அவர் நிபந்தனைகளைச் சிறிது விட்டுக்கொடுக்கும் படிச் செய்துவிட்டார். பரீக்ஷைக்கு ஆஜராகும் வரை நான் எடுத்துக் கொண்டிருக்கும் விஷயங்களை (Subjects)ப் போதிப்பதற்கு 300-ரூபாய் கொடுப்பதாக என் தந்தை இசைந்தார். அத்தொகையை முன் கூட்டியே கட்டிவிட வேண்டுமென்று பிரின்ஸிபால் குறிப்பிட்டார். அவ்வாறே ஒப்புக்கொள்ளப்பட்டது. மஹிளாதேவியின் வசீகர வதன மும், வாக்கு வன்மையும் என்னை மிகவுங் கவர்ந்தமையால் அப் பெண்மணி தலைமையில் படிப்பதைக் குறித்து நான் பெரிதும் பெருமையுற்றேன்.

சர்க்கார் அங்கீகாரம் பெற்ற கலாசாலைகள் நடப்பது போலவே, மஹிளாதேவி டியூடோரியல் கலாசாலையும் நடைபெற்றது. எஸ். எஸ். எல். ஸி. முதல் எம். ஏ. வரை வகுப்புகள் இருந்தன. நான்கு இந்துப் பெண்மணிகளும், ஒரு ஆங்கிலோ இந்திய மாதும், இரு கிறிஸ்தவ மங்கை மாரும் ஆசிரியைகளாக இருந்தனர். எல்லா வகுப்புக்களுக் குஞ் சேர்ந்து சுமார் 60 மகளிர் மாணவிகளாகச் சேர்ந் திருந்தனர்.

கலாசாலை ஆரம்பித்து ஒரு வாரமாயிற்று. நான் தினந் தோறும் ஒழுங்காகப் போய்க்கொண்டிருந்தேன். இதற் கிடையே ராஜதானி கலாசாலையில் என்னோடு வாசித்த நண் பர்கள் சிலர்—குறிப்பாக ஸ்ரீரஞ்சனி, தாமோதரன் ஆகி யோர் நேரே வந்து, நான் திடீரென்று அக் கலாசாலையை விட்டு நின்று அவர்களைப் பிரிந்ததற்காக வருத்தந் தெரிவித் துச் சென்றனர். அவர்கள் தங்கள் சிநேகத்தை மறந்து விடக் கூடாதென்றுங் கேட்டுக்கொண்டனர். இவ்விடத்தி லும் சில பெண்கள் எனக்குச் சிநேகமாயினர். இவர்களில்


பெரும்பாலோர் கலாசாலைகளில் படித்துப் பரீக்ஷையில் தேர்ச்சிபெறத் தவறியவர்களாகவே இருந்தனர். அன்னார் மீண்டும் கலாசாலைகளில் சேர்ந்து பணங்கட்டிப் படிக்க முடியாமையால் இதில் சேர்ந்ததாகத் தெரிந்தது. அது கிடக்க.

ஒரு நாள் எங்கள் வகுப்பு நடந்துகொண்டிருந்தது. அச்சமயத்தில் பிரின்ஸ்பால் மஹிளாதேவியே எங்களுக்குப் பாடத்தைப் போதித்துக் கொண்டிருந்தார். அவரது போதிப்பு முறை எனக்கு மாத்திரமல்ல, பொதுவாக எல்லா மாணவிகளுக்குமே நன்ருகப் பிடித்திருந்தமையால், அவர் பாட விஷயத்தை எடுத்து விவரிப்பதைச் சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். இந் நிலையில் திடீரென்று 'டக் டக்' என்று பூட்ஸ் சப்தம் கேட்கவே, யாவரும் ஏககாலத்தில் திரும்பிப் பார்த்தோம். எங்கள் வகுப்பு அறையின் வாயிலண்டை, ஐரோப்பியரைப்போல் காணப்பட்ட ஒரு கனவானும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரு கான்ஸ்டேபிள்களும் தோன்றினர். இன்ஸ்பெக்டர் முன்னே வர அக்கனவான் கான்ஸ்டேபிள்கள் காவலோடு நடந்து வந்துகொண்டிருந்தார். பிரின்ஸிபால் இக்காட்சியைக் கண்டதும் வாய்விட்டு அலறி மூர்ச்சையாகி விழுந்தார். மாணவிகளாகிய நாங்கள் ஒன்றுந் தோன்ருது திகைத்து நின்ருேம்.

இன்ஸ்பெக்டர் முதலியவர்களுங் கூட சில விநாடிகள் அசைவற்று தூரத்திலேயே நின்றுவிட்டனர். ஆனல், மேற்குறித்த கனவான் முகத்தில்மட்டும் எவ்வித சலனமுங் காணப்படவில்லை. இதற்குள் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராஜேஸ்வரி என்ற பெண்ணும், மீனும்பாள் என்ற மங்கையும் ஓடிச்சென்று பிரின்ஸிபால் மஹிளா தேவியைத் தூக்கி, நாற்காலியில் உட்காரவைத்தனர். இதற்குள்


மற்ெருரு பெண் அவர் முகத்தில் நீரைத் தெளித்தாள். வேருருத்தி தன் சேலையின் முந்தானையால் விசிறிக் காற்றை யுண்டாக்கினுள்.

இவ்வாறு மாணவிகளாகிய நாங்கள் அனைவருமே எங்களுக்குத் தோன்றிய வண்ணமெல்லாம் சைத்தியோபசாரங்களைச் செய்யவும், மஹிளாதேவி சிறிது நேரத்திற்கெல்லாம் மூர்ச்சை தெளிந்து கண்ணை விழித்துப்பார்த்தார். நாங்கள் அவரைச் சூழ்ந்திருப்பதைக் கண்டதும், என்ன



நினைத்தாரோ தெரியவில்லை. எங்களைப் பார்க்க வெட்க முறுபவர்போல மீண்டும் கண்களை மூடிக்கொண்டார்.

இதனிடையே போலீஸ் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபிள்களை அக்கனவான் அண்டையிலேயே நிறுத்திவைத்து விட்டு, தாம் மட்டும் எங்களை நோக்கி வந்தார். எனவே, மாணவிகளாகிய நாங்கள் பிரின்ஸிபாலுக்குப் பின்னுகைப் போய் ஒதுங்கி நின்றோம். பிரின்ஸிபால், போலீஸ் இன்ஸ்பெக்டர் தம்மிடமே வருகிறார் என்று குறிப்பாக அறிந்து கண்களைத் திறந்துகொண்டு எழுந்து நின்றார்.



மேஜையருகே வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரின்ஸிபால் மஹிளா தேவியைப் பார்த்து, "அம்மா! தாங்களும் தங்கள் கணவருஞ் சேர்ந்து, பொதுமக்கள் பொருளைக் கொள்ளையடிக்கும் உத்தேசத்தோடு, தற்காலிகமாக இக் கலாசாலையை ஏற்படுத்திப் படித்த பெண்களையும், சர்க்காரையும் ஏமாற்றி வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறீர்கள். ஆதலால், நமது மேன்மைதங்கிய அரசர் பெருமான் கட்டளைப்படி தங்களைக் கைது செய்கிறேன்" என்று அதிகாரத் தோரணையில் கூறி, வாரண்டை நீட்டினர். இதைக் கேட்டதும், முன்னையிலும் மஹிளா தேவியின் முகம் சவம் போல் வெளுத்தது. நடுக்கத்தோடு வாரண்டை கையில் வாங்கினர். அதைப் பிரித்துப் பார்க்கையில் கண்களில் நீர் நிறைந்து வழிய ஆரம்பித்தது. அவரால் அவ்வாரண்டில் உள்ள விஷயங்கள் முழுவதையும் படிக்க முடியவில்லை. அவர் தேகம் நிலைகொள்ளாது தள்ளாடியது. அடிக்கடி மேஜையைப் பற்றுக் கோடாகப் பற்றிநின்றார். பின்னர், அவ்வம்மையார் சிறிது தூரத்தில் நின்றிருக்கும் அவரது கணவரை மருட்சியோடு நோக்கினர். உடனே, அக்கனவான் இவரைப் பார்த்து கண்ணைச் சிமிட்டித் தலையை யசைத்தார். அக்கணமே, மஹிளாதேவி தமக்குள் ஏதோ தீர்மானத்துக்கு வந்தவர்போல், கண்களைத் துடைத்துக் கொண்டு, ஆடைகளைச் சீர்திருத்திக்கொண்டார். பிறகு, போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி, "நாம் போகலாமல்லவா;" என்று கேட்டார். அவர், "ஆஹா; தடையென்ன!" என்று கூறிக்கொண்டே நடந்தார். அவரது முகத்தில் பரிகாசப் புன்சிரிப்புத் தோன்றி மறைந்தது. அவரைப் பின்தொடர்ந்து மஹிளாதேவி தலைகுனிந்த வண்ணம் நடந்தார். அவர் போகு முன்பு எங்களை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. வெளியே நின்றிருந்த மோட்டாரில் போலீஸ்

இன்ஸ்பெக்டர் அவ்விருவரையும் ஏறி யமரும்படிச் செய்து தாமும் முன் பக்கத்தில் உட்கார்ந்தார்.

போலீஸார் வந்தவுடனேயே பயந்துபோன நாங்கள், எங்கள் பிரின்ஸிபால் மோசடிக் குற்றத்திற்காக வாரண்டு பிறப்பிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார் என்று அறிந்ததும் ஒன்றுந் தோன்ருது திகைத்துப் போனேம். எங்களுக்குக் கைகால்கூட ஓடவில்லை. மஹிளா தேவியைப் போலீஸார் கைது செய்ய வந்திருக்கும் விஷயம் மற்ற வகுப்புகளில் உள்ளவர்களுக்கும் தெரிந்துவிடவே, ஆசிரியைகளும், மாணவிகளுமாக அனைவரும் எங்கள் வகுப்பு அறையில் வந்து கூடிவிட்டார்கள். மஹிளாதேவி போலீஸாரோடு போகையில் யாரிடமும் ஒரு வார்த்தைகூடக் கூருது சென்றது அவர்களுக்குக்கூட ஆச்சரியமாய் இருந்தது. மோட்டார் புறப்படும் சமயத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் மோட்டார் பக்கத்தில் நின்றிருந்த ஹெட் கான்ஸ்டேபிளைக் கூப்பிட்டு இரகசியமாக ஏதோ சொல்லவே, அவர் மற்ருெரு கான்ஸ்டேபிளோடு வெளி வாயிலில் நாங்கள் கும்பலாக நின்றிருந்த இடத்துக்கு வந்து, "அம்மா! நீங்க ளெல்லாம் அவரவர் இருப்பிடத்துக்குப் போகலாம். வழக்கு விசாரணைக்கு வரும்போது, உங்களில் குறிப்பிட்ட சிலருக்குச் சம்மன் வரும். அச்சமயம், நீங்கள் வந்து உங்களுக்குத் தெரிந்தவைகளைச் சாட்சி சொல்லவேண்டும் என்று இன்ஸ்பெக்டர் ஐயா உங்களுக்குத் தெரிவிக்கச்சொன்னர். இக் கட்டிடம் 'சீலி' டப்பட்டு எங்கள் கண்காணிப்பில் இருக்கப் போகிற தாகையால் நீங்கள் போய்வாருங்கள்" என்று பணிவாகக் கூறினன். எனவே நாங்கள் இச்சம்பவத்தைப் பற்றிப் பலவிதமாக ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தோம்.

"புவனு! புவனு!! என்ன சமாச்சாரம்? உங்கள் டியூ டோரியல் காலேஜைப் பற்றிப் பத்திரிகையில் ஏதோ போட்டிருக்கிறதே! உங்கள் பிரின்ஸிபால் கைது செய்யப்பட்டு விட்டாராமே! உண்மையென்ன?" என்று பதைபதைப் போடு கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் என் தந்தை. அவர் அப்போதுதான் கம்பெனியிலிருந்து வந்து கொண்டிருந்தார். ஆதலால் இதுவரை அவரிடம் கலாசாலையில் நடந்த விஷயத்தைத் தெரிவிக்கச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. விஷயம் புரியாது ஏதோ களேபரம் ஏற்பட்டுவிட்டதென்று பிரமாதமாக எண்ணி மனக்கவலை யடையப்போகிறார் என்ற கருத்தினுல், என் தாயிடமும் இவ்விஷயத்தைக் கூறவில்லை. எதிர்பாராதவாறு ஏற்பட்ட இச்சம்பவத்தால் என் மனம் பெரிதுங் குழப்பமடைந்திருந்தது. ஆகவே நான் சாயங்காலம் என் தோழிகள் சிலரோடு கடற்கரைக்குப் பொழுது போக்கப் போய்விட்டு, என் தந்தை வருவதற்குச் சில விநாடிகளுக்கு முன்தான் திரும்பி வந்தேன் எனினும், அத் திகில் இன்னுந் தீராமையால். மாளிகையின் உள்ளுக்கும் வெளிக்குமாக உலாவிக்கொண்டிருந்தேன். திடீரென்று என் தந்தையின் குரல் கேட்கவே திரும்பிப்பார்த்து "அப்பா! வந்து விட்டீர்களா! எங்களுக்குக்கூட ஒன்றுந் தெரியாதப்பா? திடீரென்று காலையில் போலீஸார் வந்தனர்; பிரின்ஸிபால் மஹிளா தேவியை ஏதோ மோசடிக் குற்றம் என்று சொல்லிக் கைது செய்துகொண்டு போனுர்கள். காலேஜ் கட்டிடங்கூட 'ஸீல்' வைக்கப்பட்டிருக்கிறது........ ஆமாம். பத்திரிகையில் என்ன போட்டிருக்கிறதப்பா! காண்பியுங்கள்; பார்க்கலாம்" என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த பத்திரிகையைத் துடி துடிப்போடு வாங்கினேன். பிரித்துப் பார்த்தேன். ஓரிடத்தில் பெரிய

கொட்டை எழுத்துக்களால் இச் செய்தி பின்வருமாறு வெளியிடப்பட்டிருந்தது.

## 'காலேஜ் பிரின்ஸிபால்' மோசடி

### புருஷனும் மனைவியும் கைதியாயினர்

### கலாசாலைக் கட்டிடம் சீல் வைக்கப்பட்டது

(நமது நிருபர்)

செப். 13உ

"இன்று காலை குற்ற இலாகா போலீஸார் இந்நகரில் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருந்த "மஹிளாதேவி டியூடோரியல் காலேஜ்" பிரின்ஸிபால் மஹிளாதேவியையும், அவரது கணவனென்று கூறப்பட்ட மனிதரையும், மோசடிக் குற்றத்துக்காக கைது செய்தனர். அதோடு கலாசாலைக் கட்டிடமுஞ் சீல் வைக்கப்பட்டுப் போலீஸார் மேற் பார்வையில் இருந்து வருகிறது.

இச்சம்பவத்தைப்பற்றித் தீவிரமாக விசாரணை செய்ததில், இவ்விருவரும் கைது செய்யப்படுவதற்குக் காரணமாயிருந்தது, மஹிளாதேவி பர்மாவிலுள்ள தன் தாய்க்கு எழுதிய கடிதமே யென்றும், அக்கடிதம் தபால் இலாகா அதிகாரிகளால் சந்தேகங் காரணமாகப் பிரித்துப் பார்க்கப் பட்டதென்றும், அதிலுள்ள விஷயம் விபரீதமா யிருந்ததால், இது போலீஸ் கமிஷனர் பார்வைக்கு அனுப்பப் பட்டதென்றும், அவர்கள் அதைப் பரிசீலனை செய்து உடனே நடவடிக்கை யெடுத்துக்கொண்டு, இவ்விருவரையும் கைது செய்திருக்கிறார்களென்றுந் தெரிகிறது. அக்கடி-

தத்திலுள்ள விஷயம் மிக அந்தரங்கமாக வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கூடிய சீக்கிரம் மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்குக் கொண்டுவரப்படுவார்கள்.

இதைப் படித்ததும் என் மனம் பலவிதமாக வெல்லாம் எண்ணியது. இது சம்பந்தமாக, யானும் என் தந்தையும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம். கடைசியாக என் தந்தை ஆயாசத்தோடு, "புவனு! மஹிளா தேவியிடம் முன்பணமாகக் கட்டிய 300 ரூபா தொலைந்தமாதிரிதான். இனி அதைப்பற்றி எண்ணுவதில் பயனில்லை. பழையபடி நீ ராஜதானி கலாசாலைக்கே போய்வா. திடீரென்று சொல்லாது இரண்டு வாரத்துக்கு மேலாக நின்றுவிட்டதைப்பற்றிக் கலாசாலை அதிகாரிகள் தகராறு செய்யக்கூடும். அதற்கு நான் தகுந்த சமாதானஞ் சொல்லிச் சரிப்படுத்திவிடுகிறேன். என்ன சொல்லுகிறாய் அம்மா!" என்று கேட்டார்.

"அப்படியே போகிறேன் அப்பா!" எனக் கூறினேன். அதற்கப்புறம் நான் முன்போலவே தினந்தோறும் ராஜதானி கலாசாலைக்குச் சென்று படித்து வந்தேன். நான் மறுபடியும் சேர்ந்து படிக்கத்தொடங்கியது, பிரிந்துபோன காலத்து வருத்தந் தெரிவித்த என் நண்பர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையுங் குதூகலத்தையுங் கொடுத்தது. ஆனால் புரொபஸர் சம்பத் மட்டும் என் முகத்தில் விழிக்கத் துணியாது, என்னைத் தூரத்தில் பார்க்கும்போதே ஒளிந்து தலைமறைந்து வந்தார்.

மஹிளா தேவியின் தொடர்பு எனக்கு ஏற்பட்டு ஒரு சில நாட்களேயாயினும் அவளை எளிதில் மறக்க முடியவில்லை. என் கண்ணெதிரே போலீஸார் அவள்மீது மோச

டிச் குற்றஞ் சாட்டிக் கைது செய்துகொண்டு போனாலும், என் மனம் அவளைக் குற்றவாளியென்று கருதவும் இடம் கொடுக்கவில்லை. அவளுக்கும், அவளது கணவனுக்கும் யாராயினும் விரோதிகள் இருந்து, சதி செய்து அவர்கள் மீது மோசடிக் குற்றத்தை யேற்படுத்தி யிருக்கக்கூடும் என்று என் பேதை மனம் எண்ணியது; நம்பியது. ஆகவே அவர்கள் மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கின் முடிவை யறிய, ஒவ்வொருநாளும் தவருது பத்திரிகையில் அவ்வழக்கின் விசாரணையைப் படித்து வந்தேன். விசாரணையின் போது பல உண்மைகள் வெளியாயின. எதிரிகளாகிய இவ்விருவர் செய்த சதிக்கு உதவியாக இருந்ததற்காக பர்மாவிலிருந்து மூன்று பேரும், வங்காளி மகளிர் நான்கு பேரும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டனர். இவ்வழக்கில் சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் என் தந்தையும் ஒருவராவர். முடிவில் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் பொருள் சம்பாதிக்கும் நோக்கத்தோடு, சென்னை சர்க்காரையும், பொது மக்களையும் ஏககாலத்தில் ஏமாற்றி, படித்த பெண்கள் வாயிலாகப் பொருளைக் கொள்ளை யடித்ததாகக் குற்றஞ்சாட்டி முதல் எதிரியாகிய விமலேந்த போஸுக்கு 10 வருஷமும், மஹிளாதேவிக்கு 6-வருடமும், மற்ற எதிரிகளில் ஆடவர்களுக்கு நான்கு வருடமும், பெண்களுக்கு இரண்டு வருடமும். கடுங்காவல் தண்டனை விதித்தார். அத்தீர்ப்புச் சரியானதல்லவென்று கூறி எதிரிகள் மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொண்டனர். அங்கும் கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பே நீதிபதிகளால் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. எனவே, விமலேந்த போஸும் மஹிளா தேவியும் எவ்வளவோ சாமர்த்தியமாக தாங்கள் குற்றவாளிகளல்லவென்று சாதிக்க முயன்றும் ஒன்றும் முடியாது கடைசியாகக் காராக்கிருகம் புகுந்தனர்.

இவ்வழக்கில் வெளியான விமலேந்த போஸ், மஹிளா தேவி ஆகியவர்களின் திருவிளையாடல்களை என்னென்பது! இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாகவும், அற்புத மாக வுமே இருக்கிறது. அவர்கள் வரலாற்றை ஒரு பெரிய கதை யாகக்கூட எழுதலாம். இருந்தாலும் உமக்குச் சுருக்கிக் கூறுகிறேன். மஹிளாதேவி பர்மாவில் வியாபார நிமித்த மாகக் குடியேறிய வங்காளிக்கும், பர்மியப் பெண்ணுக்கும் பிறந்தவள். ஆகவே அவள் பேரழகியா யிருப்பதில் வியப் பொன்று மில்லை. அவள் நன்கு வளர்ந்து படித்து வருகை யில், வங்காளவாசியான விமலேந்த போஸ் பர்மா போய்ச் சேர்ந்தான். இவர்களிருவரும் எப்படியோ சந்தித்து ஒரு வரை யொருவர் காதலித்தனர். இதற்கு முன் மஹிளா தேவியோடு பழகிக் காதலித்திருந்த சில பர்மிய வாலிபர் களும் மற்றுஞ் சில வாலிபர்களும் விமலேந்த போஸுடன் சண்டைக்கு வந்து அவன் உயிருக்கு உலை வைக்க முயன்ற னர். எனவே, இவ்விருவரும் ஒருவருக்குந் தெரியாமல் பர் மாவை விட்டு இந்தியாவுக்கு ஓடி வந்துவிட்டனர். விம லேந்த போஸ். பி. ஏ. பாஸ் செய்திருந்தான். அத்துடன் உலகப் போக்கை நன்கு உணர்ந்தவன். இவளும் நன்கு வாசித்திருந்ததோடு பல தேச மக்களுடன் பழகி நன்கு பேசக் கற்றுக்கொண்டிருந்தாள். இருவரும் இந்தியாவில் பல இடங்களிலும் சுற்றியலைந்தனர். விமலேந்த போஸுக்கு எங்கும் வேலை கிடைக்க வில்லை. கையில் கொஞ்ச நஞ்சமிருந்த பணமுஞ் செலவாகிவிட்டது. பல நாள் பட் டினி கிடந்து வருந்தினர். பிழைக்க வழி யென்னவென்று இருவரும் பலநாள் யோசித்தனர். சென்னையை யடைந்த னர். அந்நகரின் நிலைமையையும், மக்கள் மனப் போக்கை யும் நன்கு உணர்ந்தனர். அங்கு அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. கலாசாலைகளில் சேர்ந்து படிக்கா

மலே, பரிக்ஷைசெல்ல விரும்புபவர்களுக்காக, எங்கு பார்த்தாலும், டியூடோரியல் காலேஜுகள் இருக்கின்றமையால், ஏன் நாமும் பெண்களுக்காக மட்டும் இம்மாதிரி டியூடோரியல் காலேஜ் ஏற்படுத்தக்கூடாது? அவ்வாறு ஏற்படுத்தினுல், இப்போது மேற்படி கலாசாலைகளில் ஆண்களோடு கலந்து படிக்கும் பெண்களெல்லாம் இங்கு வந்து சேர்ந்து படிக்க விரும்புவார்கள் என்று விமலேந்தபோஸ் நம்பினுன். ஆனுல், இதில் ஒரு தடையிருக்கிறது; விமலேந்த போஸ் வெறும் பி. ஏ. தான்! எல். டி. கூட பாஸ் செய்யவில்லை. இந்நிலையில் அவன் ஆசிரியனுக இருக்க முடியாது. மேலும், பெண்களுக்குப் பெண்களே ஆசிரியைகளாக இருந்தால் தான் பெற்ருேர்களுக்கும் நம்பிக்கையாக இருக்கும்; மாணவிகளும் ஏராளமாகச் சேர்வார்கள். ஆமாம் ஆசிரியைகளுக்கு எங்கு போவது? அவர்கள் முதலில் பணமில்லாது எப்படி வருவார்கள்? வரும் ஆசிரியைகளில் எவரையேனும் பிரன்ஸிபாலாக ஏற்படுத்தினுல், இவர்களுக்கு எவ்வித அதிகாரமும், சுதந்திரமும் ஏற்படாது. இச் சந்தர்ப்பங்களையெல்லம் இருவரும் யோசித்துப் பார்த்தனர். 'இக்கலாசாலையை நாம் ஒன்றும் நீடித்து நடத்தப்போவதில்லை. பொருள் சம்பாதிப்பதற்காகவே தற்காலீகமாக ஏற்படுத்தப் போகிருேம்; ஆதலால் இதில் ஏன் சூழ்ச்சியையுங் கையாளலாகாது' என்று இருவருக்கும் துணிவேற்பட்டது. கடைசியாக இவர்களது நண்பர்களும், வேலையில்லாது திண்டாடுபவர்களுமான பட்டம் பெற்ற பெண்கள் ஐந்தாறுபேர் பர்மாவிலிருந்தும், வங்காளத்திலிருந்தும் வரவழைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆசை வார்த்தை காட்டவே, இவர்களது சூழ்ச்சிக்கு அவர்களும் இணங்கினர்; துணை நின்றனர். உடனே, மாடீன் நியூன் என்ற பெயர் பெற்றிருந்த பர்மியப்பெண், மஹிளாதேவி எம், ஏ., (Oxon)

எல். எல். பி. என்னும் உயர்தர பட்டம் பெற்ற வங்காளப் பெண்மணியானுள். (இதிலிருந்து அவளது இயற்பெயர் மஹிளாதேவி யல்லவென்றும் தங்கள் காரியத்திற்காகவே வைத்துக்கொண்ட மாறுபெயரென்றும் தெரிந்துகொள்ள லாம்.) கலாசாலை சம்பந்தப்பட்ட சகல விஷயங்களுக்கும் அவளே சர்வாதிகாரியானுள். விமலேந்த போஸ் மறைமுக மாக அடிக்கடி அவளுக்கு யோசனை கூறிக் காரியத்தைத் திறமையாக நடத்திவந்தான். வெளியிலிருந்து வந்த பெண் கள் உண்மையிலேயே எம். ஏ. எல். டி., பி. ஏ. எல். டி., பட்டம் பெற்றவர்களாகையால், ஆசிரியைகளாயினர், மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல், அவர்களைக் காட்டி உள்ளூரிலிருந்தும் இரண்டு மூன்று பெண்கள் நம்பிக்கை ஏற்படுவதற்காக ஆசிரியைகளாக அமர்த்தப்பட்டனர். உத்தியோகம் வாங்கித் தருகிறோம் என்று சொல்லி அவர் களிடம் கூட நூறு இருநூறு இலஞ்சம் வாங்கியதாக விசா ரணையின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அது ருஜு வாகவில்லை. விமலேந்த போஸ் பத்திரிகைகளில் வெளியிட்ட விளம்பரம் நல்ல பலனை விரைவில் கொடுத்தது. ஏராளமாகப் பெண்கள் பலவிதமான உயர்தர படிப்புகளைப் பயில்வதற் காக வந்து சேர்ந்தனர். அந்தந்த பட்டங்களுக்குத் தகுந்த வாறு ஒவ்வொரு மாணவியிடத்தும், இருநூறு, முந்நூறு, நானூறு என்று காலேஜ் கட்டணம் முன் கூட்டியே வாங் கப்பட்டது. இவ்வித நிர்வாகங்களை மஹிளாதேவியே கவனித்து வந்தாள். விமலேந்த போஸ், மாணவிகள் வந்து சேர ஆரம்பித்த பின்னர், வெளிப்படையாக மஹிளா தேவி யின் நிர்வாகக் காரியங்களில் கலந்து கொள்வதில்லை. போலீ ஸார் கைது செய்யப்படும் வரை மஹிளா தேவிக்குக் கண வனிருக்கிறுன் என்ற விஷயமே யாருக்கும் தெரியாது. அவ் வளவு எச்சரிக்கையாக அவர்கள் நடந்து வந்திருக்கின்றனர்

மாணவிகள் கட்டிய கட்டணங்கள் சுமார் இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் சேர்ந்து விட்டன. எனவே, விமலேந்து போஸும், மஹிளாதேவியும் தாங்கள் போட்ட திட்டம் எதிர்பார்த்த அளவுக்குமேல் வெற்றியோடு நிறைவேறி விட்டது கண்டு மகிழ்ச்சி கொண்டாடினர். இத்தொகையோடு அவர்களிருவரும் யாருக்கும் தெரியாமல் பர்மாவுக்குச் சென்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தனர். அவ் விஷயத்தை விவரித்து மஹிளாதேவி தன் தாய்க்குக் கடிதமெழுதித் தாங்கள் கூடிய சீக்கிரம் பர்மா வந்து சேர்ந்து விடுவதாகத் தெரிவித்திருந்தாள். அக்கடிதந்தான் போலீஸாரால் கைப்பற்றப்பட்டது. தங்களை நம்பி வந்த பட்டம் பெற்ற பெண்களுக்கும் நாமம் போட்டுவிட்டுச் செல்ல நினைத்த அவ் வஞ்சகர்கள் கடைசியில் தங்களுக்கே பெரிய நாமம் போட்டுக்கொண்டு சிறைச்சாலையைத் தங்கள் வாசஸ்தலமாக அடைந்தனர். ஆ! அவர்களது சூழ்ச்சியையும் வஞ்சத்தையும் பார்த்தீர்களா! மஹிளாதேவி எவ்வளவு பேரழகியாக இருந்தாளோ அவ்வளவுக் கவ்வளவு வஞ்சகியாகவும், விஷக் குண்டூசியாகவும் இருந்தாள். வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடக்கூடாது என்று இதிலிருந்து ஏற்படுகிறதல்லவா! உலகமே அப்படித்தான்' என்று விரக்தியாகக் கூறிப் புவன சுந்தரி பெருமூச்சு விட்டாள்.

---

## ஒன்பதாவது அதிகாரம்

### சிதம்பரநாதனின் கலியாண வெறி.

புவனசுந்தரி கூறும் ஒவ்வொரு விஷயமும், எனக்கு அதியாச்சரியத்தை யுண்டுபண்ணி வந்தமையால், நான்

வாய்திறவாது அமைதியாக இருந்தே கேட்டு வந்தேன். முகவாய்க் கடையின் மீது கையை வைத்துத் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டிருந்த புவனசுந்தரி சிறிது நேரங் கழித்து மீண்டும் பேசலானாள்:—"அது போகட்டும் நண்பரே! நான் பி. ஏ. ஸீனியர் வகுப்பில் வாசித்துக் கொண்டிருக்குங்காலம், பரீக்ஷைக்கு இன்னும் இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. பரீக்ஷையில் நான் கட்டாயம் தேறிவிடுவேன் என்று எல்லோரும் உறுதியாக நம்பினர். எனக்கும் அந்த தைரியம் உண்டு. ஏனென்றால், என்ன தான் விளையாட்டிலும் கேளிக்கையிலும் என் மனம் ஈடுபட்டு நான் பொழுது போக்கிக்கொண்டு வந்தாலும், அன்றன்றைய பாடங்களை ஒழுங்காகப் படித்து மனதில் பதிய வைத்துக்கொள்வது எனது வழக்கம். அதோடு, நான் சிலரைப் போலப் பெற்றோர்களுக்காகவும், மற்றவர்கள் வற்புறுத்தலுக்காகவும் படிக்காமல், எனக்காகவே உற்சாகத்தோடு படித்து வந்தேன். வகுப்பிலும், நான் மற்ற மாணவர்களைக் காட்டிலும் முன்னணியிலேயே இருந்து வந்தேன். ஆகவே, பரீக்ஷையில் நான் கட்டாயம் தேறிவிடுவே னென்பதில் என்னைவிட புரொபஸர்களுக்கும் என் தோழர்களுக்கும் பெரிதும் நம்பிக்கை யிருந்ததில் ஆச்சரியமில்லை யல்லவா!

இங்கிலையில், என் பெற்றோர் பரீக்ஷை முடிந்ததும் எனக்கு விவாகஞ் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தகுந்த வரனைத் தேடலாயினர். இவ்விஷயமாக அவர்கள் உதடு அசைந்ததோ இல்லையோ எனது உறவினர்களில் பலர் தங்கள் பிள்ளைகளைக்கொடுக்க நான் முந்தி; நீ முந்தி என்று வந்தனர். எப்போது பார்த்தாலும், எங்கள் மாளிகையில் உறவினர் வருவதும் போவதும் விவாகப் பேச்சுப்பேசுவதுமாகவே இருந்தனர். இது எனக்குப் பெரிதும் சங்கடத்தை

யுண்டு பண்ணியது. இதனிடையே, என் அம்மான் மகனை சிதம்பரநாதன் வந்து சேர்ந்தான். அவன் என் தந்தையின் உதவியால் பி. ஏ. பாஸ் செய்தவன். மன்னார்குடியில் பிதிரார் ஜித சொத்தை வைத்துக்கொண்டு காலங்கழித்து வருகிறான். முன்னெல்லாம் அவன் வந்தால் இரண்டொரு நாட்களுக்கெல்லாம் திரும்பிப் போய்விடுவான். இம்முறையோ ஒரு மாதத்துக்கு மேலாகியும், அவன் போகும் வழியாகக் காணோம். இங்கேயே இருந்துவிடத் தீர்மானித்திருக்கிறானோ என்றுகூட நான் சந்தேகித்தேன். அவன் என்னை விட நாலைந்து வயது பெரியவன். எப்போதும் தலைக் கிறுக்குடனேயே இருப்பான். அதோடு தூர்த்தன். எனினும், நான் என் தாயோடு பிறந்த அம்மான் மகன் என்ற மரியாதையோடேயே அவனிடம் நடந்து வந்தேன், ஆனால் அவன் இதற்கு முன்னெல்லாம் என்னிடம் நெருங்க மாட்டான். ஏதேனும் சந்தர்ப்ப மேற்பட்டாலும், அவன் என்னைப் பார்த்து, "நீ பெரிய இடத்துப் பெண்; அதோடு துரைசானி. எனக்கு உன்னோடு பேசக்கூட யோக்கியதை யேது?" என்று கூறி நகைத்துக்கொண்டே போய்விடுவான். அப்பேர்ப்பட்டவன், இத் தடவை என்னோடு மிக நெருங்கிப் பேசவும், சதா என்னுடன் இருக்கவும் முயன்று வந்தான். நான் விரும்பா திருக்கையிலேயே எனக்கு ஆவனவற்றைச் செய்து என் மனம் உவக்கும் வகையைப் புரிவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தான். இதில் ஏதோ உட்குறிப் பிருக்கிறது என்று உணர்ந்தேனாயினும், அதைத் தெரிந்துகொள்ள நான் முயலவில்லை. நான் எப் போதும் போலவே அவனிடம் நடந்து வந்தேன்.

என் பரீக்ஷையும் நடந்தேறிவிட்டது. கேள்விப் பேப்பர்கள் எனக்கு எளிதாகவே இருந்தமையால், ஒவ்வொன்றுக்கும் நன்றாக விடையெழுதியிருந்தேன். எனவே, நான்

மிகவுங் குதூகலமாயிருந்தேன். இவ்விதமிருக்க, ஒரு நாள் பிற்பகல் என் பெற்றோர் யாரோ உறவினரைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனார்கள். அதற்கு முன் நாளே என் சிற்றப்பாவும், சிற்றன்னை முதலியோரும் பெரம்பூருக்குச் சென்றுவிட்டார்கள். சிதம்பரநாதன் காலையிலேயே எங்கேயோ போயிருந்தான். மாளிகையில் வேலைக்காரர்களே இருந்தமையால், என் தாய் எனக்குத் துணையாக, எங்கள் குடும்பத்தோழரான கிழவர் சுப்பராய முதலியாரை வரவழைத்துவிட்டுச் சென்றனர். போகையில் விளக்கு வைப்பதற்குள் வருவதாகச் சொல்லிச் சென்ற என் பெற்றோர் இரவு மணி பத்தடித்தும் வரவில்லை. என்னமோ ஏதோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஏதோ காரியம் இருந்தாலன்றி, இவ்வளவு நேரம் எங்கும் தாமதிக்கமாட்டார்களென்று கிழவர் சமாதானங் கூறினார். அவர் என் கவனத்தை வேறு வழியில் திருப்ப என்னென்னமோ கதை யளந்துகொண்டிருந்தார். அவர் இங்கிதமாகவும், நயமாகவும் யாரிடமும் பேசுவா ராகையால், நான் அவரிடம் மதிப்பும் அன்பும் வைத்திருந்தேன். நாங்கள் சாப்பிடுவதற்கு 11-மணிக்கு மேலாயிற்று. அப்புறம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுக் கடைசிமாக, "அம்மா! நேரமாய்விட்டது. நீ படுத்துறங்கு. அவர்கள் வந்துவிடுவார்கள். நான் வெளியில் படுத்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டுக் கிழவர் சென்றார்.

நான் கட்டிலின்மீது படுத்தேன், உறக்கமே வரவில்லை. பெற்றோரை நினைந்து என் மனம் எண்ணாததெல்லாம் எண்ணிக் கலங்கியது. படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். கண்ணை மூடிக்கொண்டே மணியடிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தேன், திடீரென்று அறைக் கதவு மெல்லத்

திறக்கப்படும் ஓசை கேட்டுத் திடுக்கிட்டேன். வெளியே கிழவர் பாதுகாவலாகப் படுத்திருப்பதால் நான் கதவைத் தாளிடாது சாத்தியிருந்தேன். கதவு திறக்கப்படும் சப்தத்தைக் கேட்டதும், என் பெற்ருேர்தான் வந்து விட்டனரோ என்று நினைத்தேன். என் மனம் படபடத்தது. துடி துடிப்போடு எழுந்தேன். என் எதிரே ஏதோ ஓர் உருவம் மெல்ல வருவதுபோல் காணப்பட்டது. உற்றுப் பார்த்தேன். சிதம்பரநாதன் அசட்டு நகை நகைத்துக்கொண்டு நின்ருன். அவனைக் கண்டதும் திகைப்புற்று பின்னடைந்தேன். "இந்நேரத்தில்—அதுவும், என் பெற்ருேர் வீட்டிலில்லாத சமயத்தில் அவன் ஏன் என் அறைக்கு வந்தான்? இரவு பதினெரு மணிவரை காணப்படாதவன் இந்நடு நிசியில் எங்கிருந்து இங்கு வந்து முளைத்தான்? இந்நேரத்தில் அவன் என்னை நாடி வருவதற்கு என்ன அவசியம் நேர்ந்தது? அப்பேர்ப்பட்ட அவசரமான காரியம் என்ன இருக்கிறது?—ஒரு வேளை வெளியே சென்ற என் பெற்ருேருக்கு ஏதேனும் நேர்ந்து விட்டதோ? அந்தக் கவலைப்பற்றி என்னிடம் தெரிவிக்கத்தான் இவ்வளவு துணிவாக வருகிருனே?—என்ன இருந்தாலும் ஒரு கன்னிப்பெண் தனித் துறங்கும் இடத்துக்கு வாலிபனுகிய இவன் எப்படி வரலாம்? வெளியேயிருந்தே கதவைத் தட்டி ஏன் என்னை யெழுப்பி யிருக்கலாகாது?—ஆபத்தான காலத்தில் இவ்வாறு நாகரீக முறையில் நடந்துகொள்ளவேண்டுமென்று அவனுக்குத் தோன்றியிராது.—நாம் ஏன் ஒரு விஷயமுந் தெரியாததற்கு முன் மனதைக் குழப்பிக் கொள்ளவேண்டும்? அவன் எதற்காக இங்கு இந்நேரத்தில் வந்தான் என்று கேட்டுப் பார்ப்போம்" என்று பலவாறு எண்ணி எனக்குள்ளாகவே சமாதானஞ் செய்து கொண்டு மின்சார விளக்கைப் பொருத்தி

னேன். சிறிது நேரத்தில் எனக்குண்டான குழப்பத்தை இதுவரை இருட்டாயிருந்தமையால் சிதம்பரநாதன் அறிந்திருக்க முடியாது. ஆகவே நான் விளக்கை யேற்றிவிட்டு அவனை நோக்கியதும், திடீரென்று திடுக்கிட்டு நின்றான். ஆனால், அவன் அந்நிலையை அடுத்த கணத்தில் சமாளித்துக் கொண்டான். எனினும் அவன் முகத்தில் அசடு வழிந்தது.

அவன் ஒன்றுஞ் சொல்லாது தயங்கி நிற்பதைக் கண்டதும், எனக்கு மீண்டும் பயமுண்டாயிற்று. என் தாய் தந்தையருக்கு ஏதோ விபத்து நேர்ந்திருக்க வேண்டும்; அதைச் சொல்லத்தான் இவன் தயங்குகிறான் என்று நான் எண்ணியதால் படபடப்போடு, அவனை யணுகி, "என்ன சிதம்பரம்! ஏன் தயங்கி நிற்கிறாய்? அப்பாவும் அம்மாவும் வந்து விட்டார்களா?" என்று கெட்டேன்.

அதற்கும் அவன் பதில் சொல்லாது நின்றான். எனவே, எனக்கு மேலும் சந்தேகம் அதிகமாகிவிட்டது. "என்ன பதில் கூறாமல் மௌனஞ் சாதிக்கிறாய் சிதம்பரம்? அவர்களுக்கு என்ன நேர்ந்தது? சொல்—விஷயத்தைச் சொல்-நடந்ததைச் சொல்-மறைக்காமல் சொல்—உடனே சொல், என்ன! என்ன!! உனக்கு வாயடைத்தா போய்விட்டது?" என்று ஆத்திரத்தோடு வினவினேன். உடல் என் கட்டுக் கடங்காமல் பதறியது. இன்னும் ஒரு விநாடியில் தலை கிறுக்கி விழுந்துவிடுவேன் போலிருந்தது. ஆகவே, நான் பின்னுக்குப் போய்க் கட்டிலின் முகப்பைப் பிடித்துக், கொண்டு சாய்ந்தாற்போல் நின்றேன்.

சிதம்பரநாதன் முகத்தில் புன்சிரிப்புத் தோன்றி மறைந்தது. அவன் பல்லை இளித்துக்கொண்டே என்னை யணுகி 'என்ன சுந்தரி! இப்படிப் பதைக்கிறாய்? வெளியே ஏதோ காரியமாகப் போனவர்கள் வேலை முடிந்தால் வருகிறார்கள்

அதற்காக நீ யேன் இவ்வளவு தூரங் கவலைப் படுகிருய்? அவர்கள் என்ன குழந்தைகளா காணுமல் போக? எல்லாம் அவர்கள் காலையில் வருவார்கள். நீ மன நிம்மதியா யிரு" என்று கூறினன்.

நான் ஆவலோடு எதிர் பார்த்திருக்கும் என் பெற்ருேரைப் பற்றித் தகவல் ஒன்றுஞ் சொல்ல வரவில்லை யென்று அவனது பதிலிலிருந்து தெரிந்ததும் நான் மிகவும் ஆத்திரமடைந்தென். "அப்படியானல் நீ என் நான் தனித்திருக்கும் இடத்துக்கு இந் நேரத்தில் வந்தாய்? எதற்காக வந்தாய்?" என்று உரத்த குரலில் அதிகாரத் தோரணையோடு கேட்டேன்.

"நீ கேட்பதைப் பார்த்தால், நான் இங்கு வந்தது தவறு என்று ஏற்படுகிறது. அப்படித் தானு?"

"சந்தேக மென்ன? நீ எப்படி இந்நடு இரவில் கதவைத் திறந்துகொண்டு வரலாம்? இது வாய்பு மீறிய செயலென்பதை நீ உணர வில்லையா? என்னை இந் நேரத்தில் பார்க்க வேண்டிய அவ்வளவு அவசரமென்ன? அவசியம் என்ன நேர்ந்தது?"

"அவசரமும் அவசியமும் இருந்தால்தான் உன்னை வந்து பார்க்கலாம்; இல்லாவிடில் வந்து பார்க்கக்கூடாதா? எனக்கு அவ்வளவு உரிமைகூட இல்லையா?"

"உரிமையாவது? உருளைக் கிழங்காவது? முன் அறிவிப்பில்லாமல் திடீரென்று நான் படுத்திருக்கும் அறையைத் திறந்துகொண்டு வருவதுதான் உரிமை போலும்! வீணுக வார்த்தைகளை வளர்த்துவானேன்? நீ எதற்காக என்னை நாடி வந்தாய்! அதைச் சொல்."

"எதற்காக உன்னை நாடி வந்திருப்பேன் என்று நீ தான் சொல்லேன்?"

"விதண்டா வாதஞ் செய்யாதே சிதம்பரம்! வந்த விஷயத்தைச் சொன்னால் சொல்; இல்லாவிட்டால் வெளியே செல்.

"துரைசானி கோபித்துக் கொள்ளக்கூடாது. இதோ சொல்லிவிடுகிறேன்."

"சரி' சொல்."

"உன்னிடம் ஒரு விஷயம்........................"

"அதென்ன விஷயம்? சொல்லித் தொலையேன்! ஏன் இழுக்கிறாய்?"

"அதுதான் கலியண விஷயம்."

"என்ன கலியாண விஷயமா?"

"ஆமாம்."

"யாருக்குக் கலியாணம்? உனக்கா?"

"ஏன் உனக்குத்தான்?"

"சட்! விளையாடாதே! இந்தக் குறும்புப் பேச்செல்லாம் என்னிடம் பேசாதே!— கலியாணப் பேச்சுதான் இப்போது அவசரம் போலும்! வேளையும் நேரமும் பார்த்து வந்தாயே? உன் அறிவை யென்னென்பது—உம். அதுவும் கலியாணப் பேச்சு என்னிடம் என்ன பேசவேண்டியிருக்கிறது! போ வெளியே" என்று நான் கோபமும் வெறுப்புந் தோன்றப் பேசினேன்.

சிதம்பரநாதன் சிறிதும் பின் வாங்காது தைரியமாகவே, "சுந்தரி! இப்போது உன்னிடம் விளையாட வரவில்லை; நாம் விளையாடுவதற்கு வேறு நேர மிருக்கிறது.—

அவசரமும், முக்கியமுமான விஷயத்தைப் பேசி முடிவு கட்டவேதான் இப்போது உன்னிடம் வந்திருக்கிறேன். அதனால் உன் தூக்கத்துக்குப் பங்கமும், சிரமமும் ஏற்பட்டாலும் பாதகமில்லை என்றே கருதுகிறேன். நமக்குக் கூடிய சீக்கிரத்தில் நடக்கப்போகும் கலியாணத்தைப் பற்றி உன்னிடம் பேசாது வேறு யாரிடம் பேசுவது? இது சம்பந்தமாக உன் அபிப்பிராயத்தை அறிந்து போகவே இவ்வளவு அவசரமாக இந் நடு ராத்திரியி........................" என்று கூறி வருகையில் நான் இடைமறித்து, "என்ன! என்ன சொன்னாய்! உனக்கும் எனக்குமா கலியாணம்? உன் மூளையில் என்ன கோளாறு? அல்லது வெறி ஏற்பட்டு விட்டதா? வாயில் வந்தவாறு ஏதேதோ பிதற்றுகிறாயே!" என்று அடங்காக் கோபத்துடனும் ஆச்சரியத்துடனும் கூறினேன்.

சிதம்பரநாதன் அப்போதும் சாவதனமாகவே பேசத் தொடங்கி, "பதட்டமாகப் பேசுவதில் பயனில்லை சுந்தரி! விஷயத்தை முழுதும் சொல்லுவதற்குள் ஆத்திரப் படுகிறாயே! உன் தாயும் தந்தையும் உன்னை எனக்கு விவாகஞ் செய்து கொடுக்கத் தீர்மானித்துவிட்டனர். தங்களது தவப்பயனாய் உதித்த ஏக புத்திரியாகிய உனக்குத் தகுந்த வரன் யானே என்பது அவர்களுடைய கருத்து. உன் அருமையை யறிந்து அன்பாக நடத்த என்னைவிட உலகில் வேறு யாருக்க முடியும்! ஆகவே, நானும் அவர்களது விருப்பத்துக்கு மிக மகிழ்ச்சியோடு இசைந்தேன். அழகுக்கு உறைவிடமாகவும், அறிவுக் களஞ்சியமாகவும் திகழும் உன்னை என் அருமை மனைவியாகப் பெறும் பாக்கியத்தை அடைந்திருக்கும் என்னைவிட அதிர்ஷ்டசாலிகள் இவ் வுலகில் யாரிருமே இருக்க முடியாது என்பது என் திடமான எண்

ணம். ஆயினும் அவ்விவாக விஷயத்தில் உன் அபிப்பிராயத்தையுந் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம் என்று கருதினேன்.—நீ என்னைக் கணவனாக அடைவதைப் பெருமையாகவும், சந்தோஷமாகவுங் கருதுவாய் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆனாலும் உன் பவள வாயால் சம்மதத்தைக் கேட்டுப் களிப்படையவேண்டியே இப்போது வந்தேன். என்ன சொல்லுகிறாய் இப்படிப் பார். என்னை விவாகஞ் செய்துகொள்வதில் உனக்கு மகிழ்ச்சி தானே?'' என்று தான் சொல்ல நினைத்ததைக் கூறி முடித்தான்.

அவன் பிதற்றலைக் கேட்டு என்னால் சகிக்க முடியவில்லை. அவன் பேசுவதைத் தடுக்க இடையிடையே முயற்சித்தேன். அவன் எனது சினத்தைப் பொருட்படுத்தாமல் ஓரே மூச்சாய்ப் பேசி முடித்தான். என் பெற்றோர், இக்கர்விக்கு என்னை விவாகஞ் செய்து கொடுக்கத் தீர்மானித்து விட்டனர் என்று அவன் கூறியபோது என் உடம்பு என்ன காரணத்தாலோ நடுங்கியது. இம்மொழி அவன் என்னைத் தன் வசப்படுத்துவதற்காகக் கூறியதாக இருக்கலாம் என்று எண்ணி அலட்சியப்படுத்தினாலும், என் மனம் என்னமோ பெரிதும் வேதனையுற்றது. ஆகவே நான் ஆத்திரத்தை யடக்காமல் "சிதம்பரம்! உன் சாகஸத்தாலும், தற்பெருமைப் பேச்சாலும் என்னை மயக்கிவிடலாம் என்று முயலுவது வெறும் பகற் கனவே யாகும். என் தாய் தந்தையராவது! உனக்கு என்னைக் கலியாணஞ் செய்து கொடுப்பதாகத் தீர்மானிப்பதாவது! அதுவும் என்னை அறியாமல்? இம்மாதிரி பொய்ம்மொழி பேசி என்னை ஏமாற்றி உன் வசப்படுத்தலாமென்று மனப்பால் குடித்து என் பெற்றோர் இல்லாத சமயம் பார்த்து இந்நடு இராத்திரியில் வந்தாய் போலும்! அதெல்லாம் என்னிடம் பலிக்காது. நீ தலைகீழாய் நின்று தவஞ்

செய்தாலும் உன்னை விவாகஞ் செய்து கொள்வேன் என்று மட்டுஞ் சிறிதும் நினையாதே! வேண்டுமானால் என் தந்தையிடஞ் சொல்லி உனக்குத் தகுந்த பெண்ணைப் பார்த்துக் கலியாணஞ் செய்து வைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். நான் உன்னிடம் மரியாதையாகவும், அன்பாகவும் நடந்து கொள்ள வேண்டுமானால், நீ என்மீது வைத்துள்ள வீண் மோகத்தை யொழித்து ஒழுங்காக நடந்துகொள்—நான் இப்போது கலியாணத்தைப்பற்றியே கவலையில்லாத நிலையிலிருக்கிறேன். கலியாணம் என்றால், என்னவென்பதையே அறியாத நிலையிலிருக்கும் எனக்கு என் பெற்றோர் வரன் தேடி யலைவதும், அது சம்பந்தமாக நம் உறவினர் சிலர் பேசிச் செல்வதும் வீண் பிரயாசையே யாகும். ஆனால் என் கருத்தைப் பெற்றோரிடஞ் சொல்லத் துணிவேற்படவில்லை. உம்.—அதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும். மீண்டுஞ் சொல்லுகிறேன் சிதம்பரம்! நான் கலியாணஞ் செய்து கொள்வது அவசியம் என்ற நிலை ஏற்பட்டாலும், உன்னை விவாகஞ் செய்துகொள்வேன் என்று மட்டுங் கருதாதே!................"என்றேன்.

"ஏன் என்னை விவாகஞ் செய்துகொள்ள மாட்டாய்? நான் அழகாக இல்லையா? பி. ஏ. பட்டம் பெறவில்லையா? எனக்குப் பிதிரார்ஜித சொத்தில்லையா? தகுதியுந் தோற்றமுமில்லையா? அதோடு நான் உன் அம்மான் மகன் அன்றோ? நீ எனக்கு வாய்த்த அத்தை மகள் அல்லவோ! இதைவிட வேறு என்ன உரிமை வேண்டும்; நாம் விவாகஞ் செய்து கொள்வதற்கு? நீ விரும்பாவிட்டாலும் நான் உன்னை வந்து கலியாணஞ் செய்து கொள்வதற்கு உரிமை இருக்கிறது என்பதை நீ நினைவில் வைக்கவேண்டும்" என்று உரிமை கொண்டாடிப் பேசினான் சிதம்பரநாதன்.

இப்பேச்சைக் கேட்டதும், எனக்கிருந்த கோபத்திலும் சிரிப்பு வந்துவிட்டது. "உறவும் உரிமையும் கொண்டாட வந்து விட்டாயே! பேஷ்! ஆமாம். இத்தனை நாளாகக் காணுமே! இந்தச் சொந்த பந்தமெல்லாம், என்னைக் கண்டாலே பூனையைப்போலப் பம்மிப் பதுங்குவாயே! திடீரென்று உனக்கு இந்தப் பாசமும், தைரியமும் எங்கிருந்து வந்ததென்று நினைத்துப் பார்க்கும்போது எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது. இதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். உன்னை ஆட்டிவைக்கும் சூத்திரதாரி யாரோ இருக்கிறதாக ஊகிக்கிறேன்: அத்தை மகளாயிருந்தால் எளிதில் கிடைத்துவிடுவாள் என்பது உன் நினைப்புப் போலும்! இதெல்லாம் கர்நாடகக் கருத்துக்கள்.—உம். உனக்கு உடம்பு சோர்வாக இருக்கிறது. சிறிது உறங்கினால்தான் சரியாக இருக்கும். நீ போய்ப்படுத்துக்கொள். என்மீது கொண்டுள்ள ஆசையை இந் நிமிடத்தோடு ஒழித்துவிடு. போ" என்று இதமாகக் கூறினேன்.

"உன் ஆசையை நான் மறப்பேனா! என்னை விவாகஞ் செய்து கொள்வதாக நீ உறுதி கூறும் வரை நான் இவ்வறையை விட்டுப் போகமாட்டேன். நீ என்னை என்ன வைதாலும் சரி; அடித்தால்கூடச் சரிதான்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியவண்ணம் என்னை நெருங்கி வந்தான்.

இவனது முரட்டுப் பிடிவாதத்தை யறிந்ததும் எனக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. "மரியாதையாகச் சொன்னால் நீ கேட்கமாட்டாய். வெளியே போகிறாயா இல்லையா?" என்று கூறிக்கொண்டே அவனை விட்டு விலகி அறையின் வெளிப்பக்கத்தை நோக்கி, "தாத்தா! தாத்தா!! ஓடி வாருங்கள். சிதம்பரம் இங்கே வந்து துராக்கிருதம் பண்ணு

கிறேன்.—தாத்தா! ஓ தாத்தா!! எங்கே போய்விட்டாய் தாத்தா!!! வேலைக்கார சுப்பனையும் இருந்தால் கூப்பிட்டுக் கொண்டு ஓடி வாருங்கள்" என்று அடித் தொண்டையில் கத்தினேன்.

வெளியிலிருந்து ஒரு பதிலுங் கிடைக்கவில்லை. சிதம்பர நாதன் என்னைப்பார்த்துக் கரத்தைக் கொட்டிச் சிரிக்க லானான். அவனது விடா நகைப்பையும் ஆட்டத்தையுங் கண்டு அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று கூட நான் பயந்தேன்.

இச்சமயத்தில், சிதம்பரநாதன் நானிருக்கு மிடத்தை யணுகி, "சுந்தரி! ஏன் வீணாகத் தொண்டை நோகும்படிக் கத்துகிறாய்; உடம்பை அலட்டிக்கொள்கிறாய்? உனக்கு இன்னும் விஷயமொன்றும் புரியவில்லை யென்று தெரிகிறது. நீ தாத்தாவைக் கூப்பிட்டாலுஞ் சரி; வேறு யாரைக் கூப் பிட்டாலுஞ் சரி; யாரும் வரமாட்டார்கள். ஒருவரும் மாளிகையில் இல்லை. உனக்குத் துணையாக இருந்த தாத்தா கூட நான் இங்கு வந்ததும் வெளியே போய்விட்டார். இதெல்லாம் முன் கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. உன் அம்மா, அப்பா முதலியவர்களெல்லாம் வெளியேபோய் இதுவரை வராமலிருப்பதைப்பற்றி நீ என்னவென்று நினைக்கிறாய்; நான் உன்னை வசப்படுத்த வசதி செய்து கொடுப்பதற்குத்தான். சிறு குழந்தையி லிருந்து உன்னை இதுவரை இவ்வாறு தனியே விட்டு விட்டு உன் அம்மாவாயினும் உன் அப்பாவாயினும் சென்றது துண்டா என்பதை நினைத்துப்பார். இன்று மாத்திரம் ஏன் உன்னைத் தனியாக விட்டுச் சென்றார்கள்? இதற்குக் கார ணம் இருக்க வேண்டுமல்லவா? நம் கலியாண விஷயமே மூலகாரணம். நீ சம்மதம் தெரிவித்துவிடு, நாளையிலிருந்தே

நம் விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடப்பதைக் காண்பாய்.—சுந்தரிக் கண்ணே! எதோ! குமுதம் போன்ற உன் வாயால் உன்னை விவாகஞ் செய்துகொள்ள எனக்கு விருப்பந்தான் என்று கூறிவிடு. நான் உன்னை ஒன்றுந் தொந்தரவு செய்யாமல் போய்விடுகிறேன். ஏன் தயங்குகிருய்? நான் உன் அம்மான் மகன்தானே! என்னிடம் வெட்கமேன்? எதோ வாய்திறந்து சொல்'' என்று மன்ருடினன்.

அவன் சொல்லிவந்த காரணங்களைப் பார்த்தால் உண்மையாக இருக்கும்போல் எனக்குத் தோன்றியது. இவனது சதிச்செயலுக்கு என் பெற்ருேரும் உடந்தையாக இருக்கிருர்கள் என்று எண்ணியபோது என் உடல் முழுதும் பற்றியெரிந்தது. எனக்கு இதுவரை இருந்த தைரியமெல்லாம் எங்கோ ஓடியொளிந்தது. குபீரென்று வியர்வை அரும்பி உடம்பை நனைத்தது. "இந்நடு இரவில் இக்காதகன் என்ன செய்வானே? உரத்துக் கூவினுலும் உதவிக்கு வருவார் இங்கு யாருமில்லையே! எனக்குத் துணையாக இருப்பதாகப் பாசாங்கு செய்த தொண்டு கிழவனும் என்னை மோசஞ் செய்துவிட்டு எங்கோ சென்ருனே; வேலைக்காரர்களையும் வீட்டிலில்லாமல் விரட்டியடித்துவிட்டான் போலிருக்கிறதே இத்துஷ்டன்? நான் சம்மதங் கொடுக்காவிட்டால், இம்மூர்க்கன் லேசில் விட்டுச் செல்ல மாட்டான் என்று தெரிகிறது. 'சரிதான்' என்று இப்போது தலையாட்டிவிட்டுத் தப்பித்துக்கொண்டு, அப்புறம் 'இஷ்டமில்லை' என்று கூறிவிட்டால் என்ன முழுகிப் போய்விடும்! அயோக்கியனுக்கு அயோக்கியதனமாய்த் தான் நடக்கவேண்டும். என் பெற்ருேர் வரட்டும். அப்போது இவனுக்குச் சரியாகப் புத்தி கற்பிக்கிறேன்...........

...........'' என்று எனக்குள் சிந்தித்துக் கொண்டிருக்கையில், எதிரில் நின்று என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சிதம்பரநாதன் இருந்தாற்போலிருந்து ஆவேசங் கொண்டவன்போல் துள்ளிக் குதித்து, "என்ன யோசிக்கிறாய் சுந்தரி! எப்படி வாய்திறந்து சொல்வது என்று கூச்சமா யிருக்கிறதோ! அப்படியானால், எனக்கொரு முத்தங் கொடுத்துச் சம்மதத்தைத் தெரிவிப்பாய், ராணியே!'' என்று கூறிக்கொண்டு என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட வந்தான். நான் இவ்விபரீதச் செயலைக் கண்டு மருண்டுபோய் கைகளைக் குவித்து முகத்தை மறைத்துக்கொண்டு கூவினேன்.

"சுந்தரி! ஏன் இப்படியெல்லாம் கூச்சல் போடுகிறாய்? நான் உன்னை அப்படியே விழுங்கியா விடுகிறேன்? நாட்டுப்புறத்துப் பெண்கள் அப்படித்தான் அநாகரிகமாய்ச் சண்டித்தனஞ் செய்வார்கள். அம் மண்டூகங்களுக்கும் நாகரிகத்துக்கு இருப்பிடமான சென்னைமாநகரில் இருந்து ஆங்கிலக் கல்வி கற்ற உனக்கும் என்ன வித்தியாசம்?—ஆ-ஹ-....ஸ்-ஹா! சீமையிலிருந்து வந்து இப்போது தான் கப்பல்விட்டு இறங்கின துரைசானி மாதிரி தடபுடல் செய்து வந்தாயே! அந்த வீரம் அட்டகாசமெல்லாம் இப்போது எங்கே? உனக்கிருக்குஞ் செல்வாக்கில் யாரையும்—என்னைக்கூட—லக்ஷியம் செய்ய மாட்டாயே! உன்னிடம் பேச வேண்டுமென்றால் நான் சமயம் பார்த்து நடுக்கத்தோடன்றோ வரவேண்டும்? இப்போது பார்த்தாயா? யாருடைய கை மேலோங்கிற்று என்று. எப்படியிருந்தாலும், ஆண்பிள்ளை சிங்கக் குட்டிதான் என்பதை இப்போதாகிலும் உணர்ந்திருப்பாயென்று நம்புகிறேன். எனவே, தாமதிக்காமல் உனது சம்மதத்தை முத்தத்தின்

மூலமாகத் தெரிவித்துவிடு.—என்ன சொல்லுகிருய் சுந்தரி! பேசா மடந்தையாய் விட்டாயோ! இப்போது வேதாளத்தைத்தான் கூப்பிட வேண்டும்போலிருக்கிறது.— சரி; உன் விருப்பத்தைத் தெரிவித்தாலும் தெரிவிக்காவிட்டாலும், எப்படியும் இன்னும் இரண்டொரு விநாடிகளில் நீ என் ஆலிங்கனத்துக்குக் கட்டுப்படத்தான் போகிருய்! இதோ பார்!" என்று சிதம்பரநாதன் தன் முழு உணர்ச்சியையும் வெளிப்படுத்தி முன்னையினும் மூர்க்கமாகக் கைகளை நீட்டிக்கொண்டு நெருங்கி வந்தான்.

நான் அறைக்கு மத்தியில் சுவரோரத்தில் அச்சமயம் நின்றிருந்ததால், அவன் இரு கைகளையும் இரு பக்கமும் அணைகோல் போல் நீட்டிக்கொண்டு நெருங்கி வரவும், இப்படியும் அப்படியும் ஓடிப்போக முடியாமல் நெருக்கடியான நிலையில் சுவரின் மீதே சாய்ந்து நின்றுவிட்டேன். அவன் சிறிது நேரத்திற்கு முன் பிதற்றியதுபோல் அடுத்த கணத்தில் நான் அவன் கைப்பிடிக்குள் அகப்பட்டு விடுவேன் போலிருந்தது. இவனது விருப்பத்துக்கு என் பெற்ருேரும் துணையாக நிற்கிருர்கள் என்று அறிந்த பிறகு, அவனை எதிர்த்துப் போராடத் தைரியம் வரவில்லை. ஆகவே, நான் வாயில் கைகளை வைத்துக்கொண்டு "ஆ" வென்று அலறினேன். ஆ! அவ்ன் என்னை மிகவும் நெருங்கி விட்டான். தோள்களைக்கூடப் பற்றிவிட்டான்! இன்னதென்று தோன்ருத நிலையில், என் அறிவு மயங்கியது. மயக்கம் போட்டு விழுந்து விட்டிருப்பேன்.

இச்சமயத்தில், எதிர்பாராவகையில் சிதம்பரநாதன் "ஐயோ"! என்று அலறிக்கொண்டு வெட்டுண்ட மரம் போல் தடாலென்று கீழே விழுந்தான். நான் திடுக்கிட்டுப்

போனேன். என் தேகத்தில் மின்சார சக்தி தாக்கியது போன்ற ஒருவித உணர்ச்சி யேற்பட்டது. அவ்வுணர்ச்சி என்னை மயக்கத்தினின்றும் தட்டி யெழுப்பியது போன் றிருந்தது. அச்சத்தால் கண்களைத் திறந்துகொண்டு பார்த்தேன். என்ன ஆச்சரியம்! எனக்கெதிரில் கலா சாலைத் தோழனை ஸ்ரீநிவாசன் கையில் தடியுடன் நின்று கொண்டிருந்தான்.

நான் அவனைப் பார்த்ததும் தாங்க முடியாத ஆச்சரி யத்தோடு, "ஆ! நீயா சீனு!" என்று கேட்டேன்.

அவன் புன்சிரிப்போடு "ஆம்" என்று மெதுவாகக் கூறினன்.

"இங்கு எப்படி வந்தாய்?"

"......................—........"

"இந் நடு இராத்திரியில் இங்கு வரக் காரணமென்ன?"

"................................"

"என்ன மௌனமா யிருக்கிறாய் சீனு! நீ இங்கு வரு வதற்கு ஏதேனும் சந்தர்ப்பம் இருக்க வேண்டு மல்லவா!"

"................................"

எனது கேள்விகளுக்கு ஸ்ரீநிவாசன் பதில் கூறாது தலை குனிந்து நிற்கவே, நான் அவனைச் சிறிது நேரம் கூர்ந்து நோக்கி விட்டு, "எப்படியோ நீ நல்ல சமயத்தில் வந்து என் மானத்தைக் காப்பாற்றினாய்! இல்லாவிட்டால், நான் இந் நேரத்திற்குள் என்ன கதிக்காளாய் இருப்பேனோ! கடவுள் தான் உன்னை இங்கு கொண்டுவந்து விட்டார் என்று

நினைக்கிறேன். தக்க சமயத்தில் வந்துதவிய உனக்கு என்ன கைம்மாறு செய்வதென்று தெரியவில்லை" என்று நன்றியறிதலோடு கூறினேன்.

ஸ்ரீநிவாசன் அச்சமயம் என்னைப் பார்த்த பார்வை என் மன நிலையை அவன் ஆராய்வதுபோல் தோன்றியது. அவன் மெல்லிய குரலில், "புவனு! நான் என்ன அப்படி பிரமாதமான உதவி செய்துவிட்டேன்? அப்படி யொன்று மில்லை. தோழர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் சமயம் வாய்க்கும்போது உதவிசெய்வது இயற்கை? கடமைப் பட்டு மிருக்கிறார்கள். அது இருக்கட்டும். நான் இங்கு இந்நேரத்தில் எப்படி வந்தேன்; எதற்காக வந்தேன் என்று நீ கேட்டபொழுது உடனே பதில் சொல்லாது நான் தயங்கியதைக் கண்டு விகற்பமாக ஒன்றும் நினைத்துக் கொள்ளக்கூடாது. விஷயத்தைச் சொன்னால் நீ கோபித் துக்கொள்ளமாட்டாயே!" என்று கேட்டுத் தன் பேச்சை நிறுத்தினான்.

நான் ஒன்றும் வாய் திறந்து பேசாது, தலையை மட்டும் அசைத்தேன். எனவே ஸ்ரீநிவாசன் மீண்டும் பேசலானான். "இன்று இரவு இவ்வித சம்பவம் நிகழும் என்று எதிர்பார்த்தே இவ்விடம் வந்தேன்..................."

நான் இடைமறித்து, "என்ன, இவ்வாறு நிகழுமென்று நீ எதிர்பார்த்தாயா? உனக்கு எப்படித் தெரியும்?" என்று பெரு வியப்போடு கேட்டேன்.

ஸ்ரீநிவாசன் சிரித்துக்கொண்டே, "சொல்லுகிறேன்; அவசரப்படாதே! உனக்கு விவாகஞ் செய்யவேண்டுமென்று உனது பெற்றோர் பேச்சு ஆரம்பித்தபோதே விஷயத்தை யறியலானேன்! அதன் பின்னர், அவ்விஷயத்தின் போக்கையும், அது சம்பந்தமாக உனது மன நிலையையும்

கவனித்து வந்தேன். இது சம்பந்தமான தகவல்களை எனக்கு அவ்வப்போது தெரிவித்து வருபவன் உங்கள் மாளிகையின் வேலைக்காரர்களில் ஒருவனாகிய ராமனேயாகும். அவனிடம் நான் பக்குவமாகச் சிநேகஞ் செய்து உன் விவாக சம்பந்தமான விஷயங்களை அவன் வாயிலாகக் கிரகித்து வந்தேன். அவன் ஒரு 'அப்பாவி'யாயிருந்து வருவதால் அவனைப்பயன் படுத்திக்கொள்வதற்கு எளிதாயிருந்தது. அவன் எனது உண்மையான ஒற்றன். உன் பெற்றோரும், மற்றோரும் இன்று இரவு, சிதம்பரநாதன் உன்னோடு கலந்துபேசி ஒருவித முடிவுக்கு வருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டுப் போயிருப்பதாக அவனே எனக்குத் தகவல் தெரிவித்தான். எனவே, நான் இரவு 9-மணிக்கு இம் மாளிகைக்கு வந்து மறைந்திருந்து என்ன நடக்கிறதென்று கவனித்து வந்தேன். பொதுவாக, உனக்கு உன் பெற்றோர்விவாகத்துக்குச்செய்துவரும் முயற்சியை நீ விரும்பவில்லை என்று எனக்குத் தெரியுமாயினும், உன் அம்மான் மகனாகிய சிதம்பரநாதன் விஷயத்தில் நீ என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய் என்பது தெரியாதாகையால், அதைக் கவனிக்கக் காத்திருந்தேன். நீ அக்கிழவனோடு பதினொரு மணிவரை பேசியிருந்துவிட்டுப் படுக்கச் சென்றதும் அதற்கு மேலேயே சிதம்பரநாதன் வெளியேயிருந்து உன் அறைக்குள் நுழைந்ததும், சிறிது நேரத்திற்கெல்லாம் நீ உரத்துப்பேசியதும் எனக்குச் சந்தேகத்தையும் பரபரப்பையும் உண்டாக்கவே முன்பின் யோசிக்காமல் உங்கள் சச்சரவில் குறுக்கிடலானேன். உன் சொந்த விஷயத்தில் நான் தலையிட்டதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நான் இவ்வளவு தூரம் இவ்விஷயத்தில் ஈடுபட்டது உன் மீது எனக்கு ஏற்பட்டுள்ள அன்பே காரணம். அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்! அதை அடக்க ஆற்றலுமுண்டோ" என்று நயமாகப் பேசினன்.

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் நான் மலைத்து நின்று விட்டேன். ஸ்ரீநிவாசன் என் தனிப்பட்ட விஷயத்தில் தலை யிட்டு வருவது சரியா? தவறா? என்று அச்சமயம் அறிய ஆற்றலில்லாதவளா யிருந்தேன். எனவே, நான் பேச்சை வேறு விதத்தில் திருப்பக் கருதி, "எனக்குத் தெரியாமலே என்னென்னவோ விபரீதமெல்லாம் நடந்தேறி வருகிறது— கடைசியாக நீ அவனைத் தடியால் அடித்து வீழ்த்திவிட்டாய். பாவம்! அவன் தலையில் அடி பலமாய் விழுந்திருக்கிறதா! இரத்தம் வருகிறதா! என்று பார்ப்போம்" என்று கூறிக் கொண்டே கீழே பிணம்போல் வீழ்ந்து கிடக்கும் சிதம்பர நாதனைக் குனிந்து பார்த்தேன். அவன் தலையில் இரத்தம் ஒழுகவில்லையானாலும், பலமாக அடிவிழுந்திருக்கிறது என்று அவன் இதுவரை பேச்சு மூச்சின்றிக் கிடப்பதிலிருந்து நன் ருகத் தெரிந்தது. சிதம்பரநாதன் சிறிது நேரத்திற்கு முன் என்னிடம் தவருன முறையில் நடந்துகொண்டதற்காக அவன் மீது அடங்காக் கோபங்கொண்டிருந்தாலும் அவனது தற்போதைய பரிதாபமான நிலையைக் கண்ட போது என் மனம் இளகிவிட்டது. அவனுக்கு உடனே சிகிச்சை செய்யவேண்டுமென்று உன் மனதுக்குத் தோன் றியது. எனவே, நான் எனது கருத்தை ஸ்ரீநிவாசனுக்குத் தெரிவிக்கவே, அவன் ஒருவாறு முகத்தைச் சுளித்துக் கொண்டு வெளியே போய் வேலையாள் ராமனைக் கூப்பிட் டுக்கொண்டு வந்தான். பின்னர், என் யோசனையின்படி ஸ்ரீநிவாசனும், ராமனும் சேர்ந்து சிதம்பரநாதனை அவளது அறைக்குத் தூக்கிச் சென்று படுக்கையில் படுக்க வைத்த னர். அவனை மூர்ச்சை தெளிவித்தற்குரிய சைத்தியோப சாரங்களை ராமன் செய்தான்! ஏழை யொருவன் செல்வந் தனின் பொருளுதவியைப் பெறுவதற்காக ஏங்கி நிற்பது போல, ஸ்ரீநிவாசன் அடிக்கடி என்னை இரக்கமாக நோக்

கிறான். எனக்கென்னமோ, மனம் ஒரு நிலையிலில்லாது தத்தளித்துக் கொண்டிருந்ததால், சிதம்பரநாதன் மூர்ச்சை தெளியும்வரை ராமனை அங்கேயே இருக்கும்படிக் கட்டளையிட்டுவிட்டு, ஸ்ரீநிவாசனிடம் ஒன்றும் பேசாமலே நேரே என் அறைக்குப் போய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டு மிகவும் அயர்ச்சியோடு படுக்கையில் விழுந்தேன். அப்புறம் அங்கு என்னயிற்று; ஸ்ரீநிவாசன் எப்படிப்போனன் என்பதொன்றும் எனக்குத் தெரியாது.

வேலைக்காரி பொன்னு கதவைத் தட்டி என்னைக் கூப்பிடுஞ் சத்தத்தைக் கேட்ட பிறகுதான் நான் கண் விழித்து எழுந்தேன். அப்போது காலை மணி 8-30 ஆயிருந்தது. எனவே, நான் கதவைத் திறந்துகொண்டு வெளியே போனேன். பொன்னி, என் தந்தை என்னைப் பார்க்கக் காத்துக்கொண்டிருக்கிறரென்றும், உடனே காலைக் கடனை முடித்துவிட்டு வரும்படித் தெரிவிக்கச் சொன்னரென்றும் கூறினள். அப்போதுதான் என் பெற்றோர், சிறிய தந்தை குடும்பத்தார் முதலிய எல்லாரும் மாளிகைக்கு வந்துவிட்டார்கள் என்று அறிந்தேன். ஆனல் நான் புறக்கடைக்குப் போகும்போது, அங்கு ஒரு பக்கத்தில் என் தாயும் சிற்றன்னையும் ஏதோ இரகசியமாகவும் கவலை தோன்றவும் பேசிக்கொண்டிருக்கக் கண்டேன். நான் ஆவலோடு அவர்களை அணுகினேன். அவர்கள் என்னைக் கண்டதும், திடுக்கிட்டுப் போனர்கள். அதிலிருந்து அவர்கள் அச்சமயம் என்னை அங்கு எதிர்பார்க்காதவர்கள் போலவும், என்னைப்பார்க்க விரும்பாதவர்கள் போலவும் காணப்பட்டனர். என் தாய் என்னிடம் ஒன்றும் பேசாமலே முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டாள். என் சிற்றன்னை என்னைச் சூனியம் வைப்பவள்போல் ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்து

விட்டுச் சென்றாள். இவ்வேறுபாடு என்னை மிக மன வேதனைக் குள்ளாக்கியது. என்னை ஒரு விநாடியும் பிரிந்திருக்கச் சகியாத என் தாய்-அவ்வாறு பிரிந்திருந்து வந்தால் என்னை ஆர்வத்தோடு தழுவி முத்தமிட்டு மனங்குளிரும் என் அருமைத்தாய் எக் காரணத்தால் என்னைப் பார்த்துப் பேசாது சென்றுவிட்டாள்!" என்று சிந்தித்துக்கொண்டே காலைக் கடனை முடித்துக் குளித்துவிட்டு நேரே என் தந்தையிடஞ் சென்றேன். என்னைப்பார்த்த வேலைக்காரர் முதல் மாளிகையிலுள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் ஏதோ 'குசுகுசு' வென்று பேசிக்கொண்டனர். பொதுவாக மாளிகை முழுவதுமே ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. எனக்கு இதற்கெல்லாம் காரணம் ஒன்றுமே விளங்கவில்லை.

என் தந்தை தன் கையில் ஏதோ கடிதத்தை வைத்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். நான் அவரிடம் போனதும், அவர் அக் கடிதத்தை என் கண்ணில் படாதவாறு கையில் வைத்துக் கசக்கிக்கொண்டே, "வா அம்மா! இப்போதுதான் எழுந்தாயா? காப்பி சாப்பிட்டு ஆயிற்றா?" என்று கேட்டார். இருந்தாலும், அவர் முகம் இயற்கையாக உள்ள உற்சாகத்தோடு காணப்படவில்லை.

என் தந்தை எனது மனநிலையை முன்னமேயே அறிந்துகொண்டவர்போல், "புவனா! நேற்று உன் விஷயத்தில் தவறாக நடந்துகொண்டேன் என்பதைச் சிறிது நேரத்துக்கு முன்தான் அறிந்தேன். உன் தாய் பேச்சைக்கேட்டுப் புத்தி கெட்டேன். அவள் என்னை வற்புறுத்தியழைத்துக்கொண்டு போனதன் நோக்கம் இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. போன இடத்தில், குழந்தை தனியாக இருக்குமே என்று நான் கூறியபோது, அவள் பெரம்பூருக்குப் போன தன் தங்கை முதலியவர்கள் இந்நேரம் வந்திருப்பார்களென்றும், ஆதலால் குழந்தையைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய

தில்லை யென்றுஞ் சமாதானஞ் சொன்னுள்........தன் சகோ தரன் மகன் சிதம்பரநாதனுக்கு உன்னை விவாகஞ் செய்து கொடுக்கும்படிச் சில நாட்களாக வற்புறுத்தி வந்தாள். அதற்கு நான் குழந்தை சம்மதப்பட்டால் அவ்வாறே செய்துவிடலாமென்று கூறினேன். அதன் மீதுதான் உன்னை வசப்படுத்திச் சம்மதம்பெற இச்சூழ்ச்சியை அக்காளும் தங்கையுமாகச் சேர்ந்து செய்திருக்கிறுர்கள் என்று தெரிகிறது..............உம். அதை யெல்லாம் இப்போது பேசுவதில் என்ன பயன்?........புவனு! நீ ஒன்றும் வருத்த முருதே அம்மா! சிதம்பரநாதனும் போய்த் தொலைந்தான். அவன் யாரிடமும் சொல்லாமல் கடிதமட்டும் எழுதி வைத்துவிட்டு விடியற்காலையிலேயே புறப்பட்டு ஊருக்குப் போய்விட்டான். நீ அவனுக்குச் சரியான பாடங் கற்பித் தாய்!" என்று வருத்தந் தோன்றக் கூறி முடித்தார்.

சிதம்பரநாதன் யாரிடமுஞ் சொல்லாமல் ஓட்டம்பிடித் தான் என்ற செய்தி எனக்கு ஆச்சரியத்தை விளைத்தது. ஆனுலும், ஸ்ரீனிவாசன் இங்கு வந்து குறுக்கிட்டுச் சிதம் பரநாதனைத் தடியாலடித்து வீழ்த்திய விஷயம் இவர்களுக்கு ஒரு வேளை தெரிந்திருக்குமோ என்ற சந்தேகம் இடை யிடையே மனதில் தோன்றி என்னை அச்சமுறச் செய்தது. என் தந்தையின் வாயாலேயே நேற்றைய சம்பவத்துக்கு மூல காரணம் என் தாயும் சிற்றன்னையுமே யாகும் என்று அறிந்தபோது, என் மனம் மிகவும் சங்கடப்பட்டது. 'ஈ எறும்பும் நாடாதவாறு கண்ணுங் கருத்துமாக வளர்த்த என் தாய், தன் உறவு போகக்கூடாது; இப்பெருஞ் சொத் தைத் தன் சகோதரன் குடும்பமே அனுபவிக்க வேண்டு மென்ற நோக்கத்தோடு எனக்கு ஏற்படும் துன்பத்தையும் எண்ணிப்பாராது சூழ்ச்சி செய்யத் துணிந்தாள் என்றுல்

என் சிற்றன்னை செய்வதைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? ஆ! இச் செல்வத்துக்குள்ள வலிமை தான் என்னே! நல்லவர்களையும் கெட்டவர்களாக்குகிறது! அறிஞர்களையும் மடையர்க ளாக்குகிறது! ஒழுக்கசீலர்களையும் அயோக்கிய சிகாமணிக ளாக்குகிறது! எனக்கு வரும் இடையூறுகளுக்கெல்லாம் ஆதி காரணம் செல்வமே யாதலால், என் தாயை நொந்து கொள்வதில் பயனென்ன? என்று சிந்தித்துக் கொண்டே என் தந்தையின் முகத்தை நோக்கினேன். அவர் அப்போதும் கவலையிலேயே ஆழ்ந்திருந்ததாகத் தெரிந்தது.

எனவே, நான் மிகவும் நயமாக, "அப்பா! நடந்து போனதைப்பற்றி வருத்தப்பட்டு ஆவதொன்றுமில்லை. இனி நடக்க வேண்டிய விஷயத்தைக் கவனிப்போம்...........நான் பி. ஏ. பரீக்ஷையில் கட்டாயம் தேறிவிடுவேன் என்று உறுதியாக நம்புகிறேன். அப்புறம், சீமைக்குச் சென்று மேல் படிப்புக்கு வாசிக்கலாமென்று நினைக்கிறேன். என்ன அப்பா சொல்கிறீர்?—என் விவாகத்தைப்பற்றி இப்போது ஒன்றும் அவசரமில்லையப்பா" என்று கேட்டேன்.

"அப்படியே ஆகட்டும் அம்மா!" என்றார் என் தந்தை.

## பத்தாவது அதிகாரம்

### இங்கிலாந்து பிரயாணம்

ஜூன் மாத முதலிலேயே என் பரீக்ஷை முடிவு தெரிந்துவிட்டது. நான் பி. ஏ. பரீக்ஷையில் சென்னை மாகாணத்துக்கே முதல் வகுப்பில் தேறினேன் என்று அறிந்து எல்லாரையும்விட தந்தைதான் பெரு மகிழ்ச்சிகொண்டார். அப்புறம் நான் மறுபடியும் குறிப்பிடுவதற்கு முன்பே

சீமையில் உயர்தரக் கல்வி கற்க என்னை அனுப்புவதற்கு அவரே எல்லா ஏற்பாடுகளையுஞ் செய்யலானார். எனது சிற்றப்பாவைப்பற்றி உமக்கு முன்பே தெரிவித்திருக்கிறேன். அவர் ஹாக்கி பந்தாட்டத்தில் கெட்டிக்காரராதலால், சென்னை பந்தாட்ட கோஷ்டியோடு லண்டனுக்குச் சென்றிருக்கிறார். அத்துடன் மோட்டார் மெக்கானிஸம் கற்றுக் கொள்வது சம்பந்தமாகவும் ஒரு முறை இங்கிலாந்து போயிருக்கிறார். ஆகவே, அவருக்கு லண்டன்மா நகரின் நிலைமை நன்கு தெரியுமாதலால், என் தந்தை அவரை என்னுடன் அனுப்பி ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடியில் என்னைச் சேர்க்கும்படி தெரிவித்தார்.

எனது இங்கிலாந்துப் பிரயாணம் என் தாய்க்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் எனக்குப் புத்திமதி கூறி யனுப்பினாள். என் தந்தை எங்களுடன் ரயிலில் பம்பாய் வரை வந்தார். பின்னர், பம்பாய் துறைமுகத்துக்குப் போய், கப்பலேறிப் பிறகு, என் தந்தை மிக வருத்தத்தோடு பிரியா விடை கொண்டு பிரிந்தார்! நானும் என் சிற்றப்பாவும் முதல் வகுப்பில் பிரயாணஞ் செய்தோம். நாங்கள் எங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட முதல் வகுப்பு அறையில் நுழையப் போகும்போது, ஜான் கில்பர்ட் புன்னகையோடு அங்கு தோன்றினான்.

அவனைக் கண்டதும் எனக்குண்டான ஆச்சரியத்துக்கு அளவேயில்லை. ஏன்? இரண்டு நாட்களுக்கு முன்னர் கூட அவன் என்னைக் கடற்கரையில் சந்தித்து நெடுநேரம் பேசிவிட்டுச் சென்றான்! அச் சமயம், எனது சீமைப் பிரயாணத்தைப்பற்றி விசாரித்தானே யொழிய, தானும் லண்டனுக்கு வரப்போவதாகத் தெரிவிக்கவேயில்லை. அப்படியிருக்க, எதிர்பாராத விதமாக அவனைக் கப்பலில் கண்ட

தும், எனக்கு வியப்பு ஏற்பட்டது இயற்கைதானே! எனவே, நான் அவன் எனக்கு வந்தனம் கூற வாயெடுக்கையிலேயே, "என்ன ஜான்! நீ லண்டனுக்குப் புறப்படுவதாக என்னிடஞ் சொல்லவில்லையே! இப்பிரயாணம் திடீரென்று ஏற்பட்டதா என்ன!" என்று பரபரப்பாகக் கேட்டேன்.

"ஆமாம்! என் தாய் மாமன் லண்டனில் இருக்கிறார். அவருக்கு நோய்கண்டு அபாயமான நிலையிலிருப்பதாக எங்களுக்குத் தந்தி வந்தது. என் தந்தையின் உத்தியோகந்தான் தெரியுமே! திடீரென்று லீவு போட்டுவிட்டுப் போக முடியாது. ஆகையால், அவர் என்னைப் பார்த்து வரச் சொல்லி யனுப்பியிருக்கிறார்" என்று சிறிது யோசனையோடேயே பேசினான். மேலும், அவன் முகத்தில் என்னை முதலில் சந்திக்கும்போதிருந்த உற்சாகம் இப்போது இல்லை. அவன் என்னோடு பேசுகையில் என் சிற்றப்பாவை அடிக்கடி கடைக்கணித்து முகத்தைச் சுளித்து வந்ததை நான் கவனித்தேன். அவன் என்னுடன் சிற்றப்பாவும், வருவாரென்று முதலில் எதிர்பார்த்திருக்க மாட்டான் என்று எண்ணுகிறேன். என் சிற்றப்பாவும், கில்பர்ட் முதலில் என்னை நோக்கிப் புன்சிரிப்பு கொண்டதைக் கண்டதும் ஒரு விதமாக அவனைப் பார்த்தாராயினும், அவனோடு நான் பேச ஆரம்பித்த பின்னர், இருவருக்கும் ஏற்கனவே பழக்கமிருக்கலாமென்று கருதி அவர் சிறிது தூரமாகப் போய்விட்டார்.

நான், ஜான் கில்பர்ட்டின் நிலையைக் குறிப்பாலுணர்ந்ததும், அவனோடு நீண்ட நேரம் பேச்சை வளர்த்த விருப்பமில்லாமல், "அப்படியா! சரி; முன்பின் போயறியாத நகரத்துக்குக் கல்வியின் பொருட்டுச் செல்லும் எனக்கு, அதே நாட்டில் பிறந்து வளர்ந்த உன் போன்றோர் உடன் வருவது உதவியாகவே யிருக்கும். (சிறிது தூரத்தில் எங்களைப் பார்ப்

பதும் பார்க்காததுமாக நிற்குஞ் சிற்றப்பாவை விளித்து) அப்பா! இவர் என்னோடு ராஜதானி கலாசாலையில் வாசித்த வர். முன்னெல்லாம் நம் வீட்டுக்கு அடிக்கடி வருவாள் பாரப்பா! கிரேஸ்: அவளுடைய சகோதரர். இவரும் லண்டனுக்குத்தான் வருகிறாராம். இவருடைய தாய்நாடே அதுவாதலால், நமக்கு உதவியாக இருப்பார்—ஜான்: இவர் தான் என் சிற்றப்பா. இவர்கூட இரண்டுமுறை உங்கள் நாட்டுக்கு வந்திருக்கிறார்.—நீ எங்கே தங்கி யிருக்கிறாய்? எழெட்டு நாள் தான் கப்பலிலேயே பிரயாணஞ் செய்யப் போகிறோமே, நாம் சாவகாசமாகச் சந்திப் போம்'' என்று நயமாகப் பேசி வழிகூட்டி யனுப்ப முயன் றேன்.

நான் என் சிற்றப்பாவையும், கில்பர்ட்டையும் ஒரு வர்க்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தேனாயினும், அவன் வலுக்கட்டாயமாகச் சிரிப்பை வருவித்து, சம்பிரதாயத் துக்கு வந்தனம் மட்டும் அளித்துவிட்டுப் பேசாமல் நின்றான்.

இச்சமயம் ஜான் கில்பர்ட் நடந்துகொள்ளும் மாதிரி சிறிதும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆகையால். நான் சிறிது பதட்டமாகவே, "சரி ஜான், போய் வருகிறாயா; வந்த னம்'' என்று கூறிக்கொண்டே, அவனது பதிலைக்கூட எதிர்பாராது, எங்களுக்காக விடப்பட்ட அறையில் நுழைந்தேன். என் சிற்றப்பாவும் என்னைப் பின்தொடர்ந்து வந்தார், அப்புறம் ஜான் எப்படிப் போனான் என்பதை நான் கவனிக்கவில்லை.

எனக்குக் கப்பல் பிரயாணம் குதூகலத்தை யளித்த தாயினும், இரண்டு மூன்று நாள்வரை மயக்கம் என்னைத் தலைதூக்க விடவில்லை. அதற்கப்புறமே, நான் என் சிற்

றப்பாவோடு கப்பலைச் சுற்றிப் பார்த்து வரலானேன். கப்பலில் பல தேசத்து மக்கள் இருந்தனர். அவர்களுடைய பழக்க வழக்கங்களும் மனப் போக்கும், நடையுடை பாவனைகளும் எனக்கு விநோதமாக இருந்தன. அவற்றையெல்லாம் விவரித்து உமக்குக் கூறுவதென்றால், பெரிய பாரதமாகிவிடும். இப்பிரயாணிகளில் ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த மக்களே பெரும்பாலோராக இருந்தனர். அவர்கள் ஆண்களும் பெண்களும் தங்கள் குழந்தைகளோடு அணியணியாக இருந்து களியாட்டயர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஊக்கமும், உற்சாகமுமாக எப்பொழுதும் இருந்து வந்தது. சுதந்தர நாட்டில் சுகமாக வாழ்பவர்கள் என்பதை வெளிப்படுத்திக் காட்டியது. இந்தியர்களில் பிரமுகர்களும், பணக்காரர்களும் பலர் அக் கப்பலில் இருந்தனர். அதுவன்றி, என் போன்று, உயர்தரக் கல்விக்காக மேனாடுகளுக்குச் செல்லும் மாணவிகளும் மாணவர்களும் சிலர் காணப்பட்டனர். அவர்களது போக்கும் செயலும் மிகவும் விபரீதமாய் இருந்தன. அவர்களிடத்தில் ஐரோப்பியர் பழக்க வழக்கங்கள் மிகுதியாகக் காணப்பட்டன. இதிலிருந்து அவர்கள் தங்களை ஐரோப்பா கண்டத்தில் நாகரிகம் பழுத்த நகரில் வாழ்பவர்கள் என்று நினைத்துக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அவர்களில் சில ஆடவர்களும், பெண்களும் வரம்பு கடந்து வாயில் வந்தவாறு ஆபாசமாகப் பேசிய வண்ணம் மிருக வுணர்ச்சி மேலீட்டால், தங்களைப் பிறர் என்ன கருதுவார்கள் என்பதையுஞ் சிந்தியாது, நிலை தடுமாறி இருந்தனர். இக்காட்சி என்னைத் திடுக்கிடச் செய்ததோடு, சகிக்கக் கூடாத நிலையையும் உண்டுபண்ணியது. இவர்களைப் போன்றே ஐரோப்பியர்களிலும் பலர் பலவிதமான நிலையிலிருந்தனராயினும், அது என் மனதை இவ்விதம் சுருக்கெனத்

தைக்கவில்லை. பொதுவாக, இவ்வித ஆபாசக் காட்சிகள் என் மனதைச் சலனமும் விகாரமும் அடையச் செய்தன.

இவ்விதம், ஒவ்வொரு நாளாக, நாங்கள் தங்கியிருந்த மேல் தளத்தையும், கீழ் தளத்தையும் சுற்றிப் பார்த்து விட்டுக் கடைசியாக, மூன்றுவது வகுப்புப் பிரயாணிகள் தங்கியிருக்கும் இடத்தை யடைந்தேன். ஆ! அங்கு நான் கண்ட காட்சியை எவ்வாறு வருணிப்பேன்! "அவ்விடம் என்ன நரகலோகமா? அங்கிருப்பவர்கள் என்ன மிருகங்களா, அல்லது மக்கள்தானு?" என்று எனக்குச் சந்தேக மேற்பட்டது. எனக்கு மட்டுமல்ல—பார்க்கும் மற்றவர்களுக்கும்—சந்தேகமும் இரக்கமும் ஏற்படுவது திண்ணம். அவ்விடம் அவ்வளவு அசுத்தமாக இருந்தது. சுற்றிலும் பலவிதமான சாமான்களும் மூட்டைகளுமுள்ள அவ்விடத்தில் பிரயாணிகள் கும்பல் கும்பலாகப் படுத்துக்கொண்டும், உட்கார்ந்துகொண்டு மிருந்தனர். மாலுமிகளும், கப்பல் சிப்பந்திகளும் அவர்களை அலட்சியமாக நடத்தியதோடு அவதூருகவும் பேசினர். பூமியினுள் செல்லும் சுரங்கம் போல் காணப்பட்ட அவ்விடத்தைப் பார்க்கப் படிகளின் வழியாக இறங்கிய நான், அம்மேல் படிகளின் மீதிருந்தே இக்காட்சியைப் பார்த்துத் திகைத்து நின்று விட்டேன். சில நிமிடங்களுக்குப் பின்னரே அங்கிருந்து வீசிய முடை நாற்றம் மூக்கைத் தொளைத்தது உணர்ந்தேன். ஆகவே, அதைச் சகிக்க மாட்டாது மேல் படிகளிலிருந்த வண்ணமே, என் சிற்றப்பாவோடு வெளியேறினேன்.

இரண்டாவது தளத்திலிருந்து, மேல் தளத்துக்கு நாங்களிருவரும் போய்க்கொண் டிருக்கையில், சிறிது தூரத்தில் ஜான் கில்பர்ட் ஒரு ஆங்கிலப் பெண்ணேடு கை கோத்தவண்ணம், குதூகலமாகப் பேசிக்கொண்டு வருவ

தைக் கண்டேன். அவ்விருவரும் எங்களுக்குச் சமீபமாக வருகையில், ஜானும் என்னைப் பார்த்துவிட்டான். ஆயினும் உடனே அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டு என்னைக் கவனிக்காததுபோல், தன் தோழியோடு விரைந்து சென்ருன். அவன் நான் அன்று சந்தித்தபோது, இவன் நடந்து கொண்டமாதிரி பிடிக்காது போய்விட்டதை, இவனை அலட்சியப்படுத்திவிட்டுச் சென்றதாகத் தவருக நினைத்து என்மீது கோபித்துக்கொண்டிருக்கிரு னென்றும் அதனுல் தான் அப்புறம் அவன் என்னை வந்து பார்க்கவில்லையென் றும் நினைத்தேன். ஒருவகையில் என்னை வந்து பார்த்துப் பேசாமலிருப்பது நல்லதென்று என் மனம் எண்ணியதால், அவன் அவ்வாறு போனதைப்பற்றி நான் கொஞ்சமும் சங்கடப்படவில்லை.

கப்பல் முழுவதையுஞ் சுற்றிப் பார்த்த பின்னரே, இயற்கைக் காட்சியைக் காண்பதில் கவனஞ் சென்றது. ஆகவே, ஒவ்வொருநாள் காலையும், மாலையும் நான் கப்பல் மேல் தளத்தின் ஓரத்தில் நின்றுகொண்டு, கடலையும், வானத்தையும் கண்டு களித்து வந்தேன். இவ்வனுபவத் தால் சூரிய வெப்பமும், பெரு மழையும், கடும்புயலும், கடல் கொந்தளிப்பும் இல்லாமலிருப்பின், ஆயுள் முழுவ தும் கப்பல் பிரயாணத்திலேயே உற்சாகமாகக் காலங் கழித்துவிடலாம் என்று எனக்குத் தோன்றியது. நீலக் கடலின் ரமணீயமான தோற்றத்தை இன்றெல்லாம் பார்த் துக்கொண்டிருந்தாலும் பசியோ உறக்கமோ உண்டாகாது. மாலைப் பொழுதில் கிழக்குப் பக்கத்தில் பார்த்தால், கட லும் வானமும் ஒன்ருயிருப்பதுபோலத் தோன்றும், கடல் அசைவின்றியும், அலையெழும்பாமலும் இருந்தால்—வானத் தில் மேகம் முதலிய களங்கமெதுவும் இன்றி யிருந்தால்

வானத்துக்கும், கடலுக்கும் நிறத்திலோ மற்றெதிலோ வேற்றுமையே காண முடியாது.

அதிகாலையில் சூரியன் உதயமாவதற்கு முன் அதாவது அருணோதய காலத்திலும் மாலை அஸ்தமன சமயத்திலும் ஆகாயத்தில் உண்டாகும் அற்புதத் தோற்றங்களையும், கருங்கடலில் ஏற்படும் கண்கொள்ளாக் காட்சிகளையும் கண்டபோது, என் உள்ளம் அடைந்த பரவச நிலையை, இதற்குமுன் எப்பொழுதும்—எவ்வித மகிழ்ச்சியான நிலையிலும் அடைந்ததில்லை. அதிலும், வளர்பிறைக் காலத்துக் காணப்படும் நீலக்கடலின் அதியற்புத தோற்றத்தை நான் எங்ஙனம்—எம்மொழிகளைக்கொண்டு—வருணித்து உரைப்பேன்? என்றால் மட்டுமன்று; மகா கவிகளான காளிதாஸன் வான்மீகி, கம்பர் பெருமான், திருத்தக்கதேவர், இளங்கோ அடிகள், ஷேக்ஸ்பியர், டென்னிஸன், ஷெல்லி, ஓர்ட்ஸ்வொர்த் போன்றவர்களாலும் வருணித் துரைக்க முடியாதென்று துணிந்து கூறுவேன். இயற்கை யன்னை யளிக்கும் கற்பனைக் கடங்கா அற்புதமான இக்காட்சியைக் கண்ட பின்னர், செயற்கைக் காட்சிகளைக் காணக் கண்கள் கூசும் என்பது திண்ணம். எனக்கிருந்த ஆர்வத்தில் வல்லமை யிருந்தால் கடல் நடுவில் ஒரு மாளிகை கட்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருந்திருப்பேன். என் செய்வது! எல்லாம் நாம் நினைத்தபடியே முடிகிறதா? கடலில் கப்பல் பிரயாணம் செய்து ஒரு சில நாட்களாயினும், இயற்கை யன்னையோடு நெருங்கி உறவாடும் வாய்ப்புக் கிடைத்ததே பெரும் பேறு என்று கருதினேன். நம் நாட்டில் எத்துணைபேர் பெருஞ் செல்வமிருந்தும், தகுந்த வசதிகள் கிடைத்தும், கண்களிருந்தும், இவ்வித இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்க விரும்பாதிருக்கிறார்கள். அவர்களை நினைக்கும்போது இரக்கமே உண்டாகிறது.

எனக்கு இயற்கைக் காட்சியைக் காண்பதில் இருந்த ஆர்வம் என் சிற்றப்பாவுக்குக் கிடையாது. அவரது மனப் போக்கு வேறுவிதமாயிருந்தது. நான் முன்னமே சொன்ன படி, விளையாட்டிலும் தோழர்களோடு கூடிக் களிப்பதிலுமே கவனம் அதிகமாகச் செல்லும். ஆகவே, அவரது போக்கிலேயே அவரைவிட்டு, நான் தனியாகவே இயற்கையழகில் ஈடுபட்டு வந்தேன்.

எனக்குப் பொதுவாக எல்லாவகையிலும், கடல் பிரயாணம் மிகுந்த குதூகலத்தை யளித்தது. உணவு முதலியனவும் எங்களுக்கு ஏற்ற விதமாகவே அளிக்கப்பட்டு வந்தது. என் சிற்றப்பாவின் சிநேக முறையாலோ என்னவோ கப்பல் தலைவனான காப்டன், முதல் ஆபீஸர், இரண்டாவது ஆபீஸர் முதலியவர்கள் எங்களிடம் மரியாதையாகவும் எங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதில் கண்ணுங் கருத்துமாகவும் நடந்து வந்தனர். அதிலும் காப்டனும், இரண்டாவது ஆபீஸரும் என்னிடத்தில் விசேஷ மரியாதை காட்டி வந்ததோடு, சந்தர்ப்பம் நேருங்கால் வாஞ்சையாகவும் பேசினர். இது, மற்ற பிரயாணிகளுக்குப் பொறுமையாகக்கூட இருந்தது.


நாங்கள் பிரயாணஞ் செய்த கப்பல் முக்கியமான துறைமுகங்களில் மட்டும் நின்று நின்று, பிரயாணிகளை இறக்கிக்கொண்டும், ஏற்றிக்கொண்டும் சென்றது. கடைசியாக, ஏடன் துறைமுகத்தைத் தாண்டிக் கப்பல் சென்று கொண்டிருந்தது. நடு இரவு சுமார் பன்னிரண்டு மணி யடிக்கிற சமயமாயிருக்கும், கப்பலோட்டிகளைத் தவிர, மற்றெல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தனர். எனக்கென்னமோ அன்று நெடுநேரமாகியும் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு பார்த்தேன். கண்களை இறுக மூடிக்கொண்

டேன். என்ன செய்தும் பாழான எண்ணங்கள் மனத்தில் வந்து குவிந்து என்னைக் கவிந்துகொண்டது. எனவே, நான் மன அமைதிபெற வேண்டி, சிறிது நேரம் வெளியே சென்று கடலழகைப் பார்த்துவிட்டு வரலாமென்று படுக்கையைவிட்டு எழுந்தேன். ஒரு பக்கத்தில் என் சிற்றப்பா நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தார். நான் அறையின் கதவைத் திறந்து வெளியே காலெடுத்து வைக்கப்போனேன். அச்சமயத்தில் சமீபத்தில் யாரோ நடந்துவரும் காலடியோசையும், பேசும் சப்தமும் என் காதில் விழவே, திடுக்கிட்டுப் பின் வாங்கினேன். கதவை முக்கால் பாகம் சாத்திவிட்டு, இடுக்கில் வெளியே நோக்கினேன்...........ஆ! சண்டாளன்! துரோகி! என்னை எவ்வளவு நாட்களாக இந்த மாதிரி ஏமாற்றிக்கொண்டு வருகிருனே தெரியவில்லையே! கற்பகம் சொன்னபோது விளையாட்டாகக் கூறுகிருளென்றல்லவோ நினைத்தேன். அவள் கூறிய ஊகமும், எனது சந்தேகமும் சரியாகப் போய்விட்டன. ஊரில் இருந்தால் தான் அவளைக் கட்டிக்கொண்டு அழுகிருனே! வெளியூருக்குக் கொஞ்ச நாள் போய் வந்தாலாயினும் அவளை மறந்து தொலைப்பான் என்று பார்த்தால்...........அத்தேவடியாளை—சட்டைக் காரச்சியை எனக்குத் தெரியாமல் அழைத்துக்கொண்டல்லவா வந்திருக்கிருன். அச் சமாசாரம் மூந்தாநாளன்று தானே தெரிந்தது. அதிலிருந்து நான் எவ்வளவு எச்சரிக்கையாகக் கட்டிக்காத்து வந்தும் என்னை ஏமாற்றித் தூங்க வைத்துவிட்டு அவளோடு கூடிக் குலாவவன்றே போய்விட்டான்? அக் கிழப்பாவியும் அச் சிறுக்கியும் கட்டிப் புரளுவதை இந்தப் பாழும் கண்களால் பார்த்து விட்டும், என்னல் சகித்துக்கொண்டிருக்க முடியுமோ!...............அட பாவி! கட்டின பெண்டாட்டிக்குத் துரோகஞ் செய்யும

நன்று யிருப்பாயா! கடவுள் உனக்குத் தண்டனை கொடுக்காமலா போய்விடுவார்............இனி, இப்பாவியோடு வாழ்வதை விட..............." என்ற இச் சொற்களே என் காதில் விழுந்தன. இவ்வாறு தனக்குத் தானே பேசிக்கொண்டு வந்த உருவம் என் அறையைக் கடந்து போயிற்று. அவ்வுருவத்தின் பேச்சிலிருந்து, ஒரு பெண்ணெனத் தெரிந்ததோடு, அப்பெண்ணின் துயர வாழ்க்கையும் எனக்கு ஒருவாறு புலப்பட்டது. ஆகவே அவ்வம்மையின் மீது அளவு கடந்த இரக்க முண்டாயிற்று.

இந்நடு இரவில் தனியே பிரலாபித்துக்கொண்டு போகும் பெண்ணின் நிலையை முழுவதும் கவனிக்க என் மனம் விரைந்து சென்றது. ஆகவே, நான் அறையைவிட்டுச் சிறிது வெளியே வந்து, அவ் வம்மாள் போகும் வழியைக் கவனித்தேன். அப் பெண்மணி கொஞ்சதூரம் போய், தளத்தின் ஓரத்தில் நின்று சிறிது நேரம் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்புறம் ஏதோ முடிவுக்கு





வந்தவள்போல், திடீரென்று, அம்மாது கடலில் குதித்தாள். இதைக் கண்டதும் நான் திகைத்து நின்றுவிட்டேன். ஆனால் என்னை யறியாது என் வாய் "ஓ"வென்று கூவியது. என் கூச்சல் பெரிய சப்தத்தை யுண்டுபண்ணி யிருக்க வேண்டும். உடனே காப்டனும், உத்தியோகஸ்தர்களும், மாலுமிகளும் வடக்கேயிருந்து ஓடி வந்தனர். என் சிற்றப் பாவும் திடுக்கிட்டு ஓடி வந்தார். சிறிது நேரத்தில் மற்ற வர்களும் தங்கள் தங்கள் இடத்தைவிட்டு ஓடி வந்துவிட்ட னர். எல்லாரும் என்னைச் சூழ்ந்துகொண்டு, "என்ன என்ன விஷயம்" என்று பரபரப்போடு கேட்டனர். எனக்கு வாய் திறந்து ஒன்றும் பேசமுடியவில்லை. ஊமைபோல், அம்மாது விழுந்த இடத்தைக் கையால் சுட்டிக் காட்டி னேன். எல்லோரும் விரைந்தோடிப் பார்த்தனர். நானும் ஓடினேன். என் கண்கள் அம்மாது விழுந்த இடத்தை விரைவில் கண்டு பிடித்துவிட்டது. உடனே, "அதோ! அதோ" என்று சுட்டிக் காட்டிக்கொண்டே பைத்தியக் காரிபோல் கூவினேன். அக்கணமே ஒரு மாலுமி, "லைப் பெல்ட்" Life-belt என்னும் ஒருவகை ரப்பர் டயரைத் தூக்கி அம்மாது விழுந்து தத்தளிக்கும் பக்கமாக வீசி யெறிந்தான். மற்றொருவன் கயிற்றேணியைக் கட்டித் தொங்கவிட்டு விரைந்து இறங்கினன். காப்டனும் மற்றவர்களும் ஆவ லோடும், பரபரப்போடும் பார்த்துக்கொண்டு மாலுமியைச் சைகை காட்டி ஏவினர். "லைப் பெல்ட்" அம்மாது அருகே மிதந்து சென்றும், அதைப் புணையாகப் பற்றிக்கொள்ள விரும்புவதாகத் தெரியவில்லை.

அச்சீமாட்டி கைகளையும் கால்களையும் உதறி யாட்டிக் கொண்டிருந்தாளே யொழிய, தான் உயிர் தப்பித்துக்கொள் ளப் பற்றுக்கோடு அகப்பட்டதே யென்ற ஆவலோடு அந்த "லைப்-பெல்டை"ப் பற்றிக்கொள்ள முயலவில்லை.

அவள் கைகளால் நீரை யலைத்தமையால், அந்த "லைப்-பெல்ட்" அவளை நெருங்காமல் தூர மிதந்து போய்க்கொண்டிருந்ததோடு, அவளும் பின்னுக்குச் சென்ற வண்ணமிருந்தாள். இதனிடையே இரண்டொரு முழுக்கும் முழுகிவிட்டாள். இதற்குள் கயிற்றேணி வழியாக இறங்கியமாலுமி கடலில் அவள் விழுந்து தத்தளிக்கும் இடத்தை நோக்கிக் குதித்தான். அதன் பின், அவன் சிறிது தூரத்தில் மிதந்து கொண்டிருந்த "லைப்-பெல்டை" இடது கையால் பற்றிக் கொண்டே சீமாட்டியை நோக்கி விரைந்து நீந்திச் சென்றான். இடை யிடையே, காப்டனும், மற்றவர்களும், அம்மாலுமிக்கு ஊக்கம் உண்டாகுமாறு கைகளை யாட்டி ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர். இவ்வேளையில் அம்மாது கை கால்களை அப்படியப்படியே போட்டுவிட்டுச் செயலற்று நீரில் கட்டையைப்போல் மிதந்துகொண்டிருக்குமிடத்தைச் சமீபித்துவிட்டான். இன்னும் ஒரு விநாடியில் அவளைப் பற்றிவிட்டிருப்பான். இதற்குள் மூன்றுவது தடவையாக, அவள் நீரில் முழுகினாள். எனவே, அவள் முழுகிய இடத்தை ஆராய்ந்துகொண்டு வெகு வேகமாக நீந்திச் சென்ற மாலுமி, திடீரென்று எதையோ கண்டு வெருண்டவன்போல், கால்களைப் பின்னுக்கு உதைத்தவண்ணம் ஒரு பலத்த கூச்சல் போட்டான். அதே சமயத்தில் மற்றொரு கூச்சலும் நீரைக் கிழித்துக்கொண்டு வெளி வந்தது. அடுத்த கணம், அச்சீமாட்டியின் தலைமட்டும் வெளிக் கிளம்பியது. இதுவரை, கடலில் விழுந்தபோதோ நீரின் மூழ்கி யெழுந்து தத்தளித்த சமயத்திலோ கூச்சலிடுவதோ, தினறுவதோ செய்யாத அம்மாது, இச்சமயம் மிகப் பரிதாபமாகக் கதறியழுதாள். மாலுமியோ எதிர்பாராதவாறு ஏற்பட்ட ஏதோ ஒரு சம்பவத்தால் நிலை தடுமாறியவன் போல் நடுநடுங்கி "லைப்-பெல்டை"யும் நழுவவிட்டு நீரில்

மூழ்கி மூழ்கி யெழுந்தான். மாலுமியின் கூக்குரலும், அச் சீமாட்டியின் கதறலும் கப்பலில் இருந்தவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்தையுந் திடுக்கிட்டுக் கலங்க வைத்தனவென்றே சொல்லவேண்டும். இவர்களது கூக்குரலுக்குக் காரணமென்னவென்று நாங்கள் கூர்ந்து கவனித்தோம். ஆ! அக் கோரக் காட்சியை என்னென்பேன்! இப்போது நினைத்தாலும் என் உள்ளம் நடுங்குகிறது. அச்சீமாட்டியை ஒரு பெரிய சுறாமீன் அப்படியே பற்றி விழுங்குவதைக் கண்டு நாங்கள் உடல் பதறினோம். எங்களில் சிலர் அக்கோரக் காட்சியைக் காணச் சகியாது "ஆ" வெனக் கூவிக் கண்களைப் பொத்திக்கொண்டனர். இரவா யிருப்பினும் வளர் பிறைக் காலமாதலால், பகல்போல் நிலவு காய்ந்தது. அவ் வெளிச்சத்தில், நீரினுள் சுறாமீன் வந்து அம்மாதை விழுங்கிச் செல்வது எங்களுக்கு நன்றாகத் தெரிந்தது அவ்வாறு சுறாமீன் வாயில்பற்றி இழுத்துச் செல்லும்போது அச் சீமாட்டி அழுத அழுகையை அந்தோ! நான் எவ்வாறு வருணிப்பேன்! எப்பேர்ப்பட்ட கன்னெஞ்சராயினும் அதைச் செவியுற்றால், அகங் கரைந்துருகிக் கண்ணீர் விடுவர் என்பது திண்ணம். அப்பரிதாப அழுகை யொலி இச்சம்பவம் நடந்து பல வருடங்களாயினும் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. கண் மூடிக் கண் திறப்பதற்குள், சுறாமீன் அச் சீமாட்டியை இழுத்துக்கொண்டே வெகு தூரம்போய் நீரினுள் மறைந்துவிட்டது. இதுவரை என் மனதைத் திடப்படுத்திக்கொண்டிருந்த நான், இதைப் பார்த்ததற்கப்புறம், பொறி கலங்கி நிலைமயங்கிச் சோர்ந்து விழுந்தேன். அப்புறம் என்ன நடந்தது என்ப தொன்றும் எனக்குத் தெரியவே தெரியாது.

* * * * *

எனக்கு உணர்ச்சி வந்து நான் கண்விழித்துப் பார்க்கையில், என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டு மூவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். என் எதிரே கவலையோடு கவனித்துக்கொண்டிருந்த என் சிறிய தந்தை நான் கண் விழித்ததை யறிந்து, "புவனு! உடம்பு எப்படி யிருக்கிறது அம்மா!" என்று ஆவலாகக் கேட்டார்.

சூடாகக் கொஞ்சங் காப்பி கொடுக்கலாம், சார். குடித்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்றார் என் தலைப்பக்கம் இருந்தவர். அவர் இரண்டாவது கப்பல் உத்தியோகஸ்தர்.

வலப் பக்கத்தில் என் தோழன் ஜான் கில்பர்ட் முகத்தை ஒருவிதமாக வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

என் சிற்றப்பா பேச ஆரம்பித்ததும், நான் மூர்ச்சை யடைந்த விவரம் ஞாபகத்துக்கு வரவே, என் உடம்பு ஒரு குலுங்கு குலுங்கி நடுங்கியது. அன்னியர்—அதிலும் ஆடவர்—எதிரில் நான் அவ்வாறு படுத்திருப்பது எனக்கு மிகவும் நாண முண்டாயிற்று. ஆகவே, "எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையப்பா!" என்று கூறிக்கொண்டே படுக்கையை விட்டு எழுந்தேன். இச்சமயத்தில் எங்கள் அறையில் மாட்டப்பட்டிருந்த கடியாரம் ஒன்பது மணி அடித்தது. இவ்வளவு நேரமா மூர்ச்சையாகக் கிடந்தேன்? என்று கருதி நான் ஆச்சரியப்பட்டேன்.

பின்னர், நான் அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டேன். இதனிடையே ஜான் கில்பர்ட் என் சிற்றப்பாவிடம் ஏதோ சொல்லிவிட்டு வெளியே சென்றான். இரண்டாவது கப்பல் உத்தியோகஸ்தரும், என் சிற்றப்பாவும் மட்டும் முன்னிருந்த கவலை நீங்கிப் பொறுமை

யாக அமர்ந்திருந்தனர். அதன் பின்னர் நாங்கள் மூவரு மாகச் சேர்ந்து காலைச் சிற்றுண்டி யருந்தினோம். எனக்கு அப்போதும் உடலயர்வு தீரவில்லை. இதனிடையே சிற் றப்பா பேச்சை ஆரம்பித்தார். "புவனா! நீ ஒன்பது மணிக்கே உறங்கச் சென்றாயே! நடு நிசியில் அச்சீமாட்டி கடலில் விழுந்தது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று மெதுவாகக் கேட்டார்.

நான் படுக்கைக்குச் சென்றதும் தூக்கம் வராமலிருந்த தையும், சிறிது வெளியே சென்று வரலாமென்று புறப் பட்டபோது அச்சீமாட்டி தனியாகப் பேசிக்கொண்டு வந் ததையும், சந்தேகப்பட்டு மறைந்திருந்து கவனிக்கையில், திடீரென்று அம்மாது கடலில் குதித்ததையும் விரிவாகச் சொன்னேன். இரண்டாவது கப்பல் உத்தியோகஸ்தர் நான் சொல்வதை மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டு வந்தார்.

"அப்படியா!..............."என் சிற்றப்பா.

நான் சிறிது சிந்தனையிலிருந்து பிறகு, "ஆமாம் அப்பா! அச்சீமாட்டியின் புருஷர் யாரென்று அறிந்தீர்களா? இவ் அம்மையார் விஷயத்தில், அம்மனிதர் துரோகஞ் செய்தார் என்பது உண்மைதானா?" என்று பதட்டமாகவே கேட் டேன். அதற்கு என் சிற்றப்பாவோ, கப்பல் உத்தியோ கஸ்தரோ பதில் சொல்வதற்குள் நான் மீண்டும் ஆலோசனை யோடு, "கப்பலில் ஏறிய நான்காம் நாள் கப்பல் முழுவதை யுஞ் சுற்றிப் பார்த்து வந்தோம்; பாரப்பா! அப்போது கப் பல் இரண்டாவது தளத்தில் வயது முதிர்ந்த—ஆனால் அலங் கார மிகுந்த—கனவான் ஒருவர் ஒரு வெள்ளைக்கார மாதோடு உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தார். அவர்கள் நின்றிருந்த சிறிது தூரத்திற் கப்புறம் மறைவான தோர் இடத்தில் இருந்து சுமார் 36-வயதுள்ள ஒரு மங்கை

இவர்கள் களியாட்டத்தைக் கவனிப்பதும், பெருமூச்சு விடு வதும், ஆத்திரப்படுவதுமாக இருந்தார். இக்காட்சியை நான்—நீங்கள் கவனித்தீர்களோ என்னவோ—தற்செய லாகக் காண நேர்ந்தது. இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வர்கள் அவர்களாகத்தான் இருக்குமோ என்று சந்தேகப் படுகிறேன். இருட்டில் கடலில் விழுந்த மாதை இன்னர் என அடையாளங் கண்டுகொள்ள என்ருல் முடியவில்லை. ஒரு வேளை இம்மாதின் கணவனைக் கண்டால் அடையாளங் கண்டு பிடிக்கக்கூடும்" என்று கூறினேன்.

உடனே என் சிற்றப்பா தலையை யசைத்து, "ஆமாம் நீ ஊகித்தது சரியே? நானும் நீ கண்ட காட்சியைப் பார்த் தேன். அக்கனவானே கடலில் விழுந்த சீமாட்டிக்குக் கணவர். ஒளிந்திருந்து கவனித்த மங்கையே அச்சீமாட்டி: அக்கனவான் தமக்குள்ள செல்வச் செருக்கால், பஞ்சமா பாதகங்களையும் வெகு சாதாரணமாகச் செய்பவரென்றும், கூடாவொழுக்கங்கொண்ட அவர் தம் மனைவியை ஏறெடுத் துக்கூடப் பார்ப்பதில்லை யென்றுந் தெரிகிறது. இருந்தா லும், இவ்வம்மையார் அவரைத் தீய நெறியினின்றும் விலக் கத் தம்மால் கூடுமானவரை முயன்று வந்தாராம்............" என்ருர்.

"என்ன செய்தும். பாவம்! அவ்வம்மையாரால் அம் மிருகத்தைத் திருப்பவே முடியவில்லை. அதனலேயே, அவர் மனமுடைந்து தற்கொலை செய்துகொள்ள முயன்ருர். ஆனல் கோர மரணத்துக்காளானர்; சார்" என்று கப்பல் உத்தியோகஸ்தர் தொடர்ந்து கூறினர்.

"தம்மனைவி கடலில் விழுந்திறந்ததைப்பற்றி அக் கன வான் என்ன கூறுகிருர்?" என்று நான் கேட்டேன்.

அதற்குக் கப்பல் உத்தியோகஸ்தர், "என்ன சொல்வது? வெளிக்கு நீலிக்கண்ணீர் வடிக்கிறார். உள்ளுக்குள், 'சனி ஒழிந்தது' என்று சந்தோஷப்படுவார்" என்று சொன்னார்.

"இம்மாதிரி மனிதர்களின் கூடா வொழுக்கத்தைக் கண்டித்துத் தண்டிப்பதற்குச் சட்டம் மேற்படுத்த வேண்டும்" என்று யோசனையோடு, கூறினேன். கப்பல் உத்தியோகஸ்தர் புன்சிரிப்பு கொண்டார். இத்துடன் எங்கள் சம்பாஷணை முடிந்தது.

அன்று மாலை காப்டன் என்னிடம் வந்து எனது உடல் நிலையை விசாரித்தார். கப்பலி லுள்ளவர்கள் என்னைப் பாராட்டி மரியாதை செய்தனர். சிலர் அக் கனவானையும், வெள்ளைக்கார மாதையும் நேராகவும், மறைமுகமாகவும் கேலி செய்ததோடு வையவுஞ் செய்தனர். இத்தொந்தரவையும், அவமானத்தையும் பொறுக்கமாட்டாது அக் கனவான் வெள்ளைக்காரியோடு அடுத்த துறைமுகத்தில் இறங்கி விட்டனர்.

---

## பதினோராவது அதிகாரம்

---

### லண்டன்மா நகரின் சிறப்பு

கடைசியாக, எட்டாம் நாள் நாங்கள் பிரயாணஞ் செய்த கப்பல் லண்டன் துறைமுகத்தை யடைந்தது. நாங்கள் இருவரும் கப்பலைவிட்டு இறங்கினோம். என் சிற்றப்பா, நாங்கள் போய் சேருமிடத்துக்கு டாக்ஸி கேப் (Taxi cab) ஒன்றை அமர்த்தினர். அதிலேறிப் புறப்பட்

டோம். கப்பல் விட்டிறங்கும்போதே எனக்கு லண்டன்மா நகர் காட்சியளித்தது. நகரினுள் செல்லும்போது பூத உடலோடு சுவர்க்கம் புகுவது போன்ற ஒருவித புத்துணர்ச்சியை யடைந்தேன்.

லண்டன்மாநகரின் அமைப்பையும், கம்பீரத் தோற்றத்தையும் என்னென்பேன்! வானளாவியமாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் வியாபார ஸ்தலங்களும் கண்களுக்கு நல் விருந்தளிக்கக் கூடியனவா யிருக்கின்றன. மக்கள் வசிக்கும் மாளிகைகளின் மாண்பை நாள் முழுதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். சில தெருக்களில் நாலு நிலை மாடங்க ளமைந்த மாளிகைகளும் மற்றுஞ் சில வீதிகளில் ஐந்து நிலை மாடங்க ளமைந்த மாளிகைகளும் ஒரே தன்மையனவாய்க் கட்டப்பட்டிருந்தன. வியாபார ஸ்தலங்கள், தொழிற்சாலைகள், ஹாஸ்டல்கள் முதலியன மட்டும் எட்டு நிலை மாடங்களமைந்தனவாயிருந்தன. சில தெருக்களில் வெள்ளைக் கற்களாலும் கட்டப்பட்டிருந்தது பார்ப்பதற்கு விநோதமா யிருந்தன. நகரின் பல விடங்களிலும் நாடக சாலைகளும், நடன சாலைகளும், சினிமாப் படக்காட்சி சாலைகளும், சித்திரசாலைகளும், பொருட்காட்சி சாலைகளும், ஏராளமா யிருந்தன. அதுவன்றி உய்யானவனங்களும் (Parks) பூங்காவனங்களும் (Gardens) நகரை அலங்கரித்துக்கொண்டிருந்தன. தெருக்களின் ஒழுங்கை என்னென்று விவரிப்பது? பெரிய தெருக்கள் மரத்தாலமைத்த செங்கல் பதித்துத் தார்பூசி, ஒருவகைத் தூள் தூவி அழகாக அமைக்கப்பட்டிருந்தன. தெருக்களின் இரு பக்கங்களிலும் எட்டெட்டடி அகலம் சிமிண்டுக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அப்பிளாட்பாரங்களின் மீது நகரமாந்தர் நடந்து சென்று கொண்டிருந்தனர். தெருக்களின் நடுவே மோட்டார்

முதலிய பலவகையான வண்டிகள் ஒழுங்காக ஓடிக் கொண்டிருந்தன.

லண்டன் நகரின் இச்சிறப்புக்களை நேரில் பார்த்த போது நான் உண்மையிலேயே ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தேன். இதற்கு முன் என் சிற்றப்பா வாயிலாகவும், லண்டன் சென்றுவந்த மற்றும் பல நண்பர் மூலமாகவும், இங்கிலாந்து தேச வரலாற்றைப் படித்ததன் பயனுகவும், நான் லண்டன்மா நகரின் அமைப்பையும், சிறப்புக்களையும், ஒருவாறு அறிந்து வைத்திருந்தேனுயினும், இவ்வளவு அலங் காரமாக இருக்கும் என்று நான் எதிர்பார்த்ததில்லை. இரண் டாயிரம் வருடங்களுக்கு முன், ஐந்தாறுமைல் பரப்பை யுடையதாயிருந்த ஒரு சிற்றூர்—நாகரிக மில்லாத செம்பட வர்களே நிறைந்திருந்த ஒரு சிற்றூர், இப்போது 700 மைல் பரப்பினை யுடையதாய் நாகரீகத்திலும், அறிவிலும், ஆராய்ச் சியிலும், அரசியல் தந்திரத்திலும் சிறந்த பல்லாயிரம் மக் களைக் கொண்டதாய், பலவகைச் சிறப்புக்களையும் வாய்ந்த தாய் இருக்கின்றதென்றால் அது பேராச்சரியமுறத் தக்க தன்றோ! இப்போதுகூட உலகப் படத்தில் பிரிட்டிஷ் தீவுகள் எங்கே இருக்கின்றனவென்று விளக்கைக் கொண்டு தேடிப் பிடிக்கக்கூடிய நிலையிலன்றோ இருக்கின் றன! எனினும், இங்கிலாந்து தேசத்தின் தலைநகரான லண் டன்மா நகரம் உலகத்திலுள்ள பெரிய நகரங்களுள் தலை சிறந்து விளங்குகிறது என்று கூறுவது மிகையல்ல. மனி தராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் லண்டன்மா நகரைப் பார்த்தே தீரவேண்டும்.

இவ்வாறு நான் லண்டன்மா நகரச் சிறப்பைப் பாராட்டிக்கொண்டே சிற்றப்பாவோடு 'டாக்ஸி கே' யில் சென்று கொண்டிருந்தேன். இதனிடையே, ஜான் கில்

பர்ட் நாங்கள் கப்பலைவிட்டு இறங்கிய சமயத்தில் கூட வந்து சந்திக்கவில்லையே என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழும்பிச் சிறிது யோசனையை யுண்டாக்கியது. கடைசியாக நாங்கள் இந்தியர்களால் நடத்தப்படும் ஒரு ஓட்டலையடைந்து, நாங்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு விடுதியை ஏற்படுத்திக்கொண்டோம்.

என் சிற்றப்பா என்னைக் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் சேர்ப்பதற்குரிய முயற்சிகளைச் செய்யலானார். நான் எம். ஏ. வகுப்பில் சேர்ந்து வாசிப்பதற்காகச் சர்வ கலாசாலைத் தலைவருக்குப் போட்ட மனு அநுமதி வரும்வரை சிற்றப்பா என்னுடனேயே இருந்தார். நான் அக்கலாசாலையில் எம். ஏ. வகுப்பு மாணவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கலாசாலையைச் சேர்ந்த ஹாஸ்டலிலேயே தங்கிப் படிக்க எனக்கு இடங்கொடுக்கப்பட்ட பின்னரே, அவர் இந்தியாவுக்குத் திரும்பினார். அதற்குள் அவர், எனக்கு லண்டன் நகரைச் சுற்றிக் காண்பித்து வரலானார். நாங்கள் டிராம் வண்டியிலும் ஆம்னி பஸ்ஸிலுமாக (ஒரு வகை பஸ்) நகரின் பல பாகங்களையும் பார்த்து வந்தோம். டிராமோ, பஸ்ஸோ நம் நாட்டிலுள்ளவைகளைப் போலில்லாமல், இரண்டு மூன்று மாடிகளை யுடையனவாயிருந்தன. அவ் வண்டிகளின் மேல் மாடியிலிருந்து பிரயாணஞ் செய்தால், லண்டன் நகர முழுவதையும் நாம் பார்க்கலாம்.

நாங்கள் ஒரு நாள் மாலை சித்திரக் காட்சி சாலையைப் பார்த்துவிட்டு ஓட்டலுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தோம். இருந்தாற்போலிருந்து எங்களுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் ஒரு சிறு ஆரவாரங் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். ஒரு சில ஆங்கிலேயர்கள் எங்களைச் சுட்டிக்காட்டித் தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக்கொண்

டிருந்தனர். சிறுவர் எங்களை நோக்கி, "பிளாக்கி! (Blackie) பிளாக்கி!!" என்று உரக்கக் கூவிக் கைகொட்டிச் சிரித்தனர். எனக்கு அவர்கள் செய்கை யொன்றும் விளங்கவில்லை. சிற்றப்பாவுந் திரும்பிப் பார்த்துவிட்டுப் புன்சிரிப்புடன், "நாம் கருப்பர்களாம். அம்மா! வெள்ளையர்களாகிய அவர்கள் வாழு மிடத்துக்கு நாம் வந்து நடமாடுவது அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. இந்தியர்களைக் கண்டால் அவர்கள் இவ்வாறுதான் கேலி செய்வது வழக்கம்" என்று கூறினார். நான் வியப்போடு நடந்தேன்.


நான் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் சேர்ந்து ஒரு வாரமாயிற்று. சிறிய தந்தை என்னைவிட்டுச் சென்ற இரண்டு நாட்களுக் கப்புறம், ஜான் கில்பர்ட் ஹாஸ்டலில் என்னை வந்து பார்த்தான். கப்பல் ஏறியபோது சந்தித்தற்கப்புறம் என்னைப் பார்க்க முடியாமல் போனதற்கு அவன் ஏதேதோ காரணங்களெல்லாம் கூறினான். ஐந்தாறு மாத காலம் இந்நகரிலேயே இருக்கவேண்டி நேருமென்றும், ஆதலால் அடிக்கடி என்னை வந்து பார்ப்பதாகவும் கூறினான். முதல் நாள் தான் இந்த பீடிகையெல்லாம். அப்புறம் அவன் நினைத்தபோதெல்லாம் வருவதும், என்னைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்வது மானான். நான் அவனோடு பழைமை போலவே பழக ஆரம்பித்தேன்.

ஒரு நாள் சனிக்கிழமை இரவு எட்டு மணியிருக்கும்! சனிக்கிழமைகளில் தொழிலாளர் முதல் அனைவரும் பலவிதமான கேளிக்கைகளிலும், களியாட்டங்களிலும் இரவு முழுவதையுங் கழிப்பது வழக்கம். ஆகவே, மக்கள் ஆண்களும் பெண்களும் அணியணியாக நடனசாலை, நாடக சாலை முதலிய இடங்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர். இராக் காலங்களில் லண்டன்மா நகரம் ஒப்பற்ற அழகுடன்

விளங்கும். எங்கு பார்த்தாலும், பலவித நிறம் வாய்ந்த மின்சார விளக்குகள் பிரகாசிப்பது இதென்ன பூலோக சுவர்க்கமோ என்று கருதும்படியாக இருக்கும். அன்று ஜான் கில்பர்ட் என்னை ஒரு தியேட்டருக்கு அழைத்துச் சென்றான். அங்கு ஏராளமாகக் கூட்டம் இருந்தது. இருப்பினும், மக்கள் அமைதியாக இருந்து ஒவ்வொருவராக டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே சென்றனர். நாங்களும் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே போய் உட்கார்ந்தோம். ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியர் எழுதிய "மாக்பெத்" (Macbeth) என்னும் நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

ஜான் கில்பர்ட் மற்ற நாட்களைக் காட்டிலும் மிகுந்த குதூகலமாயிருந்தான். நாடகம் ஆரம்பமானதும் அவன் அதில் நடிக்கும் நடிகர்களுடைய திறமையைப் பற்றிச் சொல்லத் தொடங்கியவன் இடையிடையே சம்பந்தமில்லாத வார்த்தைகளைக் கொட்டி யளக்கலானான். அத்துடன் அவன் கைகளை இப்படியும் அப்படியுமாக ஆட்டி, என்னை இடித்து இடித்துப் பேசினான். நான் அவனது செயல்களை அவ்வளவாகப் பாராட்டவில்லை. கடைசியாக, அவன் காதல் சம்பவங்களை வருணிப்பதில் ஷேக்ஸ்பியரின் நிபுணத்வத்தைப் பலபடக் கூறி வந்தவன் உணர்ச்சி மேலீட்டாலோ என்னவோ சுற்று வட்டத்தைக்கூடக் கவனியாது உரக்கப் பேசத் தொடங்கி என் தோளின்மீது கையைப் போட்டு வீணைத் தந்தியைத் தடவுவதுபோல், என் கன்னத்தை வருடலானான். இச்செயல் எனக்கு ஒருவித திகைப்பையும், பரம சங்கடத்தையும் உண்டு பண்ணியது. இவன் என்ன மூளையை இழந்து விட்டானா என்றுகூட எண்ணினேன். இச்சமயம் என் பின்னிருந்து 'கலுக்' என்று





யாரோ நகைக்குஞ் சப்தங் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். பின் வரிசையிலிருந்த ஒரு வாலிபர் தம் நண்பருக்கு எங்கள் நிலைமையைச் சுட்டிக்காட்டி ஏதோ கூறிக் கொண்டிருந்தார். இதைக் கண்டதும் நான் நாணத்தால் தலை கவிழ்ந்தேன்.

அதற்கப்புறம் எனக்கு அங்கு இருக்கை கொள்ள வில்லை. ஷேக்ஸ்பியர் நாடகங்களை ராஜதானி கலாசாலையிலும் மியூஸியம் தியேட்டர் முதலிய நாடகக் கொட்டகைகளிலும் கலாசாலை மாணவர்களும் மற்றும் நடிகர்களும் நடித்திருப் பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். இருந்தாலும், இப் போது இந்த லண்டன் தியேட்டரில் நடிக்கப் பெற்ற "மாக்பெத்" நாடகத்தின் மேன்மையை எவ்வாறு புகழ்ந் துரைப்பேன்! அதில் நடித்த நடிகர்களின் நடிப்புத் திறமை யைப் போல், அதன் பின்னரும் இன்றுவரைக் கண்டதில்லை. நடிகர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் எடுத்துள்ள 'பாத் திரங்'களாகவே ஆகிவிடுகின்றனர். அதில் தான் ஜீவநாடி யிருக்கிறது. நாடகம் இவ்வளவு சிறப்புடையதாயிருந்தும் நான் அமைதியா யிருந்து, பார்ப்பதற்கில்லாமற் போயிற்று. ஜான் கில்பர்ட் அறிவில்லாமல் செய்த குரங்கு சேஷ்டை யால், பிறர் எங்களைக் கண்டு நகைக்க நேர்ந்த பிறகு நான் அங்கு எப்படி அமைதியாக இருந்து நாடகத்தைப் பார்க்க முடியும்? அனலின்மீது உட்கார்ந்திருப்பதுபோல் சங்கடப் பட்டேன். மனவேதனை தாங்க முடியவில்லை. நாடகத்தி னிடையே எழுந்து வெளியே போவதுஞ் சாத்தியமில்லை.

ஜானோ பின்னிருந்தவர்களின் ஏளனச் சிரிப்பை யுணர்ந்த தாகவே தெரியவில்லை. என் தோளின் மீது அமர்ந்து விஷமஞ் செய்துகொண்டிருந்த கைகளை நான்

தூக்கி யெறிந்தது அவனுக்கு ஒரு வேளை கோபமுண்டாக்கி யிருக்கலாம். நான் அவனை மீண்டும் சங்கோஜத்தோடு கவனிக்கும்போது அவன் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் நாடகத்தை மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந் தான். சிறிது நேரத்திற்குப் பிறகே, நான் தலையைத் தூக்கி நாலா பக்கத்தையுஞ் சுற்றிப் பார்க்கலானேன். எங்கு பார்த்தாலும், அணியணியாகவே இருந்த ஆண்களும் பெண் களும் ஒருவருக்கொருவர் சாகசச் செயல்களையும் சல்லாப மொழிகளையுமே பரிமாறிக் கொண்டிருந்தனர். இக்காட்சி யைக் கண்ட பின்னர், என்னிடம் குடி கொண்டிருந்த நாணம் அவ்வளவாகத் தலைகாட்டவில்லை. ஆண் பெண் பேத மின்றிச் சமத்துவமாகவே பழகும் நாட்டில் பிறந்த ஜான் என்னிடம் யாதொரு விகற்பமுமின்றிச் சர்வ சாதாரண மாகவே நடந்திருக்கிறு னென்றும் அவனது அந்நியோந்நிய பாவத்தை யறியாது அவனிடம் அநாகரிகமாக நடந்து கொண்டது அடிமை நாடாகிய இந்தியாவில்—அதிலும் மூடப்பழக்க வழக்கங்கள் நிறைந்த தென்னிந்தியாவில் பிறந்ததன் பயனுக உண்டான சகவாச தோஷமென்றும் கருதி மனம் வருந்தினேன். ஆகவே, இதனுல் ஒருவேளை உண்மை நண்பனுகிய ஜான் கில்பர்ட்டின் மனம் புண்பட் டிருக்கலாம் என்று எண்ணிய நான் அவனைக் குதூகலப் படுத்த வேண்டி நானுகவே அவன் முதுகைத் தட்டிக் கொடுத்த வண்ணம் அவனை மிக நெருங்கிக் காதருகே முகத்தை வைத்து சம்பந்த மில்லாத வார்த்தைகள் பேச லானேன். ஜான் சிறிது நேரம் எங்கோ கவன முள்ளவன் போலிருந்து, என் பக்கந் திரும்பி ஒரு விதமாகப் புன்முறு வல் கொண்டான். அதற்குப் பதிலளிப்பவள் போல் நானும் ஜானைப் பார்த்துச் சிரித்தேன். அதென்ன! அர்த்த மில்லாத

அசட்டுச் சிரிப்பு என்று நீருஞ் சிரிக்கிறீரல்லவா தோழரே!

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை யனுபவமும், லண்டன்மா நகர வாசமும் ஏற்பட்டு ஏறக்குறைய நான்கு மாதங் களாய் விட்டன. சர்வகலாசாலையின் விசேஷமோ, சீமை யின் மகிமையோ எனது தோற்றத்தில்—செயலில்—பேச் சில் பெரு மாறுதல் ஏற்பட்டிருப்பது எனக்கே நன்றாகத் தெரிந்தது. இளமையிலேயே, வெள்ளைக்காரத் தாதியால் வளர்க்கப்பட்டதனாலோ, பிறகு ஆங்கிலப் பாடசாலையிலும், ஆங்கிலக் கிறிஸ்தவப் பாதிரிமார் பெரிதும் சம்பந்தப்பட்ட கிறிஸ்தவக் கலாசாலையிலும், மேனாடுகளில் பெரிய பெரிய பட்டம் பெற்று வந்திருக்கும் புரொபஸர்களே நிறைந்த ராஜதானிக் கலாசாலையிலும் படித்ததனாலோ உண்டாகாத ஒரு மாற்றம் லண்டன்மா நகருக்கு வந்த பின்னர் ஏற்பட் டிருக்கிற தென்றால், அதற்கு ஏதேனும் முக்கிய காரணம் இருக்கவேண்டு மல்லவா! ஆமாம்: உண்டு. சுற்று வட்ட மும் இடமும் எனது பெருமாறுதலுக்கு உண்மையான காரணமாகும். லண்டன்மா நகரில் வசிப்பவர்கள் பெரும் பாலோர் கந்தருவ லோகத்து மக்களோ என்று எண்ணு மாறு வேலை யென்பதே சிறிது மின்றி எப்போதும் உல்லாச மாகவே இருந்தனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் விதவித மான நூதன உடைகளையும் நவீன நாகரிகப் போக்கையும் உடையவர்களா யிருந்தனர். கேம்பிரிட்ஜ சர்வகலாசாலை மாணவ மாணவிகள் வகுப்பு நடக்கும் நேரங்களில் மட்டு மின்றி, மற்றக் காலங்களில் கலந்துறவாடிக் கொண்டிருந் தனர். கலாசாலையைச் சேர்ந்த ஹாஸ்டலில், பெண்களுக்கு வேறு; ஆண்களுக்கு வேறு தனி இடம் ஏற்படுத்தப்பட் டிருந்தது. ஒரு சமயம் ஆங்கில மகளிர் பலர், "ஆண்

பெண் சமத்துவம் பாராட்டும் இந்நாளில் பெண்களுக்கு தனி ஹாஸ்டல் ஏற்படுத்தியிருப்பது மிகவும் கேவலமானதா யிருப்பதோடு பெண்ணுலகை இழிவு படுத்துவதுமாகும். ஆகவே, மகளிராகிய நாங்களும் ஆடவர்களோடு கல்வி முதலிய விஷயங்களில் கலந்து பழகும்படிச் செய்வதற்கு ஹாஸ்டலில் வசதி செய்து தருதல் வேண்டும்'' என்று கிளர்ச்சி செய்தார்கள். ஆனால், அக்கிளர்ச்சி பயன் தர வில்லை. இதிலிருந்து மேனாட்டு மகளிரின் அதி தீவிர மனப் போக்கை நீர் அறிந்து கொள்ளலாம். என்போன்று இந்தியாவிலிருந்து வந்து வசிக்கும் இந்திய மாணவர்களோடு ஆங்கில மாணவிகளும், இந்திய மாணவிகளோடு ஆங்கில வாலிபர்களும் மிகவும் அந்நியோந்நியமாகப் பழகி வருவது குறிப்பிடத்தக்கதாகும். என்னோடொத்த மாணவ மாணவி களின் அதி தீவிரப் போக்கும் என்னிடம் மிக நெருங்கிப் பழகும் கில்பர்ட்டின் மனப்போக்கும் என்னை நாளடைவில், ஆங்கில மகளாகப் புனர்ஜன்மம் எடுக்கச் செய்து விட்டது. நாகரிகம் முதிர்ந்த ஆங்கிலப் பெண்மணிகள் உடுத்துவதுபோன்ற பாரஸிக மாதர் உடைகளையே உடுத்தி வந்தேன். லண்டனுக்கு வரும்போது கப்பலில் இந்திய மாணவ மாணவிகள் நடந்துகொள்ளும் மாதிரியைக் கண்டு அருவருப்புற்ற யானே இப்போது அவர்களைக் காட்டிலும் நடை யுடை பாவனைகளில் விஞ்சி நின்றேன் என்று அன்பரே! வெட்கத்தோடு கூறுகிறேன்.

கலாசாலையிலும் எனக்குப் பல மாணவ மாணவிகள் அநேகமாயினர். ஆயினும் கலாசாலை நேரம்போக மற்ற நேரங்களில் பெரும் பகுதியை ஜான் கில்பர்ட் கொள்ளை கொண்டு விட்டான்—அதாவது அவன் என்னைப் பல இடங் களுக்கு அழைத்துச் சென்று வந்தான்; ஆகையால்,

அவர்களோ டெல்லாம் நட்பு அவ்வளவாக வேரூன்ற வில்லை.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை நாங்கள் இருவரும் லண்டன் நகரைப் பொழுது போக்காகச் சுற்றிவரப் புறப்பட்டோம். முதலில் 'ஹைட்' பார்க் (Hyde Park) குக்குச் சென்றோம். மற்ற பார்க்குகளை விட அது எல்லா வகைகளி லும் சிறப்புடையதாய் இருந்ததால் அங்கு எப்போதுமே கூட்டம் அதிகமா யிருக்கும். அங்கு ஒரு பக்கம் ஆஸ்திகப் பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. மற்றொரு பக்கம் அர சியல் வாதி அரசாட்சியில் உள்ள குற்றங் குறைகளை எடுத்து வாதித்துக் கொண்டிருந்தார். இன்னொரு பக்கம் பெண்ணுரிமையைப் பற்றி பிரசங்கம் நடந்து கொண்டிருந் தது. பிறநாடுகளின் நிலைமையைப் பற்றி வேறொருவர், வேறொரு பக்கம் சொற் பொழிவு செய்து கொண்டிருந் தார். ஒவ்வொரு இடத்திலும் ஜனங்கள் கூட்டங் கூடி ஆவ லோடு கேட்டுக் கொண்டிருந்தனர். இவைகளை யெல்லாம் இலட்சியஞ் செய்யாது பலர் ஒய்யாரமாக உடை யுடுத்திக் கொண்டு ரேடியோ சங்கீதத்தைக் கேட்டு இன்புற்றுக் கொண்டிருந்தனர்.

நாங்கள் அந்தப் பார்க்கில் சிறிது நேரம் உலவிவிட்டு வெளிவந்தோம். எங்கள் எதிரில் இருவர் (அவர்களில் ஒரு வர் குருடர்) ஹார்மோனியம் வாசித்த வண்ணம் பாட்டுப் பாடிக்கொண்டு வந்தனர். அவர்களில் ஒருவர் கழுத்தில் கடிதம் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது. அக் கடிதத்தில் அவர்கள் வறுமை நிலை விவரிக்கப்பட்டிருந்தது. லண்டனில் பிச்சைக்காரர்கள் வெளியே திரிந்து யாசகம் வாங்கினால் தண்டனையடைய நேருமாதலால் தீப்பெட்டி விற்பது பாட்டு கள் பாடி வருவது போன்ற போக்குக் காட்டி வெளியே

திரிவது வழக்கம். எனவே, நாங்கள் அப்பிச்சைக்காரர்களுக்கு இரண்டு 'பென்னி' (இங்கிலாந்து நாணயம்) களைக் கொடுத்துவிட்டு அப்புறம் சென்றோம்.

நாங்கள் நீண்ட ஒரு தெருவழியாகப் போய்க்கொண்டிருந்தோம். ஓரிடத்தில் பாதையின் நடுவில் இரும்புக் கம்பிகளை வளைத்து வைத்திருக்கும் இடமொன்று காணப்பட்டது. அதனருகில் பூமியினுள் குகைபோல ஒரு வழி தோன்றியது. அதன் வழியே ஒருவரிருவர் இறங்கிப் போய்க் கொண்டிருந்தனர். இதைக்கண்ட யான், "இது என்ன! பூமியினுள் சுரங்க வழி யிருக்கிறதா! அவ்வழியாகப் போனால் எங்கே போகலாம்?" என்று ஜானை நோக்கி கேட்டேன்.

கில்பர்ட் புன் சிரிப்போடு, "இதுவரை இதைப்பற்றி உனக்குத் தெரியாதா! இது சுரங்கமுமல்ல; வேறொன்றுமல்ல. குகைபோலக் காணப்படும் இவ்வழியாகச் சிறிது தூரஞ் சென்றால், கற்களால் கட்டப்பட்ட அழகான தோரிடத்தை யடையலாம். அது மாந்தர் சிறுநீர் கழித்தற்கு ஏற்படுத்தப்பட்ட இடமாகும். அதனருகில் இருக்கும் வாயிலின் தொளையில் ஒரு 'பென்னி'யை யிட்டால், அவ்வாயில் திறக்கும். அதனுள் மலங் கழித்தற்கான இடம் வசதியாக அமைந்திருக்கிறது. பெரிய தெருக்களில் இதுபோன்றே பல இடங்கள் இருக்கின்றன" என்று சொன்னான்.

மேலுஞ் சிறிது தூரம் நடந்து சென்றதும், ஜான் எதையோ நினைத்துக் கொண்டவன் போல், "ஆமாம்; புவனு! அந்த இடத்தைப் பார்த்துச் சுரங்க வழியா என்றாயே! நீ நினைத்த மாதிரி இது சுரங்கவழியா யில்லா விட்டாலும், உண்மையாகவே சுரங்கவழிகள் இந்நகரில் இருக்கின்றன. அவைகளின் வழியாகத் தரைக்குள் பிரயாணஞ்

செய்யலாம். இது நீ நேரே பார்க்கத் தகுந்த சிறந்த காட்சிகளுள் ஒன்றாகும். வா! அதை உனக்குக் காட்டுகிறேன்" என்று கூறி யழைத்துச் சென்றான். நான் ஆச்சரியத்தோடு அவனைப் பின் தொடர்ந்தேன்.

ஓரிடத்தில் அழகான சிறிய கட்டடமொன்று காணப்பட்டது. அதன் வாயில் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதன் முன்புறத்தில் 'Under-ground' (தரையின் கீழ்) என்று எழுதியிருந்தது. ஜான் அங்கு கற்களால் அழகாக அமைந்திருந்த பாலத்தின் வழியாக என்னை யழைத்துச் சென்றான். அவ்வழியாகக் கீழே இறங்கியதும் எலக்டிரிக் விளக்குகள் வரிசையாக எரிந்து பிரகாசித்துக் கொண்டிருந்த வழியொன்று தென்பட்டது. அதன் வழியே சிறிது தூரஞ் சென்றதும் 'டிக்கெட்' விற்கு மிடத்தை யடைந்தோம். ஜான் அங்கே வைத்திருந்த பெட்டியின் தொளையில் சில 'பென்னி'களை வைத்தான். உடனே வேறொரு வழியாக ஒரு டிக்கெட் வெளியே வந்தது. இவ்வாறே இன்னொரு டிக்கெட்டும் வாங்கிக்கொண்டான். அந்தப் பெட்டியின் மீது இன்ன இன்ன இடங்களுக்கு இதில் டிக்கெட் கிடைக்கும் என்றும், அவ்வவ் விடங்களுக்குக் கூலி இத்தனை பென்னி என்றும் அக்கூலியைப் பெட்டியின் துவாரத்தில் வைக்க வேண்டும் என்றும் எழுதி யிருந்தது. இவ்வியந்திரத்தின் மூலமாக வன்றி அங்குள்ள குமாஸ்தா (Booking-clerk) விடத்திலும் டிக்கெட் வாங்கிக்கொள்ளலாம்.

டிக்கெட் வாங்கியதும் எதிரே காணப்பட்ட ஒருபால் தொட்டியண்டை ஜான் என்னைக் கூட்டிச் சென்றான். அதில் 'Lift' என்று எழுதியிருந்தது. அத்தொட்டியில் நாங்கள் ஏறியதும், அங்கிருக்கும் வேலைக்காரன் தொட்டியின் இருபுறத்துக் கதவுகளையும் அடைத்து, ஒரு யந்திரத்தால்

அதை மெதுவாகக் கீழே இறக்கினன். தொட்டி 120 அடிகளுக்குக் கீழே போய் நின்றது. நாங்கள் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினேம். அங்கு பல விடங்களுக்கும் வழி சென்றது. நாங்கள் கொஞ்ச தூரஞ் சென்றதும், அப்போதுதான் வந்து நின்ற மின்சார வண்டியொன்றில் ஏறினேம். அவ் வண்டியில் கதவைத் திறந்து மூடுவதற்கு switch அமைந்திருந்தது. அதைக் கவனித்தற்கென்று அமர்த்தப்பட்டிருந்த வேலையாளொருவன் வண்டி ஒரு இடத்தில் நின்றதும், அந்த ஸ்டேஷன் பெயரும், வண்டி புறப்பட்டவுடனே அடுத்த ஸ்டேஷன் பெயரும் உரத்துக் கூறிக்கொண்டிருந்தான். அதுவன்றி ஸ்டேஷன் பெயரும் பெரிய எழுத்தில் எழுதி யிருந்தது. பூமியின்கீழ் வண்டிகள் போவதற்கும், வருவதற்கும் வேறு வேறு வழி (Tracks) இருந்தது. வண்டிகள் போவதற்குப் பூமியைத் தொளைத்து உள்ளிடத்தில் செங்கல்களால் கட்டி வழி அமைத்திருந்தது. அங்கு டிராம் வண்டிகள்கூட ஓடிக் கொண்டிருந்தன.

தரையின் உள் வழியாகவே லண்டன் நகரின் பல பாகங்களுக்குஞ் சென்று விட்டு, மீண்டும் நாங்கள் தரையின் கீழாகவே யிருந்து மேலேறினேம். இச்சமயம் (Lift)ல் ஏறுவதற்குப் பதிலாக, இப்போது அசையும் படிகள் (Moving Stairs) ஒன்றில் ஏறி நின்றேம். உடனே நாங்கள் அப்படிமீது நின்றவாறே மேலிடத்தை யடைந்தோம்.

மற்ெருரு நாள் ஜான் கில்பர்டும், நானும் லண்டன்மா நகரை யடுத்துள்ள குன்றுகளையும், வனங்களையும் சுற்றிப் பார்த்துவரச் சென்றேம். நாங்கள் ஒரு தனி மோட்டார் காரில் ஏறிச் சென்றேமாதலால், இயற்கைக் காட்சிகளைக் கண்ணுரக் கண்டு களித்தோம். பொழுது சாயுஞ் சமயத்

தில் நாங்கள் நகருக்குத் திரும்பி வந்தோம். கடைசியாக நாங்கள், லண்டன் நகரையே வளம்படுத்தி நிற்கும் தேம்ஸ் நதிக்கரைப் பக்கமாக வந்துகொண்டிருந்தோம். அந்நதியின் படகுகளும் ஸ்டீம் லான்சுகளும் இங்கு மங்குமாக ஓடிக்கொண்டிருந்தன. நதியின் இரு பக்கங்களில் இருந்த உயர்ந்த மாடங்களும் அடுத்தடுத்துக் கட்டியுள்ள பாலங்களும் அம் மாலைக்காலத்தில் நகரைப் பேரழகு செய்து நின்றன.

தேம்ஸ் நதியின் கரையில், சுற்றிலும் இரும்புக் கம்பிகளால் வளைக்கப்பட்டு, இரு பக்கத்தும் உயர்ந்தோங்கிய பெரிய கோபுரங்களை யுடையதாய், பேரழகு வாய்ந்ததாய் உள்ள "வெஸ்ட்மின்ஸ்டர் பாலெஸ்" என்னும் பார்லிமெண்டு சபைக் கூட்டத்தின் தோற்றம் என் கண்களுக்கு நல்விருந்தா யிருந்தது.

நான், தேம்ஸ் நதியின் ரமணியமான அழகிலும் பார்லிமெண்ட் சபைக் கட்டடத்தின் கம்பீரத் தோற்றத்திலும் அறிவைப் பறிகொடுத்துப் பார்த்து வருகையில் என் பக்கத்தமர்ந்து மோட்டாரை ஓட்டியவண்ணம் ஏதேதோ பேசிக்கொண்டு வந்த ஜான் கில்பர்ட் திடீரென்று வெறி பிடித்தவன்போல், வலது கையால் பிடித்திருந்த 'ஸ்டீரிங்'கை விட்டு விட்டு, டார்லிங்! மை டியர் டார்லிங்!! (Darling!! My Dear Darling!!)..........................." என்று கூறிய வண்ணம் என்னைச் சேர்த்துக் கட்டி முத்த மழை பொழிந்தான். நான் திகைப்பும் வியப்பும் ஒருங்கே எழ ஏதோ கூற முயன்றேன். ஆனால் இதற்குள்...........ஆ! எங்கள் மோட்டார் கட்டுக் கடங்காது வளைந்து ஓடியதன் பயனாக எதிரே வந்த மோட்டா ரொன்றில் மோதிக் கவிழ்ந்தது. கில்பர்ட் ஒரு பக்கம் போய் விழுந்தான். நான் ஒரு

மூலையில் போய் உருண்டேன். நான் விழுந்த அதிர்ச்சி யில் உணர்வு கலங்கி மயங்கு நிலையை யடைகையில், ஜனங் கள், “ஆ! ஆ!! ஐயோ! போய்விட்டார்களே!” என்று அல றுஞ் சப்தங் கிணற்றிலிருந்து கேட்பதுபோல் என் காதில் விழுந்தது.

நான் மீண்டும் கண் விழித்தபோது ஒரு படுக்கையில் இருப்பதை யுணர்ந்தேன். என் தலை மிகவும் பளுவாய் இருந்தது. உடம்பெல்லாம் வலி யெடுத்தது. நான் சுற்று முற்றும் பார்த்தேன். லேடி டாக்டர்களும், நர்ஸுகளும் என்னைக் கவனித்தவண்ணம் நின்றிருந்தனர். இதனால் நான் இருப்பது ஒரு ஆஸ்பத்திரியென்று புலப்பட்டது. அதற்கப்புறந்தான், நான் பார்லிமெண்டு சபைக் கட்டடத் துக்குச் சமீபத்தில் கில்பர்ட்டுடன் மோட்டாரிலிருந்து விழுந்தது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அவ்விபத்தி லிருந்து நான் எவ்வாறு உயிர் தப்பினேன் என்பது எனக்கே ஆச்சரியமாயிருந்தது. ஜான் கில்பர்ட் என்கதி யானன் என்னுங் கேள்வி அடுத்தபடியாக, என் மனதில் உதித்தது. எனவே, கவலையோடு நான் என்னைச் சூழ்ந் திருப்பவர்களை மருள மருள விழித்துப் பார்த்தேன்.

என் அருகிலிருந்த லேடி டாக்டர், லளிதமாக என் னைப் பார்த்துக் கையமர்த்திவிட்டு, ‘ஸ்டெதாஸ்கோப்’ என் னுங் கருவியால் என் தேக முழுவதையும் பரிசீலனை செய் தாள்; நாடியைக் கவனித்தாள்; பின்னர் அவள் எனக்கு உள்ளுக்கும் வெளிக்கும் மருந்துகொடுத்துவிட்டு, பக்கத்தி லிருந்த நர்ஸிடம் ஏதோ சொல்லிவிட்டு அவ்விடத்தினின் றும் அகன்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் என்னைக் கவ னிப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட மேற்படி நர்ஸ் தவிர மற்றவர்களெல்லாம் போய்விட்டனர்.

பிறகு நான் மெதுவாக எழுந் துட்கார முயன்றேன். ஆனால் என்னால் எழுந்திருக்க முடியவில்லை. இதற்குள் அந்த நர்ஸு, நான் உடம்பை அலட்டிக்கொள்ளக் கூடா தென்றும், அசையாமலே படுத்திருந்தால்தான் சீக்கிரம் தேகம் குணமடையுமென்றும் தெரிவித்தாள். நான் படுத்த வண்ணமாகவே ஜான் கில்பர்ட் என்னவானன் என்று மெதுவாகக் கேட்டேன்.

அந்த நர்ஸ் என்னை ஒருவிதமாகப் பார்த்து விட்டுப் புன்சிரிப்பு கொண்டாள். பிறகு, "அம்மா! அவர் வேறொரு ஆஸ்பத்திரியில், கவலைக்கிடமான நிலையிலிருக்கிறார். அவருக்கு உடம்பு முழுதும் பலமாகக் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், அவரது உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை. பயப்படாதே!....உம். கடவுள்தான் உங்க ளிருவரையும் இப்பேராபத்தினின்றும் காப்பாற்றினர். இல்லாவிடில், நீங்கள் இம்மோட்டார் மோதலில் பலியாகி இருப்பீர்கள். ................" என்று கூறினாள். இதைக் கேட்டதும் என் தேகம் நடுங்கியது. 'எதிர்பாராத இப்பேராபத்து நேர்ந்ததற்கு முக்கிய காரணமானவன் ஜான் கில்பர்ட் அன்றோ! அவனது அசட்டுச் செயலாலன்றோ இவ்வாறு நடந்தது?' என்று நான் எண்ணியபோது, ஜான்மீது உண்மையிலேயே ஆத்திரம் பொங்கி யெழுந்தது. ஆனால், அடுத்த கணம் அவனிடம் எனக் கேற்பட்டிருந்த பாசம் அக் கோபத்தின் வேகத்தை யடக்கி யொடுக்கியது. மேலும், அவன் என்னைக்காட்டிலும் பலத்த காயங்களுக்குள்ளா யிருக்கிறான் என்றறிந்ததும், வருத்தத்தையும் மறந்து அவன்பால் இரக்கங்கொண்டேன்.

பத்துப் பதினைந்து நாட்களுக்குள் நான் பூரண குணமடைந்து ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறினேன். ஜான்

கில்பர்ட் குணமடைவதற்கு மட்டும் இரண்டு மாதங்களாயின."

இவ்வாறு தன் வரலாற்றைக் கூறிக்கொண்டே வந்த புவனசுந்தரி என்னை உற்று நோக்கி, "என்ன தோழரே! உமது முகம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் காட்டுகிறதே! என்ன யோசிக்கிறீர்?" என்று திடீரெனக் கேட்டாள்.

நான் (புன்னகையோடு);—"ஒன்றுமில்லை" என்றேன்.

புவனசுந்தரி:—"உம் - தெரிந்துகொண்டேன். நீர் என்ன சிந்திக்கிறீர் என்பதை அறிந்துகொண்டேன். எனக்கும் ஜான் கில்பர்ட்டுக்கும் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய தொடர்பும், அவன் சமயா சமயங்களில் செய்துவரும் சரச சல்லாபங்களுக்கெல்லாம் உட்பட்டு இணங்கியிருந்து வரும் மனோபாவமும் உமக்கு ஆலோசனையை யுண்டாக்கிவிட்டது என்று தெரியும்.—நான் ஊகிப்பது சரிதானே! ஏன் தயங்குகிறீர்? சரியென்று சொல்வதால் எனக்கு நாணம் ஏற்படுமோ என்று கருதுகிறீரா! அதெல்லாம் ஒன்றும் உண்டாகாது. நான் செய்தது தவறு என்று எனக்கே நன்றாகத் தெரிகிறதே! ஆனால் நான் கெட்ட பிறகு உண்டான அறிவும் அனுபவமும் முன்னரே ஏற்பட்டிருக்குமானால், நான் இக்கதியை யடைந்திருக்கமாட்டேன். ஜான் கில்பர்ட் போன்ற எமகாதக வாலிபர்களின் காதல் லீலைகளுக்குக் கருவியாக அமைந்திருக்க மாட்டேன் என்பது நிச்சயம். ஜான் கில்பர்ட் தன் கருத்துக்கு என்னை எப்படி இணங்கி வரும்படிச் செய்தான் என்பது எனக்கே தெரியாது. அதை நினைத்தால் எனக்குப் பேராச்சரியமாய் இருக்கிறது. ஜன சமூகம் மிக விபரீதமான செயலென்று கருதக்கூடிய விஷமச் செயல்களையும் சர்வ சாதாரணமான

தென்றும், சிநேகிதர்களி னிடையே சகஜமாக நடைபெறக் கூடிய விளையாட்டுச் செயலென்றும் நான் கருதிப் பேசாம லிருக்கும்படி அவன் முதலிலிருந்தே மிகத் தந்திரமாகப் பழக்கி வந்திருக்கிறன். அதிலும் லண்டனுக்கு வந்ததற்கு அப்புறம் அவன் முன்னையினும் தாராளமாகப் பேசியும் பழகியும் வந்ததோடு, என் விருப்பத்தை யறியாமலே, எந் தச் சமயத்திலும், என்னவாறுலும் செய்வது என்ற நிலைக்கு வந்து விட்டான். இராத்திரி சங்கம் (Night Club), சினிமாப் படக்காட்சி சாலை (Picture Palace) முதலிய இடங்களுக்கு என்னை அடிக்கடி அழைத்துச் சென்று, விட புருடரோடு திரியும் விலைமகளிர் போக்கைக் காட்டி, உலகம் என்றல் இதுதான்-மக்கள் வாழ்க்கை என்பது இதுதான்—என்று எண்ணி மனவிகார மடையும்படிச் செய்து, அவன் கருத்தை நிறைவேற்றுவதற்கு என்னைப் பண்படுத்தி வந்தான் என்று தெரிகிறது. அதிகம் கூறுவானேன்! ஜான் கில்பர்ட், ஸ்ரீநி வாஸன் போன்றவர்கள் என்னை மயக்குவதற்குச் செய்து வந்த ஆடம்பரமான உடைகளிலும், தடபுடலான செயல் களிலும், நயவஞ்சகப் பேச்சிலும் நான் அறிவைக்கொள்ளை கொடுத்தேனே யொழிய உண்மையானவர்கள் நட்பை நான் சிறிதும் மதித்தேனில்லை.

எனது சிநேகிதர்களில் என்னை எனக்காகவே நேசித்து என் நன்மையையே விரும்பி வந்தவர் ஒருவர் உண்டு என் றல் அவர் சத்தியநாதன் என்பவ ரொருவர்தான். அவரைப் போன்ற உத்தம புருஷரை என் வாழ்நாளில் இதுவரை கண்டதில்லை. அவர் ராஜதானி கலாசாலையில் என்னேடு வாசித்தவர். அவரைப்பற்றி உமக்கு இதுவரை ஒன்றுமே கூறவில்லை. அவரது அமைதியான தோற்றமும், மேன்மை யான பேச்சும் போலி நவ நாகரிகச் சேற்றில் அழுந்திய

என் போன்ற இளம் பெண்களை வசீகரிக்காது. ஆயினும் உருவத்திலோ, கல்வி அறிவிலோ, நுண்ணிய ஆராய்ச்சியிலோ குற்றங் குறை கூறுதற்கு முடியாது. மாணவர்களிடத்திலோ, ஆசிரியர்களிடத்திலோ, யாரிடத்திலானாலுஞ் சரி, அவர் அநாவசியமாக உரையாட மாட்டார். இவரது இத்தன்மையைக் கண்டு சில மாணவர்களும், மாணவிகளுங் கூடக் கேலி செய்வதுண்டு. எனினும், அதையெல்லாம் அவர் லட்சியமே செய்ததில்லை. அத்தகையவர், என்னிடம் என்ன காரணத்தாலோ நேசமுடையவரா யிருந்தார். அவர் எனது நலத்தை அடிக்கடி விசாரிப்பார். எனக்கு ஏதேனும் உற்றால், அவருக்கு ஏற்பட்டதுபோல் வருந்துவார். வகுப்பில் நான் ஏதேனும் பாடத்தில் விஷயமறியாது தடுமாறினால், உடனே அவர் அதை எனக்கு விளக்கிக் கூறித் தெளிவுபடுத்துவார். இவ்வளவு தூரம் அவர் என்னிடம் பரிவுடன் நட்புரிமை பாராட்டி வந்தும், நான் அவரை லட்சியஞ் செய்வதேயில்லை. அவர் எனது தோழமைக் குரியவர் என்று கருதியதுமில்லை. சமய சந்தர்ப்பம் நேர்ந்தால் அவரோடு பேசுவது என்ற அளவில் சாதாரணமாகவே பழகி வந்தேன். எனது இவ்வலட்சிய பாவத்தை யறிந்து கொண்டாலும், அவர் என்னிடம் அன்புடையவராகவே யிருந்தார். அவரது பேரன்புக்கும் எனது அலட்சியத்துக்கும் உதாரணமாக ஒரு சிறு சம்பவத்தை மட்டும் இங்கு உமக்குக் கூறுவது அவசியமென்று எண்ணுகிறேன்.

கோடைக் காலம், ராஜதானி கலாசாலை விடுமுறை விடப்பட்டிருந்தது. ஆதலால் ஒருநாள் நானும் என் தாயும் பெரம்பூரிலுள்ள உறவின ரொருவர் வீட்டுக்குச் சென்று விட்டு, பிற்பகல் மூன்று மணிக்குமேல் வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். எங்களுடன் என் சிற்றன்னையும் வந்

திருந்தாள். போகும் வழியில், சைஞு பஜாருக்குச் சென்று சில துணிமணிகளை வாங்கிச் செல்லலாமென்று எங்களுக்கு யோசனை யுண்டாயிற்று. எனவே, நாங்கள் ஏறிவந்த (Governess cart) ஐ சைஞுபஜார் பக்கம் ஓட்டச் செய்தோம். வண்டி பெரியமெட்டு வழியாக வந்து பீபில்ஸ் பார்க்குக்குள் நுழையும்போது, இருந்தாற்போலிருந்து குதிரை இடக்குச் செய்ய ஆரம்பித்தது. வண்டி யோட்டிக்கு அது அடங்காது முன்னங்கால்களைத் தூக்கிக்குதித்து முன்னுக்கும் பின்னுக்குமாக இழுத்து எங்களை யலட்டியது. அது செய்யும் ஆர்ப்பாட்டத்தில் நாங்கள் வண்டியிலிருந்து தூக்கி யெறியப்படுவோம் போலிருந்தது. என் சிற்றன்னையின் குழந்தைகள் இதைக் கண்டு பயந்து அழ ஆரம்பித்தன. இந்நிலையைக் கண்டு ஜனங்கள் கூடி விட்டார்கள். ஆனால், எல்லாரும் குதிரையின் சண்டித்தனத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்களே யொழிய, வண்டியி லிருப்பவர்களுக்கு விபத்தொன்றும் நேராதவாறு காப்பாற்ற வேண்டுமே என்ற எண்ணம் ஒருவருக்காயினும் இருந்ததாகத் தெரியவில்லை. நாங்கள் இறங்குவதற்கோ வழியில்லை; சங்கடப்பட்டுக் கொண்டிருந்தோம். இச்சமயத்தில் யாரோ ஒரு வாலிபர் கிழக்குப் பக்கமாக இருந்து ஓடிவந்து துள்ளித் துள்ளிக் குதிக்கும் குதிரையின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டு, ஒரு தாவுத்தாவிக் கடிவாள வாரைப் பற்றி இழுத்துப் பிடித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் குதிரை அடங்கி நின்றுவிட்டது. உடனே வண்டியோட்டி வண்டியினின்றும் கீழே குதித்து, அவ்வாலிபருக்கு நன்றி கூறிவிட்டு, குதிரையைத் தட்டிக் கொடுத்துச் சாந்தப்படுத்தினன். இவ்வளவு துணிகரமாகக் குதிரையை யடக்கிய வாலிபர் யாரென்று நான் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! எனது கலாசாலைத் தோழர் சத்தியநாதனே அவ்

வாலிபர். எனவே, நன்றி யறிதலும், மகிழ்ச்சியில் தாங்க மாட்டாமல், "மிஸ்டர் சத்தியநாத! எங்களை விபத்தினின்றுங் காப்பாற்றியதற்காக மிகவும் வந்தனம்" என்று கூறிக் கொண்டே வண்டியைவிட்டு இறங்கினேன். அப்போதே வண்டியி லிருப்பவர்களைக் கவனித்த சத்தியநாதர் என்னை நோக்கி, "ஆ புவனா! உங்கள் வண்டியா இது! எதிர்பாராத சந்திப்பாக இருக்கிறதே...." என்று வியப்போடு கூறினார்.

பின்னர் அவர், தாம் பொழுது போக்கிற்காக, பார்க்குக்கு வந்ததாகவும், தூரத்தில் குதிரை பண்ணும் இடக்கைப் பார்த்துவிட்டு ஓடிவந்ததாகவுஞ் சொன்னார். "கடவுள்தான் உங்களை இந்நேரத்தில் இங்கு கொண்டுவந்து விட்டார்" என்று நான் ஆறுதலாகக் கூறிக்கொண்டேன். அவர் என்னுடைய நன்றி யறிதலான வார்த்தையை அவ்வளவாகப் பாராட்டாது இரண்டொரு வார்த்தை கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார். நான் வண்டியிலேறியதும் குதிரை பழையபடி ஒழுங்காக ஓடியது.

---

## பன்னிரண்டாவது அதிகாரம்

---

### "காதல் என்றால் என்ன! பூதமா? பேயா?

அத்தகைய பெருந்தன்மையான குணம் வாய்ந்த சத்திய நாதரை நான் லண்டன் வந்த ஒரு வாரத்துக் கெல்லாங் கண்டேன். அது என் சிற்றப்பா என்னைக் கலாசாலையில் சேர்த்துவிட்டுச் சென்ற சமயம். அவரும் மேற் படிப்புக்காக லண்டனுக்கு வந்ததாகத் தெரிந்தது. அவர் தெரு



வில் என்னை எதிர் பாராத வாறு சந்தித்ததும், பெரு மகிழ்ச்சி கொண்டார். அத்துடன் நான் எம். ஏ. வாசிக்க கேம்பிரிட்ஜ் கலா சாலையில் சேர்ந்ததை யறிந்து பெரிதும் பாராட்டி என்னை உற்சாகப் படுத்தினார். நாங்கள் பேசிக் கொண்டே நடந்து தேம்ஸ் நதிப் பக்கமாக வந்தோம். அங்கு ஆங்கில மக்கள் பலர் தங்கள் மனைவி மக்களோடு குதூகலமாக வந்து பொழுதுபோக்கிக் கொண்டிருந்தனர். சிலர் படகுகளிலும், ஸ்டீம் லாஞ்சுகளிலும் உல்லாசமாகப்

போய்க் கொண்டிருந்தனர். அங்கும் ஏழைகளின் கூட்டம் என் கண்களுக்குக் காட்சி யளித்தது. நதியில் யாரேனும் தவறியோ, தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனோ விழுந்துவிடாமல் கவனிப்பதற்காகப் போலீஸார் அங்கு சுற்றிக்கொண்டிருந்தனர்.

எனக்குப் படகில் ஏறி நதியைச் சுற்றிவர வேண்டுமென்று ஆசை யுண்டாயிற்று. அதைச் சத்தியநாதரிடம் குறிப்பிடவே, அவர் ஒரு படகை வாடகைபேசி யமர்த்தினார். நாங்கள் இருவரும் ஏறியபின், சத்தியநாதரே படகைத் துடுப்புக்களால் தள்ளிச் செலுத்தினர். நான் அந் நதியில் மிதந்து மீன்களைக் குத்தித் தின்று விளையாடிக்



கொண்டிருக்கும் நாரைகளையும், வாத்து முதலிய பறவைகளையும் பார்த்துக் கவனித்தவண்ணம் ஏதோ உரையாடிக் கொண்டிருக்கையில் சத்திய நாதர் என்னைக் கனிவாக

நோக்கி, "புவனு! நீண்ட நாளாக நான் உன்னை ஒன்று கேட்கலாமென்று நினைத்து வருகிறேன். ஆனல், அதைச் சொல்ல இதுவரை எனக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இப்போது கூறலாமா?" என்று கேட்டார்.

"என்ன தெரியுமே!" என்றேன் நான் வேருரிடத்தில் கவனத்தைச் செலுத்திய வண்ணம்.

"சொன்னுல் ஏளனஞ் செய்ய மாட்டாயே!"

"எதற்காக ஏளனம்?"

"இல்லை நான் கூறப்போகும் விஷயம் அத்தகையது, நீ ஆகாயத்தில் பறக்கிருய். நான் தரையில் இருக்கிறேன். எனவே உன்னிடம் விஷயத்தைச் சொல்லவுந் துணிவேற்படவில்லை.

"மிஸ்டர் நாத்" நீர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறதே! நாம் இருவரும் படகில் தானே இருக்கிருேம். ஆகாயத்தில் நான் பறக்கவில்லையே!—என்னமோ சொல்ல வேண்டுமென்று கூறிவிட்டு ஏதேதோ கூறுகிறீரே!" என்று வினவினேன்.

"நம்மிருவருக்குமுள்ள தகுதியின் தார தம்மியத்தைக் குறிப்பிட்டேன். புவனு!—அதிருக்கட்டும் நான் சொல்ல வந்த தென்னவென்ருல்..............." என்று சத்தியநாதர் இழுத்தார்.

நான் பதட்டத்தொடு, "இவ்வளவு தயக்கமேன் நாத் என்ன அப்பேர்ப்பட்ட விஷயம்? தாராளமாய்ச்சொல்லும் என்று கூறினேன்.

"நா—ன்—உ—ன்—னை—க்—காதலிக்கிறேன்; அதை யேற்றுக் கொள்வாயா புவனு?" இச்சமயம் அவர் முகம் அடைந்த மாறுதலை எவ்விதம் வருணிப்பேன்!

"என்ன! என்னைக் காதலிக்கிறீரா? அப்படி யென்றால் என்ன அர்த்தம்?" என்று அறியாமையோடு கேட்டேன்.

"நான் உன்மீது காதல்கொண்டிருக்கிறேன். அது பல நாட்களாக நத்தைபோல் என் மனதில் ஊர்ந்து வளர்ந்து சில நாட்களாக என்னைக் கவிந்துகொண்டிருக்கிறது."

"இதென்ன காதல்! இந்தக் காதல் என்ற வார்த்தை புத்தகங்களில் அடிக்கடி உபயோகிக்கப்பட்டு வருவதைப் பார்த்திருக்கிறேன்; பலர் கூறவுங் கேட்டிருக்கிறேன். ஆனால் அச்சொல்லுக்கு அர்த்தமென்னவென்று தான் எனக்குத் தெரியவில்லை—மிஸ்டர் நாத்! நீர் இப்போது கூறுவது என்னவென்று எனக்கு விளங்கவில்லை. தெளிவாகக் கூறும்" என்று கூறினேன்.

சத்தியநாதர் ஆச்சரியத்தோடு, "காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதா?—சரி! நான் உன்னிடம் அன்புகொண்டிருக்கிறேன். நீயும் என்பால் அன்புகொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று சொன்னார்.

"நான் உம்மிடம் அன்பாகத்தானே இருக்கிறேன்? இன்னும் என்ன அன்பு கொள்ளவேண்டும்?"

"இந்த அன்புக்கும் நான் வேண்டும் காதலுக்கும் வித்தியாச முண்டு. அதனால்தான் முதலிலேயே காதல் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினேன்."

"அன்புக்கும் காதலுக்கும் என்ன வேற்றுமை?"

"அன்பு என்பது ஏதோ ஒரு காரணம் பற்றி உண்டாகும் விசுவாசமாகும். காதல் எக்காரணமுமின்றி ஆண்

பெண்களிடத்து எழும் நேசமாகும். இக்காலத்தில் இக் காதல் என்னும் தூய பேரன்பைக் கடையில் விற்கும் கத்திரிக்காய்போல் மலிவாக ஆக்கி விட்டார்கள். ஒரு வாலிபன் ஒரு பெண்ணிடத்துக் காணப்படும் அழகையோ கல்வியையோ, பொருளையோ கருதி அவள்மீது மோகங் கொள்ளுகிறான். அவைகளில் அவன் விரும்பிய பொருள் மறைந்துவிட்டதும் உடனே அப் பெண்ணின்பால் வைத்த ஆசையை ஒழித்துவிடுகிறான். ஆகையால் அது ஒருவித சுயநல ஆசையே தவிர வேறில்லை. காதலோ அப்படிப் பட்டதன்று. அழகுக்கோ பணத்துக்கோ கல்விக்கோ அல்லாது ஒரு பெண்ணை அவளுக்காகவே ஒரு வாலிபன் காதலிப்பது காதல் ஆகும். அது எப்போதும் நிரந்தரமாக இருக்கும். எக்காரணத்தை முன்னிட்டும் காதல் அழியாது. அவ்விதக் காதலையே நான் உன்னிடங் கொண்டிருக் கிறேன். அத்தூய காதலையே உன்னிடமும் நான் எதிர் பார்க்கிறேன். இப்போது தெரிகிறதா புவனா?— நீ என் னைக் காதலிக்கிறாயா?" என்று கேட்டார்.

இதுவரை சாவதானமாகக் கேட்டு வந்த நான் கொல் லென்று சிரித்து, "காதல் என்பதன் தன்மை இதுவே யென்றால், அது ஏளனஞ் செய்யவேண்டியதே! காதல் கொள்வதற்குக் காரணமில்லையாம். தான் அறியாப் பேயாட்டந்தானும். பேஷ்! மிஸ்டர் நாத்! அவ்வித பைத்தியக்காரத்தனத்தை விட்டொழித்துவிடும்" என்று யோசனை கூறினேன்.

சத்தியநாதர், "என் உள்ளத்தில் வேரூன்றிப் போ யிருக்கும் அக் காதலை நான் எவ்வாறு விட்டொழிக்க முடி யும்?" என்று இரக்கமாகச் சொன்னார்.

நான் அலட்சியமாக, "என்ன நாத்! என்னமோ பிதற்றுகிறீரே! மனதைக் கட்டுப்படுத்தினால் நீர் சொல்லுங் காதல் எப்படி இடங் கொள்ளும்? என்று கூறினேன்.

சத்தியநாதர், "விளையாட்டாக ஏதேதோ பேசுகிறாய்? புவனா? ஆண் பெண்களுக்கு இயற்கையாக வுள்ள இக்காத லின் தன்மையை நீ இன்னமும் அறியவில்லை என்று தெரி கிறது. கொஞ்சநாள் போனால் இதன் தன்மை உனக்குப் புலனாகும்" என்றார்.

நான் பெருமிதமாக, "அதெல்லாம் ஒன்றுமில்லை வேண்டுமானால் பாரும். காதல் என்றால் என்ன! பூதமா? பேயா? எதுவா யிருந்தாலும் நாம் வெருட்டினால் நாய் போல் ஓடிப் போகிறது. பயந்தால் தான் உம்மைத் துரத் தும்; குரைக்கும்; வெகு தூரம் தொடரும்" என்று கூறி னேன்.

சத்தியநாதர் முகத்தில் ஏமாற்றங் காணப்பட்டது. அவர், "சிறிது நாள் சென்றால், இப்போது நீ அலட்சியஞ் செய்யும் காதலின் தன்மையை உணர்வாய். நீ இப்போ திருப்பது போன்றே என்ஞான்றும் கன்னிகையாக இருக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம். எனது எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்ற தோழியாக நீ இருப்பதற்கு ஏற்றவள் என்று கருதியே உன் காதலை வேண்டி நிற்கின்றேன். உன் னுடன் எனக்குக் காதல் தொடர்பு ஏற்படாவிடில் என் வாழ்க்கை வெறும் பாலைவனத்தைப்போல் பாழ்தான். இதையெல்லாம் யோசித்துப் பார்த்து மற்றொருநாள் உனது உள்ளக் கருத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டு கிறேன். என்ன சொல்லுகிறாய் புவனா?" என்று தழுதழுத்த குரலில் கூறினார்.

அவர் மன நிலையை யறியாத நான் குறும்பு மதியால் அப்பேச்சை யலட்சியமாக நினைத்து, "அதற்கென்ன அவசரம்? பின்னர் யோசிக்கலாம். மிஸ்டர் நாத்! பொழுது சாய்ந்துவிட்டது; போகலாம் வாரும்" என்று கூறிவிட்டுப் படகு கரையை யடைந்ததும் அவருடன் கீழிறங்கிச் சென்றேன்.

பொருள் விரும்பி, குலம் விரும்பி, நலம் விரும்பி, அழகு விரும்பிப் பொய்க் காதல் பேசினவர்களையே நான் பெரிதாக அச் சமயம் மதித்தேனே யொழிய, அருள் அரும்பி என்னை விரும்பிய சத்திய நாதரைச் சட்டை செய்தேனில்லை. அத் தவறை இப்போது நன்ருக உணருகிறேன். அதற்குரிய தண்டனையையும் நன்ருக அநுபவிக்கிறேன். சத்தியநாதர் என்னிடங் கொண்டிருந்த உண்மைக் காதலின் தன்மையை இப்போது நினைத்தாலும் என் மனதை வாள் போட்டு அறுக்கிறது. என்னிடம் அவர் பொருள் பூஜை புகழ் வேண்டவில்லை. ஒரு மொழி வேண்டினர். உரைக்க மறுத்தேன் பாவி! காதலிக்கிறேன் என்னும் மொழியையே அவர் பெரிதும் விரும்பினர். பிச்சி யான் பேசினேன் இல்லை. இனி யென் செய்வது? அவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை........என்ன நினைத்திருப்பார்? எனது இறுமாப்பைக் கண்டு அவர் வெறுத்திருப்பார். வேதனைப்பட்டிருப்பார். வெறும் வஞ்சகம் நிறைந்த உள்ளமுடையவள் என்று கருதியிருப்பார். ஆகையால் தான் அவர் அச் சம்பவத்துக் கப்புறம் என்னைக் காணவில்லை நான் எங்கெங்கோ தேடி யலைந்தும் அவர் இன்றுவரை என் கண்ணில் படவேயில்லை. எங்கு சென்ருரோ! எது ஆனரோ? ஆ! அவரை--அவ் வுத்தமரை—சத்தியநாதரை—நான்—பாவியாகிய நான்—இப்போது ஏன் நினைத்தேன்;...........ஆஹா!

ஆ!—" என்று கூறியவண்ணம் அப்படியே அசைவற்று உட்கார்ந்துவிட்டாள். அதற்குமேல் அவளுக்குப் பேச நாவெழவில்லை போலும்! அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. முகத்தை கைகளால் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள். இந்நிலையில் அவ்வீரப் பெண் மணியைப் பார்க்க என்னால் சகிக்கவில்லை. அத்துணை பரி தாபகரமா யிருந்தது.

புவனசுந்தரி அந்நிலையைச் சமாளித்துக்கொண்டு மேலே பேசுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு மேலாயிற்று. பிறகு அவள் மீண்டும் பேசத் தொடங்கினாள். "நண்பரே! எனது துன்ப வாழ்க்கையைச் சொல்லி உம்மையும் நான் துயரத்துக்காளாக்குகிறேன். இருப்பினும் அதைப் பாராட் டாது மனம் பொறுப்பீரென்ற நம்பிக்கை யோடேயே மேலே கூறத் தொடங்குகிறேன். நான் என் வாழ்க்கை வரலாற்றில் சொல்ல வேண்டிய பகுதி ஒரு சிறிதே யிருக் கிறது. அப்பகுதி இதுவரை கூறி வந்தவைகளைக் காட்டி லும் கொடுமை நிறைந்ததாகவும், உலகத்தின் உண்மைச் சொரூபத்தை வெளிப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். துன்பத்தின் எல்லையைக் கடந்த எனது வாழ்க்கையின் இறு திப் பகுதியைக் கேட்டால், ஒரு வேளை உமது நெஞ்சம் வெடித்துவிடுமோ என்றும் அஞ்சுகிறேன்................உம் ............மோட்டார் விபத்துக் காளானதற் கப்புறம் ஜான் கில்பர்ட்டுக்கும் எனக்கும் மிகவும் அந்நியோந்நிய பாவம் அதிகமாய்விட்டது. எங்களது நெருக்கமான நட்பைக் கண்டு பல மாணவ மாணவிகள் பொறாமைகூடக் கொண் டார்கள். லண்டன்மா நகரில் நாங்கள் சுற்றித் திரியாத இடமில்லை. போகாத தியேட்டர், கிளப்புகள் இல்லை. நாங்கள் அனுபவிக்காத இன்பமில்லை. உலகத்தில் மக்கள்

அதிலும் நவநாகரிக மக்கள்—அனுபவிக்க வேண்டிய இன்பம் எவ்வளவுண்டோ அவற்றில் ஒன்றைக் கூட நாங்கள் பாக்கியாக விடவில்லை. இவ்வளவுக்கும் ஆகும் செலவெல்லாம் என்னுடையதே. ஆரம்பத்தில் தான் ஜான் கில்பர்ட் சிறிது பணஞ் செலவு செய்தான். எனக்கு மாதா மாதம் தந்தையிடமிருந்து வரும் பணமெல்லாம் நாலைந்து நாட்களுக்குக் கூட வருவதில்லை. எனக்குப் பணம் வேண்டிய போதெல்லாம் என் தந்தைக்கெழுதி உடனே தருவித்துக்கொள்வேன். பணஞ் செலவாவதைப் பற்றிய கவலையே எனக்குக் கிடையாது. நான் சிரமப்பட்டுச் சம்பாதித்தால் தானே அப்பணத்தின் அருமை எனக்குத் தெரியும்.

ஜான் கில்பர்ட், என்னைப் பணஞ் சொரியுந் தேவதையென்றே கருதி வந்தான். என்னைச் சதாகாலமும் புகழ்ந்து பேசுவதுதான் அவனுக்கு வேலையாய்ப் போய்விட்டது முதலில் இம்மாதம் சென்னைக்குப் போகிறேன்; வருகிற மாதம் செல்கிறேன் என்று என்னிடங் கூறிவந்த அவன் எட்டு மாதங்களுக்கு மேலாகியும் போகவேயில்லை. மேலும் அவன் லண்டனில் எங்கிருக்கிறான்; என்ன செய்கிறான் என்ற விஷயமே மர்மமாயிருந்தது, அவன் சொல்வதுதான் எனக்குத் தெரியும். இருந்தாலும், இதைப்பற்றியெல்லாம் நான் சிந்திப்பதேயில்லை; அதற்கு அவகாசமுங் கிடையாது. அது நிற்க.

ஒருநாள் நான் ஹாஸ்டலிலிருந்து கலாசாலைக்குப் போகத் தயாராய்க் கொண்டிருக்கையில், ஹாஸ்டல் பியூன் எனக்குத் தந்தி வந்திருக்கிறது என்று தெரிவித்தான். நான் பதை பதைப்படைந்து வெளியே வந்ததும் தந்திச் சேவகன் தந்தியொன்றை நீட்டினான். அது எங்கிருந்து வந்திருக்கும் என்ன செய்தியைத் தாங்கி வந்திருக்கிறதோ என்று

எண்ணத்தோடு, நடுங்கிய கையால் தந்தியை வாங்கினேன். அதனுடன் தந்தி மணியார்டரும் வந்தது. அவசர அவசரமாக அவ்விடத்திலேயே பிரித்துப் பார்த்தேன். அதில் பின் வருமாறு காணப்பட்டது:-



"மிஸ் புவனசுந்தரி,

மிகவும் நெருக்கடியான நிலைமை. விஷயம் இத் தந்தியில் விவரிக்க முடியாதது. தந்தி மணியார்டராக 500 ரூபாய் அனுப்பியிருக்கிறேன். உடனே சென்னைக்குத் திரும்பி வரவும். அவசரம்.

தணிகாசலஞ்
செட்டியார்."

இத் தந்தியைப் படித்ததும் என் மனம் என்னென்னவெல்லாமோ எண்ணி ஏங்கியது. கலாசாலைக்குப் போய் வந்த பிறகு, ஊர் செல்வதைப்பற்றி யோசிப்பதா? அல்லது அப்போதே ஊருக்குப் போவதற்குரிய ஆயத்தங்களைச் செய்வதா? இவ்விரண்டில் எதைச் செய்வது உசிதம்?

என்று எனக்குத் தோன்றவில்லை. எவ்வித முடிவுக்கும் வராமல் தத்தளித்துக் கொண்டிருந்தேன். நெருப்பின் மீது நிற்பவர்கள் எவ்விதம் இருக்கை கொள்ளாமல் தவிப்பார்களோ அதுபோன்றே நானும் என் அறைக்கும் தாழ்வாரத்துக்குமாகப் பரபரப்போடு உலவிக்கொண்டிருந்தேன். தந்திச் சேவகன் பணத்தைக் கொடுக்கக் காத்துக்கொண்டிருப்பதையும் நான் நெடுநேரங் கவனிக்கவில்லை. என் பரிதாப நிலையைக் கண்டுதான் போலும், அவன் அவசரப்படுத்தாது தக்க சமயத்தை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தான் என்று நினைக்கிறேன். கலாசாலை மணி "கண கண" வென்று ஒலிக்க ஆரம்பித்த பிறகே என் மனக் குழப்பத்தினின்றும் விழிப்புற்றேன். மணி யடிக்குஞ் சப்தங்கேட்டதும், மாணவிகள் அவசரமாகப் புத்தகங்களை வாரி யெடுத்துக்கொண்டு ஓடினர். நான் இருக்கும் பக்கமாக ஓடிவந்த எலிஸா லாண்டி என்ற பெண்மணி எனக்காகத் தந்திச் சேவகன் காத்திருப்பதைக் குறிப்பிட்டுவிட்டுச் சென்றாள். அப்போதே அவன் பணங் கொடுக்கக் காத்திருப்பது எனக்கு நினைவுக்கு வந்தது. உடனே நான் அவனிருக்குமிடஞ் சென்று அவன் வைத்திருந்த தந்தி மணியார்டரில் கையெழுத்திட்டு 500 ரூபாயைப் பெற்றுக்கொண்டேன்.

உடம்பு அசௌக்கியமாயிருந்த இரண்டொரு மாணவிகள் தவிர, மற்றவர்களெல்லாம் கலாசாலைக்குச் சென்றுவிட்டனர். நான் இன்னும் எவ்வித முடிவுக்கும் வராமலே அலைந்து கொண்டிருந்தேன். இச்சமயம் ஹாஸ்டலுக்கு எதிர் பக்கத்துள்ள தெரு வழியாக ஜான் கில்பர்ட் போய்க் கொண்டிருந்தது தற்செயலாக என் கண்ணில் பட்டது. உடனே என்னை யறியாமலே "ஜான்; மிஸ்டர் ஜான் என்று கூவினேன். என் குறிப்பறிந்த ஹாஸ்டல் பியூன் ஓடிச்

சென்று அடுத்த கணத்தில் ஜானை நானிருக்குமிடம் அழைத்து வந்தான்.

ஜான் கில்பர்ட் இயற்கையாயுள்ள புன்னகையோடு, "என்ன விசேஷம் புவனு! மணியடித்து விட்டதே! கலா சாலைக்குப் போகவில்லையா?" என்று கேட்டான். நான் அதற்கொன்றும் பதிலளிக்காமல் என் கையில் வைத்திருந்த தந்தியை அவனிடம் கொடுத்தேன். அதைப் பார்த்ததும் ஜானின் முகம் மாறுதலடைந்தது. "புறப்படப் போகிறாயா!" என்று அவன் தடுமாற்றத்தோடு கேட்டான்.

"வேறென்ன செய்வது? நீ தான் சொல்லேன்" என்றேன் நான்.

கில்பர்ட் தலை குனிந்தவண்ணம் சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்தான். பிறகு நிமிர்ந்து என்னைக் கூர்ந்து நோக்கிய வண்ணம், "இத் தந்தியிலுள்ள செய்தியின் போக்கை பார்த்தால், அங்கு ஏதோ முக்கிய சம்பவம் அல்லது விபரீத நிகழ்ச்சி நேர்ந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆதலால், நீ போய்வரத்தான் வேண்டும். இதை அலட்சியப் படுத்துவதற்கில்லை. நீ உடனே போய் ஹாஸ்டல் சூபரின்டெண்டிடத்தும், காலேஜ் பிரின்ஸிபாலிடத்தும் விஷயத்தைத் தெரிவித்து, இந்தியாவுக்குப் போய்வர அநுமதி பெற்றுக்கொள். நான் இதற்குள் இந்தியா செல்லுங் கப்பல் எப்போது போகிறது என்று தெரிந்து கொண்டு, உன் பிரயாணத்துக்குரிய சகல ஏற்பாடுகளையுஞ் செய்துவிட்டு வருகிறேன்" என்று கூறினான். நான் அவனது யோசனையை ஆமோதிப்பதுபோல் தலை யசைத்தேன். அத்துடன் நான் 500-ரூபாயையும் அவனிடந் தந்தேன். ஜான் அதைப் பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

லண்டன் துறைமுகத்தில் ஏராளமான கூட்டம். "வைஸ்ராய் ஆப் இந்தியா" என்னுங் கப்பல் புறப்பட இன்னும் அரைமணி நேரமே இருந்தது. பல இடங்களுக்குச் செல்வோரும் கப்பலில் ஏறிக்கொண்டிருந்தனர். நானும் ஜான் கில்பர்ட் எனக்குரிய கைப்பெட்டியைத் தூக்கிக் கொண்டுவரக் கப்பலில் ஏறினேன். பிரயாணிகளை வழியனுப்ப வந்தவர்களான உறவினர்களும் நண்பர்களும் அவர்களோடு சிறிதுநேரம் அளவளாவி யிருந்து கடைசியாகப் பிரியா விடைபெற்றுச் செல்லுங் காட்சி காண்போர் மனதை நீராய் உருக்குந் தன்மையதா யிருந்தது. ஜான் கில்பர்ட் என்னை மேல் தளத்திலுள்ள முதல் வகுப்பில் 56-வது அறைக்கு அழைத்துச் சென்றான். எனது கைப்பெட்டியும், மற்றுஞ் சில சாமான்களும் உரிய இடத்தில் வைக்கப்பட்டன. எல்லாம் ஒழுங்கு செய்யப்பட்டபின் என்னை அவன் இரக்கமாக நோக்கினன். அப்பார்வையில் ஏமாற்றங் காணப்பட்டது. சிறிதுநேரம் நாங்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தவண்ணம் பேசாமல் நின்றோம். என் மனம் மிகவுங் குழம்பி யிருந்தமையால், உண்மையிலேயே எனக்கு அந்நேரத்தில் என்ன பேசுவதென்றே தோன்றவில்லை எனவே, எங்களிடையே நிலவிய மௌனத்தை ஜானே முதலில் கலைத்தான். அவன் மெதுவாக "காரியம் முடிந்ததும் லண்டனுக்குத் திரும்பிவிடுவாயல்லவா, புவனு!" என்று கேட்டான்.

"திரும்பி விடாமலென்ன! எனது எம். ஏ. பரீக்ஷையை முடிக்கவேண்டு மல்லவா! அதற்காக வாயினும் கட்டாயம் வந்துதானே தீரவேண்டும். நான் போனதும் விசேஷமென்ன என்று கவனித்துவிட்டு உடனே திரும்பி விடுவேன்" என்று நான் உறுதியாகக் கூறினேன்.

ஜான் கில்பர்ட், "திடீரென்று ஏற்பட்டிருக்கும் உனது பிரிவு எனக்கு மிகவும் மனச் சங்கடத்தை யுண்டுபண்ணி யிருக்கிறது. இரவும் பகலும், கனவிலும் நனவிலும் உன் எழிலுருவத்தையே கண்டு களித்துக்கொண்டிருக்கும் எனக்கு இந் நீண்ட காலப் பிரிவை எவ்வாறு சகித்துக் கொண்டிருப்பதென்று தெரியவில்லை. உலக அறிவு விளங் காச் சிறு பருவத்தில் நம்மிடையே வேரூன்றிய நட்பு, ராஜ தானிக் கலாசாலையில் மீண்டும் நெருங்கிய தொடற்பு ஏற் பட்டபோது செழித்து வளர்ந்தது; லண்டன்மா நகரில் அந்நட்பு காதலாகக் கனிந்தது. பழுத்துப் பலன் கூடத்தந்து விட்டது என்று சொன்னால் மிகையாகாது. இந்நிலையில் பிரிவு ஏற்பட்டிருப்பது பழுத்த பழத்தைப் பறித்துண்ணு முன்பு, புழுக்கள் சேர்ந்து அழுகி நாறலெடுக்கும்படிச் செய்துவிட்டது போலிருக்கிறது. இப்பிரிவினால் நமது பிரிக்க முடியாத நட்புரிமைக்குப் பங்க மேற்பட்டு விடுமோ என்றே அஞ்சுகிறேன். நீ என்ன நினைக்கிறாய் புவனா!...." என்று நா தழுதழுக்கக் கேட்டான் அவன் கண்கள் கலங்கின.

இவனது அப்போதைய நிலையைக் கண்டதும் என் மனம் முன்னையினும் பேதுற்றது. அவன் குறிப்பிட்டபடி, இளமையில் எங்கள் நட்பு எவ்வித மிருந்ததோ அதை நான் அவ்வளவு திட்டமாகக் கணித்துக் கூறமுடியாது. ஆயினும் இப்போது, நான் அவன்பால் பேரன்பு கொண்டிருக்கி றேன்—அவனிடம் என் உயிரையே வைத்திருக்கிறேன் என்றே சொல்லவேண்டும். இவ்வுலகில் அவனை விட்டு— அவன் தொடர்பு இன்றி என் வாழ்க்கை இன்பமாகக் கழி யாது என்ற நிலைக்கு வந்துவிட்டேன். எனவே, எனக்கும் அவனைவிட்டுப் பிரிவது மிகவுந் துயரமாகவே இருந்தது. இவனது நிலையைக் கண்டதும் எனது தாய் நாட்டுப் பிர

யாணத்தை நிறுத்திவிடலாம் என்று கூட நினைத்தேன். ஏதாகிலும் சாக்குச் சொல்லித் தற்சமயம் வரமுடியாத தற்கு வருந்துகிறேன் என்று குறிப்பிட்டுக் கடிதமோ அல்லது தந்தியோ அனுப்பிவிட்டால் போகிறது என்ற எண்ணம் என் மனதில் சிறிது நேரமே ஊடாடியது. ஆனால் சென்னையில் ஏதும் சம்பவம் நேரிட்டிராமல் இவ்விதமாகத் தந்தியும் பணமும் அனுப்பி யிருப்பார்களா? ஆதலால் கட்டாயம் போய்ப் பார்த்துவிட்டுத்தான் வரவேண்டும் என்று அடுத்த கணம் உறுதி கொண்டேன்.

மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்ட நான், "அதெல்லாம் ஒன்றும் நடக்காது ஜான்! உனது அச்சத்துக்கு ஆதாரமே கிடையாது! நாம் உயிரோடிருக்கும் வரை நம் நட்பை எவராலும் பிரிக்க முடியாது என்பது திண்ணம். நான் போனதும் திரும்பிவிடுவேன். அதுவரை நீ மன ஆறுத லடைந்திரு" என்று ஜானைத் தேற்றினேன்.

ஜான் கில்பர்ட் அப்போதும் தேறுத லடையாதவன் போல் காணப்பட்டான். "புவனு! கண்ணே புவனு! நான் உன்னை எவ்விதம் நேசிக்கிறேன் என்று உனக்குத் தெரியாது. ஒரு நிமிஷம் உன்னைப் பார்க்காவிட்டால் உயிரே போய்விடும் போலிருக்கிறது. நான் லண்டன் வருவதற்கு முன்னர் உன்னிடம் ஏதோ பொய்க் காரணங் கூறினேனே யொழிய, உண்மையாக, உன் பிரிவைத் தாங்க முடியாமலே, நீ கேம்பிரிட்ஜ் கலாசாலையில் வாசிக்க லண்டன் செல்கிறாய் என்றறிந்ததும் உன்னைப் பின்தொடர்ந்து வந்து இங்கிருக்கிறேன் என்று இப்போது கூறுகிறேன். ஒரு வாரத்துக்கு முன் தான் எனக்கு என் சிற்றப்பாவின் மூலமாக இங்கு ஒரு முக்கிய காரியத்தை மேற் கொள்ளும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. அதைச் சில மாதங்கள்வரை

கவனிக்கவேண்டி யிருக்கிறது. அது இல்லாவிடில் நான் இப்போதே உன்னோடு இந்தியாவுக்குப் பிரயாணமாய்விடு வேன். என் செய்வது! விதி நம்மைச் சதி செய்கிறது........ ........" என்று கூறிப் பெருமூச்சுவிட்டான்.

இவனது பிரிவாற்றான் பேச்சு என்னை மோசமான நிலையை யடையச் செய்து வந்தது. எனவே, இந்நிலைமையை மேலும் வளர்த்த விரும்பவில்லை. அவன் என்னை விட்டுச் சீக்கிரம் போய்விட மாட்டானா என்று கூட எதிர் பார்த்தேன். அவனது அப்போதைய தோற்றமும் பேச்சும் என் பிரயாணத்தை எங்கு தடை செய்துவிடுமோ என்று பயந்தேன்.

கில்பர்ட் திடீரென வெறி பிடித்தவன்போல், "புவனா என்னை மறக்கமாட்டாயே! புறக்கணிக்க மாட்டாயே! என்னைக் கைவிட மாட்டாயே! நீ சிறிது நேரத்திற்கு முன் கூறிய வார்த்தை உண்மைதானா! இதே உறுதியோடு இந்தியாவுக்குச் சென்ற பிறகும் இருப்பாயல்லவா! அந்நம்பிக்கையோடேயே நான் உயிர் வாழலாமா! எதோ! மற்றொரு முறை உன் வாயால் கூறு—எதோ! எதோ!........... என்று கூறிக்கொண்டே கைகளை விரித்த வண்ணம் என்னை நோக்கித் தாவினான். அடுத்த கணம் நான் அவனோடு ஒன்றி நின்றேன். அந் நிலையில் எங்களைக் காண்போர் ஓர் உயிர் ஈருடல் பெற்று ஒன்றுபட்டு இன்ப மனுபவிக்கிறதென்றே கூறுவார்கள். கப்பல் புறப்படுவதற்கு அறிகுறியாகக் கடைசியில் காப்டனால் ஊதப்படும் ஊதுகுழல் ஒலியே எங்கள் இருவரையும் வேறு பிரித்ததென்றால், எங்களது அப்போதைய நிலையை எவ்வாறு வர்ணித் துரைப்பதென்று தோன்றவில்லை. தவிர்க்க முடியாத நிலையில் ஜான் என்னிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு அறையைவிட்

டுப் படிகள் வழியாக இறங்கி ஓடினான். நானும் அரை மனதுடன் அவனை வழியனுப்பி மேல் தளத்தில் ஓரத்தில் நின்று அவன் கப்பலைவிட்டு இறங்கும் வரை கவனித்துக் கொண்டிருந்தேன். கப்பல் புறப்படுவதற்குக் கால் மணி நேரத்துக்கு முன்னரே பிரயாணிகளும், மாலுமிகளும் கப்பல் அதிகாரிகளுந் தவிர வழியனுப்ப வந்த மற்றவர்கள் இறங்கிப் போய்விட வேண்டுமாதலால், காப்டன் ஊது குழல் ஊதியதும் கப்பல் புறப்பட்டுவிட்டது! ஆகவே, ஜான் கில்பர்ட் எவ்வளவு வேகமாக ஓடியும் கடைசியில் ஓடும் கப்பலிலிருந்து குதித்தே இறங்க வேண்டியிருந்தது. அவன் ஆழமான அவ்விடத்தில் நீந்தி பிறகு ஒரு ஸ்டீம் லாஞ்சில் ஏறித் துறைமுக மேடையை யடைந்தான். இதைப் பார்த்தபோது, அவன் என்னிடம் எவ்வளவு ஆழ்ந்த அன்பு வைத்திருக்கிறான். எனக்காக எவ்வளவு தூரம் பாடுபடுகிறான் என்று மலைத்துப்போய் அவனைப்பற்றிய சிந்தனையாகவே சென்றேன்.

---

## பதின்மூன்றாவது அதிகாரம்

---

### தந்தை பிரிவும், குடும்பச் சீரழிவும்.

**ப**ம்பாய் துறைமுகத்தில் என்னை எதிர்கொண்டழைத்தவர் ஒரு மெலிந்த தேகமுடைய மனிதர். என்னை வரவேற்க என் தந்தை, சிற்றப்பா முதலியவர்கள் வந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்த வண்ணம், கைப்பெட்டியையும் மற்றுஞ் சாமான்களையும் எடுத்துக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தேன். இச் சமயத்தில் என்னருகே வந்த மெலிந்த மனிதரைப் பார்த்தும் அவரைக் கவனியாது நாலா பக்கமும் கண்களைச் சுழலவிட்டு, "நீர் யார்? என் தந்தை முதலி

யவர்கள் எங்கே?" என்று கேட்க வாயெடுத்தேன். இதற்குள் அவர் என் குறிப்பறிந்தவர்போல், "அம்மா! நான் தான் இதோ இருக்கிறேன்" என்று மெதுவாகக் கூறினர். அக்குரலைக் கேட்டதும் திரும்பி அவரைக் கூர்ந்து நோக்கினேன். "ஆ! என்ன! என் தந்தையா? என் அருமைத் தந்தையா? லட்சாதிபதியான என் தந்தையா இவ்வளவு எளிய தோற்றமும், மெலிந்த தேகமு முடையவரா யிருக்கிறார்?" என்ற எண்ணம் என் மனதில் மின்னல் தோன்றி மறைவதுபோல் உதித்து ஒடுங்கியது. திடுக்கிட்டேன். அடுத்தகணம் என் கையிலிருந்த பெட்டி முதலியன வெல்லாம் நழுவி விழுந்தன. "அப்பா! நீயா அப்பா இக்கோலத்தில் காணப்படுகிருய்?" என்று கதறியவண்ணம் அவரைக் கட்டிக்கொண்டேன். அவர் கண்களிலும் நீர் தாரை தாரையாக வடிந்தது.

என் கூச்சல் கூட்டத்தைச் சேர்த்துவிட்டது. பலர் "என்ன! என்ன நேர்ந்தது?" என்று என் தந்தையைப் பரபரப்புடன் வினவினர். ஒரு சிலர், 'சீமாட்டி மகள்போல் காணப்படும் இப்பெண் ஒரு பைத்தியக்காரக் கிழவனைக் கட்டிக்கொண்டு அழுகிருளே' என்றெண்ணியோ என்னவோ கேலியாகச் சிரித்து நின்றனர். திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியால் நான் என் தந்தையின் மீதே மூர்ச்சையாய் விட்டேன்.

என் தந்தை கேட்டவர்களுக்கு ஏதோ சமாதானஞ் சொல்லிவிட்டு, என்னை ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு அவ்விடத்தினின்றும் வெளியேறினர்.

நான் மூர்ச்சை தெளிந்து நோக்கியபோது ரயிலில் பிரயாணஞ் செய்து கொண்டிருப்பதாக அறிந்தேன். பக்கத்தில் அமர்ந்திருந்த என் தந்தையைப் பார்த்துப் பல

கேள்விகள் கேட்டேன். அவற்றிற் கெல்லாம் அவர் சரி யாகப் பதில் சொல்லவில்லை. அவருடைய இவ்வித மாறுத லுக்குக் காரணமென்ன என்ற கேள்விக்கு மட்டும், தாம் நோய் வாய்ப்பட்டுத் தேறியதாகப் பதில் கூறினர். மற்றப் படி நான் கேட்பவற்றைக் காதில் வாங்கிக்கொள்ளாது என் கவனத்தை வேறு விஷயத்தில் திருப்பப் பெரிதும் முயன்றார். இதிலிருந்து என் மனதில் பெரிய பெரிய சந் தேகங்களெல்லாம் உண்டாய்க்கொண்டிருந்தன. சென்டி ரல் ஸ்டேஷனில் ரயில் வந்து நின்றதுகூட எனக்குத் தெரிய வில்லை. என் தந்தை என் கையைப்பற்றி யழைத்த பிறகே, என் சிந்தனையை விட்டு அவர் பின் சென்றேன்.

எங்களுக்காக எங்கள் சொந்த மோட்டார் வந்து காத் திருக்குமென்று எதிர்பார்த்தேன். ஆனல் அதற்குப் பதி லாக, என் தந்தையார் சிறிது தூரத்திருந்த ஜட்கா வண் டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வந்தார். வண்டி அருகில் வந்ததும், முதலில் என்னை அதில் ஏறச் செய்து பின் தானும் ஏறிக்கொண்டார். உடனே வண்டியோட்டி குதிரையைத் தெற்கு நோக்கிச் செலுத்தினன். எனக்குண் டான ஆச்சரியத்துக்கு அளவேயில்லை. ஒரு மோட்டார் கம்பெனியே சொந்தமாக இருந்தும், வீட்டு உபயோகத் துக்கு மட்டும் ஒன்றுக்கு மூன்று மோட்டார் கார்கள் இருந்தும் ஒரு மோட்டார்கூட எங்களை ஏற்றிச் செல்ல வராமலிருந்ததென்றால் அது எனக்குப் பேராச்சரியத்தை யுண்டாக்காம லிருக்கமுடியுமா? ஆனல், இம்முறை என் தந்தையைப் பார்த்து "மோட்டார் ஏன் வரவில்லை?" என்று கேட்கவில்லை. ஏனென்றால் எனது கேள்விகள் அவரைப் பரம சங்கடத்துக் குள்ளாக்குவதையும், அவருள் பொதிந் திருக்கும் துக்கத்தைக் கிளறி யதிகப்படுத்துவதையும்

குறிப்பா லறிந்தேன். உற்சாகத்தோடன்றி, கவலையோ டிருந்ததை இதற்கு முன் ஒரு முறையும் பார்த்தறியாத நான், இப்போது பார்த்தது முதல் பெருங் கவலையால் அவர் பேதுற்று வருந்துவதைக் கண்டு மனம் பதறினேன். இவ் வித அசௌகரியங்களெல்லாம் நேர்வதற்கு என்ன நிகழ்ந் திருக்கக்கூடும் என்று மிகத் தீவிரமாக ஊகித்துப் பார்த் தும் என்னால் கண்டறிய முடியவில்லை. ரயிலிலுஞ் சரி; ஜட்கா வண்டியிலுஞ் சரி; என் தந்தை லண்டனில் என் வாழ்க்கை எப்படி யிருந்தது என்றோ கேம்பிரிட்ஜ் கலா சாலைப் படிப்பு எப்படி என்றோ எனது யோக க்ஷேமத் தைக் கேட்காதது எனக்கு மற்றொரு புறத்தில் பெரிய ஆச் சரியத்தை விளைத்தது.

இவ்விதம் பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்த வண் ணம் போய்க்கொண்டிருக்கையில் வண்டி திடீரென்று நின் றது. உடனே நான் தலை நிமிர்ந்து பார்த்தேன். அடை யாற்றிலுள்ள எங்கள் பங்களாவுக்கு எதிரில் வண்டி நிற் பதை யறிந்து திடுக்கிட்டேன். "இவ்வளவு தூரமுமா நான் சிந்தனையில் மூழ்கி வந்தேன்? ஏன் தேனாம்பேட்டையி லுள்ள நமது மாளிகைக்குப் போகாது இங்கு தந்தை யழைத்து வந்தார்?" என்று என் மனதில் எழுந்த கேள்வி களுக்குப் பதிலை யாராய்ந்த வண்ணம் வண்டியைவிட்டு இறங்கினேன். என் தந்தையின் தோற்றமும், செயலும் எல்லாம் எனக்கு மிகவும் மர்மமாகவே இருந்தது.

வண்டியின் சத்தத்தைக் கேட்டுவிட்டுத்தான்போலும் உள்ளிருந்து வந்த என் அருமைத் தாய், நான் பங்களாவி னுள் அடியெடுத்து வைத்ததும், என்னைக் கண்டு ஓடி வந்து என்னை இறுகச் சேர்த்துக் கட்டிக்கொண்டு "ஓ"வெனக் கதறி யழுதாள். நானுங் காரண மறியாமலே, அவளுடன்

சேர்ந்து அலறி யழுதேன். இவ்வழுகை யொலியைக் கேட்டு வெளிவந்த என் சிற்றன்னை முதலியவர்களும் வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்தனுப்பிவிட்டுக் கைப் பெட்டி முதலியவைகளை யெடுத்துக்கொண்டு வந்த என் தந்தையும் எங்களை ஆஸ்வாஸப்படுத்தி உள்ளழைத்துச் சென்றனர். எங்கள் துயரம் சாந்தமடைவதற்கு வெகு நேரமாயிற்று.

நாங்களும் சிறிய தந்தை குடும்பத்தாருமேயன்றி, உற வினர், வருவார், போவார், வேலையாட்கள் முதலியவர் களும் நிறைந்து சத்திரம்போல் காணப்பட்ட எங்கள் மாளிகை பொலிவிழந்து வெறும் வெளியாகக் காணப்பட் டது. வேலைக்காரர் ஒருவர்கூட இல்லை. சிற்றப்பாவின் மக்களில் கூட இருவரே யிருந்தனர். இருந்த நாலைந்து பேரில் ஒருவர் முகத்தில்கூட உற்சாகங் காணப்படவில்லை. என் தந்தையைக்காட்டிலும் தாய் மிக மெலிந்திருந்தாள். வைர நகைகளே மயமாயிருந்த அவள் தேகத்தில் சில சிறு ஆபரணங்களே யிருந்தன. நான் போன சமயம் என் சிற் றப்பா வெளியே ஏதோ வேலையாகப் போயிருந்தார். நான் ஒன்றுங் கவலைப்படாதிருக்குமாறு கூறிக் குளித்து ஆகா ரங் கொள்ளும்படி உபசரித்தார்களே யொழிய, "என்ன நேர்ந்தது? இப்பஞ்சைக் கோலத்துக்குக் காரணமென்ன?" என்று நான் எவ்வளவோ மன்றுடிக் கதறிக் கேட்ட கேள் விக்குமட்டும் ஒருவரும் பதில் சொல்ல முன் வரவில்லை.

இவ்வாறு இரண்டொருநாள் சென்றது. என் தந்தை மேல்மாடியிலுள்ள அவரது அறையை விட்டு அதிகமாக வெளி வருவதில்லை. சிற்றப்பா மட்டும் வெளியே அடிக் கடி போய்வந்து தந்தைக்கு ஏதோ தகவல் சொல்லிக் கொண்டிருந்தார்.

மூன்றும் நாள் மாலை என் தாய் விஷயத்தை என்னிடம் மெல்லச் சொல்லத் தொடங்கினள். "அம்மா புவனு! நமக்கு வந்த கஷ்ட காலத்தைப்போல இவ்வுலகில் வேறு யாருக்கும் வராதம்மா! நமது மோட்டார் வியாபாரம் நீ போன பிறகுகூட நன்றாய் நடந்து கொண்டுதானிருந்தது. சனி திசையோ என்னமோ! உன் அப்பா பொறுப்பை யெல்லாம் தம்பியிடம் ஒப்படைத்துவிட்டு சும்மா கம்பெனிக்குப்போய் வந்துகொண்டிருந்தார். உன் சிற்றப்பன் சமாச்சாரந்தான் உனக்குத் தெரியுமே? தம் களியாட்டங்களுக்கெல்லாம் கம்பெனிப் பணத்தைத் தண்ணீர்போல வாரியிறைத்துச் செலவு செய்ய ஆரம்பித்துவிட்டார். இவர் தம் சிநேகிதர்களோடு கூடிக் கூத்தடிக்கும் சமாசாரம் பண நெருக்கடி யேற்பட்ட பிற்பாடு தான் உன் தந்தைக்குத் தெரியும். கொஞ்ச நாளைக்கெல்லாங் கம்பெனி நஷ்டத்தில் நடப்பது தெரிந்தது. வியாபாரம் மிக மோசமாய்விட்டது. கடன் ஏராளமாய்ச் சேர்ந்துவிட்டது. இச்சமயத்தில் "போர்டு" கம்பெனியின் (அமெரிக்க) சொந்தக்காரர்கள் நமக்கு மோட்டார் அனுப்புவதை நிறுத்தியதோடு, ஏஜன்ஸி கொடுத்திருந்ததையும் ரத்துச் செய்துவிட்டனர். தாங்களே சென்னையில் ஒரு கிளை ஆபீஸைத் திறந்து வியாபாரஞ்செய்ய ஆரம்பித்துவிட்டனர். எனவே, நமது கம்பெனி வியாபாரம் அடியோடு படுத்துவிட்டது. கடைசியாக, மோட்டார் கம்பெனியை மூடவேண்டிய நிலை யேற்பட்டுவிட்டது. இதை யறிந்து கடன்காரர்கள் நெருங்கத் தலைப்பட்டனர். நம் சொத்துக்களெல்லாம் கடன்காரர்களுக்கு அடமானம் வைக்கப்பட்டிருப்பதால் அவைகளை விற்றுக் கடனைத் தீர்க்கவும் வழியில்லை. அவ்வாறு செய்ய முயன்றாலும், கடன்காரர்கள் அதற்கிடங் கொடுக்காது அவற்றை ஏலத்தில் கொண்டு

வரப் பாடுபட்டு வருகின்றனர். சிலர் உன் தந்தையை வாரண்டில் பிடிக்கக் கோர்ட்டில் 'டிக்ரி' வாங்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்காகவே, தேனும்பேட்டை மாளிகையை விட்டு விட்டு இங்கு வந்து வசிக்கிறோம். வியாபாரப் போட்டியின் மீது ஏற்பட்ட பகைவர்கள் உன் தந்தையை இன்ஸால்வென்ஸி வாங்கும்படி செய்யப் பிரயத்தனப்பட்டு வருகின்றனர். ஆனால் உன் தந்தை 'என் உயிர் போனாலும் இன்ஸால்வென்ஸி வாங்க மாட்டேன்' என்ற உறுதியோடு இருந்து வருகிறார். நாம் இவ்வாறு கஷ்டப்படுவதை உடனிருந்து பார்க்க உன் சிற்றன்னைக்கு உள்ளுக்குள் மிகவுஞ் சந்தோஷம். அவள் பிள்ளைகளைக்கூடப் பாட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டாள். அவள் கொஞ்சம் பணத்தைச் சேர்த்து ஊருக்கு இரகசியமாக அனுப்பியிருப்பதாகக்கூடக் கேள்வி. எப்படியோ பிழைத்துப் போகட்டும்—மேற் படிப்புக்காக உன்னை இலண்டனுக்கு அனுப்பினாலும், அல்லும் பகலும் உன் நினைவாக இருந்த உன் தந்தை இக்கேவல நிலைமைக்குப் பின்னர், ஒவ்வொரு விநாடியும் உன்னை நேரில் பார்க்கத் துடிதுடித்துக் கொண்டிருந்தார். அப்பேராவலாலேயே கஷ்டத்தோடு கஷ்டமாகப் பணஞ் சேகரித்து அனுப்பி உன்னை வரவழைத்தார். இனி நீ இலண்டனுக்குச்சென்று படிப்பை முடிப்பதென்பது முடியாத காரியமம்மா! படித்த வரைக்கும் போதும், நமது இந்தப் பெருங் கஷ்டத்தைக் கடவுள்தான் கண்திறந்து பார்த்துப் போக்கவேண்டும். இல்லாவிட்டால் நம் கதி........" என்று மேலே பேச முடியாமல் குழந்தைபோல் தேம்பித் தேம்பி யழுதாள்.

எனது குடும்பத்தின் நிலைமையை உள்ளவாறு அறிந்ததும என் மனம் துடித்த துடிப்பை ஈசனே அறிவார். எனக்

குத் துக்கம் மேலிட்டாலும், அதை யடக்கிக் கொண்டு என் தாயைத் தேற்றினேன். எனக்காக உடல் பொருளாவியைக் கொடுத்துக் காப்பாற்றிய என்னருமைப் பெற்றோரை இக்கஷ்ட நிலைமையிலிருந்து கரையேற்ற என்னால் முடியுமா? என்று என்னென்னமோ யோசனை யெல்லாஞ் செய்து வந்தேன்.

நான் சென்னைக்கு வந்து ஆறு நாட்கள் ஆயின. அன்று காலை நான் படுக்கையினின்றும் எழுந்திருக்கப் போகுஞ் சமயம். என் அறைக் கதவு தட தடவென்று தட்டப்படுஞ் சத்தங் கேட்டுத் திடுக்கிட் டெழுந்தேன். உடையைச் சீர்திருத்திக்கொண்டு கதவைத் திறந்ததும், சிற்றன்னையின் மகளான வேதவல்லி என்னைப் பார்த்துக் கதறினாள். என்னவென்று விசாரிப்பதற்குள் அவள் எனக்குச் சைகை காட்டிய வண்ணம் மேன்மாடிக்கு ஓடினாள். நானும் அவளைப் பின்தொடர்ந்தேன். என் தந்தையின் அறைக்கு வெளியில் கூட்டமா யிருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ குசுகுசு வெனப் பேசி அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். என்னைப் பார்த்ததும் அவர்கள் வழிவிட்டு ஒதுங்கி நின்றனர். அறைக் கதவு உடைபட்டுக் கீழே விழுந்து கிடந்தது. ஏதோ விபரீதம் நிகழ்ந்துவிட்டது. என்று ஊகித்த நான் ஒரே பாய்ச்சலாக அறைக்குள் தாவினேன். ஆ! அங்கு நான் கண்டதென்ன! என்னருமைத் தந்தை—என் ஆருயிர்த் தந்தை—கட்டிலில் இறந்து கிடந்தார். என் தாய் சிற்றன்னை முதலியவர்கள் பிரேதத்தின் மீது விழுந்து அழுதரற்றிக்கொண்டிருந்தனர்.

நான் இக் கோரக் காட்சியைக் கண்டதும் திகைப்புற்றுக் கல்லாய்ச் சமைந்து நின்றேன். என் வரவையறிந்த என் தாய் நானிருந்த பக்கந்திரும்பி, "அடி என் கண்ணே!

அப்பா போய்விட்டாரம்மா! நம்மை நடுத் தெருவில் விட்டு விட்டு. இனி நாம் என்ன செய்கிறதடி!................"என்று ஒப்பாரி வைத்து அழுது அலறியவண்ணம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டாள். எனது வாழ்க்கையில் இது வரை இவ்வித துக்க சம்பவம் நிகழ்ந்ததில்லை யாகையாலும், பெண்களின் "இழவு"ப் போராட்டத்தைக் கண்டதேயில்லை யாகையாலும் எனக்கு அச்சமயம் என்ன செய்வதென்று தோன்றவில்லை. எனவே மனம் பதற உடல் பதற நின்ற நான் வாய் குழற, "அம்மா!............"என்று ஆரம்பித்தவண்ணம் நெருங்கினேன். இதற்குள் என் தாய் ஆவேசங் கொண்டவள்போல் என்னைத் தாவிப் பிடித்து இழுத்து உட்கார வைத்து முகத்தோடு முகத்தைப் பொருத்தி 'ஓ'வெனப் பெருத்த கூச்சலிட்டுக் கதறி யழுதாள். "அடி என் செல்வமே! உனக்குக் கலியாணஞ் செய்துகூடக் கண்ணால் பார்க்க வில்லையே!............இதற்குள் இந்தக் கொள்ளை வந்து நேர்ந்து விட்டதே!............நம் குடும்பத்துக்குத் திடீரென்று இந்த மாதிரியான கதிவருமென்று யாருக்காகிலுந் தெரியுமா?........பாழுந் தெய்வமே உனக்குக் கண்ணில்லையா?' என்று என் தாய் ஏதேதோ! கூறிப் பிரலாபித்தாள். அவளது பரிதாபகரமான அழுகையொலி கல்லையுங் கரைந்துருகச் செய்யுமென்றால், எங்களைச் சேர்ந்தவர்களேயன்றி வேடிக்கை பார்க்க வந்தோரும் உடன் அழுதது ஓர் ஆச்சரியமில்லை. நான் வாய்விட்டு அலற வில்லையே யொழிய, முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு குமுறிக் குமுறி யழுதேன். வஞ்சகியான என் சிற்றன்னை அச்சமயத்திலும் நிமிஷத்துக்கொரு தடவை கண்ணைத் துடைப்பதும் மூக்கைச் சிந்துவதுமாகப் பாசாங்கு செய்தாளே யொழிய அவளது மகள் அழு மவ்வளவுகூட உண்மையாக அழவில்லை. இத்துணை நாள் இவ

ரது ஆதரவில் உண்டு உடுத்து இனிமையாக வாழ்ந்து வந்தோமே என்ற நன்றி யறிதல் கொஞ்சமாவது இருந்தால் தானே அவள் மனங் கனிந்து அழுவாள்! தான் எக் கேடு கெடுவதாயினும், அவள் கண் முன் நாங்கள் பல துன்பங்களுக் காளாகிப் பரம ஏழைகளாய் வருந்தவேண்டு மென்பதுதான் அவளது நித்திய பிரார்த்தனை ஆகையால், அவள் என் தந்தை இறந்த இச்சமயத்தில் உள்ளே மகிழ்ந்து வெளிக்கு அழுவதாகப் பாவனை செய்ததில் வியப்பொன்று மில்லை யல்லவா!

எங்களுக்குத் திடீரென்று ஏற்பட்ட இப்பேரிடியைத் தாங்கமாட்டாது) நானும் என் தாயும் கதறிப் பதறி யழுவதும், மாறி மாறி அடிக்கடி மூர்ச்சைப் போட்டு விழுவதும் எழுவதுமாயிருந்தோம். அக்கம்பக்கத்திலுள்ள அயலவர்களே எங்களை மூர்ச்சை தெளிவிப்பதும் தேற்றுவதுமாய் இருந்தனர். என் தந்தை திடீரென இறந்த செய்தி காட்டுத் தீப்போல் எங்கும் பரவி விடவே, நாழிகையாக ஆக ஜனக் கூட்டம் அதிகரித்துவிட்டது. ஆனால் எங்கள் உறவினரில் ஒரு சிலர் தவிர, பெரும்பாலோர் வரவில்லை என்பதை அன்பரே! நீர் அறிதல் வேண்டும். என் சிற்றப்பா மேன் மாடிக்கு வருவதும், கீழே இறங்கிச் செல்வதுமாக நிலை கொள்ளாது திரிந்துகொண்டிருந்தார்.

"இவருக்கு என்ன உடம்பு?"

"நன்று யிருந்த புண்ணியவானுக்கு இப்படித் திடீரென்று மரணஞ் சம்பவிக்குமா?"

"நேற்று சாயங்காலங்கூட இவர் மேன் மாடியில் உலவிக்கொண்டிருந்ததை என் கண்ணால் பார்த்தேனே! அப்படியிருக்க, இராத்திரிக்குள் இவர் எப்படி இறந்து போனார்?"

"அதென்னமோ அம்மா! இராத்திரி நன்றாகப் படுக்கப் போனவர் பொழுது விடிவதற்குள் இறந்துபோனார் என்றால் மாயமாகத் தானிருக்கிறது!"

இவ்வாறெல்லாம் வேடிக்கை பார்க்க வந்த சுற்றுப் புறத்து மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அங்கலாய்த்துக்கொள்வதும், மற்றுஞ் சிலர் காதோடு காது வைத்துக் குசு குசு வெனப் பேசிக்கொள்வதும் என் காதில் ஒருவாறு விழுந்தது. இவர்களது சம்பாஷணையைச் செவியேற்ற பின்னர் நான், எனக்கு என் தந்தையின் மரணத்தில் சந்தேக மேற்பட்டது. உடனே என் மனம் பல பல எண்ணியது. கும்பல் அதிகரிக்க அதிகரிக்க மும்முரமடைந்து (எங்கள் அழுகை யொலியையும் அடக்கி) வந்த பேச்சாரவாரம், இருந்தாற்போலிருந்து நின்று விட்டது. அதே சமயம் 'டக் டக்' என்று பூட்ஸ் சப்தங் கேட்டது! சிந்தனையில் மூழ்கியிருந்த நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் சிற்றப்பா முன்னே வர, நாலைந்து கனவான்கள் அவரைப் பின் தொடர்ந்து வந்தனர் அவர்களில் இரு போலீஸ் உத்தியோகஸ்தர்களு மிருந்தனர். அவர்களுக்கு இவர் ஏதோ சமாதானஞ் சொல்லிக்கொண்டு வருவதாகத் தெரிந்தது.

வந்தவர்கள் அழுது கொண்டிருந்த என் தாய் முதலியோரை விலகி யிருக்கச் செய்து என் தந்தையின் பிரேதத்தைச் சூழ்ந்தனர். ஒரு கனவான் கை நாடியைத் தொட்டுப் பார்த்தார்; ஜேபியில் வைத்திருந்த 'ஸ்டெதாஸ்கோப்'பை யெடுத்து மார்பில் வைத்து இருதயத் துடிப்பு இருக்கிறதா என்று கவனித்தார்; வாயைத் திறந்து நாக்கைக் கூர்ந்து நோக்கினார். கண் விழிகளை நீக்கி ஆராய்ந்தார். பின்னர் டாக்டர் நிமிர்ந்து மற்றவர்களைப் பார்த்து "நாம் சந்தேகித்

தது [சரிதான். இது இயற்கை மரணமாக இருக்க முடியாது. பிரேத பரிசோதனைக்குப் பிரேதத்தை அனுப்ப வேண்டியதே. அங்கே தெரிந்து போகிறது எல்லாம் வெட்ட வெளிச்சமாக. ஊம், இன்ஸ்பெக்டர் சார்! என்ன யோசிக்கிறீர்?" என்று சிறிது மிடுக்காகவே கேட்டார். தமது கடமையைச் செய்வதில் சிறிதும் வழுவாதவர் என்பதைப் பிறர் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவரது எண்ணம்போலும். இது அவரது தடபுடலி லிருந்து தெரிந்தது.

போலீஸ் இன்ஸ்பெக்டர், சப் மாஜிஸ்திரேட் முதலியவர்களைத் தனியாக அழைத்துக்கொண்டு போய் ஏதோ சில விநாடிகள் பேசினர். பின்னர் அவர் எங்களிடம் திரும்பி வருகையில், அவர் வருங் குறிப்பை யறிந்துகொண்டவர் போல் என் சிற்றப்பா எதிர் சென்று வழி மறித்து அவர் முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு பலவாறு கூறிக் கெஞ்சலானர்.

இதே சமயம் மற்றுஞ் சில கனவான்கள் அங்கே தோன்றினர். அவர்கள் கடன்காரர்கள் என்று பின்னல் எனக்குத் தெரிந்தது. அவர்கள் அச்சமயம் அங்கு வந்த நோக்கம் எதுவோ! ஆயினும், என் சிற்றப்பாவின் தவிப்பைப் பார்த்துவிட்டு இரக்கங் கொண்டவர்களாய், போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியவர்களோடு எங்கள் சார்பாக வாதாடினர். சிறிது நேரம் அனைவருங் கலந்தாலோசித்த பின் ஏதோ முடிவுக்கு வந்தவர்களாய், என் சிற்றப்பாவிடம் பிரேதத்தைச் சீக்கிரம் அடக்கஞ் செய்துவிடுமாறு யோசனை கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றனர்.

அப்போதுதான் நான் கொஞ்சந் தைரியமாக மூச்சுவிடலானேன். எதிர்பாராதவாறு இவ்வாறு சீக்கிரத்தில்

எங்கள் குடும்பம் சீர் கெட்டழியும் நிலைமைக்கு வந்துவிட்டதை நினைத்தபோது என் வயிறு குழம்பியது. ஆம்! நான் ஐயுற்றபடியே மானத்துக் கஞ்சி விஷத்தையோ வேறெதையோ—உண்டு என் தந்தை உயிரைப் போக்கிக் கொண்டார். அதுதான் உண்மையாக நடந்ததும். இவ்வெண்ணம் உறுதிப்படவே நான் திடீரென எழுந்து அவ்வறையை ஆராயலானேன். தலையணையை யெடுத்துப் பார்த்தபொழுது ஒரு சிறு காகிதம் மடிக்கப்பட்டுக் கிடந்தது. அதை ஆவலாக எடுத்துப் பார்த்தேன். என் கை நடுங்கியது. அதில் பின் வருமாறு என் தந்தையால் எழுதப்பட்டிருந்தது:—என் அருமைப் புதல்விக்கு,

உனக்காகவே உயிரை வைத்திருந்தேன். நான் இதற்கு முன், என் உயிரினும் சிறந்த உன்னைக் கண் குளிரப்பார்த்து விட வேண்டுமென்ற ஆசை நிறைவேறிவிட்டது. இனி, எனக்கு இவ்வுலகில் வேலையில்லை. நான் அரும்பாடுபட்டுத் தேடிய செல்வமும், சீரும், குடும்பப் பெருமையும் எவ்வாறோ அழிந்துவிட்டன. அதுபற்றி நான் யாரையுங் குறை கூற விரும்பவில்லை. மான மழிந்த பின்னும் உயிர் வாழ இச்சை கொள்வது மிகக் கேவலமானதாகும். இப்பாழும் உலகத்தில் நீ யாரையுஞ் சதமென்று நம்பாதே! கல்வியறிவு இருப்பினும் உலகானுபவமற்ற உன்னைச் சகல புவனங்களுக்குந் தாயுந் தந்தையுமான முழு முதற் கடவுளிடமே அடைக்கலப் படுத்திவிட்டுச் செல்கிறேன். எதை முன்னிட்டும் உன் அருமைத் தாயை மட்டும் கை நெகிழ விடாதே.

என் இன்னுயிரை உன்னிடம் வைத்துவிட்டுச் செல்லும்,

உன் தந்தை.

அக்கடிதத்திலுள்ள வார்த்தைகள் சில விடங்களில் தெளிவாகத் தெரியாமலிருந்தன. எழுதப்பட்ட மை கலைந் திருப்பதே அதற்குக் காரணமெனத் தெரிந்து, பல முறை அக்கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்த நான் என் தந்தை அக்கடிதத்தை யெழுதும்போது அழுதுகொண்டே யெழுதி யிருக்கிறரென்றும், அவரது கண்ணீர்த் துளிகளே மையைக் கலைத்து வார்த்தைகளைத் தெளிவாகத் தெரிய வொட்டாது செய்திருக்கிறதென்றும் பின்னர் ஊகித்தறிந் தேன். அக் கடிதத்திலுள்ள பொருளை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க எனக்குத் தூக்க மேலிட்டது. நான் கடிதத்தைக் கண்டெடுத்துப் படிப்பதைப் பார்த்ததும் என் சிற்றப்பா என்னிடம் வந்து அதை வாங்கிப் பார்த்தார். உடனே அவர் முகம் மாறுதலடைந்தது. ஒன்றுஞ் சொல்லாமல் அதை என்னிடமே கொடுத்துவிட்டு வெளியே போய்விட் டார். என் தாய் பைத்தியம் பிடித்தவள்போல் மாறிவிட்ட தால் என் செயலை அவள் கவனிக்கவேயில்லை. என் சிற் றன்னைமட்டும் அக் கடிதத்தில் என்ன எழுதி யிருக்கிறது என்று அறியத் துடிதுடித்துக்கொண்டிருந்ததை நான் குறிப்பா லறிந்தேன். ஆனல் அவளுக்கு அது என்ன வென்று என்னைக் கேட்கத் துணிவில்லை.

கடைசியாக, எவ்வாருே அன்று மாலை நான்கு மணிக்கு என் அருமைத் தந்தை—செல்வத் தந்தை—யின் பிரேதம் சந்தடியின்றிச் சாதாரண முறையில் அநாதைப் பிணம் போல் அடக்கஞ் செய்யப்பட்டது. அதன் பின் முறையே செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளெல்லாம் ஒருவாறு செய்து முடிக்கப்பட்டன. இதற்கு முன் தேனீக்கள்போல் மொய்த்துக் கொண்டிருந்த உற்ருர் உறவின ரெல்லாம் பிரேத அடக்கத்துக்கு மட்டுமல்ல, உத்தரகிரியைக்குங்

கூட வராதது எனக்கு ஆச்சரியமா யிருந்தது. தூர பந்துக்களாயும் நண்பர்களாயுமுள்ள ஒரு சிலரே உடனிருந்து காரியங்களை நிறைவேற்றினர்.

உத்தரகிரியை முடிந்ததோ இல்லையோ கடன்காரர்கள், எங்கள் சொத்துக்களை ஏலத்தில் போட்டனர். கடன்காரர்கள் தாராள மனப்பான்மை காட்டியிருந்தால், கிரமப்படி எங்கள் சொத்துக்களை விற்றிருந்தால், அவர்களுக்கும் கடன் கொடுத்து ஏதோ எங்களுக்குங் கொஞ்சஞ் சொத்தோ பணமோ மீதமடைந்திருக்கும். அதைக் கொண்டு நாங்கள் ஒருவாறு காலந்தள்ளி யிருக்கலாம். ஆனல், ஏலத்தில் விட்டதில் ஒன்றுக்குப் பாதியாகப்போய் கடன்காரர்களுக்கே சரியாகக் கடன் சேராது போய்விட்டது. ஆகவே, நாங்கள் தங்கக்கூட குடிசையில்லாமல் நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலைக்கு வந்து விட்டோம்.

என் சிற்றன்னை கருமாதி முடிந்ததும் தன் மகளையுடனழைத்துக்கொண்டு எங்களைவிட்டு மெல்ல நீங்கி என் பாட்டி ஊராகிய மன்னார்குடிக்குப் புறப்பட்டுவிட்டாள். கடன்காரர் போட்ட பகிரங்க ஏலத்தில் எங்கள் சொத்து ஒன்றுகூடப் பாக்கியில்லாமல் போன பிறகு என்சிற்றப்பா மிகவும் கவலையோடு என் தாயிடம் வந்து, "அண்ணி! நிற்கக்கூட நிழலில்லாமல் நம் கதி வந்துவிட்டது. இந்நிலையில் இச்சென்னை நகரில் எப்படிக் காலந் தள்ளுவதென்று தெரியவில்லை. ஆகையால், நான் ஒரு உத்தியோகத்தைத் தேடிப் பெறும்வரை நீங்களும், புவனும், மன்னார்குடிக்கு ............" என்று கூறி வருகையில், துயரமே வடிவாய் இருந்த என் தாய் சீறி எழுந்து, "தம்பி! அந்தப் பேச்சை மட்டும் எடுக்காதே! நாம் நல்ல நிலைமையில் இருந்தவரை அடிக்கடி வந்து கூடிக்குலாவி உண்டு உடுத்துச் சென்ற

வர்கள், உங்கள் அண்ணா காலஞ் சென்ற செய்தி தெரிந் தும் ஒருவரும் இதுவரை வராமல் இருந்திருக்கிறார்களென் றால், அவர்களது அலட்சியத்தையும் நன்றி கெட்ட தன்மை யையும் என்னென்பது! இவர்களும் எனது தாய்வீட் டாரா? அப்பேர்ப்பட்ட கொடும்பாவிகள் வீட்டுக்கா நாங்கள் போவோம்?..............." அதற்குமேல் வார்த்தை யெழவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது.

"உம். இல்லை அண்ணி! சிதம்பரநாதனுக்கு நம் புவனா வைக் கலியாணஞ் செய்து கொடுக்கவில்லை யென்ற கோபமா யிருக்கலாம். இருந்தாலும் இச்சமயத்தில் அவர் கள் இவ்வாறு அலட்சியமா யிருக்கப்படாதுதான்! என்ன செய்வது? நமது தற்போதைய நிலைமையை யுத்தேசித்து நாம் அதையெல்லாம் மனதில் வைத்துப் பாராட்டாமல் அவர்கள் வீட்டுக்குப் போவதுதான் நலமென்று எனக்குத் தோன்றுகிறது.................." என்று மெல்ல இழுத்தவண் ணங் கூறினார்.

இவ்வார்த்தைகள் எரியும் நெருப்பில் நெய்விட்டது போல் என் தாயின் கோபத்தை அதிகப்படுத்தியது. எனக் குத் தெரிந்து என் தாய் எதை முன்னிட்டும் இவ்வளவு தூரங் கோபங்கொண்டதை நான் பார்த்ததில்லை. "தம்பி! மீண்டும் அந்தப் பேச்சையே பேசுகிறாயே! நாங்கள் நடுத் தெருவில் நின்று பட்டினி கிடந்து உயிர்விட்டாலும் விடு வோமே யொழிய, அந்தச் சண்டாளர்கள் வீட்டுக்குச் செல்வோமென்று மாத்திரம் கனவிலும் நினைக்காதே! வேண்டுமானால் நீ கூட எங்களைக் காப்பாற்ற வேண்டாம். எங்களைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம். நாங்கள் எப்படியாகிலும் போகிறோம். உனது மனைவி மக்களைப் போய்ப் பார்".......என்று கர்ஜித்தாள்.

என் தாய் முகத்தைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. கோபத்தில் வரம்புமீறி மிகவுங் கடுமையாகப் பேசி விட்டாள் என்று நான் அப்போது நினைத்தேன். அவ்வார்த்தைகளின் வேகம் என் மனதில் ஊடுருவிப் பாய்ந்து சுருக்கென்று தைத்தது. எனவே, நான் என் தாயின் பின்பக்கம் போய் அவள் தோளைப்பற்றிய வண்ணம் சாந்தப்படுத்த முயன்றேன். என் சிற்றப்பா அதற்குமேல் ஒன்றும் பேசாமல் தலையைக் குனிந்துகொண்டு போய்விட்டார்.

எங்களது பரிதாபகரமான நிலையைக் கண்ட என் தந்தையின் ஆப்த நண்பர்களில் ஒருவரான துவிபாஷி ஜனார்த்தனம் நாயுடுவும், அவரது குடும்பத்தாரும் எங்களைத் தங்கள் ஆதரவில் வந்திருக்குமாறு முதலில் கூறினர். ஆனால் என் தாய் அதற்கு இசையவில்லை. ஆகவே, அவர்கள் திருவல்லிக்கேணியில் காலியாய் இருக்கும் தங்கள் வீடொன்றில் வந்து வசிக்குமாறு மிகவும் வற்புறுத்தி வேண்டிக்கொண்டனர். இவ்வளவு தூரம் அவர்கள் பரிந்து கூப்பிடும்போது பிடிவாதமாக மறுப்பது நன்றாயிராது என்று உட்கொண்டு தன் தாய் ஒருவாறு இணங்கினாள்.

---

## பதினைன்காவது அதிகாரம்

---

### கர்ப்பக் குறியறிந்த தாய் மரணம்

திருவல்லிக்கேணியிலுள்ள வீட்டில் நாங்கள் குடிபுகுந்து ஒரு வாரமாயிற்று. என் சிற்றப்பா எங்களுக்கான வசதிகளைக் கூடுமானவரை செய்து கொண்டிருந்தார். எனக்கு—என் தாய்க்குக்கூட அவர் உதவியையே கடைசிவரை எதிர்பார்த்து வாழ்க்கை நடத்துவதென்பது சிறிதும்

பிடிக்கவில்லை. நான் எங்காகிலும் போய் முயன்று பார்த்து என் தாயைக் காப்பாற்ற வேண்டுமென்ற உறுதி கொண்டேன்.

நான் இவ்வாறு மனதில் முடிவு செய்தேனே யொழிய என் உடல் நிலை அதற்கு இடந்தரவில்லை. சில நாட்களாகவே, என் தேகம் சரியான நிலையிலில்லை. அடிக்கடி அயர்வு ஏற்பட்டு வந்தது. படிப்படியாக என் உடம்பு பலவீன மடைந்து வருவதாக உணர்ந்தேன். இந்த வீட்டுக்கு வந்ததற் கப்புறம் இருந்தாற்போலிருந்து மயக்கம் வர ஆரம்பித்தது. உணவு சரியாகப் பிடிப்பதில்லை. மீறிச் சாப்பிட்டாலும், வாந்திவரத் தொடங்கியது. இந்நிலையில் நான் ஒன்றை நினைக்கவோ, செய்யவோ முடியவேயில்லை. நாளெல்லாம் படுத்துக்கொண்டேயிருந்தால் சுகமாயிருக்கும்போலிருந்தது. எனது அசதி நிலையைக் கண்டு என் தாய் துடி துடித்தாள். உடம்பு என்ன பண்ணுகிறது என்பதை யறிய டாக்டரிடஞ் செல்வதற்குக்கூடக் கதியில்லையே என்று ஏங்கினுள்.

ஒருநாள் அதிகாலை நான் படுக்கையைவிட்டு எழுந்திருக்க முயன்றேன். உடனே மயக்கம் போட்டு அதன் மீதே விழுந்துவிட்டேன். இச்சப்தத்தைக் கேட்டு தாழ்வாரத்தில் ஏதோ வேலையாயிருந்த என் தாய் ஓடிவந்து ஆடையொருபுறம் நானொரு புறமாய் அலங்கோலமாகக் கிடந்த என்னை வாரி யெடுத்துச் சிரம பரிகாரஞ் செய்தாள். அப்போதும் என்னால் படுக்கையைவிட்டு எழ முடியவில்லை. எனவே என் தாய் பக்கத்து வீட்டிலிருந்த கமலம்மாளைக் கூப்பிட்டு வந்து என்னைக் காண்பித்தாள்.

வயது சென்ற அந்த அம்மாள் என்னைக் கூர்ந்து கவனித்துவிட்டு என் தாயை ஆச்சரியமாகப்பார்த்து; "என்

ணம்மா! உனக்கு இது தெரியவில்லையே?—ஆமாம். இந்தக் குழந்தைக்கு இன்னும் கலியாணமாக வில்லையாக்கும் என்றல்லவோ நான் நினைத்திருந்தேன்?-உன் மகளுக்கு விவாகமாய்விட்ட சமாசாரத்தை ஏன் என்னிடம் கூறவில்லை. லக்ஷ்மியம்மா! நாங்களெல்லாம் அதைத் தெரிந்து கொள்ளப் படாதா?'' என்று கேட்டாள்.

என் தாய், "என்ன அம்மா! நீங்கள் சொல்வதே எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!'' என்று சந்தேகத்தோடு வினவினாள்.

இச்சமயத்தில் எதிர்வீட்டு ஜகதாம்பாளும், அவள் மகளும், "புவனாவுக்கு என்ன உடம்பு?'' என்று கேட்டுக் கொண்டே வந்தனர்.

கமலாம்மாள் இவர்கள் வந்ததையுங் கவனியாமல் என் தாயை நோக்கி "என்ன விளங்கவில்லை? புவனா கர்ப்பமாக வன்றோ இருக்கிறாள்? கர்ப்பக் குறிகள் தான் நன்றாகத் தெரிகிறதே! பெண்ணைப் பெறந்தவர்களுக்கு இது கூடவா தெரியாது? அதுவுந் தாயறியாத சூலா!...........''என்று நீட்டிப் பேசினாள்.

இவ்வார்த்தையைக் கேட்டதும் நான் துணுக்குற்றேன். என் தாய் துள்ளி யெழுந்து, "என்ன! என்ன!! கர்ப்பமா? புவனாவா கர்ப்பமாக இருக்கிறாள்? இதென்ன கொள்ளை; ஐயோ கடவுளே...........!'' என்று கூறி யலறிய வண்ணம் மூர்ச்சித்து விழுந்தாள். பக்கத்தி லிருந்தவர்கள் என் தாயைத் தாங்கிப் பிடித்தனர். என் தாயின் உடல் துவண்டது.

என் தாயின் நிலையைக் கண்டதும், நான் மெய்ம் மறந்து "ஆ! அம்மா!.........................'' என்று அலறிக் கொண்டே எழுந்தேன். ஆனால் என் தலை கிறு கிறுத்தது.

இதற்குள் ஜகதாம்பாள் கமலாம்மாளைப் பார்த்து "என்ன அம்மாமி! உடம்பு சில்லிட்டு விட்டதே! இந்தம் மாளைக் கீழே படுக்கவைத்து ஆஸ்வாஸப் படுத்துவோம் ................" எனக் கூறிய வண்ணம் என் தாயைப் படுக்கையில் கிடத்த முயன்றாள். அச்சமயத்தில் கமலாம்மாள் உடல் நடுங்கியதை நான் கவனித்தேன். இருவருமாகச் சேர்ந்து என் தாயைப் படுக்க வைத்தனர்.

பின்னர். கமலாம்மாள் என் தாயைச் சந்தேகத்தோடு நோக்கி விட்டு, "ஜகதா! சீக்கிரம் ஜலம் கொண்டு வாடி! முகத்தில் தெளிக்கலாம்..................." என்றாள். தம் முந்தானையால் என் தாய் முகத்தில் விசிறிக்கொண்டே கமலம்மாள் சோர்ந்து உட்கார்ந்திருந்த என்னைக் கடைக்கண்ணால் கூர்ந்து நோக்கினாள்.

ஜகதாம்பாளின் மகள் ருக்மணி என்னருகில் வந்தமர்ந்து என்னைச் சேர்த்தணைத்த வண்ணம், "புவனா! பயப்படாதே' அம்மாளுக்கு ஒன்று மில்லை. காலையில் களை தட்டிப் போய்விட்டது. வயசாய் விட்டதோ இல்லையோ! பரிகாரஞ் செய்தால் சீக்கிரம் மூர்ச்சை தெளிந்தெழுந்து விடுவார்கள். அழாதேயம்மா! ..................பாவம்! நன்றாய் வாழ்ந்த குடும்பம்" என்று எனக்குத் தேறுதல் கூறினாள்.

இதற்குள், ஜகதாம்பாள் ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டு வந்தாள். கொஞ்சங் கையில் நீரை யெடுத்து என் தாயின் முகத்தில் தெளித்தாள்.

"ஜகதா! வாயைத் திறந்து உள்ளுக்குங் கொஞ்சம் தீர்த்தங் கொடு" என்று கமலம்மாள் கூறிய வண்ணம் என் தாய் உடுத்தியிருந்த ஆடைகளைத் தளர்த்திவிட்டுக் கொண்டிருந்தாள்.

பாத்திரத்தை யெடுத்து நீரை வாயில் விட முயன்ற ஜகதாம்பாள், எதையோ திடீரெனக் கண்டு மருண்டவள் போல் "ஐயையோ! பல் கூடக் கிட்டி விட்டதே அம்மாமி! ..................பேச்சு மூச்சில்லையே?......................என்ன தான் மூர்ச்சை போட்டு விழுந்தாலும், இவ்வளவு செய்தும் இத்துணை நேரமாகவா எழுந்திராமல் இருப்பார்கள்? அதென்னமோ அம்மாமி! எனக்கு ஒன்றுமே புரியவில்லை ..........." என்று தடுமாற்றத்தோடு பேசினாள்.

கமலம்மாள் வாயைத் திறக்காமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள். ருக்மணி, "என்ன! என்ன!! பல் கிட்டிப் போய் விட்டதா!........"என்று கேட்டுக் கொண்டே எழுந்து சென்று தன் தாயின் முகத்தையும் கமலம்மாள் முகத்தையும் மாறி மாறிப் பார்த்து விழித்து நின்றாள்.

ஜகதாம்பாளின் கடைசி வார்த்தை என்னை மிகவுங் கலக்கிவிட்டதென்றே சொல்லவேண்டும். எனக்கிருந்த உடற் சோர்வும், மயக்கமும் எங்கேயோ பறந்து போய் விட்டன. உணர்ச்சி வசப்பட்ட நான் ஒரே ஆவேசத்தோடு துள்ளி யெழுந் தோடினேன். என் தாயின் மீது விழுந்து அலறினேன். "அம்மா! அம்மா!!............" என்று கூவிய வண்ணம் என் தாயைப் புரட்டிப் பார்த்தேன். "அம்மா; எழுந்திரேன்! பேச்சு மூச்சில்லாமல் கீழே விழுந்துகிடக்கிறாயே! என் மேல் உனக்குக் கோபமா..................." என்று மீண்டும் குழந்தைபோல் வாயில் வந்தவாறு பிதற்றிப் புலம்பினேன்.

கமலம்மாள் மற்றிருவரையும் பார்த்து, "ஊஉம்! போச்சு; அவ்வளவுதான்!" என்று கூறிக் கையை விரித்தாள். கலக்கத்தில் அவளது பேச்சு எனக்குப் பரிபாஷையாகத் தோன்றியது.

இச்சமயம் என் சிற்றப்பா, "என்ன என்ன இது விப ரீதம்!" என்று பரபரப்புடன் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

"என்னமோ! லக்ஷ்மியம்மாள் குழந்தை புவனுவுக்கு மயக்கம் தலையெடுக்க வொட்டாது சுற்றி யடிக்கிறது என்று சொல்லி, எங்களைக் கூப்பிட்டு வந்து காட்டினார்கள். கடைசியில் அந்தம்மாளே இருந்தாற்போலிருந்து மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டார்கள். நாங்களும் என்னென் னமோ சைத்தியோபசாரமெல்லாம் பண்ணினோம்; ஒன்று மும் பலன் காணப்படவில்லை. அரை மணி நேரத்துக்கு மேலாகியும் இன்னும் மூச்சுப் பேச்சில்லை. ஜலங்கூட உள் ளுக்கு இறங்கவில்லை..........................உடம்பு என்னமோ பண்ணுகிறது என்று படுக்கையிலேயே கிடந்த குழந்தை புவனு மனந் தாளாது அழ ஆரம்பித்துவிட்டது. பாவம்! கஷ்ட மின்ன தென்றே தெரியாது செல்வமாய் வளர்ந்தது. உலகந் தெரியாது. குழந்தைக்குப் பச்சை உடம்பு; அதை யலட்டிக்கொள்ள வேண்டாம் என்று சொல்லுங்கள் எனப் பதில் கூறிய வண்ணம் எழுந்து நின்றாள். அவருக் குப் பின்னே ஜெகதாம்பாளும் ருக்மணியும் மறைந்து நின்றார்கள்.

கமலம்மாள் கூறிய விவரத்தைக் கேட்டதும் என் சிற்றப்பா திகைத்து நின்றுவிட்டார். இரண்டொரு விநாடி களுக்குப் பிறகு, அவர் ஓடி வந்து என் தாயைக் குனிந்து பார்த்தார். மூக்கில் கை வைத்துக் கவனித்தார். உடனே ஏதோ உண்மை தெரிந்துகொண்டவர்போல், "ஐயோ! அண்ணி! நீயும் மோசஞ் செய்துவிட்டாயா!" என்று கத றிய வண்ணம் தலையி லடித்துக்கொண்டார். இவரது

வார்த்தையும் செயலும் எனக்கு மேலுங் குழப்பத்தை யுண்டுபண்ணியது.

"ஐயோ! அப்பா! என்னப்பா இது! எனக்கு உண்மை சொல்லக் கூடாதா! அம்மாளுக்கு என்ன நேர்ந்து விட்டது! டாக்டரையாகிலும் போய் அழைத்துவாயேன்! அப்பா! ஏனப்பா! விழிக்கிருய்! டாக்டருக்கு பீஸ் (Fees) கொடுக்க வேண்டுமே! எங்கே போவது!' என்று யோசிக்கிருயா! அதற்கு என் கையில் இருக்கிற வளையல்களைக் கழற்றித் தருகிறேன். தயங்காதே அப்பா.......என்னம்மா —என்னைப் பெற்ற அம்மா இப்படிக் கிடப்பதைக் காண எனக்குச் சகிக்கவில்லையே! இன்னும் என்ன அப்பா எண்ணுகிருய்? சொல்லேன். வாயைவிட்டு என்னிடஞ் சொல்லேன்......." என்று கதறிப் பதறிப் பிரலாபித்தேன்.

நான் என் சிற்றப்பாவின்மீது விழுந்து அவரைப்பிடித்துக் குலுக்கித் தொந்தரவு செய்தும், அவர் சித்தப் பிரமை கொண்டவர்போல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்.

பிறகு அவர் ஏதோ பேசத் தொடங்கியவர் கமலம்மாள் முதலியவர்களைத் திரும்பிப் பார்த்தார். அவர்கள் யாருங் காணப்படவில்லை. அவர்கள் எங்களுக்குத் தெரியாமலே மெல்ல நழுவிவிட்டார்களென்று தெரிந்தது. எனவே, அவர் ஒருவிதமாகத் தலையை யசைத்துவிட்டுப் பின் என்னை நோக்கி, "அம்மா புவனு! நீ அழாதே! அம்மாவைப் பார்த்துக் கொண்டிரு. நான் இதோ போய் டாக்டரை யழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ருர்.

நான் ஒன்றும் தோன்ருமல் என் தாயின் பக்கத்தமர்ந்து அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். என்னை யறியாமலே கண்களிலிருந்து நீர் பெருகி வழிந்த வண்ண மிருந்தது.

டாக்டரை யழைத்து வரச்சென்ற என் சிற்றப்பா வெகு நேரமாயும் இன்னும் வரக்காணேமே என்று எண்ணி வருந்திக்கொண்டிருக்கையில் யாரோ வருங் காலடிச் சப் தம் கேட்டது. ஆவலோடு திரும்பிப் பார்த்தேன். எங்கள் நெருக்கடியான சமயத்தில் வசிக்க இடமளித்து உதவி வரும் ஜனார்த்தன நாயுடுவின் மனைவி மக்கள் நாலைந்து பேர் விச னங் குடிகொண்ட முகத்தினராய் வந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் எழுந்து "அம்மா!............"என்று கூறி எதிர்கொண்டோடு வதற்குள், அப்பெண்மணிகள் கன் றைக் கண்ட தாய்ப் பசுவைப்போல் என்னிடந் தாவி வந்து என்னைக் கட்டிக்கொண்டு கோவெனக் கதறி யழுதனர்.

இக்கூக்குரலைக் கேட்டோ என்னவோ கமலம்மாள் முதலியவர்களும் அக்கம் பக்கத்திலுள்ள பெண்களும் வந்து கூடிவிட்டனர். பின்னர் ஜனார்த்தன நாயுடு மகளிரில் இரு வர் கூடத்தின் நடுவில் ஒரு பாயை விரித்துப்போட்டு அதன் மீது என் தாயை எடுத்துக் கிடத்தினர். அப்புறம் எல்லோ ரும் என் தாயைச் சுற்றி யுட்கார்ந்து அழலாயினர். இச் செயலையும், அங்கு வந்தவர்கள் பேசிக்கொள்ளும் வார்த்தை களையுங் கேட்ட பிறகுதான், என் தாய் திடீரென ஏற்பட்ட மன அதிர்ச்சி தாங்கமாட்டாது இறந்துவிட் டாள் என நான் அறிந்தேன். இதை யறிந்ததும் நான், "அம்மா! என்னை விட்டா நீ போய்விட்டாய்! ஐயகோ! கடைசியாக என் கதி இப்படியா ஆகவேண்டும்! நமது சீருஞ் செல்வமும் போய்விட்டன. என்னை அருமையாக வளர்த்து, கல்வி புகட்டிய என் தந்தையும் போய்விட்டார்! அப்படி யிருந்தும், என்னைப் பத்துமாதஞ் சுமந்து பெற்ற தாய்—ஈ எறும்பு நாடாவாறு இரவும் பகலும் கண் விழித்து காத்த அருமைத் தாய்—பால் நினைந்தூட்டி வளர்த்த என்

ஆருயிர்த்தாய் நீ இருக்கிருய் என மனந்தேறி யிருந்தேனே! நீ இருக்கும் வரை எனக்கு ஒரு குறையும் வராது என்று எண்ணியிருந்தேனே! என் எண்ணத்தில் மண்ணைப்போட்டு விட்டாயே! இனி யாரை நம்பி உயிர் வாழ்வேன்! இவ்வுலகத்தில் யார் எனக்கு கதி!—அந்தோ! கடைசியாக என்னுலா அம்மா! நீ உயிர் துறந்தாய். நானு உன் உயிர்க்கு எமனுக இருந்தேன்? ஆ! நான் என் செய்வேன்! ஆ!!........" என்று கதறியவண்ணம் மூர்ச்சையாகி விழுந்தேன்.

* * * *

என் நெற்றியில் 'சில்'லென்று ஏதோ பட்டதுபோன்ற உணர்ச்சி யேற்பட்டதனல் கண் விழித்தேன். என் பக்கத்தில் ஜனுர்த்தன நாயுடுவின் கடைசி மகள் பத்மாவதி நின்றிருந்தாள். கண் திறந்து பார்த்ததைக் கண்ட அவள், "புவனம்மா! எப்படி யிருக்கிறது உடம்பு? ஏதாவது கொடுக்கட்டுமா?" என்று பரிவாகக் கேட்டாள்.

நான் தலையை யசைத்துவிட்டு எழுந்திருக்க முயன்றேன். பத்மாவதி கையமர்த்தி, "அம்மா! நீ எழுந்திருக்கக் கூடாது என்று டாக்டர் உத்தரவு! உடம்பு அலண்டு விடுமாம், என்ன வேண்டுமோ கேட்டால் நான் கொண்டு வந்து தருகிறேன்" என்று மரியாதையாகக் கூறிய வண்ணம், படுக்கையில் நழுவி விழுந்த ஐஸ் கட்டி மூட்டையை எடுத்து மீண்டும் என் நெற்றியில் வைத்தாள்.

நான் பத்மாவதியின் பேச்சைச் செவியேற்காமல், "என் அம்மா எங்கே? என் அம்மா எங்கே?........"என்று கேட்டுக்கொண்டே எழுந்திருக்க முயன்றேன். இதே சமயத்தில் நான் படுத்திருந்த அறைக்கு வெளியில் பெருத்த அழுகை யொலியும், ஜனங்கள் கூச்சலும், சங்கு முதலிய

வாத்தியங்களின் ஓசையும் ஏககாலத்தில் என் காதில் விழவே நான் துள்ளி எழுந்து, என்னைத் தடுத்த பத்மா வதியை ஒரு புறம் தள்ளிவிட்டுப் பைத்தியக்காரிபோல் ஓடினேன்! வெளியில் நான் கண்டதென்ன! என் தாயின் பிரேதத்தை அப்போதுதான் பாடையில் கொண்டுபோய் வைத்துக்கொண்டிருந்தனர். என் சிற்றன்னையும், மற்றும் உறவினர்களும் நண்பர்களும் பாடையைச்சுற்றி யழுது கொண்டிருந்தனர். நான், "அம்மா! உன்னை எங்கே தூக்கிக்கொண்டு போகிறார்கள்?—ஐயோ! என் அம்மாவை என்னிடமிருந்து எங்கே கொண்டுபோகிறீர்கள்? பாவி களே! உங்களுக்கு இரக்கமில்லையா?" என்று கேட்டுக் கொண்டே ஓடிச் சூழ்ந்திருந்தவர்களை யெல்லாம் நீக்கிக் கொண்டு பாடையில் வைத்த என் தாயின் பிரேதத்தின் மீது விழுந்து முகத்தோடு முகம் வைத்துச் சேர்த்துக் கட் டிக்கொண்டு அழுதேன். இதற்குள் நாலைந்து பெண்கள் மிகவுஞ் சிரமத்தோடு என்னைப் பிடித்துத் தூக்கி வீட்டி னுள்ளே யழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

அதிகம் விவரிப்பானேன்! என் தாயின் பிரேதம் அடக் கஞ் செய்யப்பட்டாய்விட்டது. அக்கம் பக்கத்திலுள்ள வர்களும், உள்ளூர் உறவினர்களும் போய்விட்டனர். என் பாட்டி வீட்டா ரனைவரும் வந்திருந்தமையால் ஜனார்த்தனம் நாயுடு குடும்பத்தினரும் சென்றுவிட்டனர். ஒவ்வொரு வரும் எனக்கு ஆறுதல் தேறுதல் கூறிவிட்டே போயினர். ஆனால், ஜனார்த்தனம் நாயுடுவின் மனைவியும் பெரிய பெண் ணும் என்னிடம் முன்போல் அவ்வளவு பற்றுத லில்லாத வர்களாய்க் காணப்பட்டனர். கமலம்மாள் அவர்களிடம் என் நிலையைச் சொல்லியிருக்கவேண்டும். அதைப்பற்றி நான் அவ்வளவாகக் கவலை கொள்ளவில்லை.

நான் உடம்பு குன்றியுட்கார்ந்திருந்தேன். என் மனம் பலப்பல எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. திடீரென அறைக் கதவு திறக்கப்படவே, சிந்தனை கலைந்து தலை நிமிர்ந்து பார்த்தேன். என் முன்னே சிற்றன்னை மிடுக்காக இடுப்பில் கைவைத்து நின்றுகொண்டிருந்தாள். என் பாட்டியும், மற்று மிரு மகளிரும் அப்போதுதான் அறையினுள் வந்துகொண்டிருந்தனர். என்னை ஏளனப் பார்வையாகப் பார்த்துக்கொண்டிருந்த சிற்றன்னை உடனே அவர்கள் பக்கந் திரும்பி, "அம்மா! பார்த்தாயா! உன் அருமைப் பேத்தி உட்கார்ந்திருக்கும் ஓய்யாரத்தை! தன்னைப் பெற்ற தாய் போய்விட்டாளே என்ற கவலை கொஞ்சமாகிலும் இருந்தால் இவள் இப்படி இருப்பாளா! 'பாவம்! சர்க்கரைக்கட்டி அழுதழுது பாகாய் உருகிப் போகிற'தென்று கண்ணீர் வடிக்கிறாயே அம்மா!—இவள் பாசாங்குக்காரியென்று முளையிலிருந்து கிளம்பிய போதே தெரியுமே! ஊரார் மெச்சிக்கொள்ள இந்நேரந் தலையை விரித்துப் போட்டுக்கொண்டு கூத்தடித்தாள்!................உம் அப்பா! நாலு நாளானாலும் இவள் என்ன ஆட்டம் ஆடினாள் என்ன ஆர்ப்பாட்டம் செய்தாள்! இவள் வைத்ததுதான் சட்டம்! எந்த விதமாய் இவள் தலை கவிழ்ந்து ஆடினாள்! அதுதான் கடவுளுக்குக்கூடப் பொறுக்கவில்லை. அந்தச் சமயத்தில் நாங்களெல்லாம் இந்தச் சிறுக்கிக்கு என்ன பயப்படுவோம் தெரியுமா! அந்த மனுஷன்—அதான் இவள் அப்பன்—இவளைப் பூலோக ரம்பை யென்றும், காணக் கிடைக்காத கற்பகமென்றும் எண்ணி ஊரிலில்லாதபடி செல்லங்கொடுத்து வளர்த்து அவள் இஷ்டப்படியெல்லாம் ஆடினான். அதற்குமேல் இப்போது செத்த புண்ணியவதி இவளைத் தரையில் விட்டால் தவங்குலைந்து போகுமென்று கருதித் தலையிலே ஏந்திக் கொண்டிருந்தாள்! இப்படி

யெல்லா மிருந்தால் பெண் அடங்காப் பிடாரியாய்ப் போவ தற்குக் கேட்கவா வேண்டும்! அந்தச் செல்வமெல்லாம் இனிமேல் எங்கே?........................." என்று ஆடிப்பாடிப் பேசினுள்.

இவ்வளவு துணிவாக என்னெதிரியிலேயே என்னை இடித்திடித்துப் பேசியது இதுவே முதல் தடவை யாத லால், என் சிற்றன்னை கூறிய சொற்களைக் கேட்டு நான் உடல் நடுங்கினேன். என் கண்களில் நீர் நிரம்பிப் பார் வையை மறைத்தது.

என் பாட்டி இடை மறித்து, "அடி ஜகதா! ஏண்டி குழந்தையைக் கண்டு குலைகிருய் பாவம்! அது பொன்னை யும், பொருளையும், தகப்பனையும், கடைசியாக இப்போது பெற்ற தாயையும் பறிகொடுத்துவிட்டு ஏங்கித் தவிக்கிறது! அழாதே அம்மா! அந்தக் கொள்ளிக்கண்ணி ஏதாகிலும் பிதற்றிக்கொண்டு போகிருள்! நீ கண்ணைத் துடைத்துக் கொள்; அழாதே!" என்று கூறியவண்ணம் தன் முந்தானை யால் என் கண்களைத் துடைத்துத் தேற்றினுள்.

இதைக்கண்ட என் சிற்றன்னை ஆத்திரமாக, குழந்தை குழந்தையைப் பார்! கழுதைக்கு வயசானற்போல் 22 வய தாச்சு. குதிர்போல வேறே வளர்ந்திருக்கு: குழந்தையாம். பால் குடிக்கிற குழந்தைக்கு பாவம்! பாட்டி சிபார்சுக்கு வந்து விட்டாள்! இன்னும் உங்களையெல்லாம் இவள் மதித் தாளானுல் நீங்கள் இவளைத் தலையில் தூக்கிக்கொண்டு ஆடு வீர்கள்!—நம் சிதம்பரநாதனை இவள் கலியாணஞ் செய்து கொள்ள மாட்டேனென்று சொல்லி அவமானப்படுத்தி அனுப்பியதை இதற்குள் நீ மறந்துவிட்டாய்போலிருக்கு! இவள் பணச் செருக்கும் படிப்புக் கர்வமுங்கொண்டு மன்மதன்போ விருக்கும் அவனை உதறித் தள்ளினுளே!

இப்போது எந்த மாப்பிள்ளை இந்தப் பிச்சைக்காரி—அநாதையை வந்து கலியாணஞ்செய்துகொள்வான்? கடைசியில் இவள் அவர்கள் காலிலேதானே வந்து விழவேண்டும்? அவர்கள் ஆதரவைத்தானே இவள் நாடவேண்டும்? இல்லாவிட்டால் இவளுக்குப் போக்கிடமேது?—என்ன இருந்தாலும் இத்தறுதலையைச் சிதம்பரநாதன் கலியாணஞ் செய்து கொள்வானென்று நான் நினைக்கவில்லை? அத்தை இறந்துவிட்டாளென்ற தந்திச் செய்தியைக் கண்டு கதறியவன் இம்மூதேவி முகத்தில் விழிக்கக்கூடா தென்றுதானே நம்மோடு வர மறுத்துவிட்டான்! அப்பேர்ப்பட்டவனு இவளைக் கலியாணஞ் செய்து கொள்வான்? அவன் மனமும் வெறுத்துப்போச்சு—இவள் கர்வத்தைக் கண்டு என்னதான் பணமிருந்தாலும் படிப்பிருந்தாலும் பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு இவ்வளவு அகம்பாவம் உதவாது அம்மா! இவ்வளவு குதித்தாளே அந்த வாழ்வு நிலைத்ததா! .......'' என்று நீட்டி பேசிக்கொண்டே போனவள் என் சிற்றப்பாவின் வருகையை யறிந்து திடீரென்று நிறுத்திவிட்டு ஒன்றுந் தெரியாதவள்போல் அவரை எதிர்கொண்டழைக்கப் போய்விட்டாள். அவளைப் பின்பற்றி மற்றவர்களுஞ் சென்றனர். என் சிற்றன்னை இத்தனைநாள் அடக்கி வைத்திருந்த விஷத்தைக் கக்கிவிட்டாள்—வஞ்சத்தைத் தீர்த்துவிட்டாள் என்று அவள் பேசிய தோரணையிலிருந்து தெரிந்துகொண்டேன். இப்பேர்ப்பட்டவளுக்கு நான் கர்ப்ப முற்றிருக்குஞ் செய்தியும், அதனாலேயே என் தாய் இறந்தாள் என்ற செய்தியும் தெரிந்தால் என்னை எவ்வாறு அலக்கழித்துப் பேசுவாள்? என்ன செய்வாள்? என்று ஊகித்தபோது என் உடம்பேயன்றி உள்ளமும் நடுங்கியது.

என்னைத் தனியேவிட்டுச் சென்றவர்கள் அப்புறம் யாருமே—என் சிற்றப்பாகூட வந்து பார்க்கவில்லை. இரவு

8½-மணிக்கு மரகதம் (சிற்றன்னையின் கடைசிப் பெண்) என்னைச் சாப்பிட அழைத்தாள். இரண்டு நாளாக ஒன்றும் உட்கொள்ள வில்லையாயினும் எனக்குப் பசியில்லை யென்று கூறி யனுப்பிவிட்டேன். அதற்காக, யாரும் என்னை வேண்டவில்லை. அப்படியே தரையில் படுத்தேன். எனக்குத் தூக்கமே வரவில்லை. பசியும் கவலையும் வாட்டும் போது எனக்குத் தூக்கம் எங்கிருந்து வரும்? நான் பிறந்து வளர்ந்த அருமையும், கல்லூரி யனுபவமும், லண்டன் வாழ்க்கையும், ஒன்றன்பின் ஞென்ருக எனக்கு ஏற்பட்ட துன்பமும், கடைசியாக யானடைந்த நிர்க்கதியான நிலைமையும் படக்காட்சிபோல் என் மனக்கண் முன் தாண்டவமாடின.

இச்சமயத்தில் என் அறைக்குச் சமீபத்தில் யாரோ பேசுஞ் சப்தங் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தேன். கதவோரத்தில் போய் நின்று ஒற்றுக்கேட்டேன்.

"உன் அக்கா இறந்த இரகசியந் தெரியுமா?"

"இதில் என்ன இரகசியம்? நாள் வந்து போனுள்."

"நான்கூட முதலில் அப்படித்தான் நினைத்தேன். சாயங்காலம் நாயுடம்மா சொன்ன பிற்பாடுதான் சமாசாரந் தெரிந்தது. என்ன காலம்?"

"விஷயத்தைச் சொல்லித் தொலையேன். சும்மா நீட்டுகிருயே! நாயுடம்மா சொன்ன சமாசாரமென்ன?"

"நம்ம புவனு கர்ப்பமா யிருக்கிறதாம். இதை எதிர் வீட்டுக் கமலம்மா தெரிந்து சொன்னதும் உன் அக்கா அலறிவிழுந்து விட்டாளாம். அவ்வளவுதானும்."

"என்ன! புவனு? அந்தச் சிறுக்கியா கர்ப்பமாக இருக்கிருள்? எனக்கு அப்பவே தெரியுமே!......."

நான் தள்ளாடினேன். கதவின் மீதே சாய்ந்தேன். நானிருந்த அறையெல்லாம் தலை கீழாகச் சுற்றுவதுபோல் எனக்குத் தோன்றியது.

"அவளை லேசில் விடுகிறேனா பார்! பழிக்குப் பழி வாங்குகிறேன், நான் செய்கிற........அவள் எங்கேயாகிலும் ஓடிவிடவேண்டும்."

"ஐயோ, கூச்சலிடாதே! உன் அம்மா........விழித்திருக்கப் போகிறார்கள்?....—வெளியாருக்குத் தெரிந்தால் வெட்கக்கேடு."

அவ்வளவுதான் என் காதில் விழுந்தது. இதற்குள் மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டேன். மீண்டும் நான் உணர்ச்சி பெற்று எழுந்தபோது கோழி கூவியது. அறிவு தெளியவே பழைய நினைவுகள் ஒருங்கே வந்து என் மனத்தில் குவிந்தன. நான் தற்போதிருக்கும் நிலைமையைச் சிந்தித்துப் பார்க்கவே, "இனி, சிற்றன்னை முதலியோரிடையே ஒரு கணமும் இருக்க முடியாது. எங்கேயாகிலும் வெளியேறி விடுவதுதான் நலம்" என்ற முடிவுக்கு வந்தேன். எனவே, நான் உடம்பு அயர்ச்சியாக இருந்தும் பொருட்படுத்தாமல் ஆடைகளைச் சீர்திருத்தி, தலைமயிரைக் கோதி முடித்துக்கொண்டு அறையைத் திறந்து மெல்லத் தலையை நீட்டி வெளியே கவனித்தேன். எல்லாரும் நல்ல உறக்கத்திலிருந்தது தெரிந்தது. உடனே நான் அடிமேலடிவைத்து நடந்து கூடம் முதலியவற்றைக்கடந்து புறக்கடைக் கதவை ஓசைபடாமல் திறந்தேன். தெருவில் யாராகிலும் நடமாடுகிறார்களா என்று சிறிது நேரம் கவனித்தேன். கிழக்கே அருணோதயங்கூட இன்னும் ஆகவில்லை யாகையால், பறவை பிராணிகளுடைய சந்தடிகூட இல்லை. ஆகவே நான் கதவை வெறுமனே மூடிவிட்டுத் தெருவில் நடந்

தேன். அதிகாலையில் வீசும் தூய குளிர்ந்த காற்று என் மீது பட்டதால், என் உடலயர்வெல்லாம் நீங்கிப் புத்துணர்ச்சி கொண்டேன். முந்தானையால் நன்றாக முக்காடிட்டுக்கொண்டு நான் பல தெருக்களைக் கடந்து தெற்குப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்தேன்.

## பதினைந்தாவது அதிகாரம்

### ஜன சமூகத்தை விட்டு வெளியேற்றம்

**நா**ன் என்ன தைரியத்தினால், எங்கே போகும் நோக்கத்தோடு வீட்டை விட்டு, உறவினரை விட்டுத் திடீரென வெளி யேறினேன் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஏன்? எனது இளம்பருவ நண்பன்—காதலன் ஜான் கில்பர்ட்டினிடஞ் செல்லலாம் என்ற எண்ணத்தினால்தான். அவன் நான் வந்த இரண்டு வாரங்களுக்கெல்லாம் லண்டனிலிருந்து சென்னை வந்து சேர்ந்துவிட்டான் என அறிந்திருந்தேன். ஆகையால் அவனிடஞ் சென்று எனது நிலைமையெல்லாங் கூறினால், அவன் எனக்கு இனி ஆவனவற்றைச் செய்து காப்பாற்றுவான் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. ஏனென்றால் நான் கர்ப்ப முற்றிருப்பதற்கு அவனே காரணமல்லவா! அத்துடன் அவன் என்னிடம் அளவிலாக் காதல்கொண்டிருக்கிறான் என்பது நான் இதுவரை சொல்லி வந்த வரலாற்றிலிருந்து நீர் தெரிந்துகொண்டிருப்பீர். 'ஜன சமூகம் அதிலும் இந்து சமூகம் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் கட்டுப்பாடுகளென்ன! சட்ட திட்டங்களென்ன!' என்பவைகளை நான் இதுவரை ஊகித்ததுகூட இல்லை. ஆகவே, 'என் எண்ணம் சித்தியாகுமா? எனது செயல் ஜன சமூகத்தால் எவ்வாறு மதிக்

கப்படும்? ஜான் கில்பர்ட்டுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு சரியானதுதானு? என்பவைகளைப்பற்றி நான் சிந்தித்துப் பார்க்கவே இல்லை.

எனவே, நான் நேராக செந்தோமுக்குச் சென்று பலரை விசாரித்து ஜான் கில்பர்ட் இருப்பிடத்தை யடைந்தேன். மிஸ் கிரேஸும், கில்பர்ட்டும் என் வீட்டுக்கு அடிக்கடி வந்திருக்கிருர்களே யொழிய, நான் அவர்கள் இருப்பிடத்துக்கு இதுவரை போனதில்லை. மிஸ் கிரேஸ் தன் மனதுக்கிசைந்த காதலனைத் தேர்ந்தெடுத்து விவாகஞ் செய்துகொண்டு அவனேடு வாழ்கிருள் என்று ஜான் சொல்லியிருந்தமையால், அவளை யெதிர் பார்த்து அங்கு செல்லவில்லை. நான் அவர்கள் வீட்டு வாயிலை யடைந்ததும் எதிர்ப்பட்ட 'ஆயா' (பணிப்பெண்) வை நோக்கி ஜான் கில்பர்ட் இருக்கிருஞ என்று விசாரித்தேன். அவள் எனது அப்போதைய தோற்றத்தைக்கண்டோ என்னவோ முகத்தைச் சிடுசிடுத்து ஏதோ கூறி என்னை அலட்சியப் படுத்திவிட்டுச் சென்ருள்.

இதை உள்ளிருந்து தற்செயலாக கவனித்த துரைசானி (ஜான் கில்பர்ட்டின் தாயார்) உடனே வெளியே வந்து விநயமாகப் பேசித் தன் பணிப் பெண்ணின் அலட்சியத்துக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். பிறகு, நான் கில்பர்ட்டைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தபோது, அவர் வியப்பாக என்னை நோக்கிவிட்டு, உள்ளே அழைத்துக் கொண்டுபோய் ஓர் அறையில் நாற்காலியொன்றில் உட்காரவைத்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் ஜான் கில்பர்ட் வெளியேயிருந்து இயற்கையாகவுள்ள பெருமிதத்தோடு உள்ளே வந்தான். என்னைக் கண்டதும் திடுக்கிட்டான் என்பது அவனது மெய்ப்பாட்டிலிருந்து நான் அறிந்து கொண்டேன்.

பிறகு ஜான் 'ஹாட்' (Hat) டைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு," "நீ யார்? யாரை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிருய்?" என்று அமர்த்தலாகக் கேட்டான்.

அவளது கேள்வி என்னைத் தூக்கி வாரிப்போட்டது. "நான் யாரா? உனக்கு என்னைத் தெரியவில்லையா ஜான்? இங்கு உன்னை யன்றி வேறு யாரைத் தேடி வந்திருப் பேன்.

என்னை மீண்டும் அவன் ஏற இறங்கப் பார்த்துவிட்டு அப்போதுதான் என்னை அடையாளந் தெரிந்துகொண்ட வன் போல் பாவனை செய்து, "ஓ! மிஸ். புவனுவா! என்ன சமாசாரம்? இவ்வளவு அதிகாலையில் என்னைத் தேடி வந் தது?........சீக்கிரஞ் சொல். நான் அவசரமாக வெளியே போகவேண்டும்," என்று துரிதத்தைக் காட்டிக் கூறினன்.

அவன் அப்போது என்னிடம் நடந்துகொள்ளும் மாதிரி எனக்கு ஆத்திரத்தை யுண்டு பண்ணினுலும், என் நிலைமையை யுத்தேசித்து அதை அடக்கிக்கொண்டு, நான் லண்டனிலிருந்து வந்தது முதல் இதுவரை நடந்த சம்பவங் களை விவரித்துக் கூறினேன். "எனக்கு ஏற்கனவே இச் சமாசார மெல்லாம் தெரியும்" என்று பொறுமையையிழந்து கூறி என் பேச்சை யடக்க முயன்றவன் எதையோ நினைத் துக்கொண்டு பேசாமல் இருந்தான்.

நான் கடைசியாக, "நான்! உன் விருப்பப்படியே உன்னை நாடி வந்துவிட்டேன். நம்மிருவரிடையேயும், வளர்ந்து வந்த காதல் இப்போது பழுத்த பலன்கூடத் தந்துவிட்டது. அது நம்மைப் பிரிக்க முடியாதவாறு செய்து விட்டது. இனி நீதான் தஞ்சம். நீ என்னைச் சீக்கிரம் கலியாணஞ் செய்து கொண்டுவிடு" என்று கூறினேன்.





'கில்பர்ட், "What do you mean?" என்று உதட்டைக் கடித்துக்கொண்டு கூறினான். அவன் உடம்பு படபடத்தது. பின்னர் அவன் என்னை நோக்கி,

"அது முடியாது !.......... அந்த எண்ணத்தை விடு ....உன் வழியைப் பார்த்துக் கொண்டு நட" என்று விட்டுவிட்டுப் பேசினான்!

"என்ன! என்ன! மிஸ்டர் ஜான். அது முடியாதா? 'எது முடியாது? என்னைக் கலி

யாணஞ் செய்து கொள்வதா?" என்று துடி துடிப்போடு எழுந்து நின்று கேட்டேன்.

"ஆம்; ஆம். எவ்வாறு முடியும்! நீயே யோசித்துப் பார்! நீஓர் இந்தியப் பெண். நான் லண்டனில் பெரிய குடும்பத்தில் பிறந்த ஆங்கிலேயன். உன் மதம் வேறு; என் மதம் வேறு. இவ்வளவு வேற்றுமைகளுக் கிடையே நாம் எப்படிக் கலியாணஞ் செய்துகொள்ள முடியும்?"

"அப்படியானால் நீயேன் என்னைக் காதலித்தாய்? என்னைக் கலியாணஞ் செய்துகொள்வதாகச் சொன்னாய்? நான் லண்டனிலிருந்து திரும்பி வரும்போதுகூட என்னை வேண்டிக்கொள்ள வில்லையா?"

"அதெல்லாம் நமது சிநேக முதிர்ச்சியில் பேசிய விளையாட்டுப் பேச்சு.

"என்னைக் கர்ப்பமுறச் செய்ததுகூட விளையாட்டுத் தானா?"

இதைக் கேட்டதும் அவன் முகம் பெரிதும் மாறுதலடைந்தது. எனினும், அத் தகவலைப் பொருட்படுத்தாதவன் போல் சாகஸஞ் செய்து, "அதிகம் பேசாதே, புவனா! வெளியே போ!" என்று கடுகடுத்துக் கூறினான்.

"நான் என்ன கதி யடைவது; ஜான்! சிறிது யோசித்துப் பார். நான் உன்னுடைய தொடர்பால் கர்ப்பமுற்றிருக்கும் இந்நிலையில் என்னை வேறு யார் விவாகஞ்செய்து கொள்வார்கள்?"

'Bloody Swine! Don't speak hereafter! Get out at once."

"ஐயோ கடைசியாக என் கதி இதுதானா?—மிஸ்டர் ஜான் நீ இத்தனை நாளாக என்னுடன் பேசியது—வாக்

குறித்து கூறியது எல்லாம் பொய்தானா? நான் இல்லாது உயிர் வாழமாட்டேன் என்று நீ ஒரு முறையன்று; பலமுறை கூறினாயே! நீ இவ்வாறு மோசஞ் செய்வாயென்று கனவிலும் நினைக்கவில்லையே!—கில்பர்ட்! கொஞ்சம் நிதானித்துப் பார்! என் தாய் தந்தையர் சொத்து எல்லாம் போயும் என் காதலன் நீ இருக்கிறாயென்றன்றோ மனந்தேறியிருந்தேன், வந்தேன். நீயே என்னைப் புறக்கணித்தால் இவ்வுலகில் காப்பாற்றுவார் யார்? மன மிரங்கு! கடவுளுக்குப் பயந்தாகிலும் என்னைக் கைவிடாதே," என்று கூறி மண்டியிட்டு அவன் கைகளைப் பற்றிக் கெஞ்சினேன்.

"Don't touch me goose! get out!" என்று கோபமாகக் கூறிக் கில்பர்ட் என்னை உதைத்துத் தள்ளினான்.

அவன் உதைத்த வேகத்தில் நான் தூரப்போய் விழுந்தேன். அவன் பூட்ஸ் காலால் உதைத்த உதை புட்டத்தில் பலமாகப் பட்டது. வயிற்றிலோ, இடுப்பிலோ அவ்வுதை விழுந்திருக்குமாயின் அன்றே எமனுல கடைந்திருப்பேன். இன்னும் இவ்வுலகில் நான் கஷ்ட நஷ்டங்களும், துன்பங்களும் அநுபவிக்கவேண்டி யிருக்கிறதே! அப்படி யிருக்க எப்படி எனக்குச் சாவு அவ்வளவு எளிதில் வரும்? பூட்ஸ் உதையினால் எனக்கேற்பட்ட வலியைக்கூட நான் அச்சமயம் பொருட்படுத்தவில்லை. செல்வக் குமாரியாய்ச் சீர் சிறப்புடனிருந்த காலத்தில் வலிய சிநேகங்கொண்டு என்னோடு கூடிக் குலாவித் திரிந்த ஜான் கில்பர்ட், நானக் அவனை நாடியடைந்தும், எனது தற்போதைய நிராதரவான நிலையை அறிந்ததும், இவ்வாறு வாயில் வந்தபடி பேசி வைது உதறித் தள்ளியதை எண்ணிப் பார்த்தபோது என் வயிறு பற்றி எரிந்தது; இருதயம் வெடித்து விடும்போலிருந்தது; தேகத்தில் ரத்தங் கொதிப் பெடுத்தது; தலை சுற்றியது; இப்பூவுலகமே இருளடைந்துவிட்டது போலவும், தலை

கீழாகச் சுற்றுவது போல்வுந் தோன்றியது. தட்டித் தடுமாறி எழுந்து உட்கார்ந்த நான் மீண்டும் ஒருவித மயக்கத்தால் கீழே சாய்ந்து விடுவதுபோன்ற பலவீன உணர்ச்சியை யடைந்தேன்.

எனவே, என் நிலையைச் சமாளித்துக்கொண்டு எழுந்திருக்கச் சிறிது நேரமாயிற்று. நான் என் சிநேகிதையின் சகோதரன், இளம் பருவ நண்பன், என் அன்புடைக் காதலன்! என் ஆருயிர் நாயகன், எனது வருங்கால வாழ்க்கைத் துணைவன் என்றெல்லாம் எவனைக் கருதியிருந்தேனோ; என் உடல், பொருள் இவைகளை ஆட்படுத்தியது மட்டுமல்ல, ஆவியையும் எவனுக்குத் தத்தஞ்செய்யக் காத்திருந்தேனோ; அவன்—அந்த ஜான் கில்பர்ட் பரம வஞ்சகனாய்—கன்னெஞ்சக் காதகனாய்—நன்றி கொன்ற பாதகனாய்ப் போய் அவன் இதுவரை தான் நடித்துவந்த ஆஷாடபூதி வேஷத்தைக் கலைத்து உண்மைச் சொரூபத்தோடு வெளிப்பட்டுச் சிறிதுங் கண்ணோட்டமின்றி என்னைப் புறக்கணித்த பின்னர் அங்கு ஒரு கணமுந் தாமதிக்க எனக்கு விருப்பமில்லை; ஏற்கனவே உள்ள எனது குழப்ப நிலைமையும், நஞ்சினுங் கொடிய அவனது கடுஞ்சொற்களால் அடைந்த எனது மன நிலைமையுஞ் சேர்ந்ததன் பயனாய் உண்டான உடல் தடுமாற்றத்தாலேயே அச் சிறு விநாடிகளும் நெருப்பின்மீது நிற்பதுபோன்றே துடிதுடித்து மனம் புழுங்கினேன். சீக்கிரம் அவ்விடத்தைவிட்டு வெளியேறி விடவேண்டுமென்ற மான வுணர்ச்சி என் தேகத்தைச் செயற்படச் செய்தது. தரையில் கைகளை ஊன்றியவண்ணம் மெல்ல எழுந்து நின்று தட்டுத் தடுமாறி நடந்து அவ்வறையை விட்டு வெளியேறினேன். இவ்வளவு நேரமும் ஜான் வேறு பக்கந் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டே கற்சிலைபோல் நின்றிருந்தான். அறையைவிட்டு வெளியேறும்போது,

கடைசி முறையாக அவனை நோக்கிவிட்டுச் செல்லவேண்டு மென்று என் மனதில் சபலந் தட்டியது. ஆனால் அந்த ரோகியின் முகத்தை--பஞ்சமா பாதகன் முகத்தை--கடைக் கணிக்கவும் என் கண்கள் கூசின. எனவே, திரும்பிக்கூடப் பாராது நான் வெளியேறினேன்.

எனக்கு உலகமே வெறு வெளியாய்—சூனியமாகத் தோன்றியது. நான் இப்போது எங்கே போவதென்ற குறிக்கோளே யில்லாது ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த வண்ணம் மனம்போன போக்கில் நடந்து போய்க்கொண் டிருந்தேன். போகும் வழியில் என் எதிர்ப்பட்ட மக்கள் பலர் பேயை—பூதத்தைக் கண்டால் எவ்வாறு பயந்தோடு வார்களோ அதுபோன்று என்னைக் கண்டதும்—அணுகிய தும் திடுக்கிட்டு ஒதுங்கிச் சென்றனர்; சிலர் முகச் சுளிப் பால் தங்கள் அருவருப்பை வெளியிட்டனர். மற்றுஞ் சிறுவர் சிறுமியர் என்னைப் பைத்தியக்காரியென நினைத்துக் கொண்டார்களோ (எனது அப்போதைய அலங்கோல நிலை அப்பிள்ளைகளின் கண்களுக்குப் பைத்தியக்காரர்கள் தோற் றத்தை நினைவூட்டி யிருக்கவேண்டும்) என்னவோ, என்னைக் கண்டு கேலி செய்து கைகொட்டிச் சிரித்ததோ டல்லாது என்மீது கற்களையும் எறிந்து கும்பலாகப் பின் தொடர்ந்த னர். என்னை முன் பின்னறியாத--என் தகுதி இன்னதெனத் தெரியாத—இம்மக்கள் இவ்வாறு செய்தது எனக்கு ஆச் சரியமாகத் தோன்றவில்லை. என்னோடு கலாசாலையில் வாசித்த தோழிகளில் சிலரை நான் வழியில் சந்தித்தேன். ஆகவே, அவர்களை யணுகி ஏதோ பேச வாயெடுத்தேன். ஆனால், அவர்கள் என்னைப் பொருட்படுத்தாமல், என்னை இன்னாரென்றே அறிந்துகொள்ளாதவர்கள்போல் பொது நோக்கு நோக்கிவிட்டுத் தூரச் சென்றனர்; அவர்களில் சிலர் என்னைப்பற்றி இழிவாகப் பேசி எள்ளனஞ் செய்துஞ்

சென்றனர். இவர்களது செயல் முதலில் என்னை வியப்படையச் செய்ததாயினும், இணைபிரியா தோழனாயிருந்த ஜான் கில்பர்ட்டின் நன்றியற்ற செயலை நினைத்ததும், அவ்வியப்புக்கு இடமில்லாது போய்விட்டது.

"நான் பிறந்த குடியின் பெருமை யென்ன? வளர்ந்த அருமை யென்ன? சீராட்டு பாரட்டு என்ன! செல்வச் சிறப்பென்ன! அவை யெல்லாம் இப்போதென்ன வாயின! பணச் செருக்கு எங்கே? கெம்பிரிட்ஜ் யூனிவர்ஸிடி படிப்பு எங்கே? என்னை இமை காப்பது போன்று என்னைப் பாதுகாத்த பெற்றோர் எங்கே? உற்றார் உறவினர் சிநேகிதர் எங்கே? எனது செல்வ வாழ்க்கையெல்லாம் இப்போது கனவில் கண்ட பொருள்களைப் போன்றல்லவோ மாயமாய் மறைந்தன? கையில் பணமிருந்தால்தான் எல்லா வைபவங்களும். இல்லையேல் இவ்வுலகில் ஒருவரை யொருவர் உண்மையாக நேசிப்பது என்பது சிறிதுமில்லை. ஒரு மனிதன் தனது செல்வ நிலையிலிருந்து வழுக்கி விழுந்துவிட்டானாயின், பிறர் அவனை எவ்வளவு துச்சமாகக் கருதுகின்றனர்? மனித வாழ்க்கையின் இவ்வுண்மை நிலையை,

> "தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை!!

என்ற திருக்குறளால் திருவள்ளுவர் எவ்வளவு அழகாக எடுத்து விளக்கி யிருக்கிறார்? இவ்வநுபவ மொழியைப் பொன்னெழுத்துக்களா லன்றோ பொறித்து வைக்கவேண்டும்? ஆ! என்ன உலகம்! என்ன வாழ்க்கை! இவ்வநித்திய வாழ்க்கையைக் கண்டுதானா மக்கள் மயங்கிப் போகின்றனர்! இறுமாப்புக் கொள்ளுகின்றனர்!............" என நீள நினைந்த வண்ணம் போய்க்கொண்டிருக்கையில், திடீரென்று ஏற்பட்ட "பூம் பூம்!" என்ற மோட்டார் ஹார்ன் பெருமுழக்கமும் "கிரீச்" என்ற சக்கரங்களின் சப்தமும் எனது

ஆழ்ந்த யோசனையைச் சிதைத்துத் திகைத்து நிற்கச் செய்து விட்டது. ஆனால் அடுத்த கணம் மோட்டார்காரின் முன் பக்கம் என்மீது மோதவே, நான் பொறி கலங்கிக் கீழே விழுந்தேன்.

நான் உணர்ச்சி பெற்றெழுந்தபோது என் பக்கத்தில் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண்மணி அமர்ந்திருக்கக் கண்டேன். அந்தம்மாள், "குழந்தாய்! கடவுள் கிருபையால்தான் நீ தப்பிப் பிழைத்தாய்! நான் கவனியாது ஓட்டி வந்திருந்தால் நீ இந்நேரம் என் மோட்டாருக்குப் பலியாயிருந்திருப்பாய்! சிறிது தூரத்திலேயே பார்த்து விட்டுத் திடீரென பிரேக் போட்டு காரை நிறுத்தியதால் தான் அவ்வித அசம்பாவிதம் எதுவும் நேராமல் போய்விட்டது. அப்படியிருந்தும், கார் நின்ற வேகத்தில் உன்னைக் கீழே தள்ளிவிட்டது. மற்றப்படி உனக்கு ஒன்றும் அபாயமில்லை" என்று கூறி என்னைத் தேற்ற முயன்றார்.

"அம்மா! தங்களது தயாள குணத்துக்கு மிகவும் வந்தனம். தங்கள் மோட்டாருக்கு நான் இரையாயிருந்தால் எவ்வளவோ நன்றா யிருந்திருக்கும். எனது பலநாள் தொல்லையும் ஒரே நாளில் ஒழிந்துபோ யிருக்கும். என்னை இன்னுஞ் சில நாட்கள் துன்பத்தில் வாட்டிப் பார்க்க வேண்டுமென்பது கடவுளின் எண்ணம் போலும். நான் உயிர்பிழைத்து இருந்து யாருக்கு என்ன பயன்? தங்களுக்குச் சிரமங் கொடுத்தது தான் மிச்சம். நிராதரவான எனக்கு இயற்கை மரணமோ, இவ்விதம் தற்செயலாய் நிகழும் செயற்கையான கோர மரணமோ கூடிய சீக்கிரம் சம்பவிக்க வேண்டுமென்றுதான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். நான் எவ்வளவோ கஷ்டப்பட்டும், மானமிழந்தும் தற்கொலை செய்துகொள்ளமட்டும் மனம் வர

வில்லை. இல்லாவிடில், கடலிலோ, குளத்திலோ விழுந்தாயி னும் மற்றெதன் மூலமாக வாயினும் உயிரை இழந்திருப் பேன். ஒரு சிறு உயிரையும் என்னால் உற்பத்தி செய்ய முடியாதபோது ஒரு உயிரை அழிக்க மட்டும் எனக்கு என்ன உரிமையிருக்கிறது? இவ்வுடல், உயிர், உலகம் எல் லாம் ஆண்டவனது உடைமை. அவ்வுடைமையைச் சொந் தக்காரனாகிய அவனே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது தான் எனது விருப்பம். அவனது திருவுள்ளக் குறிப்பையே நான் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன். மற்றப்படி இவ்வுலகில் நானிருந்து என்ன வாரிக்கொள்ளப்போகி றேன்?" என்று நான் விரக்தியாகப் பேசினேன்.

இவ்வுலகின்மீது எனக்குள்ள வெறுப்புணர்ச்சியைக் கண்டு அந்தம்மாள் ஆச்சரியங்கொண்டார். எனவே, எனது விரக்திக்குக் காரண மென்னவென அறிய என் வர லாற்றை அந்தம்மாள் மெதுவாகக் கேட்டார். நான் ஆதி யோடந்தமாக ஒன்றையும் விடாது கூறினேன், முடிவில் அந்தம்மாள் என்மீது பச்சாதாபங் கொண்டு, "புவனா! இவ் வளவு இளம் பருவத்திலேயே உன் வாழ்க்கையில் பல ஏமாற்றங்கள் ஏற்பட்டது பரிதபிக்கத்தக்கது. மக்கள் வாழ்வில் இதெல்லாம் இயற்கைதான். எனினும், உன் விஷ யம் சகிக்கக்கூடிய அளவுக்கு மேல் போய்விட்டது. போனது போகட்டும். இனி, நீ அநாதைப் பெண் என்ற எண்ணத்தை விட்டு விடு. இன்றிருந்து நீ எனது மகள். நான் பிராமண குலத்தில் பிறந்தும் நர்ஸ் தொழிலை மேற் கொண்டதால், கன்னியாகவே காலத்தைக் கழித்து வந் திருக்கிறேன். பிள்ளைப்பேறு பார்ப்பதில் எனக்கு நல்ல பெயருண்டு. இதனால் பெருஞ் செல்வஞ் சேர்ந்திருக்கிறது. ராஜம்மாள் என்றால், இவ்வூரில் எல்லாருக்குந் தெரியும். நீ என் ஆதரவிலேயே கவலையின்றி இருந்து வரலாம்; வேற்

றுமையாக ஒன்றும் நினைக்காதே" என்று கூறி எனக்குத் தஞ்சங் கொடுத்தார்.

போக்கிட மில்லாமையாலும், வேறு வழி யில்லாமை யாலும், நானும் அந்தம்மாளுடன் வசிக்கச் சம்மதித்தேன். அவ்வீட்டில் ராஜம்மாளைத் தவிர, ஒரு பெண்ணும், ஒரு கிழவனும் இருந்தனர். அப்பெண் சமையல் வேலை முதலியவைகளைச் செய்து வந்தாள். கிழவன் மற்ற வெளி வேலைகளைக் கவனித்து வந்தான். ராஜம்மாள் தம் தொழில் சம்பந்தமாக அடிக்கடி காரில் வெளியே செல்வதுண்டு. அவரைத் தேடிக்கொண்டு ஆடவரும், மகளிருமாகப் பலர் வருவர். ஆனால், நான் என் அறையைவிட்டு வெளியே செல்வதில்லை. ராஜம்மாளிடந் தவிர, மற்ற யாருடனும் அநாவசியமாகப் பேசுவதில்லை.

இவ்வாறு காலங் கழித்து வருகையில், என் கர்ப்பமும் பூரணத்துவமடைந்தது. ஒருநாள் காலை நான் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானேன். சிறிது கஷ்டப் பிரசவமாயிருந்ததால் ராஜம்மாள், என்னை மிகக் கவலையாகக் கவனித்து வந்தார். பிரசவத்தை யொட்டிய அபாயங்களையெல்லாம் கடந்து பூரண சௌக்கியத்தை யடைந்தேன். குழந்தையும் நோய் முதலிய எதுவுமின்றி நல்ல நிலைமையிலிருந்தது. இதுவரை உடல் நலத்தில் அக்கரையின்றி யிருந்த நான் குழந்தைக்காகவாயினும் என் உடம்பை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டியது அவசியம் என உணர்ந்து, அதன்படி நடந்துவந்தேன். குழந்தையின் அழகிய வதனம் என் மன நிலையைப் பெருமாறுதலடையச் செய்துவிட்டதென்றே சொல்லவேண்டும். உலக பாசம் என்னை மறுபடியும் பற்றிவிட்டது என்று கூறினல் மிகையாகாது. எனது புண்பட்ட மனதுக்கு என் அருமைக் குழந்தையின்

களங்கமற்ற முகத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது பெரிய ஆறுதலாயிருந்தது. குழந்தையைப் பாராட்டுவதிலும், சீராட்டுவதிலும் என் கவன முழுதுஞ் சென்றுகொண்டிருந்ததால், என் துன்பத்தையெல்லாம் மறந்திருந்தேன். ஆனால் சில சமயங்களில் குழந்தை "அம்மா! அம்மா!" என்று மழலை மொழியால் கூப்பிட்டுக்கொண்டே என்னை நோக்கித் தவழ்ந்து வருகையில் எனக்குத் துக்கம் மிகுவதுண்டு. ஏன்? "அம்மா" என அழைக்கும் என் அருமைக் குழந்தை நாளை "அப்பா" என்று யாரை அழைக்கும்? அதற்கு அறிவு வந்த காலத்தில், "அம்மா! என் அப்பா எங்கே?" என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்? "உன் தகப்பன் கொலை பாதகன்! துரோகி! நீ வயிற்றிலிருக்கும்போதே என்னை ஏமாற்றி நடுத்தெருவில் அலைய விட்டுவிட்டான்" என என் கதையை அளந்தால் அது சமாதான மடையுமா?—என்னையுங் குழந்தையையும் பார்க்கும் பிறர், "உன் கணவன் எங்கே? இக்குழந்தையின் தகப்பன் எங்கிருக்கிறார்?" எனக் கேட்பின் நான் எவ்வாறு தலை குனியாது பதில் சொல்ல முடியும்?' என்றிவ்வாறெல்லாம் நினைவுண்டானால் என் கேவல நிலைமைக்காக கண்ணீர் விட்டுக் கதறாமலிருக்க முடியுமா? இந்து சமூகக் கட்டுப்பாட்டின்படி எனது நெறிகெட்ட வாழ்க்கை தூய்மையடையப் பரிகாரந் தேட முடியாதாகையால், நடந்ததைப்பற்றி நினைந்து வருந்துவதில் பயனில்லை எனக் கண்டு மனந் தேறினேன்.

குழந்தைக்கும் ஒரு வயது பூர்த்தியாயிற்று. ராஜம்மாள் எனது குழந்தைக்குக் குமுதவல்லி எனப் பெயரிட்டார். அவர் என்னிடமும் குழந்தையிடமும் பிரியமாயிருந்தார்; ஆயினும், சமீபத்தில் சிலகாலமாக, அவரது நடத்தையில் எனக்குச் சந்தேகமேற்பட்டது. அவரிடம்

யாராகிலும் ஆடவர்கள் வந்து பேசிக்கொண் டிருக்கும் போது, அந்தம்மாள் காரிய மேதுவு மின்றியே என்னைக் கூப்பிடுவதும்! எனக்கு விருப்பமில்லையெனத் தெரிந்தும் அவர்களுக்கு என்னை அறிமுகஞ்செய்து பேச வைப்பதும் அவர்களைப் பற்றி என்னிடம் பிரமாதமாய்க் கூறுவதுமா யிருந்தார். அவ்வாடவர்களில் சிலர் என்னைக் காமக் குறிப் போடு நோக்கிச் சம்பந்தமில்லாத வார்த்தை யெல்லாம் பேசலாயினர். நான் அவ்விடத்தைவிட்டு அகன்றதும், அந்தம்மாள் அவ்வாடவர்களோடு இரகசியம் பேசலானார். இந்தம்மாளது அந்தரங்க நோக்கம் ஒரு நாள் எனக்குத் தெரிந்துவிட்டது. என் அழகைக் கண்டு ஆடவர் பலர் மோகங்கொண்டலைவதாகவும், அவர்களில் பணக்காரரா யுள்ளோர் எனக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலுங் கொடுப்பார்க ளென்றும், ஆகவே, என்னை விபசாரத் தொழிலுக்குப் பக்குவமாகப் பழக்கிப் பொருள் வரு வாய்க்கு இடந்தேட இதுதான் நல்ல சந்தர்ப்பமென்றும் அந்தம்மாள் வேலைக்காரக் கிழவரிடஞ் சொல்லிச் சதியா லோசனை செய்துகொண்டிருந்ததை மறைவிலிருந்து அறிந்த தும் நான் திடுக்கிட்டேன். எனக்கு உபகாரஞ் செய்த அம்மாளே அபகாரஞ் செய்யவும் கருதிவிட்டால், வேறு நான் என்ன செய்வது? எனவே, இனி இங்கு இருந்தால் மோசந்தான் என எண்ணிக் கைக் குழந்தையோடு யாரு மறியாமல் வெளிப்பட்டேன்.

புகலிட மறியாது பல நாள் நகரைச் சுற்றிப் பல இடங்களிலும் அலைந்தேன். நான் அணிந்திருந்த சாதாரண சிறு சிறு நகைகளை விற்று அப் பணத்தைக்கொண்டு சில நாட்கள் பசிப்பிணியைப் போக்கி வந்தேன். கடைசியாக என் நிலையைக் கண்டு மனமிரங்கிய கனவான் ஒருவர் சிபார்சு செய்து திருவொற்றியூரிலுள்ள பெண்பாடசாலை

யொன்றில் என்னை உபாத்தியாயினியாக்கி வைத்தார் அதில் வரும் வருவாயைக் கொண்டு ஒரு சிறு வீட்டில் குடியிருந்து என் வாழ்க்கையை நடத்தி வந்தேன். எங்கு போனாலும் — பள்ளிக்கூடத்துக்குக்கூட குழந்தையைத் தூக்கிக்கொண்டு திரிந்தேன். இதைக் கண்டு என் சகா உபாத்தியாயினிகள் கேலிகூடச் செய்வதுண்டு. இதை யெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை.

இங்ஙனமிருக்க, ஒரு நாள் எங்கள் பள்ளிக்கூடத்தை கல்வியதிகாரி யொருவர் பார்வையிட வந்தார். பரீக்ஷை முடிந்ததும் அன்று மாலை நான் வீட்டுக்குப் போன சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு ஆள் வந்து என்னைக் கல்வியதி காரி உடனே பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தான். நான் அவனுடன் சென்றேன். அதிகாரி தங்கியிருந்த வீட்டை யடைந்ததும் அந்த ஆள் நானெடுத்துச் சென்ற குழந்தை யைத் தான் வைத்திருப்பதாக வாங்கிக்கொண்டான். நான் உள்ளே சென்றதும், அவ்வதிகாரி எனக்கு இல்லாத உப சாரமெல்லாஞ் செய்து பின்னர் ஏதேதோ தாறுமாறுகப் பிதற்றினர். அவர், என்னழகில் மயங்கிவிட்டதாகவும், அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்தால், உடனே என்னைத் தலைமை உபாத்தியாயினி யாக்கிச் சம்பளத்தை உயர்த்தி விடுவதாகவும், இணங்காவிடில் என்மீது குற்றஞ் சாட்டி உடனே வேலையிலிருந்து நீக்கிவிட முடியுமென்றும் நயமா கப் பயமுறுத்தித் தம் தீய வெண்ணத்தை வெளியிட்டார். எனக்கு ஆத்திரம் பொங்கியது. எனினும், அதை யடக் கிக்கொண்டு, அவர் விருப்பப்படி நடக்கத் தடையில்லை யென்றும், அன்று ஒரு அவசரவேலை யிருக்கிறதென்றும் சாக்கு போக்கு கூறி அக்காமப் பித்தனிடமிருந்து தப்பி வெளிவந்தேன்.

வேலையை ராஜிநாமா கூடச் செய்யாமல் மறுநாளே அவ்விடத்தைவிட்டு குழந்தையோடு தெற்கு நோக்கி நடந்தேன். கையிலோ செல்லாக் காசுகூட இல்லை. இந்நிலையில் பல நாட்கள் குழந்தையும் நானும் பட்டினியால் வாடினோம். யாரிடமாயினுஞ் சென்று யாசித்தாலன்றி வயிறு பிழைக்க முடியாது. பிச்சை யெடுத்துண்டு உயிர் வாழ நான் விரும்பவில்லை. இனி எங்கு சென்றாலும் யாரை யடுத்தாலும் என் அழகினால் எனக்குக் கட்டாயம் ஆபத்துதான் நேருமென அறிந்தேன். எனவே ஒருவர் உதவியையும் நாடாது கால் நடுங்கும்வரை நடப்பதும், சோர்வு நீங்கும் வரை வெறு வெளியில் படுப்பதுமா யிருந்தேன். வற்றிய முலையைப் பற்றியிழுத்து வாயில் பால் வாராததைக் கண்டு குழந்தை என் முகத்தை நோக்கி யழ நான் அதன் வாடிய முகத்தைப் பார்த்துக் கண்ணீர்விட்டுக் கதறி யழுவதுமா யிருந்தேன்.

இங்ஙனம் பட்டினியோடு பலநாள் நடந்து நகரை விட்டு வெகுதூரம் வந்துவிட்டேன். பல கிராமங்களைக் கடந்து திருச்சியை யடைந்தேன். அந்தோ! அங்கு தான் என் அருமைக் குழந்தை பசிக்கொடுமைக் கிரையாகியது. அகதியான எனக்கு ஆதரவா யிருக்குமென எண்ணிய என் கண்மணி குமுதவல்லி ஒன்றரை வயதுகூட முற்றுப்பெறாத நிலையில் வயிற்றுக் கொன்றுமின்றி இறந்தது எனக்குச் சகிக்கக்கூடாத துன்பத்தைத் தந்தது. குழந்தையின் பிரேதத்தைப் புதைக்கக்கூட வழி தெரியவில்லை. என் மனங் குழம்பியது. இக்குழந்தையின் உடலை ஓரிடத்தில் கிடத்தி விட்டு வெறிபிடித்தவள்போல் ஓடினேன். எனக்கு உண்மையிலேயே சித்தப்பிரமை யுண்டாய்விட்டது. அன்றிருந்து பசியாவது தூக்கமாவது இல்லை. ஓடியும் ஆடியும் கண்ட இடத்தில் சுற்றி யலைந்து திரிந்து கடைசியாக இப் பொதிய

மலையை யடைந்தேன். இங்கு வந்து சில நாட்களான பிறகே என் அறிவு நிலை தெளிந்தது. கொடிய மிருகங்களும் விஷ ஜந்துக்களும் நிறைந்த மலைப்பிரதேசமாயினும், இவ்விடம் எனக்கு நல்ல வாசஸ்தலமா யமைந்துவிட்டது. மிருகங்களும் பாம்பு முதலியவைகளும் கொடிய தன்மை வாய்ந்தனவென்று கூறுவது அடாது. பகுத்தறிவுள்ள மனிதர்களைக் காட்டிலும், இவை கொடியன வல்லவென மறுபடியும் வற்புறுத்திக் கூறுவேன். மனிதர்களிட மிருப்பதுபோல், இவைகள்பால், கபடம், சூழ்ச்சி, பொறாமை, துரோகம் முதலிய கொடுங் குணங்கள் சிறிதும் இல்லை. நம்மால் துன்பமில்லை யெனத் தெரிந்தால் கொடிய புலி பாம்புகூட நம்மை யொன்றுஞ் செய்வதில்லை நாம் அவைகளிடங் கருணையாக நடந்துகொண்டால். அவை நம்மிடம் நன்றியறிதலா யிருக்கின்றன. இச் "சுகநிலையத்"துக்கு வந்த பின்னர், என்னைப் பிடித்திருந்த துன்பங்களெல்லாம் அறவே அகன்று விட்டன. எனக்கு இப்போது ஒருவித கவலை யில்லை. பசி யெடுத்தபோது பழம் முதலியவைகளைப் பறித்துண்கிறேன். தாகமெடுத்தால் தண்ணீர் அருந்துகிறேன். மற்ற சமயங்களில் சுகமாய் இம்மலைப் பிரதேசத்தைச் சுற்றி வந்து சுகமாகக் காலங்கழித்து வருகிறேன். இதுதான் எனது வாழ்க்கை வரலாறு" எனக் கூறி முடித்தாள் புவன சுந்தரி.

நான் விநோதமும் துன்பமும் நிறைந்ததான அவளது வாழ்க்கை வரலாற்றைக் கேட்டு ஆச்சரியத்தால் வாய் பிளந்து நின்றேன்.

முற்றிற்று.

ஜீவா" தீட்டிய

# எழுத்து ஓவியங்கள்

## உயிரோவியம்

இதுகாறும் தமிழன்னையின் திருமேனியிலேயே கிடையாத ஒரு எழில் வாய்ந்த ஆபரண என்றும், இதுவரை எந்த கதாசிரியராலும் காணாத முடிவு என்றும், பல முறை படித்து இன்புற வேண்டிய கதை என்றும் அறிஞர்கள் இக் கதையின் சிறப்பைப் பாராட்டி யிருக்கிறார்கள். விலை ரூ. 1–8–0

## யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

இக் கதையில் வரும் கதாநாயகி காமாட்சியின் சித்திரம் தமிழ்ச் சமூகத்தில் நிலவி வரும் வைதவ்யத்தின் சித்திரமாகும். விலை ரூ. 2–0–0

## தாசி ரமணி

இந்த நவீனத்தை வாசிப்பவர்கள் உள்ளத்தில், சமூகச் சீர்கேட்டுக்கு வித்தாகவுள்ள தேவதாசி முறையை உடனடியாக ஒழிக்க வேண்டும் என்ற உணர்ச்சியை உண்டாக்கும். கதைப் போக்கு அவ்வளவு ருசிகரமாக இருக்கிறது. விலை ரூ. 1–8–0

## காதலனா? காதகனா?

கலாசாலை மகளிர் சிலரின் சீர்கெட்ட வாழ்க்கையும் போலி நவ நாகரிகத்துக்கு அவர்கள் பலியாகும் கதியும் இதில் படம் பிடித்துக் காட்டப்பட் டிருக்கிறது. விலை ரூ. 1–4–0

## சீமாட்டி கார்த்தியாயினி

லியோ டால்ஸ்டாய் எழுதிய "அன்னா காரினென்னா"வை 'ஜீவா' வெகு அழகாகத் தமிழ்ப்படுத்தி யிருக்கிறார். விலை அணா 14

---

ஆனந்தபோதினி காரியாலயம்,

தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.